# பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்

டாக்டர் ச.வே.சுப்பிரமணியன்

# பாரதியார் வாழ்க்கைக் கொள்கைகள்

ச. வே. சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி.டி.டி.ஐ., தரமணி, சென்னை - 600 113.

**BIBLIOGRAPHICAL DATA**

| | | |
|---|---|---|
| Title of the Book | — | Pāratiyār Vāḻkkaik koḷkaikaḷ (Bharati's concept of Life) |
| Author | — | Dr. S. V. Subramanian, M. A., Ph.D., Director International Institute of Tamil Studies, T.T.T.I, Taramani, Madras-600 113. |
| Publisher and Copy right | — | International Institute of Tamil Studies T.T.T.I, Taramani, Madras-600 113. |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Publication Number | — | 53 |
| Date of publication | — | September 1982 |
| Paper used | — | 14.2 kg. D. Dy. White Printing |
| Size of the Book | — | 21×14 Cms. |
| Printing types used | — | 10, 12, 18 |
| Number of Copies | — | 1200 |
| Number of Pages | — | 162+8 = 170 |
| Price | — | Rs. 8/- (Rupees Eight) |
| Printer | — | Novel Art Printers, Madras-14-Phone 82731 |
| Binding | — | Card board, Lamination |
| Subject | — | Concepts of life, according to Bharati |

# முன்னுரை

இது பாரதியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் ஆண்டு. பாரதியார் பிறந்து நூறு ஆண்டுகள் கழிந்துவிட்டன. பாரதியார் தமிழ்ச் சமுதாயத்திற்கும், இந்திய சமுதாயத்திற்கும் பல நன்மை களைச் செய்துள்ளார். அவர் ஒரு தீர்க்கதரிசி.

பாரதியாரைப் பல கோணங்களில் பலர் ஆய்வுசெய்துள்ளனர். கட்டுரைகள், நூல்கள் எழுதி உள்ளனர். பாரதி நூற்றாண்டு விழா ஆண்டில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வழியாக இந்நூல் வருகிறது. பாரதி மாபெரும் கவிஞர். அவர் கவிதை களையும் கட்டுரைகளையும் அடிப்படையாகக் கொண்டு அவரைப் பெரும் கவிஞர் எனக் கருதும் நூலாக அமையாது மனிதன் வாழ்வதற்கு அவர் கவிதைகளும் கட்டுரைகளும் எவ்வாறு துணை புரிகின்றன என்ற கோணத்தில் பாரதியார் உணர்த்தும் வாழ்க்கைக் கொள்கையைப் பற்றி இந்நூல் கூறுகின்றது.

39 வயதுவரை வாழ்ந்த பாரதியார் என்ன பெரிய வாழ்க்கை அனுபவத்தைக் கூறிவிட முடியும் என்று நாம் நினைக்கின்றோம். ஆயின் 1920-லேயே,

> 'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம்
> அடைந்துவிட்டோம் என்று'

47-லில் பெற இருந்த சுதந்திரத்தை 20-திலேயே பாடிவிட்டார். அதனால்தான் அவரைத் தீர்க்கதரிசி என்று கூறுகிறோம். அவர் 100 ஆண்டுகள் சிறப்பாக வாழவேண்டும் என்று நினைத்தார். பிறந்த குழந்தையிலிருந்து முதியவர்வரை எவ்வாறு வாழ வேண்டும் என்று தன் கொள்கைகளைப் பல இடங்களில் சுட்டிச் சென்று உள்ளார். அவற்றையெல்லாம் தொகுத்து ஓரிடத்தில் தந்து மனிதர்க்கு வாழ்வதற்கு வழியாக ஊன்றுகோலாக இனிது அமையவேண்டும் என்ற கோணத்தில் வாழ உலகத்தமிழர்க்கு அளிக்கப்படுகிறது.

நிறுவனத்தின் எல்லாப் பணிகளுக்கும் உறுதுணையாக அமைகின்ற கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி.

பெங்களூர்த் தமிழ்ச்சங்கத்தில் நடைபெறும் பாரதி நூற்றாண்டு விழாவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் அவர்களால் இந்நூல் வெளியிடப் பெறுகிறது. இதற்கு எல்லா நிலைகளிலும் துணைபுரிந்த பெங்களூர்த் தமிழ்ச்சங்கத்தார்க்கு நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுத்தந்த நாவல் ஆர்ட் அச்சக உரிமையாளர் நாரா. நாச்சியப்பன் அவர்கட்கும் நன்றியுடையேன்.

10-9-1982

**ச.வே. சுப்பிரமணியன்**

# உட்பொருள்

பாரதியார்— 1; வாழ்க்கை - 6; கொள்கை - 10; வாழ்க்கைக் கொள்கை - 11; பாரதியாரும் வாழ்க்கைக் கொள்கைகளும் - 12; மனித வாழ்வியம் - 17; அடிப் படை வாழ்வு - 27; வாழ் நெறி - 34; தினசரி வாழ்க்கை- 39; நூறாண்டு வாழ்க்கை - 42; சாவாமை - 44; வாழ் வோர் - 48; குழந்தை - 58; இளைஞர் - 65; முதியவர் 70; பெண் - 71; கவிஞன் - 81; சமுதாயவியம் - 88; கல்வி -90 தொழில் - 103; குடும்பம் - 110; காதல் - 114; நாடு- 120; விடுதலை - 126; உலகியம் - 132; உடல் உள்ளம் உயிர் - 143; பயன்பட்ட நூல்கள் - 161.

தேடிச் சோறு நிதந் தின்று - பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி - மனம்
வாடித் துன்ப மிக உழன்று - பிறர்
வாடப் பல செயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப் பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரை யெனப் பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ (131)

இங்கிவனை யான் பெறவே என்ன தவஞ் செய்து விட்டேன்(282)*

பாரதி, 'பார'தத்தின் தேசியவரலாற்றில் 'அதி'முக்கியப்பங்கு வகித்த தமிழருள் ஒருவர். இலக்கியக் கலையை, இயக்கக் கருவி யாக்கிக் கொண்டவர். தமிழரிடையே தேசிய உணர்வை உரு வாக்க முயன்றவர். சொல்லாலும் செயலாலும் மாந்தர் சோர்வு நீக்கி ஒரு புத்தெழுச்சி கண்டவர். கவிதை, உரை ஆகிய இரு இலக்கிய நடையிலும் கருத்துகளைப் பரிமாறியவர். இளமையில் கண்ட கனவுகளை எதிர்ப்புகளுக்கும், இன்னல்களுக்கும், இயலா மைக்கும் இடையில் நனவாக்க வழிவகுத்தவர்.

அவர் பிறவிக் கவிஞர். பிள்ளைப் பருவத்திலேயே கவிமழை பொழிந்த அருட்கவி. இளமையிலேயே பலராலும் போற்றப் பட்டுப் 'பாரதி' எனும் விருதும் பெற்றவர். தன் கவியாற்றலைத் தனியுடைமை யாக்காது பலரும் பெற்றுப் பயன்பெறும் வண்ணம் பொதுவுரிமை அளித்தவர். இன்னிசைக் கவிதைகளால் புரட்சி உருவாக்கும் வன்மை கொண்டவர். பண்டிதர்க்குரிய தமிழ்க் கவியைப் பாமரர்க்கும் ஏற்புடைய தாக்கிய சித்தர் மரபினர் பழமையான எண்ணங்களை எளிமைப்படுத்திக் கொடுத்தவர் பண்டைக் கருத்துகட்குப் புத்துரு அளித்தவர். தனிப்பாடலும். தொடர்க் கவியும் பாடியவர். குழந்தைக்கும், இளையவருக்கும் மூத்தவருக்கும் ஏற்ற பா அமைத்தவர். ஆண்மையைப் போற்றிப், பெண்மைக்கும் ஏற்றம் புரிந்தவர். நன்மையை அடிநாதமாகக் கொண்ட நாவினிக்கும் கலை தந்தவர்.

---

1. அடைப்புக்குறி எண்கள், பாரதியார் கவிதைகள், பூம் புகார் பிரசுரத்தின் (1976) பக்க எண்கள்.

கவிதையூடே இசையின் வாயிலாகவும் மக்கள் நெஞ்சம் கவர்ந்த அவர், கருத்துகளின் குவியலான உரைகள் வழியாகவும் மனிதர் உள்ளங்களை ஈர்த்தவர். வாழ்க்கையைப் பல நிலைகளில் புலப்படுத்தும் முன்னேற்றும் கட்டுரைகளும் கதைகளும் ஆக்கியவர். பத்திரிகைகள் வாயிலாகத் தமிழுக்கும் நாட்டுக்கும் தொண்டு செய்தவர். புரட்சிப் பாதையின் முன்னேற்றத்தில் ஒரு கதவு அடைக்கப்பட்டபோது ஒன்பது கதவுகள் திறந்தவர். தன்னிரக்கம் தவிர்த்துத் தாயின் பணியில் மக்களை ஈடுபடச் செய்தவர். இளைய பாரதத்திற்கு வலிமை ஊட்டியவர். பிரிந்து நின்ற ஜன சமூகத்தை ஒருமைப்படுத்தியவர்.

இலக்கிய வாதியாக மட்டுமன்றி இவர் வாழ்வியல் ஞானி யாகவும் அமைந்தவர். எவ்வுயிரையும் தன்னுயிர் போலக் கருதியவர். சமயக் காழ்ப்பின்றி எம்மதமும் சம்மதம் எனக் கொண்டவர். சக்தியையும் தேசத்தாயையும் வேறுபாடறக் கண்டவர். அதனால் நாட்டுக்கு இறைமை உயர்வு அளித்தவர். நாடும் இறைமையும் வாழ்வின் மையமானால் தாமும் நாடும் முழுநிலை ஈடேற்றம் பெறமுடியும் எனக் காட்டியவர். 'பக்தி' என்பது கடவுள் நம்பிக்கையை மட்டுமன்றி தேசீயத்தையும் சார்ந்தது என நிலைநாட்டியவர்.

இத்தகைய பல சிறப்புகளுக்கும் இயல்பும் இலக்கணமுமான சி. சுப்பிரமணிய பாரதியாரின் பெயரிலுள்ள 'பாரதி' எனும் சொல் கலைமகளைக் குறித்தது. இச்சொல்லின் பல பொருள் நிலையை அகராதிகள் காட்டுகின்றன. சரசுவதி, பைரவி, பண்டிதன், சொல், மரக்கலம் எனத் தமிழ்ப் பேரகராதி குறிக்கின்றது.*

இச்சொல்லின் முதற்பயிற்சி சிலம்பில் இடம்பெற்றுக் கொற்றவைக்கு ஆகின்றது. பாரதி அரங்கம், பாரதி விருத்தி எனும் ஆட்சிகளும் உள.

பாரதி யாடிய பாரதி யரங்கத்து (6.39)

பாரதி யாடிய வியன் பாண்ட ரங்கமும் (6.45)

பரந்திசை யெய்திய பாரதி விருத்தியும் (10. கட்டுரை 11)

பிற்கால நிகண்டுகளே இச்சொல்லுக்குப் பிற பொருள் கொள்ள இடன் தருகின்றன. திவாகரமும் பிங்கலமும் மரக்கலம் எனவும் சரசுவதி எனவும் அமைக்கின்றன.

---

*தமிழ் லெக்சிகன், தொகுதி 5, ப. 2620.

பாரதி, வாணி, பனுவலாட்டி...
வாக்கின் செல்வியை நோக்கிய பெயரே (திவாகரம், ப.7)

பஃறி, சதாவே, பாரதி, நவ்வே...
மேதகு நீர்மேல் ஓடு மரக்கலம் (திவாகரம், ப. 157)

பாரதி வங்கமும் பனுவலாட்டியுமாம் (பிங்கலம், 3817)

பாரதி எனும் சொல், நாமகளைக் குறித்த நிலையில், அதன் அடிப்படையில் போலும் நாவன்மையுடைய புலவரையும் சுட்டு கின்றது.*

பாரதி அல்லது பாரதியார் என்பது குடும்பப் பெயரா, அதாவது தலைமுறை தலைமுறையாக ஒரு கால் வழியினருக்குத் தொடர்ந்து வரும் பெயரா அன்றி, குறிப்பிட்ட பட்டம் அளித்தல் காரணமாக ஏற்பட்ட விருதுப்பெயரா என்பது சிந்தித்தற்குரியது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் வாழ்வியலைக் காணும் போது, அவருக்கு இப்பெயர் முன்னோர்களால் ஏற்படாது புலமை பற்றி வழங்கப்பட்டது புலனாகின்றது. யாழ்ப்பாணப் புலவரின் முன்னால், எட்டயபுர மன்னர் அவைக்களத்தில் 'சுப்பிரமணிய பாரதி'யும், 'நாவலர் சோமசுந்தர பாரதி'யும் இப்பட்டம் பெற்றனர்.**

பாரதியாருக்கு முன்னும் 'பாரதி' எனும் பெயர் இணைவுடன் தமிழ்ப்புலமை வாய்ந்த ஒருசிலர் காணப்படுகின்றனர். சுமார் 15-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்படும் பாரதிதீபம் எனும் நிகண்டு நூலின் ஆசிரியர் பெயர் திருவேங்கட பாரதி என அமை கின்றது இவற்றுள் முதலாவதான தாகலாம். 19-ஆம் நூற் றாண்டில் நந்தனார் சரித்திரக் கீர்த்தனை பாடிய கோபால கிருஷ்ண பாரதியின் பெயரிலும் இவ் இணைவு அமைகின்றது. இதே நூற்றாண்டுக்குரிய (18-உம் ஆகலாம்) பொருட்டொகை

---

* Bharati, Name of a deity ... later identified with Saraswathi; the goddess of speech.
Speech, voice, word, eloquence, literary composition, dramatic art or recitation.

A Sanskrit English Dictionary, Monier Williams, Oxford, 1974, P,75ɔ.

** பாரதி இருவர் - வி. பி. நடராஜன், கிறிஸ்தவ இலக்கிய சங்கம், சென்னை, 1962, ப. 11.

நிகண்டை ஆக்கியவரும் ஒரு சுப்பிரமணிய பாரதியாம். அன்றியும், சுத்தானந்த பாரதி; அநந்த பாரதி ஐயங்கார், அநந்த பாரதி சுவாமிகள், தே. இலட்சுமண பாரதியார், கவிகுஞ்சர பாரதியார், கிருட்டிண பாரதி, சிதம்பர பாரதியார், சோணாசல பாரதியார், சோமநாத பாரதி, நவநீத கிருட்டிண பாரதியார், பால பாரதி முத்துச்சாமி ஐயர், பால பாரதியார், மதுரகவி பாரதியார், மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார், முத்துச்சாமிப் பாரதியார், விசுவநாத பாரதியார்; சொர்ன பாரதியார்* போன்று பலர் இப்பெயரைப் புலமை பற்றிய விருதாக அடைந்த தாகத் தோன்றுகின்றது.

மாணவப் பரம்பரையும் இப்பெயர் பெறலாமோ எனும் எண்ணம் வடமொழி அகராதி தருகின்றது.** புலமைப் பட்டம் பெற்ற ஒருவரின் குடும்பத்தினர்-பின்கால்களும் இதனைப் பரம் பரைப் பெயராகக் கொள்ளலாம் என்பது 'விஜயபாரதி', 'லக்ஷ்மிரதன் பாரதி' போன்ற பெயரால் வெளிப்படுவதாகத் தோன்றுகின்றது. எனினும், அடிப்படையில், கலைமகளைக் குறித்துப் பாரதி எனும் சொல் அவள் அருள்பெற்ற பண்டி தர்க்கும் பெயர்ப்பட்டமாகின்றது எனல் போதரும்.

சுப்பிரமணியன் என இளமைப் பெயர் பெற்று, சுப்பையா என அழைக்கப்பட்டவர் 'பாரதி' ஆன சூழல், வயது பற்றிச் சில சிறு கருத்து வேறுபாடுகள் காணப் படுகின்றன.

1. 'வயது சுமார் பதினொன்று இருக்கும் (1893). அச்சமயம் எட்டயபுர மன்னர் சமஸ்தானப் புலவர்கள் அவையில் பாலகனின் கவித்திறனை வியந்து-பாராட்டிப் புகழ்ந்து பாரதி என்ற பட்டத்தைச் சூடி மகிழ்தல்' பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, (1976 ப. 5,)

2. பாரதியார் பதினோராவது வயதில் (1893-இல்) புலவர்கள் கூடிய சபையில் கொடுத்த ஈற்றடிகளைக் கொண்டு கவிகளை விரைந்தியற்றிச் சபையினரை வியப்பித்தார் என்பர்.

---

1. பார்க்க நூல், பட்டியல்: தமிழ்ப் புலவர் அகர வரிசை, தொகுதி 2, பகுதி 2, கழக வெளியீடு, 1962 பக். 627-646.

2. Bharati,... one of the 10 orders of religious, medicants traced back to pupils of Saṁkarācarya (the members of which add the word bharati to their names). A Sanskrit English Dictionary, p. 753.

அவர்கள் மகிழ்ந்து பாரதியார் என்ற பட்டத்தை அளித்தனர். பதினைந்தாவது வயதில் (1897-இல்) இவருக்கு மணம் நடந்தபோது இப்பட்டம் அளிக்கப் பெற்றதாகக் கூறுவதும் உண்டு (கலைக்களஞ்சியம், தமிழ் வளர்ச்சிக் கழகம், பகுதி 7, ப. 186).

3. யாழ்ப்பாணப் பெருங்கவிஞர் புலவர் குழுவினரை நோக்கி ஆளுக்கொரு கவி பாடுமாறு வேண்டினார். ஈற்றடியும் கொடுத்தார். சுப்பையாவோ சோமுவையுந் தூண்டி அக் கவியைத் தாமும் எழுதுவோமெனச் சொன்னார்...புலவர் கூட்டத்தார் எவரும் கொடுப்பதற்கு முன்பே இவ்விருவரும் கொடுத்துவிட்டனர்...பிற கவிகளும் வந்து சேர்ந்தன... இவ்விரு கவிகளே அவற்றுள் சிறந்தன வென்றும், சுப்பையாவின் கவியோ ஒப்பற்ற தெனவும் நவின்றார். கலைமகள் அருள் இவ்விருவர்பாலும் உளவெனக் கண்டு அக்கவிஞர் குழுவிலேயே இருவருக்கும் பாரதி என்ற பட்டம் சூட்டினார். (பாரதி இருவர். ப. 11).

4. பாரதியார் பதினோராவது ஆண்டில், புலவர்கள் கூடியதோர் பெருஞ்சபையில், புதிது புதிதாகக் கொடுத்த அடிகளைக் கொண்டே பூர்ண கவிகளை விரைந்தியற்றிச் சபையோரை வியப்பித்தபோது, அவருடைய கவித்திறமையையும் அமிர்த வாக்கையும், கண்டு சந்தோஷப்பட்ட புலவர்களால் முதல் முதல் 'பாரதியார்' என்ற பட்டமும் கொடுக்கப் பெற்றார் (மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை, வானவில் பிரசுரம், 1981, ப. 8, மேற்கோள் நாவலர் சோமசுந்தர பாரதியார்- சுதேச கீதங்கள், முற்பாகம், முற்பதிப்பு, 1922, ப. 6).

'பாரதி' பட்டம் பெற்றது அவரது 11-ஆம் ஆண்டில் அதாவது 1893 என்பது பெரும்பான்மை எண்ணமாகத் தெரிகின்றது. ஆயின் 1897 ஆன பதினைந்தாவது வயது என்பதும் உள்ளமை வேறுபாடாம்.

எட்டயபுர மன்னர் பட்டம் அளித்தார், யாழ்ப்பாணக் கவிஞர் அளித்தார், எட்டயபுரச் சபையினர் அளித்தனர் எனக் கருத்து வேறுபாடு இதில் உண்டு.

ஈற்றடி கொடுக்கப் பலர் பாடல் எழுதியதில் இவருடையது சிறந்தது என்பதால் பட்டம் பெற்றார் என்பது ஒரு கருத்து. புதிது

புதிதாக ஈற்றடிகளைக் கொடுக்கக் கொடுக்க விரைந்து கவிதை இயற்றிச் சபையோர்க்கு வியப்பளித்தார் என்பது மற்றொன்று.

எவ்வாறாயினும், தன்னாற்றல் புலப்படுத்தி, மிக்க இளமையிலேயே நாமகள் நாம விருதைப் பாடலியற்றிப் பெற்றார் என்பது வெளிப்படை.

## வாழ்க்கை

> படைப்பு நமது கண்ணுக்குத் தெரியாது அறிவுக்கும் தெரியாது.
>
> சாவு நமது கண்ணுக்குத் தெரியும் அறிவுக்குத் தெரியாது.
> வாழ்க்கை நமது கண்ணுக்குத் தெரியும்; அறிவுக்கும் தெரியும். வாழ்க்கையாவது சக்தியைப் போற்றுதல். இதன் பயன் இன்பமெய்தல் (436).

வாழ்க்கை, மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள பகுதியைக் குறிக்கிறது. அவன் உள்ளும் புறமும் ஏற்படும் மாற்றங்களை, வளர்ச்சியை உட்கொள்கிறது. மனம், மொழி, மெய்களாலான அவன் செயற்பாடுகளை அடக்குகின்றது. ஆக்கங்களை மட்டுமன்றி அழிவுகளையும் கூறாகப் பெறுகின்றது. ஏற்றங்களையும் வீழ்ச்சிகளையும் படிநிலையாக ஏற்கின்றது. துன்பங்களையும் இன்பங்களையும் உறுப்பாகக் கொள்கின்றது. தீமைகளையும் நன்மைகளையும் ஊடாக்கி அமைகின்றது. வளமும் வறுமையும் பெறுகின்றது. கனவும் நனவுமாக உருவாகின்றது.

ஏற்றத் தாழ்வுகளுடைய இவ்வாழ்க்கையை இவ்உலகுக்கு ஒப்பிடலாம். பஞ்ச பூதங்கள், இயற்கை வனப்பு, மலைகள் மடுக்கள், இரவு பகல், ஒளியும் இருளும், புயலும் அமைதியும், வெம்மையும், தண்மையும், ஆற்றலும் அடங்குதலும், கொடுமையும் அருளும், இனிப்பும் கசப்பும், பரப்பும் குறுக்கமும், ஆழமும் அகலமும்...என

உயிர்கள் அனைத்தும் வாழ்கின்றன. ஆயின் பகுத்தறிவால் பிறவுயிரினங்களிலிருந்து வேறுபட்டு வளர்ந்து நிற்கும் மனிதனின் வாழ்வு—தனிப்பட்டது. தனித்தன்மையுடையது, சிந்திக்கவும், அதன்படி செயற்படவும், நெறிப்படுத்தவும் ஆற்றலுடைய மனிதனின் வாழ்வு மேம்பட்டும் அமைதல்வேண்டும். ஆயின் அறிவு வாழ்வில் மட்டும் மனிதன் முன்னேற்றமடைந்தால் போதாது அகப்புற வாழ்வின் எல்லா நிலைகளிலும் அவன் முதன்மை நிலை பெறுதல் வேண்டும்,

மனித சமுதாயத்தின் முழுவாழ்க்கையைப் பொதுவாக உடல் உள்ளம் உயிர் எனப் பிரிக்கலாம். உடல் வாழ்க்கை உணவு, உடை, உறையுள் என அடிப்படை வாழ்வியலாக அமைகின்றது. உணவு உட்கொள்ளுதல், உடலுக்கு இன்றியமையாத அவ் உணவு பெறலுக்காக இயல்பாக முயலுதல் என்பன மனிதனிடம், பிற வுயிரினங்கட்கு உள்ளது போன்று அமைவதாகத் தோன்றுகின்றது. எனினும், அடிப்படைத் தேவையுடன் இம்முயற்சி நின்றுவிடாது ஆற்றலும் வலிமையும் புலப்படுத்துகின்றது; ஆக்கம் தருகின்றது; எனவே வேறுபடுகின்றது. உணவுத் தேட்டமும் வெறும் தேவை யாக அன்றி, உணர்ச்சி பரமாக நின்று விடாது, அறிவு மையங் கொள்வதால் சிறக்கின்றது. சீராக அமைகின்றது.

சுற்றுச் சூழலுக்கும், வானிலைக்கும் ஏற்ப நாகரிக மனிதன் பண்பாட்டுச் சின்னமாகக் கொண்ட ஆடை, அவனைப் பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தியே காட்டுகின்றது. அவ்வாறே இயற்கை அளித்த உறைவிடங்களில் தன் உறுப்புகளாலியன்ற சிறு முயற்சியில் உருவான பொந்துகளில், கூடுகளில் வாழும் உயிரினங் களிலிருந்து மனிதன் தான் வகுத்த உறையுளாலும் மாறுபடு கின்றான்.

உள்ள வாழ்க்கை மனத்தை மையமாகக்கொண்டதால் அறிவுச் சார்புடையதாக அமைகின்றது. ஐம்புலனுக்குரிய ஐந்தறிவுகளை மூளையியக்கத்தால் இயல்பாகபெற்ற பிற உயிரினங்களிட மில்லாத மன அறிவு மனிதனை நிலைபேறுடையவனாக ஆக்கு கின்றது. உடல் வாழ்க்கையைப் புறவாழ்க்கை என்றால் மன வாழ்வை அகநிலை வாழ்வு எனலாம். எனினும் புறமின்றி இவ் அகம் புலப்படா வண்ணம், அமைகின்றது. மனத்தின் எண்ணச் சலனங்கள் எழுத்தாகச் சொல்லாகப் பரிணமித்துச் செயலாக வெளிப்படுகின்றன. உள்ளத்திலேயே தங்கிச் சிறைப்பட்டுவிட்ட வாழ்க்கை பயனற்றது; அது புலப்பட்டுச் செயற்படும்போது பயனுடையதாகின்றது.

இவ் அகப்-பயன் வாழ்க்கை புறத்தை ஆள்கின்றது. உள்ளத் திற்கு ஆட்பட்ட உடல், உண்மைவாழ்வு வாழ்கின்றது. பொய்மை யான அழிவுறுகின்ற உடல் இவ்வாறு உள்ளத்திற்கு அடிப்படுவ தால் வாழ்வும்-ஏன் அவ்வுடலுமே மெய்-மெய்மை ஆகின்றன. உருவிலியான உள்ளத்தால் நடத்தப்படும் உருவான உடல் 'உள்ள' தாகின்றது. உண்மையாகின்றது. அருவமான உள்ளம் பருப்பொரு

ளான உடலில் வெளிப்பட்டு வாழ்வில் உறுதி தருகின்றது. ஊக்கம் அளிக்கின்றது. உயர்வும் பெறுகின்றது.

உயிர் வாழ்க்கை இன்னும் நுண்மையானதாக அமைகின்றது. அறிவுக்கு ஆட்பட்ட வாழ்வு சிறக்கின்றது என்பது உண்மைதான். ஆயின் அவ் அறிவு முழுமையாக நன்மை வயப்படாதபோது, தீமைக்கு இடம் கொடுக்கும்போது, வாழ்வும் தீப்பட்டுப் போகின்றது. உயிரின் ஆளுகை, நன்மையொன்றையே உயிர் மூச்சாகக் கொண்ட ஆட்சி உள்ளத்தில் மேலோங்கும்போது தீமைக்கு இடமின்றி வாழ்வு முழுமைநலம் பெறுகின்றது.

உயிர் வாழ்க்கை, உணர்தற்கும் உணர்த்துதற்கும் எளிமை யானதன்று. உண்மை நன்மை அறிவு ஆற்றல் இவற்றின் மொத்த முழு உருவான இறைமையை மனிதன் ஒவ்வொரு மூச்சிலும் மறவாது உணர்ந்து அமைதலாக இதனைக் கூறலாம். தன்நலம் இன்றிப் பிறர்நலம் தேர்ந்து அமைதல் உயிர் வாழ்வின் இத்தகு நிலையின் வெளிப்பாடு எனலாம். பேரின்ப நாட்டம் இதன் உயர்வு நிலையைக் காட்டுகின்றது எனல் போதரும். கொள்கைப்பிடிப்புள்ள குறிக்கோள் வாழ்வில் முழுமூச்சாக ஈடுபடும் நிலையில் இது புலப் படுகின்றது எனவும் மொழியலாம்.

இத்தகு மும்முனை வாழ்வினனாக அமையும் மானிடனின் வாழ்நெறியைப் பிறவிதமாகவும் அணுகுதல் இயலும். ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் வாழும் வாழ்க்கை அவற்றுள் அடிநிலை யானது. இத்தனிமனித வாழ்க்கை மனித சஞ்சாரமற்ற சூழலில் ஒருவன் வாழும் வாழ்க்கையாக வன்றிக் குளத்து நீர்போன்று பிற மனித சீவன்களுடன் கலந்தும் அதேவேளை தாமரை இலைத் தண்ணீர்த் துளியாகத் தனித்தும் அமையும் ஒன்றாகும்.

ஒருவன்-தான் என்ற நிலை சிறிது விரிந்து நாம் நமக்கு வேண்டி யவர் என, ஒரு சிலராகும்போது குடும்ப வாழ்வு ஆகின்றது. மன உடன்பாடு இரத்த உறவு என்ற நிலையில் மனைவி, மக்கள், பெற்றோர், நட்பு என்ற இணைவுக் குழுவாழ்வு இதனை உரு வாக்குகின்றது. இங்குத் தன்னில் நன்மையுடையவனாக அமைந்த தனிமனிதன் தன்னையன்றி ஒருசில பிறருக்கும் நல்லவனாக இணைந்து வாழ்தல் தேவையாகின்றது.

இந்நிலை இன்னும் பரக்கும்போது சமுதாய வாழ்வு உருப் பெறுகின்றது. தான், தனது ஒருசிலர் என்ற எல்லை விரிந்து பரந்து இனத்தால், மொழியால், நிலத்தால் ஒருங்கிணைக்கப்பட்ட

மக்கட் கூட்டத்துடன் ஒன்றிவாழ்தல் ஏற்படுகின்றது. இச்சமுதாய வாழ்வு பல தனிமனிதர்களால் குடும்பங்களால் ஆனபோதும் ஒன்றொன்றாகத் தனிப்பட்டு நிற்காது ஒன்றிலொன்று இணைந்து கலந்து, ஒன்றையொன்று சார்ந்து, தொடர்பு கொண்டு அமைதல் வேண்டப்படுகின்றது.

இச்சமுதாயம் சிறு குழுவாலாகாது, மிகப் பெருகிய ஜனப் பரப்பால் ஆகும்போது இன்னும் விரிந்து நாட்டு வாழ்க்கை, உலக வாழ்க்கை எனச் செல்கின்றது. உலகம் முழுவதும் நோக்கினால் மனிதன் மொழியால், இனத்தால், சமயத்தால், நாட்டால், பண்பாட்டால, பழக்க வழக்கங்களால், வடிவால் வேறுபடலாம்; ஆனாலும் அடிப்படையில் அனைவருக்கும் வாழ்வு என்பது ஒன்றாகும்போது உலக வாழ்க்கை எனும் பொதுமை உருவாகின்றது.

அனைவரும் வாழவேண்டும் என்பது படைப்பின் அடிப்படை நோக்கம். அவ்வாழ்வும் வெற்று வாழ்வாகி அழியாது பயனுடையதாக ஆகுதல் வேண்டும் என்பது குறிக்கோள். முடிவு மட்டும் சிறப்பாக அன்றி நெறியும் உயர்வாகி வாழ்வு முழுமை பெறல்வேண்டும் என்பது கருத்து. எனவே ஏனோ தானோ என்ற வாழ்வன்றி 'மனி' தன் என்பதற்குரிய மன்னுகின்ற மாண்புடைய பெருவாழ்வு வேண்டப் பெறுகின்றது.

சமுதாய உறுப்பினனாக மனிதன் அமையும்போது, அவன் பன்முக வாழ்வுடையவனாகின்றான். உறவு நிலையில் தந்தையாக, தனயனாக, கணவனாக அமைபவன், ஆட்சி நிலையில் தலைவனாக, அதிகாரியாக இயங்கவேண்டியிருக்கின்றது. மக்கள் நலம் விரும்புமிடத்துத் தொண்டனாக, ஊழியனாக உழைக்கவேண்டியுள்ளது. வாழ்வியல் தேவைபற்றித் தொழிலாளியாகச் செயல்பட வேண்டிவருகின்றது. மக்களை நெறிப்படுத்தும்-வழிப்படுத்தும் சூழலில் ஆசிரியனாக-உபதேசகனாக-குருவாக அமைதல் காணப்படுகின்றது.

தன்னையே மையமாகக் கொண்டு தன்னல வாழ்வு வாழும்போது, மனநிறைவு இன்மைபற்றி வாழ்வு வீழ்வுக்கு நேராகக் கருக்கொண்டோடுகின்றது. பொது நலத்தை நடுவாகக் கொண்டு, தீமைகள்நீக்கி, நன்மைகள் நாடிச்சீரான வாழ்வு அமைக்கும்போது எழுச்சியும், உயர்வும், ஏற்றமும், வளர்ச்சியும் தானாக உருவாகின்றன. தன்னை முற்றிலும் இழந்து பிறருக்காகவே வாழ்பவன் சமுதாய வாழ்வில் ஒளிவீசும் சுடரோனாகின்றான். வாழ்க்கை

எப்போதும் ஒரேவிதமாகச் செல்லும் தரமுடையதன்று. ஏற்ற இறக்கங்களுடையது. கரடுமுரடான பாதைகள் வழிச் செல்வது. பசுஞ்சோலைகளும் பாலைவனங்களுமுடையது. வளமையும் வறுமையுமுடையது. இதனால் தான் வாழ்க்கையை ஒரு ரோஜாப்படுக்கை அல்ல எனவும் முட்பாதை எனவும் கூறுகிறோம்.

## கொள்கை

அங்கமே தளர் வெய்திய காலையும்
அங்கோர் புன்னரி தந்திடு மூனுணாச்
சிங்கமே யென வாழ்தல் சிறப்பெனாச்
செம்மை கூறி ... ... ... (461)

கொள்கை, எண்ண முதிர்ச்சியில் உருவாகின்றது. ஒரு பொருளை, செயலைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனைகள், ஆய்வுகள், கொள்கைகள் வகுக்க வழிகோலுகின்றன. ஒன்றனைப் பற்றிய திடநிச்சயம் என இதனைக் கூறலாம். 'இது இத்தகையது' என இயல்பு கூறலாகவும், 'இது இப்படியிப்படி யெல்லாம் இருக்க வேண்டும்' எனக் குணங்கள் வகுத்தலாகவும் 'கொள்கை' அமைகின்றது எனல் பொருந்தும்.

ஏதேனும் ஒரு பொருண்மையைப் பற்றிய பொதுஅறிவு சில சிந்தனைகளைத் தோற்றுவிக்கின்றது. ஆயின் அச்சிந்தனைகள் நிறுவப்படாதபோது, தெளிவாக வரையறுக்கப்படாதபோது 'கருதுகோள்' அளவில் நிற்கின்றது. பின்பு ஆழப்பார்வை, நுட்பமான அணுகுமுறை, ஒப்பு நோக்கு, பயன்பாட்டு நெறி போன்ற பலவகை இடைநிலைப் படிகளால் தெளிவுறுகின்றது—கொள்கையாக உருவாக இடம் ஏற்படுகின்றது.

கொள்கைகள் பலவகையாக, பலவாறாக அமையலாம். அவை மாறவும் வாய்ப்பு உண்டு. ஒரு காலத்தில், ஒரு இடத்தில், ஒரு பொருளைப் பற்றி ஏற்பட்ட கொள்கைகள், காலக் கழிவாலும், இடமாற்றத்தாலும் வேறுபடலாம். ஆய்வு முன்னேற்றம் புதிய கண்டுபிடிப்புகள், இதுவரை கிடைக்காத பல தரவுகள், தெளிவாக்கப்பட்ட சில தொடர்புடைய செய்திகள்..போன்ற பல இதற்குக் காரணமாகலாம்,

பருப்பொருட்கள் பற்றிய கொள்கைகள் வகுப்பதும் கூட அத்துணை எளிதன்று. அவ்வாறு முயன்று வகுக்கப்பட்டனவும் மேற்கண்ட விதச் சூழலால் மாறலாம். மாற்றம் எனக் கூறும் போது அது முழுமையான மாற்றமாக இருக்க வேண்டும் என்ப தில்லை. ஒரு பகுதி காலந்தோறும் தொடர்ந்து, நிலைத்ததாகவும் இன்னும் ஒரு பகுதி மாற்றத்திற்கு இடமளித்துக் கொள்கையில் சில செப்பங்கள்–சீர்த்திருத்தங்கள்—புதுமைகள் கொள்ளுவதாக வும் இருக்கலாம்.

விஞ்ஞானத்தின் பல்வேறு வகையான வளர்ச்சி காரணமாகப் பௌதீகப் பொருட்களைப் பற்றிய கொள்கைகள் இக்காலத்து ஓரளவு தெளிவாகவே வரையறுக்கப்பட்டு விட்டன எனலாம். உலகத்தை, பிற கோள்களை, கதிர் மண்டலத்தைப் பற்றிய கோட் பாடுகளும் இவ்வாறே. ஆயின் கண்முன் நிகழும், நாம் தினந் தோறும் நடத்தும் வாழ்க்கை பற்றிய கொள்கைத் தெளிவு கேள்விக்குரியதாகவே அமைகின்றது. சமுதாயக் கோட் பாட்டியலார் கருத்து, சமயவியலார் கருத்து, மாயாவாதிகள் எண்ணம், பொருண்முதல் கோட்பாட்டினர் சிந்தனை எனப் பல அணுகுநெறிகள் அமைந்து கருத்துப் பெருக்கமும் கொள்கைப் பன்மையும் காட்டுகின்றன.

மாறுபட்டு வரும் சிந்தனைகளிடையிலும் குறிக்கோள் பற்று டன், சிறந்த உயர்ந்த நோக்கப் பிடிப்புடன் கொள்கைகளை வகுத்துக் கொள்ள முடியும். 'கொள்ளப்படுவது', 'கொண்டு ஒழுக்கப்படுவது' என்ற நிலையில் கொள்கை—கோட்பாடு, வாழ் வியலைச் சுட்டுவது போலவும் தோன்றுகின்றது.

எச்சூழலிலும், எத்தகைய தாக்குதல்களின் மத்தியிலும் நெறிதவறாது, மாற்றம் பெறாது அமைவது சிறப்பு.

## வாழ்க்கைக் கொள்கை

நமது மூதாதையர் நயமுறக் காட்டிய
ஒழுக்கமும் நடையும் கிரியையும் கொள்கையும்
ஆங்கவர் காட்டிய அவ்வப் படியே
தழுவிடின் வாழ்வு தமிழர்க் குண்டு (51)

வாழ்க்கையைப் பற்றிய கொள்கைகள் பல்வேறு விதமாக அமையலாம். வாழ்க்கை பல்வேறு விதமாக அமைவதும் அணுகப்

படுவதும் இதற்குக் காரணமாம். எவ்வாறு வாழவேண்டும், மனிதன் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியன எவை, வாழும் நோக்கம் யாது, குறிக்கோள் வாழ்வு எது, போன்ற பல்வகைச் சிந்தனைத் தெளிவுகளின் முழுநிறைவாகக் கொள்கைப் பிடிப் புடைய வாழ்வியல் அமைகின்றது.

வாழ்பவர் எவர், வாழ்நெறி வகைகள், வாழ்க்கைச்சூழல் என்பனவும் பல்வகையான கொள்கைகள் அமையக் காரணமாகின் றன. வாழ்வியல் எவ்வாறாக அமையினும், கொள்கை என எண்ணும் போது உயர்வுடைய நிலையே பெரும்பாலும் கருதப்படு கின்றது. இதனால், தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் தியாக நிலை சிறப்புடைக் கொள்கையாக உருவாகின்றது. அறம், பொருள், இன்பம், என இகவாழ்வுத் தொடர்புடை எண்ணங் களும் வீடு என மறுமை சார்ந்த கருத்தும் நல்வாழ்வியல் வேண்டப்பட்ட நிலையில் இன்றியமையாக் கொள்கையாகி இணை கின்றன. உரிமைகளைப் பற்றிக்கொண்டு வாழ்தலாக அன்றிக் கடமைகளை நிறைவேற்றுவதே உயர்வு என்ற நோக்கில் பல் வகைச் சமுதாய—குடும்பக் கடமைகள் வாழ்வியல் கூறாகிக் கொள்ளப்படுகின்றன.

இல்வாழ்வு, துறவு வாழ்வு என்ற இருவேறுபட்ட வாழ் நிலைக்கு ஏற்ப அவ்வவற்றின் கொள்கைகளும் மாறுபட வாய்ப் புண்டு. இல்வாழ்வோனிலும், பால், வயது அதன் காரணமாக ஏற்படும் பொறுப்பு இவை பற்றிக் கொள்கைகளில் சார்பும் வேற்றுமையும் ஏற்படலாம். கல்வித்தகுதி, பதவி, தொழில் என்பனவற்றிற் கேற்பவும் ஒரு சில கொள்கைகள் மாறும் வாய்ப்பு அமைவதை வாழ்வியல் காட்டுகின்றது.

### பாரதியாரும் வாழ்க்கைக் கொள்கைகளும்

சேம மணிப் பூந்தட நாட்டில்
சிறிய புழுக்கள் தோன்றி வெறுங்
காம நுகர்தல் இரந்துண்டல்
கடையாம் வாழ்க்கை வாழ்ந்து பினர்
ஈமம் புகுத விவை புரிவார்
ஏன்னே கொடுமை யீங்கிதுவே (463)

வாழ்வியலில், சூழல் காரணமாகப் பல சிக்கல்கள் இருந்த காலத்தில் வாழ்ந்த பாரதியார், தனது பல படைப்புகளிலும் வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுதல் இயல்பு; வாழ்வியல் சிந்தனைகள் பலவற்றை வழங்குதலும் இயற்கை. எந்தப் படைப்பாளனும், கலைஞனும், எழுத்தாளனும் சூழலால் பாதிக்கப்படுகிறான் என்பது இவரிடமும் உண்மையாகின்றது. இலக்கியம் இலக்கியத்திற்காகவே எனும் எண்ணம் ஒரு பாலாக, இலக்கியமும் எக்கலையும் வாழ்க்கைக்காகவே எனும் கோட்பாட்டு வழிப்பட்டவராக இவர் தோன்றுகின்றார். இதனால் வாழ்வியலுக்கு முழு முதன்மை கொடுப்பதாகக் கூறலாம்.

வாழ்வியலைப் பற்றிய இருவிதமான அணுகுமுறைகள் பாரதியிடம் வெளிப்படுவதாகக் கொள்ளலாம். ஒன்று நிலவும் வாழ்வைக் கூறுதல்; இன்னொன்று விரும்பிய வாழ்வை வெளிப்படுத்துதல். முன்னது அவர் காலத்து மக்களின் சீர்கெட்ட வாழ்வின் சித்திரமாக அமைகின்றது. பின்னது அவர் விரும்பி வரவேற்கத் தயாரான சீர்திருத்த வாழ்வின் பிரதிபலிப்பாக அமைகின்றது. அடிமை வாழ்வின் வரைபடமாக முன்னதும், விடுதலை வாழ்வின் ஓவியமாகப் பின்னதும் அமைவதாகக் கூறலாம். நம் நாட்டிலும் உலகெங்கும் அவர் கண்ட, கேட்ட இழிந்த வாழ்வு முன்னதிலும், பல இடங்களில் பல காலத்தில் சிறந்திருந்ததாக அறிந்து அனுபவிக்க விரும்பிய வாழ்வு பின்னதிலும் இடம்பெறுகின்றது. குறை வாழ்க்கை—குற்ற வாழ்க்கை முன்னதிலும், குறையற்ற, நிறைவுடைய வாழ்க்கை பின்னதிலும் வருகின்றது.

வாழ்வியலின் வெறும் படப்பிடிப்புகளாக விட்டுச் செல்லாமல், இடித்துரையும், அறிவுரையுமாகவும், வாயுறையும், செவியறிவுறூவுமாகவும் அமைக்கின்றார். எவ்வாறு வாழலாகாது என விலக்குவதாகவும், எவ்வெவ் விதம் வாழவேண்டும் என வழிகாட்டியாகவும் அமைக்கின்றார். இதனால் இருவிதமான கருத்து வெளியீட்டு அணுகுமுறைகள் காணப்படுகின்றன; உடன்பாடு, எதிர்மறை-வேண்டுதல், விலக்குதல் என.

வாழ்க்கைக் கொள்கைகளைத் தருவது நோக்கமாக அமையினும் அதனை நேரடியாகத் தந்து அறவியல் கருத்துகளின் தொகைநூலாக்குவது அத்துணைச் சிறப்புடையதன்று. எனவே இலக்கிய நயம் குன்றாது, அதேவேளை கருத்துகள் முதன்மை இழந்து விடாது, கற்போர் உணர்ந்து ஏற்றுக் கொள்ளும் நிலையில்

தருவது சிறப்புறலாம். சீர்திருத்த இலக்கியம் அல்லது பிரச்சார இலக்கியம் என முத்திரை பெறாது அமையும் வாய்ப்பு இங்கு வெளிப்படுகின்றது.

பாரதி, தமிழரைப்பற்றிய சிந்தனையாளனாக, அடிமைப்பட்ட நாட்டைப் பற்றிய சிந்தனையாளனாக, உலக ஈடேற்றத்தைப் பற்றிய சிந்தனையாளனாக அமைகின்றார். இதனால் அவர் படைப்புகள் பலவற்றிலும் இவ்வாழ்வியல் தொடர்பு எண்ணங் கள் பரக்கவே காணப்படுகின்றன. வாழ்வு சிறந்தால்தான் அடிமைத்தளை நீங்கும் என்ற நம்பிக்கை பற்றி ஏதேனும் ஒரு கோணத்தில் வாழ்நிலை விளக்கம் பெறும் வண்ணம் படைப்பு களைத் தருகின்றார்.

தனிப்பாடலும், நெடும்பாடலும் எல்லாம் இவ் எண்ணத் துடன் அணுகத் தக்கன. குயில்பாட்டில் புலவன் வாழ்வு, காதல் வாழ்வு போன்றன புலப்படுகின்றன. சுயசரிதை போன்றதில் பாரதியின் வாழ்வு, ஆன்மீகவாழ்வு போன்றன வெளிப்படுகின்றன. கண்ணன்பாட்டில் பலவகைக் குடும்ப உறவுகளும் சார்புடைச் செய்திகளும் தாங்கிய வாழ்வியல் வெளிப்படுகின்றது. அரசியல் வாழ்வு, பெண் வாழ்வியல் போன்ற சில பாஞ்சாலி சபதத்தில் புலப்படுகின்றன. நாட்டு வாழ்வு பெரும்பான்மையான தேசியப் பாடலிலும் காணப்படுகின்றது.

மொத்தமாகப் பார்க்கும் போது சமுதாயத்திற்கு இன்றியமை யாத வாழ்வியல் பற்றிய பல எண்ணங்கள் இவரிடம் புலப்படக் காணலாம். தமிழனுக்குக் கூறியதால், அவன் வாழ்வு ஈடேற்றத் துக்கு இன்றியமையாத தமிழ்மொழிப் பற்று, அதனைச் சார்ந்த தமிழ்மரபுப் பற்று, இரட்டைத் தேசியம் எனத்தகும் தமிழகப் பற்று—இந்திய நாட்டுப்பற்று என்பனவற்றை எல்லாம் தருகின் றார். இறை மையங் கொண்ட வாழ்வினராகக் கவிஞர் அமைந்த தால் இறைப்பற்று—சமயப்பற்று என்பனவும் கூறுகின்றார். ஒரு மனிதாபிமானியாக, மானுடப் பற்றாளராக அமைந்ததால் அது தொடர்பான எண்ணங்களையும் தருகின்றார். பலவகை வேறு பாடுகளால் பிரிந்து கிடந்த இந்தியாவின் மக்கள் நிலையே விடுதலைக்குத் தடை என நினைந்ததால், ஒருமைப்பாடு பற்றிய எண்ணங்களை வலியுறுத்தினார். வீட்டில் பெண்ணடிமை ஒழியின் நாட்டில் அன்னியராட்சி விலகும் என்ற சிந்தனையுடன் பெண்ணுரிமைகளை முழங்கினார். குழந்தைப் பருவத்திலிருந்தே நாட்டிற்குப் பயன்படத்தக்க நல்ல ஆண்மகன் உருவாதல்

வேண்டும் எனும் முனைப்பில் தாய்க்கு முதன்மை அளிக்கும் கருத்துகள் தந்தார். இவ்வாறு வாழ்க்கையில் பலவகைப் பட்டோர்க்கும் உதவும்படி, பலவகையான சிந்தனைகளைத் தந்து மானுடம் முழுவதும் பயன்பெறத்தக்க கொள்கைகளைக் கூறினார்.

வாழ்க்கைக் கொள்கைகளை எடுத்தியம்ப பாரதி பலவிதமான உத்திகளைக் கையாள்கிறார். நேரடியாகத் தரா தவிடத்தும் உவமை, உருவகம், குறிப்பு, குறியீடு எனப் பல உத்திகள் வாயிலாக வாழ்வியல் உண்மைகள், எண்ணங்கள் தரப்படுகின்றன. பழமொழி, கேள்வி-பதில், மனிதரல்லா உயிரினப்பேச்சு என்பனவும் கவிஞரால் இதற்குப் பயன்படுத்தப்படுகின்றன.

வெறும் கொள்கையளவில் நின்று விடும் வா ழ்வியலாக அன்றி நடைப்பியலுக்கு ஏற்புடையதான எளிய இயல்பு வாழ்வியல் எண்ணங்களும் கவிஞரால் தரப்படுகின்றன. பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், எதிர்பார்ப்புகள் என வாழ்வியல் தொடர் பெண்ணங்கள் பலவும் இணைகின்றன.

பாரதியாரின் வாழ்வும், தன் வாழ்வில் அவர் பல்நிலையில் அறிந்த கொள்கைகளைத் தரும் படைப்புகளும், மறைமுகமாகவும் நேரடியாகவும் அவரது வாழ்வியல் கொள்கைகளை உணர வழி செய்கின்றன. மனித வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் 'வாழ்க்கைக் கொள்கை' என்பதில் பல பகுப்புகளாக அடக்கமுடியும் என்பதால், கவிஞனின் பலநிலைச் சிந்தனைகளையும் இங்கு நம்மால் கருத இயலும்.

பாரதியார் ஒரு காலகட்டத்தில் வாழ்ந்து, அவ் அனுபவ அடிப்படையில் வாழ்க்கைக் கொள்கையைத் தந்தவரெனினும், அவை இன்றும் கடைப்பிடிக்கத்தக்கன; வேண்டியன. அவர் ஒரு தீர்க்க தரிசி என்பதும் இம் முடிவுக்குக் காரணம். தன் காலத்தவர்க்கு மட்டுமன்றி எக்காலத்தவர்க்கும் ஏற்ற கொள்கைகளைக் கூறுகிறார்; தன்நாட்டினர்க்கு மட்டுமல்லாது எவ்விடத்தவர்க்கும் உரிய கொள்கைகளைத் தருகின்றார் என்பனவும் காரணம்.

மனித சக்தியும், செயற்பாடும் தேவைப்பட்ட சூழலில், எதிராற்றல் மிக வலிமையுடையதாக இருந்தபோதும் அஞ்சாது தோள்கொடுத்து நெஞ்சம் நிமிர்ந்து நின்ற அவரது வாழ்வு, 'மாதிரி' வாழ்வு எனல் போதரும். கொள்கைப் பிடிப்புக் காரணமாக அவர் 'முன் கண்ட' விடுதலையை, அவர் வழியிற் சென்று

முயன்றதாலேயே பின்பு பெற முடிந்தது எனக் கூறலாம். அரசியலில் பிறர் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றபோதும் பிற துறைகளில் இன்றும் முழு விடுதலை பெறாத சூழலே இன்று அமைகின்றது. எனவே அவற்றிற்கும் பாரதியின் கொள்கைகளை நெறியாகக் கொண்டு பின்பற்றுவது முழு விடுதலைக்கு நேராக வழிநடத்தும் எனக் கொள்ளலாம்.

பல காலத்தில், பல சூழலில், பலவகைத் தேவைகளின் உந்துதலில், பலவகை உணர்வுகளின் கொப்புளிப்பில் எழுந்த கவிஞனின் உரையும் கவிதையும், பலவகையான எண்ணத் தாக்கங்களையும் காட்டுகின்றன. சில பிரச்சினைகளின் ஆழமும் அழுத்தமும் காரணமாக அவை தொடர்பான வாழ்வியலில் தெளிவான சிந்தனைகள் காணப்படுகின்றன. இன்னும் சில, பொதுமையாக அமைதல் பற்றி எண்ணங்களும் மேற்போக்காக அமைதலும் உண்டு.

இவ்வாறு பல்வகையாகக் கவிஞன் தரும் வாழ்வியல் எண்ணங்களைப் பலவகையாகப் பகுத்து நோக்கலாம். அடிப்படை வாழ்வியல் என்ற நிலையில் உணவு, உடை, உறையுள் தொடர்பான கவிக் கருத்துகளைக் காணலாம். அன்றியும் தின வாழ்க்கை என்ற நிலையில் சில எண்ணங்களைத் தேரலாம். பலவிதமான நோக்கம் காரணமாக மாறுபட்ட வாழ்நெறிகளைக் கருதலாம். அன்றியும் பருவவேறுபாடு காரணமாக வாழ்க்கை வேறுபடுதலைக் குழந்தை, இளைஞர், முதியவர் எனப் பகுத்து நோக்கலாம். அவ்வாறே பால் வேறுபாடு பற்றி, ஆண், பெண் எனப் பார்க்கலாம். தகுதி வேற்றுமை பற்றி அரசன், கவிஞன் என்பது போன்றும் நினைக்கலாம்.

சமுதாயத்திற்கு இன்றியமையாத தேவை உறுப்பு நிலை என்று அளவில் நாடு-அரசு எனவும் குடும்பம்-மணம் எனவும் கல்வி-தொழில் எனவும் சிலபல நிலைகளை ஒட்டி வாழ்வியல் எண்ணங்களை வகுக்கலாம். இவற்றுள் உட்படும்படி விடுதலை, காதல், பொருள் செய்தல் என்பனவற்றையும் முறையே கருதல் கூடும்.

உலகளாவிய வாழ்வின் பொது எண்ணங்களான சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் பற்றியும் கவிஞர் நினைக்கின்றார். தமிழன்-இந்தியன்-உலகன் என்ற வாழ்வியல் வளர்ச்சிப் பரப்பும் காண இடமளிக்கின்றார். சாதி மத பேதம் அறுத்தலும் ஒருமைப்பாடு வளர்தலும் கூடப் பொதுநிலையில் கருதத்தக்கன. சமயம், தத்துவம் பற்றிய சிந்தனைகளும் மனுக்குலம் அனைத்தையும் உட்படுத்தும் நிலை பற்றி வாழ்வியலில் இணைத்து ஆயத்தக்கன.

உடல்-உள்ளம்-உயிர் எனும் மும்முனை வாழ்வியல் எண்ணங்கள் பாரதியின் தனிச்சிறப்பைப் புலப்படுத்த வல்லன. அறம் தழுவிய ஆக்கமுடை வாழ்வின் அடித்தளமாக இது அமைகின்றது.

## மனித வாழ்வியம்

சிந்தையி லறமுண்டாம் - எனிற்
சேர்ந்திடுங் கலிசெயும் மறமு முண்டாம்
மெய்த்தவர் பலருண்டாம் - வெறும்
வேடங்கள் பூண்டவர் பலருமுண்டாம்
உய்த்திடு சிவஞானம் - கனிந்
தோர்ந்திடு மேலவர் பலருண்டாம்
பொய்த்தவிந் திரசாலம் - நிகர்
பூசையும் கிரியையும் புலைநடையும்
கைத்திடு பொய்ம்மொழியும் - கொண்டு
கண்மயக் காற்பிழைப் போர்பலராம் (316)

மனிதர் பல வகைப்பட்டவர். எனவே மனித வாழ்க்கையும் பலவகைப் படுகின்றது. பல வகையான மனிதரைக் கண்ட பாரதியும் வெவ்வேறுபட்ட வாழ்க்கைகளைச் சுட்டுகின்றார். அற வாழ்வு சிறப்புடையது. எண்ணத்தில் அறம் கருக்கொள்ளும் போது வாழ்வும் அறமுடையதாகின்றது. சிந்தையில் அறம் நிலை கொள்ளாதபோது செயல்கள் மறமுடையதாகித் திரிகின்றன. இதனால் வாழ்வியல் தீமையுடையதாகின்றது. இல்வாழ்வோர் செவ்விய வாழ்வினராதல் உலகை ஈடேற்றுகின்றது. ஆயின், அதே வேளையில் துறவு வாழ்வினரும் அறச்செல்வராக அமைதல் தேவைப்படுகின்றது. அவர் நெறி தவறும்போதும் தீமை விளைகின்றது. துறவிகள் உண்மை உடையவராக அன்றி வெறும் வேடதாரிகளாகும்போது நிலையில் தாழ்கின்றனர். வாழ்வு தாழ்வாகிச் சீரிழக்கின்றது. தீமை வெளிப்பட்டு நிற்கும்போது அதனை அழிப்பது எளிது. ஆயின் அது நன்மைத்தோல் போர்த்துப் பதுங்கிக் கிடக்கும்போது காண்போரை ஏமாற்றுகின்றது. தோற்றத்தால் மனிதனை வீழ்த்தி ஆற்றலறச் செய்கின்றது. ஞானம் இருக்க வேண்டிய இடத்தில் அஞ்ஞானம் அரசு புரிகின்றது. வாய்மை வாழ வேண்டிய காலத்தில் பொய்ம்மை

கோலோச்சுகிறது. உண்மை, இல்லாததும் இயலாததுமாகி அடங்கிக் கிடக்க, அடிமைப்பட வேண்டிய இன்மை தலைவிரித்து ஆடுகின்றது.

வாழ்வியலின் ஈரெல்லைகள் இங்குப் புலப்படுகின்றன. உலகம் தோன்றியது முதல் இன்று வரை காணப்படுவன இந்நிலைகள். நன்மை ஓங்கி நிற்பதே வேண்டப்படுவது எனினும் ஒவ்வோரி டத்தும் காலத்தும் அது கீழ்ப்படுகின்றது; வாழ்வும் வேறுபடு கின்றது. இத்தகு சுவையில்லாச் சூழலிலும் வாழ்வின் சிறப்புப் பற்றிய நம்பிக்கை வயப்பட்ட (optimism) சிந்தனைகள் எழத் தான் செய்கின்றன. வாழ்க்கையை எளிமையும் சிறப்புமுடைய தாகக் கருதும் சூழலாக இது அமைகின்றது. பாரதி பல சூழல் களிலும் வாழ்வை இன்பங்கள் நிறைந்ததாகக் காட்டுகின்றார். இது பகுதிப்பார்வையாக அன்றி அவர் விருப்பத்தின் வெளியீடாகக் கொள்ளத்தக்கது.

இவ் வுலகம் இனியது...
மனிதர் மிகவும் இனியர்.
இளமை இனிது. முதுமை நன்று.
உயிர் நன்று. சாதல் இனிது. (420)

எல்லாம் இன்பமயமான ஒரு உலக வாழ்வு இங்குச் சுட்டப்படு கின்றது. வசன கவிதையில் முதலாவது வரும் காட்சி என்பதன் முதற்கிளையான 'இன்பம்' இவ்வுணர்வின் முழு வெளிப்பாடாகும். உள்ளத்தெளிவு கண்களில் அமையும்; கண்களின் தெளிவு காட்சியிலமையும்—எனக் கூறத் தகும் வண்ணம், இன்பக் கருக் கொண்ட சிந்தனையால் வாழ்வில்.இன்பம் தெளிகின்றது; எங்கும் எதிலும் இன்பம் தெரிகின்றது; பாரதியின் சமயம் சார்ந்த வாழ் நிலை இவ் எண்ண முடிவைத் தருகின்றது எனலாம்.

ஒன்று பரம்பொருள் நாம் அதன் மக்கள்
உலகின்பக் கேணி என்றே... (25)

இத்தகு எண்ணம், பாரதியைப்போலவே உலகக் கவிஞரிடமும் காணப்படுவதே. 'கடவுள் மேலுலகில் இருக்கிறார்; நிலவுலகில் அனைத்தும் நன்றாகவே யுள்ளது' என்பர் ராபர்ட் பிரௌனிங்.*

---

* God's in his heaven—
All's right with the world!

—Pippa Passes (1841), Robert Browning.

தன்னம்பிக்கையுடன் முன்னேறும் வாழ்நிலையில் இவ் இன்ப நிறைவுகள் காணப்படல் இயல்பு. இனிமையுடையதான வாழ்க்கை வெற்றியுடையதாகவும் அமைதலை வாழ்வியல் நம்பிக்கையின் உச்சமெனலாம். கிடைக்கும் என்ற நம்பிக்கை ஒரு பாலாக கிடைத்தது எனும் தேற்றம் அதன் மணிமுடியாகின்றது.

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
　　எங்கு நோக்கினும் வெற்றிமற் றாங்கே
விடுத்த வாய்மொழிக் கெங்கணும் வெற்றி
　　வேண்டி னேனுக் கருளினள் காளி...
எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
　　எங்கும் வெற்றி எதனினும் வெற்றி . (138-39)

இங்கும் நம்பிக்கைசார்வாழ்வு இறை மையம் கொண்டுள்ளது புலப்படுகின்றது. கவிஞனின் தற்சார்புக் கருத்தாகவும் இது வெளிப்படுகின்றது.

பாரதியின் சில கூற்றுகள் பொருள் முதல்வாத அணுகுதலையும் (materialistic) கொள்வதாகத் தெரிகின்றது. சில பகுதிகளைப் பார்க்கும்போது நம்பிக்கை வயப்பட்டதாகத் தோன்றினும், அவ்வாறு முழுமையும் பொருந்தாது அமைவதாலும், அவநம்பிக்கையை எதிர்க்க வேண்டும் எனும் தோற்றம் (anti-pessimism) ஏற்படுவதாலும் இதனில் உட்படுத்தப்படுகின்றது.

சென்றதினி மீளாது மூடரே நீர்
　　எப்போதும் சென்றதையே சிந்தை செய்து
கொன்றழிக்கும் கவலை யெனும் குழியில் வீழ்ந்து
　　குமையாதீர் சென்றதனைக் குறித்தல் வேண்டாம்
இன்றுபுதி தாய்ப்பிறந்தோம் என்று நீவிர்
　　எண்ணமதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற் றிருந்து வாழ்வீர்
　　தீமையெலாம் அழிந்துபோம் திரும்பிவாரா (193)

சுயசரிதையில் குள்ளச்சாமியின் உபதேசத்தைக் கூறுமிடத்தும் கவிஞர் இதே அடிகளைத் தருகின்றார் (264). உமர் கய்யாமின் வாழ்வியல் எண்ணம் இங்கு வெளிப்படுகின்றது. நேற்று, நாளை என்பன பற்றிக் கவலையுறாத வாழ்வு; 'இன்று' மட்டும் கருதப் படும் வாழ்வு; 'தின்று விளையாடி இன்புற்று' என்பதால் பொருள் வாழ்வு-உடல் வாழ்வு; மனம் கவலையற்று இருப்பது என்பதால்

மன வாழ்வு. உள்ளும் புறமும் இன்பம் நிறைந்த வாழ்வு. தீமைகள் அனைத்தும் அழிந்தொழிந்த வாழ்வு.

பாரதியின் இத்தகு வாழ்வியல் எண்ணமும், இறைநோக்கும் ஆன்மீக மையமும் கொண்டு அமைகின்றது எனலாம். வசன கவிதையில்,

''சென்றது கருத'' மாட்டேன். ''நாளைச் சேர்வது நினைக்க''
மாட்டேன்;
இப்போது என்னுள்ளே சக்தி கொலு வீற்றிருக்கின்றாள் (433

என வரும் பகுதி இதனை வலியுறுத்தும். எனவே இது உமரின் எண்ணம் போன்று முழுமையும் பொருள்முதற் சார்புடையது ஆகாது வேறுபடுகின்றது. யோகியும் போகியும் உரையாடி, ஞானியும் பங்குபெற்று முடிவதான கவிஞரின் 'மது' எனும் பாடலும் (231-34) இவ் எண்ணத்திற்கு வர வழிவகுக்கின்றது உலகும் அதன் அனைத்து இன்பங்களும் இறைமைச் சார்புடன் தரப்படுதல் இதன்கண் அமைகின்றது.

மாதரோடு மயங்கிக் களித்தும்
மதுர நல்லிசை பாடிக் குதித்தும்
காதல் செய்தும் பெறும்பல இன்பம்
கள்ளில் இன்பம் கலைகளில் இன்பம்
பூதலத்தினை ஆள்வதில் இன்பம்
பொய்ம்மை யல்ல இவ் வின்பங்க ளெல்லாம்
யாதுஞ் சக்தி இயல்பெனக் கண்டோம்
இனிய துய்ப்பம் இதயம் மகிழ்ந்தே (233)

ஐம்புல இன்பங்களும் இங்குக் குறிப்புப் பெறுகின்றன. ஐம்புலங் களும், அறிவும் பொருந்திய உடல் சார்ந்தது வாழ்வு என்பதால் அனைத்துக் கூறுகளையும் கவிஞர் நினைக்கின்றார் எனலாம். பூதலத்தை ஆளுதல் என்பதால் அறிவுச்சார்பு காட்டப்படு கின்றது. ஐம்புலனுக்கும் இன்பம் தரும் பெண்மையும் கலையும் முதன்மை பெறுகின்றன. உணவின்பம் பற்றிப் பிறிதிடத்தும் கவிஞர் நினைப்பதால் (453) கள்ளில் அதனை உட்படுத்துகின்றார் எனலாம். உடல் வாழ்வும், அறிவுசார் உள்ள வாழ்வும், சக்தியின் இணைவால் உயிர் வாழ்வாகவும் அமைகின்றன.

பொருள்முதல்வாத வாழ்வைக் குறிப்பதாகத் தோன்றும் பிற சில பகுதிகள் எள்ளல் (sarcasm) தொனி கொள்வதாகவும்

தோன்றுகின்றது. உழைப்புக்கும், முயற்சிக்கும், கடமைக்கும், ஆக்கத்திற்கும் முதன்மை கொடுக்கும் கவிவலவன், அவற்றிற்கு முரணான எண்ணம் தருகிறார்.

கடமை புரிவா ரின்புறுவார்
    என்னும் பண்டைக் கதை பேணோம்
கடமை யறியோம் தொழிலறியோம்
    கட்டென் பதனை வெட்டென் போம்
மடமை சிறுமை துன்பம் பொய்
    வருத்தம் நோவு மற்றிவை போல்
கடமை நினைவுந் தொலைத் திங்கு
    களியுற் றென்றும் வாழ்குவமே (192)

வாழ்க்கை இன்பமாக அமைவதற்குத் தடையாக அமைவன அனைத்தையும் நீக்கும் முயற்சியில் மனிதன் கடமையையும் புறக் கணிப்பது எள்ளப்படுவதாகத் தோன்றுகின்றது. கடமை புரிவதே இன்பம்; எத்தகைய துன்பம் வரினும் துணிந்து கடமை ஆற்றல் வேண்டும்; வாழ்வுக்குத் தொழில் எத்துணை தேவையோ அத்துணை கடமையும் இன்றியமையாதது; நினைவில் நின்று மனத்தை அரிக்கும் நோயாகக் கடமை அமையாது, செயற் பாடாகிப் பரிணமித்தல் வேண்டும்; அப்போது மடமை தெளியும்; சிறுமை தேயும்; துன்பம் தொலையும்; பொய்மை அழியும்; வருத்தம் நீங்கும்; நோவு போகும்; இன்பம் உருவாகும்.

கடமை பற்றிய இக்கூற்றுப்போன்றே தொழில் பற்றிய கவிதையிலும் கவிஞரிடம் இத்தகு முரண் எண்ணத் தோற்றம் அமைகின்றது வானத்துப் பறவைகளும், பூமியின் புல் பூண்டு களும் கவலையும், உழைப்புமின்றியும் சிறக்க வாழ்கின்றன இறையருளால் போற்றப்படும் இவற்றைப்பற்றிய விவிலியக்கருத்து பாரதியிடம் செல்வாக்குக் கொண்டிருக்கலாம்.* அன்றியும் அன்பு

---

* ஆகாயத்துப் பட்சிகளைக் கவனித்துப் பாருங்கள். அவைகள் விதைக்கிறதுமில்லை, அறுக்கிறதுமில்லை, களஞ்சியங்களில் சேர்த்து வைக்கிறதுமில்லை. அவை களையும் உங்கள் பரமபிதா பிழைப்பூட்டுகிறார்... காட்டுப் புஷ்பங்கள் எப்படி வளருகிறதென்று கவனித்துப் பாருங்கள். அவைகள் உழைக்கிறதுமில்லை; நூற்கிறது மில்லை. என்றாலும் சாலொமோன் முதலாய்த் தன் சர்வ மகிமையிலும் அவைகளில் ஒன்றைப் போலாகிலும் உடுத்தியிருந்ததில்லை...ஆகையால் என்னத்தை உண் போம் என்னத்தைக் குடிப்போம் என்னத்தை உடுப் போம் என்று கவலைப்படாதிருங்கள்.
பரிசுத்த வேதாகமம், மத்தேயு 6:26,28, 29, 31.

ஒன்றையே தாரக மந்திரமாகக் கொண்டு அனைத்துயிரும் வாழ்ந் தால் எத்துன்பமும் இல்லை என்ற பொதுக்கொள்கையும் கவி யுள்ளத் தோய்வு கொண்டிருக்கலாம்.

மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்
வரம்பு கட்டாவிடினும் அன்றி நீர் பாய்ச்சாவிடினும்
வானுலகு நீர்தருமேல் மண்மீது மரங்கள்
வகைவகையா நெற்புற்கள் மலிந்திருக்கு மன்றே
யானெதற்கும் அஞ்சுகிலேன் மானுடரே நீவிர்
என்மதத்தைக் கைக்கொண்மின்பாடுபடல் வேண்டா
ஊனுடலை வருத்தாதீர் உணவியற்கை கொடுக்கும்
உங்களுக்குத் தொழிலிங்கே அன்புசெய்தல் கண்டீர் (193)

தொழில் அன்பு; உடலுழைப்பு உணவுக்காக மட்டும் அன்று; மக்களுக்கு உணவு தர இயற்கை ஆற்றலுடையது; போதுமானது; எனவே உழைப்பு அன்புமயமான உலகை ஆக்கப் பயன்பட வேண்டும். உடல்வாழ்வாக நின்றுவிடாது உயர் வாழ்வாக மிளிர வேண்டும். உள்ள மேம்பாடு உலகை மேன்மைப்படுத்தும். இறை முதல்வாதிகள் அல்லாதோர்க்கும் பொருந்தும்படிக் கவிஞர் இங்கு ஆற்றலுடை இயற்கையைக் கூறுவதுடன் நின்று விடுகிறார்.

சுயசரிதையில், குரு உபதேசமாக மீண்டும் இதனை ஒத்த வாழ்வியல் எண்ணத்தைக் கவிஞர் தருகின்றார். அங்கு இது இன்னும் சிறிது விளக்கம் பெறுகின்றது. இயற்கையும் ஒரு படி மேற்சென்று இறையையும் தழுவிக் கொள்கின்றது. கொலை, கலகம், களவு என்பன நீக்கப்படுதல் நல்வாழ்வுக்கு அடிப்படை யாகக்காட்டப்படுகின்றன. நிலம் தனியுடமையாகிப்பிளவு படாது பொது உடமையாதலும் உலக வாழ்வில் தேவையாகின்றன.

நேராக மானுடர் தாம் பிறரைக் கொல்ல
நினையாமல் வாழ்ந்திட்டால் உழுதல் வேண்டா
காரான நிலத்தைப் போய்த் திருத்தல் வேண்டா
கால்வாய்கள் பாய்ச்சுவதில் கலகம் வேண்டா
சீரான மழை பெய்யும் தெய்வ முண்டு
சிவன் செத்தா லன்றி மண்மேல் செழுமை உண்டு
ஆதலால் மானிடர்கள் களவை விட்டால்
அனைவருக்கும் உழைப்பின்றி உணவுண்டாகும்
பேதமிட்டுக் கலகமிட்டு வேலி கட்டிப்
பின்னதற்குக் காவலென்று பேருமிட்டு
நீதமிலா கள்வர் நெறி யாயிற் றப்பா (271-72)

இயற்கையின் ஆற்றல் ஒருபால்; இறையருள் மற்றோர்பால்; இவற்றுடன் மனிதனின் தீதற்ற வாழ்வு இணைதல் முழுவாழ்வு தரும் என்பது தெரிகின்றது.

வாழ்க்கையை ஒரு பெருங்கனவாகவும் கருதும் இயல்பு பாரதியிடம் அருகி அமைகின்றது. வாழ்க்கை என்பது புலப் படுவது; ஆயின் அது வெறும் தோற்றம்; நிலைத்தது அன்று; மறைந்து விடும் தன்மையது; மாயை; எனவே வாழ்வோரை மயக்குவது. விரைந்து கழியும் காலம் பற்றி, முன் வாழ்வு வெறும் நினைவாக அமைந்து விடும் இயல்புநிலையை இங்குக் கருதலாம். இது பற்றிப் போலும் கவிஞர் பொது எண்ணங்களைத் தரும்போதன்றித் தன் வாழ்வைக் கூற முனையும்போது இம் மாயாவாத வாழ்வியலை நினைக்கின்றார்.

சுயசரிதையின் 'கனவு'ப் பகுதியில் இருமுறை கவிஞர் இம் மாயாவாதத்தை வலியுறுத்துகின்றார். இவருக்கு வாழ்வியலைப் பற்றிய இத்தகு எண்ணம் வரப் பட்டினத்தார் அடிப்படை என லாம். அவரது பாடலடிகளுடன் இப்பகுதி தொடங்குதல் இதற்குக் காரணம். அத்துடன் வாழ்வியல் பற்றிய பல கொள்கைகளையும் அறிந்து சிந்தித்த கவிஞர் இதனையும் எண்ணித்தருதல் இயல்பே நிலையாமை பற்றிய பொது எண்ணமாகவும் இது கருதத்தக்கது.

வாழ்வு முற்றும் கனவெனக் கூறிய
மறைவ லோர்தம் உரைபிழை யன்றுகாண்
தாழ்வு பெற்ற புவித்தலக் கோலங்கள்
சரத மன்றெனல் யானும் அறிகுவேன்...
உண்மை தன்னிலொர் பாதி யுணர்ந்திட்டேன்
மாயை பொய்யெனல் முற்றிலும் கண்டனன்...(246)

'மெய்'யெனப்பட்டாலும் 'பொய்'யான இவ்வுடல் வாழும் வாழ்வும் 'பொய்'த் தோற்றம் கொள்கின்றது.

நேற்றிருந்தார் இன்று இல்லை எனக்கருதும் அளவுக்கே மனித வாழ்வு அமைகின்றது. அந்நிலையில் போர் போன்ற பேரழிவுகள் பல உயிரைக் கொள்கின்றன. அடிப்படை வாழ்வுக்குத் தேவை யான உணவு கிடைக்காது. பசி, பஞ்சம், பட்டினி எனவும் புல்லாயிரக் கணக்கான உயிர்கள் அழிகின்றன. நற்செயல் புரிவு

தால் நிலைத்த பெயரும் புகழும் பெற்று உடல் இறந்த பின்னும் வாழும் மானிடர் சிலரே. இவர்கள் நிலைத்த வாழ்வினர் எனத் தக்கனர் எனினும் பெரும்பாலோர் உலக வரலாற்றில் எவ்வித இடமும் பெறாது அழிகின்றனர். மனிதரல்லாத பல சிறு உயிரினம் தோன்றி மடிவதுபோன்றது இவ்வாழ்க்கை. பொருளற்றவாழ்க்கை இது; நோக்கமற்றவாழ்க்கை; பயனற்றவாழ்க்கை. தான் பயனற்று வாழ்ந்து மடிந்து விடுவதுடன் அமைந்து விடுவதில்லை. மனிதன் பிறருக்குப் பல தீமைகளும் செய்த பின்புதான் போய்ச் சேருகின்றான். இதனால் பிற உயிரினத்திலும் இழிந்த வாழ்வினன் ஆகின்றான்.

உலகெ லாமொர் பெருங்கன வஃதுளே
  உண்டு றங்கி இடர்செய்து செத்திடும்
கலக மானிடப் பூச்சிகள் வாழ்க்கையோர்
  கனவினுங் கனவாகும் (246, 256)

பாரதி வாழ்க்கையின் நோக்கில் ஒரு கோணமான மாயா வாதத்தை இங்குத் தரினும் அது வேறு நோக்கம் கொள்கின்றது. நேற்று என்பதும், நிகழ்ந்து முடிந்தவை என்பனவும் இனி மீண்டு வரா மாயை என்பதால் விலக்கத்தக்கன. கடந்தது கவலைப்படற் குரியதன்று. அதனை மறந்து வருவதை முன்நோக்க வேண்டும். ஞானம் ஒன்றையே அடிப்படையாக்கித் துறவு ஒன்றையே நெறியாக்கி முன் செல்லுதல் தேவை. செயற்படவேண்டியன எத்துணையோ உள. அந்நேரத்தைக் கவலைச் சிந்தனைகளில் விரயம் செய்தல் கூடா. உலகில் துன்பத்தையன்று, இன்பத்தைக் காண வேண்டும்.

... ... ... இதற்கு நான்
  பல நினைந்து வருந்தியிங் கென்பயன்
பண்டு போனதை எண்ணி யென்னாவது
  சில தினங்கள் இருந்து மறைவதில்
சிந்தை செய்தெவன் செத்திடு வானடா
  ஞானமுந் துறவும் பெற்றிலாதவர்
நானிலத்துத் துயரன்றிக் காண்கிலர்
  போனதற்கு வருந்திலன்... (256)

நடப்பியலுக்கு ஏற்புடையதாக அமையும் வண்ணம் கவிஞரின் இத்தகு சிந்தனைகள் அமைகின்றன. வாழ்வியல் நடைமுறை காட்டுவதாகவும் வருகின்றன எனலாம்.

இதனினும் ஒருபடி வேறுபட்டுச் சென்று இயல்பாகப் பயிலக் கூடிய (Practical) செயற்பாட்டையும் கவிஞர் தருகின்றார். வாழ்வியல், கொள்கையுடையதாக அமைதல் வேண்டும்; எனினும் அதுவும் இயல்வதாக அமையவேண்டுமேயன்றிப் பின்பற்றக் கடின மானதாக அமைதல் கூடாது. சூழலை முழுமையாக உணர்ந்து நல் வாழ்வுக்கு ஏற்புடையதாகப் பயன்படுத்தலாக இது அமைகின்றது. 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' எனும் பழமொழி தரும் வாழ்வியல் சிந்தனையைப் பாரதியும் அளிக்கின்றமை இவ்வகை யினதாகும்.

வேளையிலே நமது தொழில் முடித்துக் கொள்வோம்
வெயிலுள்ள போதினிலே உலர்த்திக் கொள்வோம்.
காற்றுள்ள போதே நாம் தூற்றிக் கொள்வோம் (270-71)

இன்னும் நற்காலம் வரும் வரும் என்று எண்ணி ஏங்கிக் காத் திருப்பது கூடாது; இருக்கும் சூழலை வைத்து இயல்வதை முடித்துக் கொள்ளல் வேண்டும். கோவிந்தசுவாமியைக் கண்டதும் கவிஞன் உள்ளத்தில் எழுந்த இவ்எண்ணம் இத்தகு வாழ்வி யலையே நமக்கு உணர்த்துகின்றது. அகந்தையைத் துடைக்கவும், மறதியினை மடிக்கவும், கூற்றை முடிக்கவும், மாயையைக் கொல்ல வும் வாய்ப்பான சூழல் கிடைக்கும்போது காரியத்தை முடித்துக் கொளல் தேவை. வாய்ப்பு எப்போதும் வருவதில்லை. செயற்படத் தயாராக என்றும் இருப்பவன் வாய்ப்பு வந்ததும் பயன்படுத்திக் கொள்கிறான்; அதனால் வாழ்வில் முன்னேறுகிறான்.

கவிஞர் சமயம் சார்ந்த ஆன்மீக வாழ்க்கையைத் தரும்போது இவ்வடிகளைத் தருகின்றபோதும், இதனைப் பொது எண்ணமாக வும் கொள்ளமுடியும். மனித வாழ்வில் காணப்படும் மேற்கண்ட பல்வகை வாழ்நிலைகளைக் கவிஞர் காட்டுவதுடன் இறை மைய வாழ்வினையும் சுட்டுகின்றார். சமயம் சார்ந்த இவ் வாழ்வு (Religious) இம்மை இன்பமும் மறுமைப் பேரின்பமும் தருவது. உணர்வு சார்ந்ததாக மட்டும் அமையாது அறிவு சார்ந்ததாகவும் அமைவது. இச்சைகள் அடங்கி ஐம்புலன் வென்ற இவ்வாழ்வு யோக வாழ்வாக அமைகின்றது. உலகம் போற்றத்தக்க வாழ்வாக இயல்கின்றது. அரச வாழ்வைவிட உயர்ந்த அருள் வாழ்வாகக் காணப்படுகின்றது. இறை மையம் இன்ப வாழ்வு அளிக்கின்றது.

இச்சை தீரஉலகினைக் கொல்வோம்
இனிய சாறு சிவமதை உண்போம்
வெற்றி ஐந்து புலன்மிசைக் கொள்வோம்
வீழ்ந்து தாளிடை வையகம் போற்றும்
ஒற்றை வெள்ளைக் கவிகை மெய்ஞ்ஞானம்
உண்மை வேந்தர் சிவநிலை கண்டார்
மற்றவர் தம்முட் சீர்பெற வாழ்வோம்
வண்ம லர்நறு மாலை தெளிவாம்
சுற்றி மார்பில் அருள்மது வுண்டே
தோகை சக்தியோ டின்புற்று வாழ்வோம் (232;

கவிஞனின் வாழ்க்கை இறைச்சார்புடையதாக அமைவதால் இக் கருத்துப் பயின்று வருகின்றது. நாம் வாழ்கின்றோம். ஆயின் அவ்வாறு எண்ணுவது முழு உண்மையல்ல. இறைமையே நம்மை வாழ வைக்கின்றது. நம்மை இயக்கும் சக்தியே அவ் இறைமை. இதனால் வாழ்தல் என்பதே இறையருள் பெறுதல் ஆகின்றது. உடல், உள்ளம், உயிர் என்ற முந்நிலையிலும் இது இயங்குகின்றது; வாழ்விக்கிறது உள்ளத்தில் தெளிவு தருகிறது. உடலில் அமைதியும் வலிமையும் ஒருங்கிருக்க வழி வகுக்கின்றது. உயிரில் வேகமும் சூடும் அளிக்கின்றது. இறை மையவாழ்வு இங்ஙனம் அமைகின்றது. இதனால் வாழ்வும் இறைமையும் ஒன்றிலொன்று கலத்தல் தெரிகின்றது-

மஹா சக்தியின் அருள் பெறுதலே வாழ்தல்; நாம்
வாழ்கின்றோம்.
நம்மை வாழ்வுறச் செய்த மஹா சக்தியை மீட்டும்
வாழ்த்துகின்றோம் (436)

இறைமையம் கொண்ட வாழ்க்கை எனக் கூறினாலும் அது துறவு வாழ்க்கையன்று. எல்லா இன்பமுமுடைய இல்வாழ்வே ஆகும். ஐம்புலனைக் கட்டுதல் எனக் கூறியபோதும் அது இன்பங்களை அழித்தலைக் கூறவில்லை. புலன்களை நெறிப்படுத்தி உரிய வழியில் செலுத்துவதே ஆகும். சிற்றின்பம் வழிப் பேரின்பம் என்ற நிலையில், இது அமைகின்றது. ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதது; ஒன்றையொன்று சார்ந்து செல்வது; ஒன்றாலொன்று பயன் பெறுவது; இதனால் சமய வாழ்வும் பொருளியல் வாழ்வும் இணைந்து கைகோர்த்துச் செல்லும் தோற்றம் கொள்கின்றது.

தின்னப் பொருளும் சேர்ந்திடப் பெண்டும்
கேட்கப் பாட்டும் காணநல் லுலகும்
களித்துரை செய்யக் கணபதி பெயரும்
என்றுமிங் குளவாம் சலித்திடாய், ஏழை
நெஞ்சே வாழி... (98)

விநாயகர் நான்மணி மாலையில் இவ்விதம் பாரதியின் எண்ணம் புலப்படுகின்றது.

## அடிப்படை வாழ்வு

பிழைக்கும் வழி சொல்ல வேண்டுமென் றாலொரு
பேச்சினி லேசொல்லு வான்
உழைக்கும் வழி வினை யாளும் வழி பயன்
உண்ணும் வழி யுரைப்பான்...
மழைக்குக் குடை பசி நேரத் துண வென்றன்
வாழ்வினுக் கெங்கள் கண்ணன் (274)

அடிப்படை வாழ்வு நிலையில் அனைத்துயிரின் வாழ்வும் ஒன்று தான். உணவு, உறக்கம் என அது அமைகின்றது. உடல் வாழ்க்கையாக மட்டும் அமைகின்றது. பிறவிக் குணத்தால், சில உள்ளுணர்ச்சிகளால் நடத்தப்படும் வாழ்வாகின்றது. வெளிப்படையும் அடிப்படையுமான சில தேவைகள் பற்றி (bare necessities) அது சுழல்கின்றது.

மனிதனுக்கு வாழ்வின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் அமைகின்றன. வயிற்றுக்கு உணவில்லாதபோது வேறு எந்தவிதமான உணர்வும் ஏற்கவியலாது; உயர்ச்சியும் ஏற்பட முடியாது. வாழ்வுக்கு உடல் இன்றியமையாதது எனின் உடலுக்கு உணவு இன்றியமையாதது. தன் காலத்தில் மிகுதியாகப் பஞ்சம், பசி, பட்டினி நிலையைப் பார்த்த கவிஞர் உணவு பற்றி மிகுதியாக நினைக்கின்றார்.

''உணவுதான் ஜீவ ஜந்துக்களின் அவசரங்களனைத்திலும் பெரிய அவசரமானது.

''மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் முயற்சி தாளாண்மை - தேனின்
கசிவந்த சொல்லியர் மேற் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்''

எனவே, இவ்வுலக இன்பங்கள் பெருமைகள் எல்லாவற்றிற்கும் அஸ்திவார பலம் உணவு. உணவு இல்லாத இடத்தில் அவை நிற்க வழியில்லை. மேலும் வெறுமே உயிர் தரித்திருப்பதற்குக் கூட ஆகாரம் அவசியமாயிருக்கிறது. சோறில்லாவிட்டால் உயிரில்லை' (தமிழருக்கு, ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், 1978, ப. 134).

ஒவ்வொரு மனிதனுக்கும் உணவு வேண்டும்; அவ் உணவு கூட அளிக்க இயலாத மனித சமூகம் இருந்தும் பயனில்லை என்ற எண்ணத்தைக் கவிஞர் தருகின்றார்.

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி யொருவனுக் குணவிலை யெனில்
ஜகத்தினை அழித்திடு வோம் (41)

உணவுக்காகப் போராட்டம் எழும் வாழ்வு நிலை கூடாது. வளமுடைய இயற்கை, உணவை வாரி வழங்கும்போது, பொது உரிமை மனநிலையுடன் அதனைப் பகுத்துண்ண வேண்டும். அன்றி அதனை வலியவர் தம்முள் பங்கிட்டுப் பிறரை வறியவர் ஆக்கலாகாது. எனவே,

மனித ருணவை மனிதர் பறிக்கும்
வழக்கம் இனியுண்டோ
மனிதர் நோக மனிதர் பார்க்கும்
வாழ்க்கை இனியுண்டோ (40)

எனக் கவிஞர் மொழிகின்றார். மீண்டும் அதனை வலியுறுத்திப் பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகிறார்.

வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் - இங்கு
வாழும் மனிதரெல் லோருக்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் - பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம் (206)

உணவு அளித்தல் என்பதை அரசியல் கடமையாகவும் காட்டுகின்றார். நல்லரசாட்சியின் ஒரு அடையாளமாக உணவுக் குறைவின்மை அமைகின்றது.

சோற்றுக்குப் பஞ்ச மில்லை போரில்லை துன்பமில்லை
போற்றற் குரியான் புதுமன்னன் காணீரோ (219)

உணவுத் தேவை பற்றிய இத்தகு வற்புறுத்துதல் ஒருபாலாக, உணவு உற்பத்தி பற்றிய சில வேறுபட்ட சிந்தனைகளும் கவிஞனிடம் அமைகின்றன. உணவு உண்பதை. உணவு பெறு வதையே வாழ்வின் நோக்கமாகக் கொள்வதை அவர் விரும்பவில்லை. உணவுக்காக வாழ்வு, உணவுக்காக உழைப்பு என்ற கொள்கையை அவர் ஏற்கவில்லை. முன் கண்ட விதமாக, இயற்கை உணவு கொடுக்கவல்லது என்ற எண்ணத் தினர். உணவுக்காக அடிமைப்படுதல் வேண்டாம். உணவுக் காகப் பகைமை கொள்ளுதல்-பிரிவினை-போர் வேண்டாம். உணவுக்காகக் கொள்கையை விடுதல் கூடாது. இறந்தாலும் இரந்துண்ணா வாழ்வு வேண்டும்.

சிட்டுக்குருவியைப் பாடும்போதும் கவிஞரின் இக்கொள்கை வெளிப்படுகின்றது விடுதலைபெற்ற உயர்ந்த மானுடத்துக்குக் குறியீடாகும் நிலையில் குருவி அமைதல் பற்றிக் கவிஞர் தன் எண்ணங்களை அதன் வாயில் பொருத்துகிறார். ஒருசாண் வயிற்றுக்காகக் கவலைப்படும் பாங்கு அவற்றிடம் இல்லை. அடுத்த நேர உணவுக்காக ஆக்கிச் சேர்த்துவைத்தல் காணப் பட்டிலது. உணவுப் பொருட்களைப் பணத்திற்குப் பெறும் தேவை இல்லை. இயற்கையில் எப்போதும் கிடைக்கத்தக்க உணவுக்காகப் பிறரிடம் அடிமையாதலும் இல்லை.

உணவுக்குக் கவலையில்லை - எங்கும் உணவு கிடைக்குமடா
பணமும் காசுமில்லை - எங்குப் பார்க்கினு ம் உணவேயடா
சிறியதோர் வயிற்றினுக்காய் - நாங்கள் ஜன்ம மெல்லாம் வீணாய்
மறிகள் இருப்பதுபோல்-பிறர் வசந்தனில் உழல்வதில்லை(460)

இங்குமட்டுமன்றிப் பிறவிடத்தும் கவிஞர் குருவிவாழ்வை மானிடவாழ்வுடன் இணைத்து நினைக்கின்றார். ஜகத் சித்திரத்தில், எருமை மாட்டின் கேள்விக்கு நாகணவாய் பதிலளிக் கின்றது. மனிதர்களையும் விலங்குகளையும் விடப் புள்ளின் வாழ்வு இன்பமயமாக அமைகின்றது. இதன் காரண காரியம் கூறப்படுமிடத்து உணவுச் செய்தியும் வருகின்றது. மனிதனின் பெருந்தீனியும், சுவைத்து உண்ணாத நிலையும் இன்பத்துக்குத் தடைகளாகக் குறிக்கப்படுவதாகத் தோன்றுகின்றது.

எங்களுக்கு உடம்பு சிறிது. ஆதலால் தீனி சொற்பம்;
அதைச் சிறிது சிறிதாக நெடு நேரம் தின்கிறோம்
ஆதலால் எங்களுக்கு உணவின்பம் அதிகம் (453)

உணவை முதன்மையாகக் கொண்ட உடல் வாழ்வு; பெருண்டியை விரும்பும் உடல்வாகு; உணவுத் தேவை-பற்றாக்குறை இருக்கும்போது அதனைப் பதுக்கி வைக்கும் வியாபாரப்பாங்கு; உழவுக்கு ஏற்றமின்மை; உழைப்பில்லாது பலர் வீணில் உண்டு களித்திருத்தல்; உழுது விதைத்து அறுப்பாருக்கு உணவின்மை (88) எனப் பல நிலைகள். ஆயினும் மனிதன் தன் சூழலில் உள்ள உணவு நிலையை உணராது அமைகின்றான். 'குருவி' உணர்ந்த அளவு மனிதன் உணர்ந்திலன்.

கஞ்சி குடிப்பதற் கிலார் - அதன்
காரணங்கள் இவை யென்னும் அறிவு மிலார்
பஞ்சமோ பஞ்சம் என்றே - நிதம்
பரிதவித்தே உயிர் துடிதுடித்துத்
துஞ்சி மடிக்கின்றாரே - இவர்
துயர்களைத் தீர்க்கவோர் வழியிலையே (38)

உணவு முக்கியப் பிரச்சினையாகி, பெரும் பிரச்சினையாகி, தீர்க்கவியலாத அளவுக்கு வாழ்க்கையில் முதன்மை பெற்று இன்றும் நிற்கின்றது. 'தேடிச் சோறு நிதம் தின்று' (131) எனத் தின வாழ்க்கையில் விலக்கக்கூடாத இடம்பெறுகின்றது. பழக்க வழக்கம் காரணமாக உணவுகளும், உணவு முறைகளும் மாறி அமைதலும் அதனால் வாழ்வியலிலும் வேறுபாடு அமைதலும் கூடும். தென்னாட்டினரை விட வடநாட்டினர் இசையினிமையுடைய குரலினராதற்கு உணவும் ஒரு காரணம் எனக் கருதுமிடத்துக் கவிஞர் இதுபற்றி மொழிகின்றார்.

வடநாட்டில் சர்க்கரை பால்ரொட்டி நெய் சாப்பிடுகிறார்கள் புளியும் மிளகாயும் சேர்ப்பதில்லை. இங்கே புளி, மிளகாய் வைத்துத் தீட்டுகிறோம். அதனாலே தான் தொண்டை கெட்டுப் போகிறது என்றனர் (தமிழருக்கு, ப. 95;).

வறுமை மிகுதியாக இந்தியாவில் இருந்ததால், அதன் புத்துயிருக்கும் புனர்ஜன்மத்துக்கும் உணவு ஒரு தடை என்பதை உணர்ந்தவர் கவிஞர். எனவே உணவு புதிய உயிரளிக்கும் எனக் கூறியுள்ளார். உணவில்லாதவனிடம் குணங்கள் நிலைக்காது என்றதுபோல, உணவு நிறைந்த வயிறே செவியில் விழும் சொற்களை ஏற்றுக் கொள்ளும் நிலையை வழங்குகின்றது.

உணவுப் பழக்கம் எப்படியிருக்க வேண்டும் எனவும் ஆன்றோர் வழிச் சிந்தித்தவர் பாரதி. தான் உண்ணுவதோடு பிறர் **உண்ண**வும் வழி செய்பவனே வாழ்வுக்குரிய நல்லவன்.

> நல்ல உணவு தேடி உண்ண வேணடும். சுத்தமாகவும் ருசியாகவும் வயிறு நிறைய உணவு கொள்ளவேண்டும். 'மிகினும் குறையினும் நோய் செய்யும்'... ...பரிசுத்தமான உணவுகளை நிறைய உண்ணுதல் வேண்டும். இனிய பழங்கள் நாள்தோறும் உண்ணத் தக்கன. உணவுக்குப் பணம் எந்த உபாயத்தாலேனும் தேடிக்கொள்ள வேண்டும். தேகத்திலே உழைப்பும் மனத்திலே தைரியமும் இருந்தால் பணந் தேடுவது கஷ்டமில்லை. சோம்பேறியாக ஒருவன் நிறையப் பணத்தைக் குவித்து வைத்துக்கொண்டு அக்கம் பக்கத்து ஜனங்கள் பட்டினி கிடந்து சாவதைப் பார்த்துக் கொண்டிருப்பது மிகவும் கொடிய பாவம் (தமிழருக்கு (பக். 74-75).

வாழ்வியலின் அடிப்படைத் தேவையான உணவு பற்றிப் பல இடங்களில் கூறுகின்றார் பாரதி. பல்வகையாகவும் பல கோணத்திலும் அணுகப்படும் இப்பொருள் போல உடை, உறையுள் பற்றிய எண்ணங்கள் மிகுதியும் காணப்படவில்லை. கடிமனமான தோலாலும், மயிராலும் பாதுகாக்கப்படும் விலங்கு உடல் நிலை மனிதனுக்கு இல்லாததால், அவ் இயல்பே ஆடைத்தேட்டத்தை உருவாக்குகின்றது. அத்துடன் நாகரிகமும் பண்பாடும் உடைய நிலை மனித உயிரினத்துக்கே அமைந்ததும் பிறிதொரு காரணமாம். 'பட்டு மயிர் மூடப்படாத தமதுடலை எட்டுடையால் மூடி' (402) எனக் குயில் பாட்டு மனிதனின் இன்றியமையா ஆடைத்தேவையைச் சுட்டுகின்றது. அவசியப் பொருள்கள் என்ற அடிப்படைக் குறிப்புடன் உடை பற்றிய சுட்டுதல் அருகி உண்டு.

> சகல ஜனங்களும் சமானமென்றும் ஆதலால் பிறப்புப் பற்றியேனும் உடைமை பற்றியேனும் தொழில் பற்றியேனும் மனிதருக்குள்ளே எவ்வித மேன்மை தாழ்வுகளேனும் உணவு, உடை முதலிய அவசியப் பொருள்களின் அனுபவத்தில் வேற்றுமைகளேனும் பாராட்டக்கூடாது என்றும் ஒரு புதிய கொள்கை தலைப்பட்டு நடந்து வருகிறது'' (தமிழருக்கு, ப. 128).

அத்துடன், இவ் அடிப்படைத் தேவைகளனைத்தும் 'உடல்' பற்றி அமைவதாலும், அவ் உடலே வாழ்வியலுக்குக் களனாகி இன்றியமையாத அடிப்படை யாவதாலும் அதுவும் அடிப்படை வாழ்வியல் என்ற நிலையிலும் நினைக்கத் தக்கது. உலகு புத்துயிரடையும் அடிப்படை பற்றிய எண்ணத்தில் கவிஞர் இதனையும் கருதுகின்றார். சுத்தம், சுகாதாரம், நோயின்மை என அடிப்படை வாழ்வியலின் தேவை எண்ணுதலாக இது அமைகின்றது.

> முதலாவது, நோய் தீர்த்துக் கொள்ள வேண்டும். நோயுள்ள உடம்பு பயனில்லை. நோயை ஒருவன் தனது மனோ பலத்தாலே நீக்கி விடலாம். நல்ல காற்று நல்ல நீர் ஒளி வெயில்-இவற்றிலே உடம்பு பழக வேண்டும். நாள்தோறும் ஏதேனும் ஓர் காரியத்திலே உடல் வெயர்க்கும்படி உழைக்க வேண்டும்; இது புதிய உயிர் கட்டுவதற்கு அடிப்படை (தமிழருக்கு, ப 74).

இயற்கையிலிருந்தும், இரவிலிருந்தும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய உயிரினங்கள் உறையுளை வேண்டுகின்றன. மனிதன் தொடக்க காலத்தில் பிற சில உயிரினங்களைப்போல இயற்கை வழங்கிய உறைவிடத்தையே கொண்டிருக்க முடியும். குகைகளும் ! பொந்துகளும் இயற்கையால் வழங்கப்படினும் தம் உறுப்புகளால் நிலத்தை அகழ்ந்து இருப்பிடங்கள் உருவாக்கிய சிறிய உயிரினங்கள் உள. மரக்கிளையிலும் பொந்திலும் தங்குவதுடன் கூடுகட்டி வாழ்தல் பறவையினம் பலவற்றிடம் உண்டு. இக்காட்சியறிவின் அடிப்படை மனிதனையும் உறைவிடம் ஆக்குவதில் ஈடுபடுத்துகின்றது. நாகரிக வளர்ச்சி, சமுதாயம், நாடு என்ற அமைப்புகள், இயற்கை-இரவுகளிடமிருந்து மட்டுமன்றிப் பிற மனிதரிடமிருந்தே தம்மைப் பாதுகாக்கும் தேவை போன்றன இக்கலையை வளர்த்தன. பதவி, தகுதி, செல்வம் போன்ற நிலைகள் உறையுளில் பல்வகைப் பாகுபாடுகள், வகை வேறுபாடுகள் ஏற்படுத்தின. பொருளாதார நிலையே வாழ்வியலின் அடிநாதமானபோது ஏழைகள் குச்சுகளிலும் குடில்களிலும், செல்வந்தர் மாடங்களிலும் மாளிகைகளிலும் வாழும் நிலை ஏற்பட்டது. வறுமையுற்ற பாரதத்தில், பாரதி தன் காலத்தில் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மையுறையுள் கொண்டமையைக் கண்டார். தன் சிறு முயற்சியால் சிட்டுக்குருவி தனக்குப் போதியதாகக் கட்டிக் கொள்ளும் சிறுகூடும், மக்கள் வாழ்ந்த குடிலும் தம்முள் முரண்கொள்வதை உணர்கின்றார்.

எல்லையில்லாதது அவற்றின் வானவீடு; எல்லை சுருங்கியது இவர்கள் மண்குடிசை. சிட்டுக்குருவியின் கூற்றில் இதனை வெளிப் படுத்துகின்றார்.

காற்றும் ஒளியுமிகு ஆகாயமே எங்களுக்கு
ஏற்றதொரு வீடு-இதற் கெல்லை யொன் றில்லையடா...
சின்னஞ் சிறு குடிலிலே-மிகச் சீரழி வீடுகளில்
இன்னலில் வாழ்ந்திடுவீர்-இது எங்களுக்கு இல்லையடா (460)

பெரும்பான்மையான ஏழை மக்கள் வாழும் இல்லங்கள் பல தேவைகள் இல்லாத இடங்களாக அமைகின்றன. சுகாதாரத் திற்குத் தேவையான காற்றும், ஒளியும் இன்மை; தங்குபவர்க்குப் போதிய இடம் இன்மை; இயற்கையாலும் காலத்தாலும் ஏற்பட்ட குறைகள்; செப்பனிடப்படாத சீரழிவுற்ற நிலைமை; துன்ப வாழ்வு என. ஆயின் குருவியோ, சின்னஞ்சிறு கூட்டில் வாழினும் பீடையற்று இன்புறுகின்றது.

பெட்டையி னோடின்பம் பேசிக் களிப்புற்றுப்
பீடை யிலாததொர் கூடு கட்டிக்கொண்டு (181)

இச்சூழல்கள் கவிஞனைத் தனக்கும், பிறருக்குமாக நல்ல உறையுள் வேண்டுதலை விரும்பச் செய்கின்றன. சிறு நிலப்பகுதி; அதன் நடுவில் கண்ணுக்கு இனிய மாளிகை; தண்மையும் நிழலும் தரும் வண்ணம் சில தென்னை மரங்கள்; இன்றியமையா நீர்த் தேவையை நிறைவேற்றும் கேணி; செவிக்கு இனிமையான குயிலோசை ஏற்படக்கூடிய சூழல்-அது இளவேனிற்கால மாஞ் சோலையாக இருக்கலாம்; உடலை வந்து தழுவி இன்புறுத்தும் இளந்தென்றல் வீசக்கூடிய காட்டுவெளி அமைப்பு; இரவில் நிலவொளி பரக்கும் வண்ணம் இடப்பரப்பு-என.

காணி நிலம் வேண்டும் - பராசக்தி
காணி நிலம் வேண்டும் - அங்குத்
தூணில் அழகியதாய் - நன் மாடங்கள்
துய்ய நிறத்தினவாய் - அந்தக்
காணி நிலத்திடையே - ஓர் மாளிகை
கட்டித் தர வேண்டும் - அங்குக்
கேணி யருகினிலே - தென்னைமரம்
கீற்று மிளநீரும்

பத்துப் பனிரண்டு - தென்னைமரம்
பக்கத்திலே வேணும் - நல்ல
முத்துச் சுடர் போலே - நிலாவொளி
முன்பு வரவேணும் - அங்குக்
கத்துங்குயிலோசை - சற்றே வந்து
காதிற் படவேணும் - என்றன்
சித்தம் மகிழ்ந்திடவே - நன்றாயிளந்
தென்றல் வரவேணும் (112)

இயல்பு வாழ்வில், 'சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல், பத்திரிகைக் கூட்டம், பழம்பாய் வரிசை யெல்லாம் ஒத்திருக்க நாம் வீட்டில் உள்ளோம் என உணர்ந்தேன்' (418) என அமைந்த கவிஞர், இங்கு விருப்ப வாழ்விடத்தை வகுக்கிறார்.

### வாழ்நெறி

மனதி லுறுதி வேண்டும்
வாக்கினி லேயினிமை வேண்டும்
நினைவு நல்லது வேண்டும்
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்
கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்
தனமும் இன்பமும் வேண்டும்
தரணியிலே பெருமை வேண்டும் (182)

வாழ்வின் நிறைவு நன்மையுடையதாக அமைய வேண்டும். ஆயின் அதுமட்டும் போதாது. வாழ்வு செல்லும் வழியும் சீர்மை யுடையதாக இருத்தல் தேவை. நல்ல முடிவுக்காகத் தீய கருவிகள் பயன்படுதல் இல்லை. சிறந்த செயலுக்காகப் பண்பில்லாச் சூழ்ச்சிகள் பயனாகுதல் கூடாது. விடம் நன்மை பயக்காது. முட்புதர் முந்திரிக் கனிகளைத் தராது.

வேடதாரியான மனிதன், காட்சிக்கு நல்லவன். ஆயின் அவன் கருத்தும் செயலும் தீமைவயப்படுகின்றன. பிறர் கண்களுக்கு மறைக்கப்பட்டதால் மட்டும் அவன் நல்லன் அல்லன். நல்ல நினைவுகள் இல்லாதவன் நல்ல சொல் கூறான். நன்மை செய் யான். நல்ல வாழ்வு அமைய நெஞ்சில் நன்மை வேண்டும். இனிய நினைவினன் தீச்சொல் கூறான். அவன் வாக்கு அவனுக்கும் கேட்போருக்கும் இனியது.

ஆற்றலுடையவனே செயற்பட இயலும். மனத்தில் உறுதி கருக்கொள்ளும்போது ஆற்றல் உருவாகின்றது. நினைந்த காரியத்தைச் செய்ய இயலும் என்ற திட நம்பிக்கையே அவ் உறுதி யளிக்கின்றது. ஆற்றல் செயலாகி வெளிப்படுகின்றது. முயற்சி உந்து சக்தியாகி, ஊக்கமூட்டிச் செயல் வெற்றி அளிக்கின்றது. எண்ணிய காரியம் முடிகின்றது. நினைத்தது நடக்கின்றது. நெருங்கிய பொருள் கைப்படுகின்றது.

எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் நனவாக மாறுவதே சிறந்த ஆற்றலனின் அடையாளம். அதுவே பெருமையுடையது. கனவுகள் வெறும் கற்பனையாக நின்றுவிடலாகாது. ஆகாயக் கோட்டைகளாக மறைதல் கூடாது. மணற் கோபுரங்களாகச் சரிதல் ஆகாது. அருவ எண்ணங்கள் உருவமாகிப் பருப்பொருள் நிலைகொள்ளுதல் வேண்டும்; உள் மனத்தில் காட்சிப் பட்டவை புறத்தே கைப்படல் வேண்டும். நினைவுகளெல்லாம், திட்டங்கள் எல்லாம் விரைவில் மெய்யாகின்ற நிலையிது.

வாழ்வியலில் இந்நெறிகள் சிறக்க வேண்டுமாயின் அறம் அடிப்படையாதல் இன்றியமையாமை. வாழ்க்கை அறம் சார்ந்து செல்லும்போது 'பொருளும்' 'இன்பமும்' தொடர்கின்றன. பொருளின்மை உலகின்மை யாகின்றது. எனவே தனமும் வேண்டு கின்றார் கவிஞர். வாழ்வே ஒரு இன்ப நாட்டம். எனவே இன்பமில் வாழ்வு இறப்புக்கு சமம். அந்நிலை பற்றி வாழ்வு, இன்பவழியில் செல்லல் மற்றொரு வேண்டுதலாகின்றது.

இவ்வனைத்து நன்மைகளும் சிறப்பும் இணையும்போது வாழ்வு பெருமை பெறுகின்றது. உலகம் போற்றும் வண்ணம் அமைந்த இவ்வாழ்வு குறிக்கோள் நிலை கொள்கின்றது. நெறிப் படிச் சென்ற வாழ்வே இவ்வாறு அமையும் வல்லமையுடையது.

நெறி இழந்தபின் வாழ்வதி லின்பம்
நேரு மென்று நினைத்திடல் வேண்டா (363)

எனக் கவிஞர் பிறிதொரு சூழலில் தரும் சொற்கள் இங்கு இணைத்துக் கருதத்தக்கன. வாழ்நெறிக்கு முதன்மை அளித்தல் இங்கு அமைகின்றது. உண்மையான இன்பம் நெறிப்பட்ட வாழ் வினர்க்கே உரியதாகின்றது. தீமை முற்றிலும் நீங்கிய வாழ்க் கையை வேண்டும் கவிக்கூற்றிலும் இது அமைவதாகத் தெரி கின்றது.

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதி முன் பனியே போல
நண்ணிய நின் முன் இங்கு
நசித்திடல் வேண்டும் அன்னாய் (114)

நன்மையை நாடித் தீமையை விலக்குவதாக வாழ்க்கை அமைகின்றது. அதற்கு உதவுவதாக இறைமை இங்குக் காட்டப்படுகின்றது.

அறிவு மட்டுமிருப்பின் போதாது. அது நல்லதாக இருப்பின் தான் நன்மை பயக்கும். அந்நல்லறிவும் குழப்பமுடையதாக இருந்தால் சிந்தனை தெளிவுபட்டுச் செயல்பட இயலாது. எனவே தெளிந்த நல் அறிவுடைமை வாழ்வுக்கு இன்றியமையாததாகின்றது. அறிவு இத்தகையதாக இருந்தால் அதனில் தோன்றும் எண்ணங்களும் நன்மையுடையதாக இருக்கும். எண்ணங்கள் தோன்றிவிட்டால் போதாது. அவை நினைந்தது நினைந்தபடி நிறைவேறுதல் வேண்டும். இவ்வாறு நல்நினைவு செயற்பட நெஞ்சத்தில் திண்மை தேவை. சோர்வடையாது, எதிர்ப்புகளைச் சமாளித்து முயன்று முன்னேற நெஞ்சத் திண்மை உதவுகின்றது.

சுயசரிதையின் கனவுப் பகுதியின் முடிவில் கவிஞன் அமைக்கும் இறை வேண்டுதலும் ஏறத்தாழ இதனோடு ஒத்துச் செல்கின்றது.

அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
அகத்திலே அன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலாம் நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோ கத்தில்
நிலைத்திடல் என்றிவை யருளாய்... (257)

கீதையில் கண்ணன் உபதேசித்த கர்மயோகம் இங்குக் கவிஞர்க்கு வாழ்நெறியாகப் புலப்படுகின்றது. பயனுக்காக நோக்கியிராது செய்தற்குரிய தொழிலை, கடமையை ஆற்றியிருத்தலாக இது அமைகின்றது. சலனமின்றி நிலைத்திருக்கக் கூடிய நெறியாகக் காணப்படுகின்றது.

'கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான் செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ அவனே துறவி; அவனே யோகி' (பகவத்கீதை, முன்னுரை, பாரதி பதிப்பகம், 1966 ப. 6) 'யோகமாவது செய்கைத் திறமை என்று பகவான் கீதை யிலே சொல்லுகிறார்' (கட்டுரைகள்—தத்துவம், பாரதி பிரசுராலயம், 1935 ப. 110).

எனப் பிற சூழலிலும் பாரதி மொழிகின்றார்.

ஏற்கெனவே கண்ட விதமாக, கவிஞரின் வாழ்வு இறைமையம் கொண்டு அமைவதால் இங்கு இறைநெறியில் செல்வதை வாழ் நெறியாகக் கொள்கின்றார். கர்மயோகமும் இறைநெறியும் ஒன்றிலொன்று இணைந்தன எனும் எண்ணமும் அவரிடமும் அமைகின்றது. செய்கை, சக்தி என்பன சார்ந்து செல்வதே இதற்குக் காரணமாகலாம்.

இவையனைத்தும் மஹா சக்தியின் தொழில்
அவள் நம்மைக் கர்ம யோகத்தில் நாட்டுக
நமக்குச் செய்கை இயல்பாகுக...
இச்செயல்கள் நமக்கு மஹாசக்தி அருள் புரிக (432)

உலகெங்கும், அனைத்துச் சமயமும், எல்லா அறநெறிகளும் வேண்டும் அன்பு வாழ்க்கையைப் பாரதியும் வேண்டுகின்றார். 'அகத்திலே அன்பினோர் வெள்ளம்' என்பதால் அன்பு நீர் போன்று உயிரளிப்பது கருதப்படுகின்றது. நீச்சும் நிலையும் பெறாத பெருவெள்ளம் போன்று அளவிடற்கரிய தாகின்றது. நல்லோர் தீயோர் எனப் பாரபட்சம் பார்க்காத மழை போன்று பாகுபாடற்றதாகி அனைவரையும் புரக்கின்றது. அதிகாரத்தால் வெல்ல முடியாததைக் கூட அன்பு பெற்றுத் தருகிறது. ஆற்ற லால் பெற இயலாததை அன்பு அளிக்கின்றது. பகைவனுக்கும் அருளும் நன் நெஞ்சை இவ் அன்பே தருகின்றது. அன்பு, தீயவனை யும் நல்லவனாக்குகின்றது. மனிதனைப் பண்புடையவனாகச் செய்வதில் பங்கு கொள்கின்றது.

துன்ப நினைவுகளும் சோர்வும் பயமு மெல்லாம்
அன்பில் அழியுமடீ—கிளியே—அன்புக் கழிவில்லைகாண் (177)

எனப் பிறிதொரு சூழலில் கவிஞர் அன்பின் ஆற்றலைக் காட்டு கின்றார். பிறரை உய்விப்பதுடன் தன்னையும் அன்பு உயர்த்தும் ஆற்றலுடையது என்பது இதில் புலப்படுகின்றது. மனிதனை

உற்சாகமற்றவனாக்கிக் கீழுறச் செய்யும் அச்சம், சோர்வு, துன்பம் அனைத்தும் அன்பு நெருப்பில் அழிகின்றன. பிறருடைய துன்பத்தைக் கண்டு உருகி அருளும் நெஞ்சம் இருக்கும்போது, அதன் முன் நம் துன்பம் பொருளற்று, துச்சப்பட்டுப் போகின்றது. துன்பம், உடல்-உள்ளம்-உயிர் மூன்றையும் வருத்த வல்லது; அதே வேளை அன்பு அம் மூன்றையும் ஆற்ற வல்லது. எனவே தான் அழியாத அன்பில் துன்ப நினைவும்கூட அழியும் எனத் தருகின்றார். சோர்வடைந்து வீழ்ந்த உள்ளத்தைத் தூக்கி நிறுத்தி உயிர் கொடுப்பானாக அமைவது அன்பு.

அன்பின் பலவிதப் பரிணாமங்களை, வெளிப்படும் விதங்களைக் கவிஞரின் கட்டுரைகள் காட்டுகின்றன. அன்புப் பண்பிலன்றிச் செயலிலும் இருத்தல் வேண்டும் என்கின்றார்.

> அன்புண்டானால் இன்பமுண் டென்பதை புத்த பகவான் கண்டுபிடித்துச் சொன்னார். அன்பு கொள்கையில் இருந்தால் போதாது. செய்கையில் இருக்க வேண்டும். உன்னிடம் ஒரு கோடி ரூபாய் இருந்தால் தேச நன்மைக்காகக் கொடுத்து விட்டு நீ ஏழையாகிவிடத் துணிவாயானால் நீ உன் தேசத்தின் மீது அன்புடையவனாகக் கருதப்படுவாய்...பறையனுக்குப் போஜனம் செய்வித்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு சாப்பிட்டால் நீ மனுஷ்யனிடம் அன்புடையவனாக விளங்குவாய். (கட்டுரைகள்—தத்துவம் ப. 83).

துறவு வாழ்வை விட இல்லற வாழ்வையே முதன்மையினதாகக் காட்டியவர் பாரதி. காட்டில் சென்று தவமியற்றுவதினும் மக்களிடையே வாழ்ந்து, 'தவம்' செய்தலே உயர்ந்தது. 'தவம்' என்றதும் அவர் அன்பைக் கருதுகின்றாரே அன்றி இன்பங்களை ஒறுத்தலைக் கருதவில்லை. இன்பத்துக்கு அடிப்படையாக இவ் அன்புத் தவம் அமைகின்றது.

> செய்கதவம் செய்கதவம் நெஞ்சே தவம் செய்தால்
> எய்த விரும்பியதை எய்தலாம்—வையகத்தில்
> அன்பிற் சிறந்த தவமில்லை அன்புடையார்
> இன்புற்று வாழ்தல் இயல்பு (102)

அன்பிற் சிறந்த தவமில்லை எனும் உண்மை இங்கு நிறுவப்படுகின்றது. இதனை நோக்க அன்பு என்பதை வாழ்நெறியின் உச்சமாகக் கருதலாம். அன்பு உள்ளத்தில் உறையும்போது மனிதன் அன்புருவாகிறான். அன்பு அடிப்படையாக எல்லாவித நற்பண்பு

களும் கருக்கொள்கின்றன. நன்மை யொன்றையே சிந்திக்கும் நெஞ்சம் உயர்வையே நாடுகிறது. உய்வையே தேடுகிறது. வாழ்வையே கருதுகிறது. கீழ்மையான எச்சிந்தனையும் குடியிருக்க அங்கு இடமில்லை. தாழ்ந்த எண்ணங்கள் வருவதில்லை. பிறர் வாழ்ந்தால் தான் தானும் வாழ முடியும்; பிறரை அழிக்க எண்ணினால் தானும் அழிவான் எனும் ஞானம் பிறக்கின்றது.

> வாழ்வை நினைத்த பின் தாழ்வை நினைப்பது
> வாழ்வுக்கு நேராமோ—நன்னெஞ்சே
> தாழ்வு பிறர்க்கெண்ணத் தானழிவா னென்ற
> சாத்திரங் கேளாயோ—நன்னெஞ்சே (195)

இவ்வாறு பிறமனிதரிடம் மட்டுமன்றிப் பிற அனைத்து உயிர்களி டத்திலும் அன்பு வேண்டும். இதுவே மனிதப் பண்பு. பாப்பா வுக்குக் கூறினாலும், பிஞ்சு உள்ளத்திலும் தங்கும்படிக் கவிஞர் இதனை வாழ்நெறியாக வலியுறுத்துகின்றார்.

> உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
> உண்மை யென்று தானறிதல் வேணும்
> வயிரமுடைய நெஞ்சு வேணும்—இது
> வாழும் முறைமையடி பாப்பா (203)

## தினசரி வாழ்க்கை

> காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
> கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
> மாலை முழுதும் விளையாட்டு - என்று
> வழக்கப் படுத்திக் கொள்ளு பாப்பா (202)

வாழ்க்கை தொடர்ந்து செல்வது. இடைவெளி இல்லாதது. இடையீடுகளும் இடைப்பிறவரலும் இருப்பினும் நிற்காது தொடர்வது. முதலும், முடிவும் ஈரெல்லையாகிப் பிறவனைத்தும் இடைப்பகுதியாகப் பெறுவது. காலம் கழிந்தாலும், இடம் மாறி னாலும் வாழ்க்கை மட்டும் நீண்டுகொண்டே செல்கின்றது. தடங்கல்களால் தடைப்பட்டாலும் மீறிச் செல்வது. ஆற் றொழுக்கில் செல்லும் புணை போன்றது. சில போது விரைவது; சில நேரம் மெதுவாகச் செல்வது; இன்னும் சில வேளை சுழல் கின்றது; ஆழ்ந்து மறைவது; மீண்டும் மேல் வருவது; எவ்வாறா யினும் இயங்கிக் கொண்டே இருப்பது. கண்ணுக்குப் புலப்பட்டும் புலப்படாதும் இவ் வாழ்க்கை இயக்கும் அமையலாம்.

ஒருநாள் என்பது வாழ்க்கைச்சமுத்திரத்தின் ஒருதுளி. பானை சோற்றுக்குப் பதம் போன்று அதுவே வாழ்க்கையை அதன் தன்மையை உணர்த்த வல்லது; உலகனைத்தையும் பிரதிபலிக்கும் ஒரு நீர்த்துளிபோல வாழ்க்கையைக் காட்ட வல்லது; பெரு மலைகளையும் உட்படுத்திக் காட்டும் கையகல ஆடிபோல வாழ்வியலைக் காண்பிக்க வல்லது; ஒரு நாள் வாழ்வின் ஒழுக்கம் வாழ்வியலின் முழுமையை ஆக்கும் ஓர் இழையாகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் திருந்தினால் சமுதாயம் திருந்தும் என்பதுபோல, ஒவ்வொரு நாளும் ஒழுங்கானதாகச் சென்றால் வாழ்வு முழுமையும் ஒழுங்குடையதாக இருக்கும்.

பொதுவான அடிப்படைகள் சீரானவையாக இருந்தால் வாழ்க்கை முழுவதும், அதன் ஒவ்வொரு வாழ்நாளும் சீர்மையுடையதாகவே அமையும். 24 மணி நேரமுடைய நாளில், பூமியின் ஒரு சுழற்சியில், மனிதன் செய்யும் பணி சிறிதே. ஆயின் அது வாழ்க்கை மாளிகையினை ஆக்கும் ஒவ்வொரு கல்லாக அமைகின்றது. ஒரு கல் சீரியதல்லாததாகி விடினும் மாளிகை முழு அழகு பெறாதது போன்று, ஒரு நாள் வாழ்க்கை வீணாகும்போதும் முழுப் பார்வையில் அழகு குன்றுகிறது; ஒளி குறைகின்றது; பயன் சுருங்குகின்றது. தினசரி வாழ்வு நேர்மையுடையதாக, நியாயமுடையதாக, ஒழுங்கானதாக, ஒழுக்கமுடையாக இருத்தல் தேவை. ஒவ்வொரு நாளும் பயனுடையதாகப் பண்புடையதாக அமைதல் வேண்டும்.

தினசரிப் பழக்க வழக்கங்கள் குழந்தைப் பருவத்திலேயே படிய வேண்டியவை—படிக்க வேண்டியவை. எனவே தான் கவிஞர் குழந்தைக்குக் கூறும் அறிவுரையில் இதனை அமைக்கின்றார். 'இளமையில் கல்' எனவும் 'கற்றது ஒழுகு' எனவும் கற்கின்ற பருவத்திலேயே வாழ்வுக்கும் அடிக்கல் நாட்டப் படுகின்றது.

அறிவுக்குத் தேவையான கல்வி, உள்ளத்துக்கு எழுச்சி தரும் பாட்டு, உடலுக்கு உறுதி தரும் விளையாட்டு என முந்நிலைகள் இங்குக் குறிக்கப்படுகின்றன. காலை மாலை நேரங்களே குறிக்கப் பட்டதால் இடை நேரத்தில் உழைப்பு—தொழில் என்பனவற்றை இணைத்துக் கருதி, அனைவருக்கும் உரியதாக்கிக் கொள்ள வாய்ப்பு அமைகின்றது. 'நாள்தோறும் ஏதேனும் ஓர் காரியத்திலே உடல் வியர்க்கும்படி உழைக்க வேண்டும்' (தமிழருக்கு, ப. 74).

திறமை கொண்ட தீமை யற்ற
தொழில் புரிந்து யாவரும்
தேர்ந்த கல்வி ஞானம் எய்தி
வாழ்வம் இந்த நாட்டிலே (56)

எனப் பிறிதொரு சூழலில் கவிஞர் உரைப்பது இங்குக் கருதத் தக்கது. ஒரு நாளின் பெரும்பொழுது உறக்கத்திலும், வெற்று உரையாடலிலும், பிறரைக் குறைகண்டு பேசுதலிலும் வீணே கழியும் நிலை மாற்றம் பெறவேண்டும். ஒவ்வொரு மணித்துளியும் பயனுறச் செலவிடப் படவேண்டும். அவ்வாறு ஒவ்வொரு நாளும் செல்லின், அது வீழ்நாளாகாது, வீண் நாளாகாது, வாழ்நாளாக அமையும். அப்போது, 'நிச்சலும் வாழ்ந்து நிலைபெற்றோங் கலாம்' (93).

ஏற்கெனவே பன்முறை கண்டதுபோல, பாரதியின் வாழ்வு இறை மையம் கொண்டது. கடவுளை நடுவாகக் கொண்டு அவர் முன் சென்றதால் அவரது எச்செயலும், அவர் வேண்டிய எல்லாச் செய்கையும், அம் முழுமுதலை நோக்கியே முகம் கொள்கின்றது. நற்சிந்தனைகளுடன், இறைத்தியானத்துடன் நாளைத் தொடங்குதல், நாள் முழுவதும் அவ்வுணர்வுச் சூழலுடன் [செயற்படுதல், அதனில் ஆழ்ந்த நிலையிலேயே நாளை நிறைவு செய்தல் என இறைச் சார்புடைய தினசரி வாழ்க்கையை நினைக்கலாம்.

எந்த நாளும் நின்மேல்-தாயே-இசைகள் பாடி வாழ்வேன்...
மர்மமான பொருளாம்-நின்றன்-மலர டிக்கண் நெஞ்சம்
செம்மை யுற்று நாளும்-சேர்ந்தே-தேசு கூட வேண்டும்...
நன்றை நாடு மனமும்-நீ யெந்-நாளு மீதல் வேண்டும் ...
யானெதற்கும் அஞ்சேன்-ஆகி-எந்த நாளும் வாழ்வேன்...
காளி மீது நெஞ்சம்- என்றும் கலந்து நிற்க வேண்டும்... (130)

என அமையும் கவிஞரின் காளி ஸ்தோத்திரத்தை இங்குக் கருதல் சாலும்.

கவிஞரின் காலச்சூழல் மனிதனின் தினவாழ்வை 'நாட்டு மையம்' கொண்டு இயலவும் வேண்டி நின்றது. இதனால்தான் கவிஞர் நாட்டையும் இறைமையையும் பிரிக்காது, நாட்டை இறைத் தாயாக்கிக் காட்டினார் என நினைக்கலாம். நம் வாழ்க்கை பிறரிடம் இல்லை; நம்மிடமே இருக்கிறது; நம் எதிர்காலம் நம் கையில் தான். முற்பகலின் வினையின் விளைவே பிற்பகலில் வருவது. நாம் பிறருக்குச் செய்வதன் படியே நமக்கும் அருளப்படும். நாம் நாட்டிற்கு உழைத்தால், நாடு நமக்கு ஊதியம் அளிக்கும்,

நாட்டின் ஏற்றத்திற்கு முயல்பவன் தானும் ஏற்றம் பெறுவான். தின்சரி வாழ்வு அவனுக்குச் சர்வ மங்களமுடையதாக அமைகின்றது.

எங்க ளாரிய பூமி யெனும் பயிர்
மங்க ளம்பெற நித்தலும் வாழ்விக்கும் (144)

தினசரித் தேவையான உணவுக்குப் பொருள் தரும் பூமிபோல அதன் பயிர்போல, நாடு தன்னில் பற்றுக் கொண்டவனை வாழ்விக்கின்றது.

இறைவன் மையமாக, நாடு நோக்கமாக, தம் உடல், உள்ள, உயிர் உயர்வுபெறும் வண்ணம் சிறப்புடையதாகத் தினவாழ்வு கவிஞரால் காட்டப்படுகின்றது.

## நூறாண்டு வாழ்க்கை

மாறுத லின்றிப் பராசக்தி தன்புகழ்
வையமிசை நித்தம் பாடுகின்றோம்
நூறு வயது புகழுடன் வாழ்ந்துயர்
நோக்கங்கள் பெற்றிட வேண்டுமென்றே (119)

வாழ்வு இனிமையானது. எனவே மனிதன் வாழ விரும்புகிறான். ஒவ்வொரு நாளும் அவன் வாழ்வில் புதுப்புது அனுபவங்கள். எனவே அவன் வரும் நாளை எதிர் பார்க்கிறான். கழிந்த காலத்தில் எத்தனை துன்பங்கள் இருப்பினும், இனிமேல் அவை நீங்கும் என்ற விருப்பில் அவன் புது யுகத்தை வரவேற்க முன் நோக்குகிறான். வாழ்க்கையில் அவனுக்குப் பிடிப்பு இருப்பதால் தொடர்ந்து வாழ விரும்புகிறான்.

தன் அளவில் நீண்ட காலம் வாழ வேண்டும் என ஒரு மனிதன் விரும்புவது இயல்பு. வளமுடைச் சூழலில் இது நிகழவும் நிறைவு பெறவும் வாய்ப்பும் உள்ளது. ஆயின் தனக்காக மட்டுமன்றிப் பிறர்க்காகவும், பிறவற்றிற்காகவும் வாழ்தலை வேண்டி நீண்ட வாணாள் கேட்பவன் இன்னும் சீரியவனாக அமைகின்றான். தன்னலத்தை விடப் பொதுநலமே நோக்கமாகக் கொண்டதால் இவனது பல்லாண்டு வாழ்வு பயனுடையதாக அமைகின்றது. வெற்று வாழ்வால் உலகுக்குப் பாரம் தருபவனாக அன்றி உலகின் நிறை தாங்குபவனாக அமைகின்றான்.

கவிஞர் நூறாண்டு வாழ்க்கையை விரும்பியவர். இளமை முடியு முன்பே விண்ணேறியவர் எனினும், உலகமேனும் பல்லாண்டு

இயல வேண்டும் என விழைந்தவர். புகழுடைய, உயர் நோக்கங் களுடைய மனிதராக ஆண்டாண்டுகள் வாழ்பவர் பல நன்மை களை, சிறப்புகளை உலகுக்குத் தர முடியும். வள்ளல் போல வாரி வழங்க முடியும். தனக்கு அளிக்கப்பட்ட ஆயுள் நீட்சி வாய்ப்பால் நினைந்ததை நிகழ்த்தி முடிக்க இயலும். வீர சுதந்திரம் வேண்டி நின்ற கவிஞர், அதற்காகப் பல நிலையிலும் உழைத்தவர், இன்னும் தன் குறிக்கோள் வழியில் முன் செல்லப் பல்லாண்டு வாழ்வு விரும்பியது இயல்பே. இவ்வாறு தற்சார்புடைக் கருத்தாக இது அமையினும், பொதுநிலையில் பயனுடைப் பழுமரம் போன்றும், ஊருணி போன்றும் இருப்பவர் காலநீட்டிப்புடைய வாழ்வு வாழ்தலின் இன்றியமையாமையைக் கருதலாம். செயல் வல்லுநனாக, ஆற்றல் மிக்கவனாக, சமுதாய மேம்பாட்டுக்கு உழைப்பவனாக, உலகமுன்னேற்றத்தைவிரும்புபவனாக, மானுடம் சிறக்கப் பாடுபடுபவனாக இருப்பவன் பல்லாண்டுகள் - நூறாண்டு கள் வாழ்ந்து செயல் திறனுடையவனாகக் காணப்படல் தேவை தான்.

கவிஞர் இறைச் சார்புடைய வாழ்வினர் ஆதலால் சக்தியிடம் நூறாண்டு வாழ்க்கை வேண்டுகிறார். உள்ளீடு இல்லாததாக அன்றிப் பயனும் நோக்கங்களும் உடைய வாழ்வாக அது அமைதல் தேவை. பன்முறை இவ்வேண்டுதல் அமைவதை அவர் கவிதைகள் காட்டுகின்றன. அதனைப் பிறவற்றுடன் ஒரு வரமாகவே வேண்டும் அளவுக்குச் செல்கின்றார்.

> எனக்கு வேண்டும் வரங்களை
> இசைப்பேன் கேளாய் கணபதி
> மனத்திற் சலன மில்லாமல்
> மதியில் இருளே தோன்றாமல்
> நினைக்கும் பொழுது நின்மவுன
> நிலைவந் திடநீ செயல்வேண்டும்
> கனக்குஞ் செல்வம் நூறு வயது
> இவையும் தரநீ கடவாயே (93)

உள்ள உறுதியும், ஒளியும் தெளிவுமுடைய அறிவும், பேச்சின்றியும் ஆற்றலுடைய மௌனமும், செயற்பட உறுதுணையாக அமையும் செல்வமும் வேண்டப்படும் வரங்களாகின்றன. ஆயின் இவை மட்டும் போதாது. ஆயுள் இல்லேல் இவையனைத்தும் பயன் பாடின்றிக் கிடக்கும். வாய்ப்பும் காலமும் அளிக்கும்போது இவ் எண்ணங்களும், பொருளும் செயலாகி வெளிப்பட முடிகின்றது.

அதனாலேயே செல்வம் வேண்டப்படுவதுபோல, அதனினும் மிகுதியான முக்கியத்துவமுடைய வாணாள் வேண்டப்படுகின்றது.

அபயம் அபயம் அபயம் நான் கேட்டேன்
நோவு வேண்டேன் நூறாண்டு வேண்டினேன்
அச்சம் வேண்டேன் அமைதி வேண்டினேன்
உடைமை வேண்டேன் உன்துணை வேண்டினேன்
வேண்டா தனைத்தையும் நீக்கி
வேண்டிய தனைத்தும் அருள்வதுன் கடனே (97)

மார்க்கண்டேயனை மறலியிடமிருந்து மீட்டு நீண்ட ஆயுள் கொடுத்த இறைமையையே கவிஞரும் வேண்டுகிறார். தீமைகளுடன் இணைந்த நெடுங்கால வாழ்வால் பயனில்லை. தீது அனைத்தும் தீர்ந்து, நன்மைகள் எல்லாம் நிறையும்போதுதான் நெடுவாழ்வு பயன்படுகின்றது. பொருளுடைமைகள் - செல்வம் இல்லா திருப்பினும் உடல் வலுவும் நோயற்ற வாழ்வும் இருப்பின் உழைத்து முன்னேறி நினைந்ததை நிறைவேற்ற இயலும்.

மனம், சக்தி தனக்கே கருவியாக்கு-இந்தத்
தாரணியில் நூறுவய தாகும்-மனம்
சக்தி தனக்கே கருவி யாக்கு-உன்னைச்
சார வந்த நோயழிந்து போகும் (123)

### சாவாமை

நலிவுமில்லை சாவுமில்லை கேளீர் கேளீர்
நாணத்தைக் கவலையினைச் சினத்தை பொய்யை
அச்சத்தை வேட்கைதனை அழித்து விட்டால்
அப்போது சாவுமங்கே அழிந்து போகும்
மிச்சத்தைப் பின் சொல்வேன் சினத்தைமுன்னே
வென்றிடுவீர் மேதினியில் மரணமில்லை (256)

தன்னை ஒரு சித்தராகவும் தமிழுலகத்துக்கு அறிமுகம் செய்து கொண்டவர் பாரதியார். அழிவுடைய உடலை அழிவற்றதாகச் செய்ய இயலும் என நம்பியவர் சித்தர்கள். அதற்கான முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள். காயகல்பம் போன்ற உடல் நிலைபேற்றிற்குரிய சாதனங்களை ஆக்கினர்.

இம்மை-மறுமை என்ற தத்துவத்தால் சாவை வெல்ல முயன்றனர் மற்றொரு சாரார். இறப்பு அழிவல்ல; அது மறுமையில்

தொடர்வதால் முடிவும் அல்ல என்பது கொள்கை. பரத்தில் நிகழ்தற்குரிய வாழ்வின் முன்னுரையே இகவாழ்வாக இவர்களால் கொள்ளப்பட்டது.

மறுபிறவி என்பதும் மரண எண்ணத்தை வீழ்த்தும் பிறிதொரு வாய்ப்புத் தருகின்றது. இவ்வுலக வாழ்வை விட்டு நீங்க அஞ்ச வேண்டாம். இறப்பு என்பது பிறப்புக்கு முன்னோடி. இரவும் பகலும் போல அவை மாறிவர வல்லன. இன்று மேற்கில் வீழும் கதிரவன் நாளை கிழக்கில் எழுவது உறுதி; வாழ்வும் அவ்வாறே. அது மரணத்தில் முடிவது போன்ற தோற்றம் கொள்கின்றதே ஒழிய அழிவதில்லை. மீண்டும் மற்றொரு பிறப்பாகத் தோன்று கின்றது—என.

இத்தகைய எண்ணங்களைச் சாவாமை என ஒரு நிலையில் கருத இயலும் எனினும் முற்ற முடிவாகவும், முழுமையாகவும் கொள்ளுதல் இயலாது. சாவு கண்முன் நிகழ்வது. என்றும் காணப் படுவது. பல காலமாக நிகழ்வது. எவ்வித இட-இன-வேறெந்த மாறுபாடும் கருதாத 'தரும-நெறி'யாக அமைவது. இந்நிலையில் 'சாவாமை' என்பது வெறும் கொள்கைதான்-பயிற்சி அல்ல.

ஆனால், உடல்-உள்ளம்-உயிர் என்ற முந்நிலையில் வாழ்வு அமைவதால் சாவாமை பற்றிய எண்ணங்கள் துளிர்க்கின்றன உடலே சாகின்றது; பருப்பொருளே அழிகின்றது. உருவற்ற ஆன்மா சாவதில்லை-தொடர்ந்து வாழ்கின்றது. அது என்றும் அழியாதது. பஞ்சபூதத்தில், பரமான்மாவில் 'கலப்ப'தே அன்றித் தன்னை 'இழப்'பது இல்லை என்பன போல் எண்ணங்கள் உள.

இத்தகு பல எண்ணங்களிடையே பாரதியின் கருத்துகளும் உன்னத்தக்கன. புகழுடைய நிலைபேறு என்பதனையே சாவாமை என அவர் கருதியதாகத் தோன்றுகிறது. அமரத் தன்மை குறித்த மந்திரங்களைத் தரும்போது இவ் எண்ணம் வெளிப்படுகின்றது.

> நான் தீராத இளமை சார்ந்தேன். என்றும் எப்போதும் நித்தியமான கால முழுமையிலும் தீராத, மாறாத இளமை யுடையேன். மூடமனிதர் தீர்க்காயுள் வேண்டுகின்றனர். நான் அதனை வேண்டேன். ஏனென்றால் இவர்களெய்தும் நீண்ட வயது துன்பமாகிறதேயன்றி வேறில்லை. நான் சதாகாலம் துன்பமின்றி வாழும் வாழ்க்கையை விரும்புகின்றேன். அதனை நான் எய்திவிட்டேன். தீராத கவலை பொதிந்த

சாதாரண மனித வாழ்க்கை சற்று நீட்டிப்பினால் என்ன பயன் தரும்? நான் கவலையை ஒழித்தேன். ஆதலால் எப் போதும் வாழ்வேன். ஆதலால் கவலையை விட்டேன். கவலையாலும், பயத்தாலும் மரண முண்டாகிறது. கவலையும் பயமும் பகைவர். நான் இப் பகைவரை வென்று தீர்த்தேன். ஆதலால் மரணத்தை வென்றேன். நான் அமரன் (தமிழருக்கு, ப. 42).

இறப்பும் பிறப்புப் போன்றே உண்மையானது. அதில் எள்ளள வும் சந்தேகமில்லை. ஆனால் இறப்புப் பற்றிய அச்சம் கூடாது. மரண பயம் மனிதனை வாழும்போதே கொல்கின்றது. தைரியம் உடையவன் வாழ்வில் சாவை ஒருமுறைதான் ருசிக்கிறான். அச்ச முடையவன் ஒவ்வொரு நிமிடமும் செத்துப்பிறக்கிறான் என்ற உலக உண்மை இங்கு எண்ணத்தக்கது. கவலை மனிதனைச் சித்திரவதை செய்கிறது. அவன் கொஞ்சம் கொஞ்சமாக, தன்னை யறியாமலே செத்துக்கொண்டிருக்கிறான். சாவுக்கு வித்தாக அமைவனவற்றின் பட்டியலில் கவிஞர் இவற்றுடன் நாணம், சினம்' பொய், வேட்கை போன்றவற்றையும் இணைக்கின்றார். 'சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி' தன்னையும் அழிக்கத்தான் செய்கிறது. 'மாந்தர்க்குச் சிறப்பாக அமையும் நாணுடைமை'யும் செயற்பாட்டுக்குத் தடையாகிப் போலி நாணமாகிப் புன்மைக்கு அடங்கும் நிலை வருத்தும்போது சாவைத் தருவதால் வேண்டாத தாகின்றது. 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' (208) என்ற கவிஞர் முழக்கமும் இங்கு நினைக்கத்தக்கது. 'பொய்மைப் பாம்பைப் பிளந்து உயிரைக் குடிப்போம்' (180) எனக் கூறியதும் நினைக்கத்தக்கது. பாம்பின் விடமாகப் பொய்மை, அதனைச் சார்ந்தவரையே கொன்று அழிக்கின்றது. 'மனத்தினுள்ளே பழம் பொய்கள் வளர்ப்பதாலே இன்னலுற்று மாந்தரெல்லாம் மடிவார் வீணே' (264) என இது வலியுறுத்தப்படுகின்றது. தீய பொருட் களை, குணங்களை, இயல்புகளை விலக்கலாக 'மரணமில்வழி' காட்டப்படுகின்றது. அறம் நிறைந்த மானமுடைய உயர் வாழ்வே அதற்கு இன்றியமையாததாகின்றது.

பிறந்தவர் யாவரும் இறப்ப துறுதியெனும்
    பெற்றியை அறிந்தாரேல்—மானம்
துறந் தறம் மறந்தும் பின் உயிர்கொண்டு வாழ்வது
    சுகமென்று மதிப்பாரோ (52)

'தாழ்வு பிறர்க் கெண்ணத் தான் அழிவான்' (195) எனும் சமுதாய எண்ணத்தையும் இங்குக் கருதலாம். ஆசை வயப்பட்டு, பேராசை கொண்டு, தன் நிறைவுக்காகப் பிறர் நலம் கெடுக்கும் நிலையாக இது அமைகின்றது. ஆசை அழிவுக்கு ஆதாரமாகின்றது. சிறந்த பொருளைப் பற்றிக் கொள்ளாது, பிறர்க்குரிய பொருளைப்பற்றிய விழைவின் விளைவாக இவ் அழிவு உருவாகின்றது. பிற நாட்டினரை அடிமைகொள்ளலில் முனைந்த அயலார் பற்றிய உண்மை இவ் எண்ணத்தைக் கவிஞர்க்குத் தந்திருக்கலாம். அத்துடன், ஆசை, நினைந்ததைப் பெறுவது வரை கவலையைத் துணைக்கழைத்துக் கொள்கின்றது. விரும்பிய பொருளைப் பெறு வதற்குத் தடை ஏற்படும்போது சினம் கொள்கின்றது; மனத்தை நலிய வைக்கின்றது. மன அமைதியின் 'சாவு'க்கு வழிகோலு கின்றது. அசுரவித்துகளாக இவை அமைதல் புலப்படுகின்றன.

வாழ்வின் பிற்பகுதியில் ஞான நெறியும், யோக நெறியும் மிக விரும்பிப் பின்பற்றிய கவி பாரதி, 'ஹிந்து மதாபிமான சங்கத் தாரை'ப் பாடும்போது நிலைத்த வாழ்வு பற்றிய நெறிமுறை களைக் கூறுகின்றார்.

மண்ணுலகின் மீதினிலே எக்காலும்
அமரரைப்போல் மடிவில்லாமல்
திண்ணமுற வாழ்ந்திடலாம் அதற்குரிய
உபாயமிங்கு செப்பக் கேளீர்... (242)

இறைமையை மையமாகக் கொண்டு, வேண்டிய பண்புகள் அனைத்தையும் ஏற்று, வேண்டாதன அனைத்தையும் நீக்கி எல்லோருக்கும் பயனுடைய தூய வாழ்வு நிகழ்தலாக இது அமை கின்றது. வாழுங்காலத்தில் போற்றுதலும், உடல் அழியினும் புகழுடம்பு கொண்டு நிலைத்த வாழ்வு பெறுதலும் தீதற்ற நல்லியல்புடைய மாந்தர்க்கு உரியது என்பது இங்கு விளக்கம் பெறுகின்றது. அதுவே சாவாமையாகின்றது.

பொய் கயமை சினம் சோம்பர் கவலை மயல்
வீண்விருப்பம் புழுக்கம் அச்சம்
ஐயமெனும் பேயையெலாம் ஞானமெனும்
வாளாலே அறுத்துத் தள்ளி
எப்போதும் ஆனந்தச் சுடர்நிலையில்
வாழ்ந் துயிர்கட் கினிது செய்வோர்
தப்பாதே இவ்வுலகில் அமரநிலை
பெற்றிடுவார்... (242)

## வாழ்வோர்

தம்மொரு கருமத்திலே - நித்தம்
　　தளர்வறு முயற்சி மற்றோர் பொருளை
இம்மியுங் கருதாமை - சார்ந்
　　திருப்பவர் தமை நன்கு காத்திடுதல்
இம்மையில் இவற்றினையே—செல்வத்
　　திலக்கணம் என்றனர் மூதறிஞர் (337)

வாழ்வோர் 'செல்வர்' ஆக இருக்க அவர்கள் ஈட்ட வேண்டிய 'பொருள்' பல உள. பருப்பொருட் செல்வங்கள் அல்ல, வாழ்வோர்க்குத் தேவை. முத்தும், பொன்னும், பவழமும் அழியும் செல்வங்கள். உருவம் இல்லாத, ஆனால் மனிதனை உருவாக்குகின்ற நற்பண்புகளே உயர்ந்த செல்வங்கள். அழியாச் செல்வங்கள். மனிதனை உயர்த்தும் செல்வங்கள். எனவே அவற்றை வாழ்வோர் விரும்பி ஏற்றல் வேண்டும்.

கவிஞன் தரும் இப்பாடலில் 'செல்வம்' என்பதற்குப் பதில் 'வாழ்க்கை' என அமைத்து நோக்கினும் இடர்ப் பாடில்லை. பொருள் பொருத்தமுற அமைகின்றது. வாழ்க்கையின் இயல்புகள் தொழில்புரிதல், பிறருக்காக உழைத்தல், பிறருரிமை வேண்டாமை என இதன் வாயிலாக உணரலாம். பல முன் தலைமுறையினர் சேர்த்துவைத்த பெரும்பொருளால் உழைக்காது உண்டு வாழ்ந்த சோம்பேறிகளைக் கண்டவர் பாரதி. இதனால் பாழ்பட்டுப் போன உலகை ஈடேற்ற அவர் தொழில் புரிதலை வேண்டுகின்றார். உழைப்பும் மேம்போக்காக, தான்போன போக்கில் அமையாது ஒரு நோக்கத்தை மையமாகக் கொள்ள வேண்டும். பலவித எண்ணங்களால் பிளவுபட்டுக் கிடக்கும் மனிதன் முன்னேற முடியாது. நோக்கம் ஒன்றாக அமையும்போது முன்னேறி விரைய முடியும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வெவ்வேறுபட்ட நோக்கங்களை வேண்டினாலும் குழப்பமே விளையும். அனைவரும் ஒரே குறிக்கோளைக் கொள்ளும்போது ஆற்றலுடன் மேற்செல்ல இயலுகின்றது.

முயற்சி தளர்வு இல்லாததாக அமைய வேண்டும். தொடர்ந்து நிகழ்வதாக அமைய வேண்டும். ஒரே கருமத்தை மேற்கொண்டதாக இயலல் தேவை. நாட்டு ஒருமைப்பாட்டையும் விடுதலையையும் வேண்டிய கவிஞர் அவற்றையே மக்கள் வாழ்வினரிடம் உணர்த்துகின்றார் எனலாம். பிறர் பொருளுக்கு ஆசைப்பட்டு,

ஆட்சி கொண்டு அடிமைப்படுத்தப்பட்ட பாரத நிலையையும் இணைத்துத் தருகின்றார். தனது காலத்து வாழ்வோர் எவ்வாறு வாழ வேண்டும் என்ற கவிஞரின் விருப்பாக இது அமைகின்றது. ஒற்றுமை உணர்வும், பொதுநலப் பண்பும் இருந்தால், பிறர் பொருள் வெஃகாமை ஏற்படும் என உணர்ந்து கவிஞர் அதனையும் கூறுகின்றார். சார்ந்திருப்பவரைக் காத்தல் இங்கு, குடும்பம், சமூகம் என்ற நிலைகளும் கடந்து நாடு—பாரதம் என விரிகின்ற தாகக் கொள்ளலாம். இன்னும் பரந்து உலக மக்களைப் புரத்தல் என்ற நிலையையும் கருதலாம்.

வாழ்வோர் பற்றிப் பல வகையான நிலையான எண்ணங் களைக் கவிஞரிடம் காணமுடிகின்றது. நேரடியாகவும், மறைமுக மாகவும், குறிப்பாகவும், குறியீடாகவும் கவிஞர் இத்தகு கருத்து களைத் தருகின்றார். இலக்கிய வாதியாகியமையால் சுவைபட மொழிதல் என்பதும் இவரிடம் காணப்படுவதாகக் கொள்ளலாம். எள்ளலும் அங்கதமும் கனிந்ததாக இவை அமைகின்றன. கதை கூறி அறிவுணர்த்தலாக அறம் கூறலாக இவை காணப்படுகின்றன.

மனிதனின் வாழ்வை, அவனுக்குக் கீழ்ப்பட்ட விலங்கு வாழ்க்கை வழியும் காட்ட முடியும்; உயர்ந்துயர்ந்து சென்று வானில் பறந்து திரியும் ஆற்றல் பெற்ற பறவைகளைச் சுட்டியும் தரக்கூடும். முன்னது—விலங்கு வாழ்க்கை; விலக்கப்பட வேண்டிய வாழ்க்கையைக் காட்டும்; பின்னது—பறவை வாழ்க்கை பற்றிக்கொள்ள வேண்டிய வாழ்வினைக் குறிக்கும் எனத் தேர லாம். இயல்பாகவே விலங்கும் புள்ளும் மனிதனை விட அறிவுக் குறையுடையன எனினும், அவை இரண்டும் பண்பு வகையால் வேறுபடுவதாகக் கொள்ளப்படுகின்றன. குறுக்காக வளர்ந்து 'விலங்கும்' முன்னதன் பண்பு, சிறிய உடலும் பறக்கும் ஆற்ற லும், இனிய கீதமுமுடைய பின்னதில் வேறுபடுகின்றது. சிங்கம் போன்ற சீரிய வாழ்க்கையை விலங்கு வழிக் காட்ட இயலுமெனி னும் கவிஞர் பெரும்பாலும் கீழ்மையை அறிவுறுத்தி விலக்கவே விலங்குகளைத் தருவதாகத் தெரிகின்றது.

மனிதரை விலங்குகளுடன் ஒப்பவைத்து, அவருக்கில்லா இனிய வாழ்வு பறவைக்கு இருப்பதாகக் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இதனையும் விலங்கும் பறவையும் தம்முள் நிகழ்த்தும் உரையாடல் வாயிலாகவே தருவது இன்னும் நயமுடையது. கீழான உணர்வுகள் (base feelings) விலங்குக்கு (beast) அமைகிறது எனும் உண்

—4—

மையை அவ்வாறே கூறாது, மேலான இயல்புகள் பறவைக்கு அமைவதாகக் காட்டுகின்றார். மனிதனில் விலங்கு போன்றவரும் பறவை போன்றவரும் உளர் என்பதனையே இவ்வாறு சுட்டுவ தாகத் தெரிகின்றது.

வசன கவிதைப் பகுதியின் ஜகத்சித்திரம் என்னும் 'சிறிய நாடகம்' எருமை மாட்டுக்கும், நாகணவாய்ப் பறவைக்கும் இடையே அமையும் உரையாடலை இப்பொருள் விளங்கத் தரு கின்றது. பாரதியின் ஒரு உத்தியாகவே இதனைக் கொள்ள முடி கின்றது.

> **எருமை மாடு**:-பக்ஷி ஜாதிகளுக்குள்ள ஸந்தோஷமும் ஜீவ ஆர வாரமும் ஆட்ட ஓட்டமும் இனிய குரலும் மிருக ஜாதியாருக் கும் மனுஷ்ய ஜாதியாருக்கும் இல்லையே, இதன் காரணம் யாது?
>
> **நாகணவாய்**:- டுபுக்! வெயில் காற்று ஒளி இவற்றின் தீண்டு தல் மிருக மனிதர்களைக் காட்டிலும் எங்களுக்கதிகம். எங்க ளுக்கு உடம்பு சிறிது. ஆதலால் தீனி சொற்பம். அதைச் சிறிது சிறிதாக நெடுநேரம் தின்கிறோம். ஆதலால் எங்க ளுக்கு உணவின்பம் அதிகம். மிருக் மனித ஜாதியாருக்குள் இருப்பதைக் காட்டிலும் எங்களுக்குள்ள காதலின்பம் அதிகம்' ஆதலால் நாங்கள் அதிக ஸந்தோஷமும், பாட்டும், நகைப்பும் கொஞ்சு மொழிகளுமாகக் காலங்கழிக்கிறோம்...(453).

கவி பாரதிக்கு, விலங்கு வாழ்வு-பறவை வாழ்வு பற்றிய சிந்தனை யில் தெளிவும் உறுதியும் ஏற்படக் கவிஞனின் இசை விருப்பும் ஒரு காரணம். மனிதன் இசைபாட வல்லவன்—கவி ஆற்றல் உடை யவன். விலங்குக்குப் பல் வகை ஓசை- ஒலிகள் உண்டே தவிர இசை இல்லை. ஆனால் பறவைகளுக்கு இசை இனிமையுடைய குரல் நிலை மிகுதி, எனவே இயற்கை வழங்கிய வரமாகக் கவித்து வமும் இன்குரலும் அமைகின்றன. இதனால் மனிதனும் பறவை யும் இணைந்து நினைக்கத் தக்கவராகின்றனர். தன் வளர்ச்சிக்குக் குறிக்கோள் குறியீடாகப் பறவையைக் கொள்ளுதல் தகுதி பெறு கின்றது.

'சங்கீத விஷயம்' பற்றிப் பாரதி பேசுமிடத்து இம்மூவுயிரின் வாழ்வுக் கூறு ஒற்றுமை-வேற்றுமை ஆய்வுக்கு உட்படுகின்றது.

இங்குள்ள ஜந்துக்களிலே மனிதருக்கும் பறவைகளுக்குந்தான் பாடத் தெரியும். மற்ற மிருகங்களுக்குப் பாட்டு வராது. பற வைகள் வானத்திலே பறக்கும் வழக்க மிருப்பதால், அவற்றின் மனநிலை சங்கீதத்திற்கு இசைகின்றது போலும். மனிதன் உடம்பினாலே பறக்காவிட்டாலும், உள்ளத்தைத் திசை வெளியிலே பறக்கும்படி செய்கிறான். அப்போது இயற்கையில் பாட்டுத் தோன்றுகின்றது (தமிழருக்கு, ப. 89).

பேச்சாற்றலுடைய பச்சைக் கிளி, வசந்தம் வந்ததும் ஓயாமல் கூவுமியல்புடைய குயில் என்பன கவிஞனின் மனம் கவர்ந்து வாழ் வினர்க்குக் குறியீடாகின்றன எனலாம். சிட்டுக்குருவி விடுதலை வாழ்க்கை வாழ்பவனைக் குறிப்பாக உணர்த்துகின்றது. கூட்ட மாக உண்டு வாழும் காகம் அவ்வாறு இணைந்து வாழ வேண்டிய மக்களை-இந்தியரை-சுதேசிகளைச் சுட்டுகின்றது. ஒளிவரக் கூவு கின்ற சேவல் விடுதலைச் சங்கூதும் முயற்சியாளனைக் குறிக்கலாம். மோனத்தில் இருக்கும், பின்பு விண் உச்சிக்குப் பறந்து செல்லும் 'மன்னப் பருந்துகள்' மேன்மையான வாழ்வினரை உணர்த்தலாம். வெண்ணிற அன்னம், நன்மை தீமை பிரித்தறியும் அறிஞனுக்கு நற்குறியீடாக உருவாக முடியும். இப்படிப் பலவகைப் பறவை களைக் கவிஞர் அங்கங்குக் காட்டிச் செல்வது மனிதரை இணைத்து வைத்துக் கருதச் செய்கின்றது.

அவ்வாறே, இழிவு வாழ்வினராய்க் கீழ்ப்பட்டு மனிதன் அமையும்போது விலங்கின் எண்ணமே கவிஞர்க்கு வருகின்றது.

நண்ணிய பெருங்கலைகள்—பத்து
    நாலாயிரங் கோடி நயந்து நின்ற
புண்ணிய நாட்டினிலே—இவர்
    பொறியற்ற விலங்குகள் போல வாழ்வார் (38)

விலங்குகளிலும் கேடுகெட்ட வாழ்வுநிலை 'பாரத ஜனங்களின் தற்கால நிலைமை'யாகக் காட்டப்படுகின்றது. தமிழரின் இந்த நிலையைக் கண்டு வருந்தியவர் கவிஞர்.

பாமரராய் விலங்குகளாய் உலகனைத்தும்
    இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டு இங்கு
    வாழ்ந்திடுதல் நன்றோ சொல்லீர்

பெயரில் மட்டும் மனிதனாக, தமிழனாக உலவும் நிலை இங்குக் குறிக்கப் படுகின்றது. அவ்வாறே வாழ்ந்து பழகிவிட்டால் பின்பு அதுவே பழக்கமாகி, வழக்கமாகிவிடும். விட்டு விலகுதற்கு அருமையாகி நிலைத்துவிடும். வாழ்வோர்கள், தங்கள் விலங்குத் தன்மை அறியாது அவ் வாழ்விலே சிறைப்பட்டு விடுவர். தமது விடுதலையற்ற தன்மையை உணராது அதனையே நல்ல நிலை யாகக் கருதி இன்பம் காணத் தொடங்குவர். 'மறிகள் இருப்பது போல் பிறர் வசந்தனில் உழல்'வர்(460).

'பன்றி வாழ்க்கை'யைக் கவி பாரதி புனைவதை இங்கு கருத்து வலியுறுத்தலுக்காகக் கொள்ளலாம். தன் வாழ்வின் இழி நிலையைக் கவிஞர் படைத்துக் காட்டக் கதையொன்றை எடுத் தாள்வதால் இது தற்சார்புடையதாகவும் அமைகின்றது. மனிதன் பன்றிபோல் கீழ்நிலை வாழ்வு வாழத் தொடங்கி விட்டால், பின்பு அதுவே இன்பமாக, சிறப்பாகத் தோன்றும். தீமையே பழகி விடுகின்றது. அதன் தீமை நிலை வெளிப்படாது, புலப்படாது நன்மையாகவே தோற்றம் அளிக்கின்றது. அத்தகு வாழ்வில் புகு முன்பு இருந்த பகுத்தறிவு விலகி விடுகின்றது. முன்பு வெறுத்ததே பின்பு விழைவாகி விடுகின்றது. எனவே பழக்கதோஷத்தால் கெட்டுப் போகாதபடி, முதலிலேயே உயர்ந்த வாழ்க்கையை விரும்புதல் வேண்டும்.

'கவிதைக் காதலி' எனும் பாடலில், கவிஞர் எட்டயபுர அவையில் தன் வறுமை நோய்தீர விரும்பிப் புகுந்த வாழ்வினைப் பன்றியாக மாறிய முனிவன் வாழ்வாகக் காட்டுகின்றார்.

> மிடிமை நோய் தீர்ப்பான் வீணர்தம் முலகப்
> புன்தொழில் ஒன்று போற்றுதும் என்பான்
> தென்திசைக் கண்ணொரு சிற்றூர்க் கிறைவனாம்
> திருந்திய ஒருவனைத் துணையெனப் புகுந்து அவன்
> பணிசெய இசைந்தேன்...
> திமிங்கில வுடலும் சிறியபுன் மதியும்
> ஓரேழ் பெண்டிரும் உடையதோர் வேந்தன்
> தன்பணிக் கிசைந்தென் தருக்கெலாம் அழிந்து
> வாழ்ந்தனன் கதையின் முனிபோல் வாழ்க்கை (230, 31)

கதையில், முனிவன், சாபம் காரணமாகத் தான் பன்றியாகப் பிறக்கப்போவதை அறிந்ததும் வருத்தமுற்று, அதிலிருந்து வெளிப்படத் தன் மகனை வேண்டுகிறான். பன்றியாகப்

பிறந்ததும் கொன்றுவிடல் வேண்டும் என்பதே அவ்வேண்டுகோள் ஆயின் அப்பன்றிப் பிறப்புச் சூழல் வந்ததும் கொலைப்பட விரும் பாது மகனைத் தடுக்கின்றது. காரணம் பன்றிக்கு அதன் வாழ்வு, கீழ்மையுடையதாயினும் இன்பம் நிறைந்ததாகத் தோன்றுவது; துன்பம் அற்றதாகக் காணப்படுகின்றது. புறத்திருந்து நோக்கிய போது பீழையுடையதாக, பீடையுடையதாகத் தெரிந்த வாழ்க்கை உள் நுழைந்த பின் பழகவிட்டமையால் பாங்குடைய தாகப் புலப்படுகின்றது.

.. முன்னர் யானினைந்தவாறு
அத்துணைத் துன்புடைத் தன்றிவ் வாழ்க்கை
காற்றும் புனலும் கடிப்புற் கிழங்கும்
இனைய பல் லின்பம் இதன் கணே யுளவாம் (230)

உடல் வாழ்க்கையே மையம்கொண்ட உலக வாழ்க்கையாக அமைகின்றது. உணவு ஒன்றே முதன்மைபெற்ற விலங்கு வாழ் வாகக் காணப்படுகின்றது. உணவின்பத்தோடு உடலின்பமும் இணையும்போது முழு இன்பமுடையதாகப் பன்றி வாழ்க்கை அமைவதைக் கதை காட்டுகின்றது. பன்றிப் போத்து, தன் இனத் துடனும் பெடையுடனும் அன்பிற் பொருந்திக் கீழ்மையின் கடைக் கோடிக்குச் செல்கின்றது. 'வேத நூல் அறிந்த மேதகு முனிவரர் போற்றிட வாழ்ந்த' புகழுக்குச் சற்றும் ஏற்புடையதாகாது இவ் வாழ்வு அமைகின்றது. 'எனக்கு இவ்வாழ்க்கை இன்புடைத்தே யாம்' என அதில் விருப்பமும் கொள்கின்றது. கதைவழி அறம் உணர்த்தும் இக்கவிதை, மனிதர் 'நீசப் பொய்மை கொள்' வாழ் வோரானமையை வெளிப்படுத்துகின்றது.

ஆவா மானிடர் அருமையின் வீழ்ந்து
புன்னிலை யெய்திய போழ்ததில் நெடுங்கால்
தெருமரு கின்றிலர் சிலபகல் கழிந்தபின்
புதிதா நீசப் பொய்மைகொள் வாழ்வில்
விருப்புடை யவராய் வேறுதா மென்றும்
அறிந்திலரே போன் றதிற் களிக்கின்றார்
என் சொல்கேன் மாயையின் எண்ணரும் வஞ்சம் (231)

பார்ப்பவர்க்குத் தெரிந்தபோதும் படுபவர்க்குத் தெரியாமையால் அவர்கள் அதிலேயே ஆழ்கின்றனர். வாழ்ந்து விழுகின்றனர். எழவியலாது அழுந்திக் கிடக்கும் நிலை உணராது விடுகின்றனர். வெளியேற்ற முயன்று பார்ப்போரையும் வெறுத்து நீங்குகின்றனர்.

பன்றியைப் போலவே, அண்டிப் பிழைக்கும் நாயும் கவிஞருக்கு வாழ்வோரைக் குறிக்கப் பயனாகின்றது. 'ஓநாயும் வீட்டு நாயும்' (கட்டுரைகள் : சமூகம், பாரதி பிரசுராலயம், 1950 பக். 228-33) என்ற பகுதியில் இதனை உணர்த்துகின்றார். மறவன் பாட்டில்,

நாயும் பிழைக்கும் இந்தப் பிழைப்பு (214)

எனக் கூறுவதும் இது பற்றியே. இவ்விலங்கு இயல்புகளை, தளை செய்யும் விலங்குகளாகக் கருதி விலக்கினால் முன்னேற முடியும் என்பது முடிபு.

விலங்கி யற்கை யிலை யெனில் யாமெலாம்
விரும்பு மட்டினில் விண்ணுற லாகுமே (248)

குயில் பாட்டில் வரும் 'குரங்கு' 'மாடு' என்பனவற்றை 'வாழ்வோர்'க்குக் குறியீடாகக் கருதலாம் எனத் தோன்றுகின்றது. கவிஞன் மனிதன். அவன் அடைய விரும்பியது, அல்லது, ஆக விரும்பியது குயில். குயில் ஒரு உன்னத நிலைக்குக் குறியீடாகலாம். இம்மனித—குயில் நிலை இணைவுக்குத் தடையாக அமைவன விலங்குகள். மனிதன் எதிர்க்க வேண்டிய பகைகள் இவை; அவன் அழிக்க வேண்டிய கட்டுகள் இவை. மனிதனின் நிலையற்றதும் அலைபாய்வதுமான நிலைக்குக் குரங்கும், முரட்டுத்தனத்திற்கு மாடும் குறிப்பு ஆகலாம். மடமையும் அறியாமையும் குறிப்பாகத் தரப்படலாம்.

விலங்குகளையும், பறவைகளையும் காட்டியும் குறித்தும் மனித வாழ்வினரை விளக்கும் இச்சுவை நிலை போலன்றி அவரை வெளிப்படக் கூறுதலும் கவிஞரிடம் உண்டு. மறைக்க வியலாதபடி நெஞ்சத்தில் புண்பட்டுக் கொப்புளிக்கும் நிலையாக இதனைக் கூறலாம்; வருத்தத்தின் மிகை நிலையின் வெளிப்பாடு இது. பல்வகை வாழ்வோரின் பட்டியல் தருகிறார் கவிஞர்.

தாழு முளத்தர் சோர்வினர் ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே
விதியை நோவர் தம் நண்பரைத் தூற்றுவர்
வெகுளி பொங்கிப் பகைவரை நிந்திப்பர்
சதிகள் செய்வர் பொய்ச் சாத்திரம் பேசுவர்
சாதகங்கள் புரட்டுவர் பொய்மைசேர்

மதியினிற் புலை நாத்திகங் கூறுவர்
மாய்ந்திடாத நிறைந்த விருப்பமே
கதிகள் யாவும் தருமென லோர்ந்திடார்
கண்ணி லாதவர் போலத் திகைப்பர்காண்
(248—49)

வாழ்வோர் எனப்படினும் வாழ்வோராக அன்றி வீழ்வோராக அமைபவராகவே பலர் அமைவதை இங்குக் காணலாம். 'மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும் வாய்மையை' (52) உணராதவர் இவர்கள். பெறற்கரிய பேறு என்று உணர்ந்தார் அவ்வாழ்வினை வீணாக்க மாட்டார்கள். கடமை உணர்வில்லாது, வாழ்க்கையை இயல்பாகவும் உரிமையாகவும் எடுத்துக் கொள்வதால் பிழைபடு கின்றனர். குற்றங்களுக்கும் குறைகளுக்கும் தாம் காரணமாவதை உணராது பிறரைக் குற்றம் சாட்டி, நண்பரை இகழ்ந்து, நட்பை யும் இழக்கின்றனர். துன்பம் வரும்போது தாங்கும் ஆற்றலின்றி நெஞ்சம் நொந்து உழல்கின்றனர். நல் விருப்பை நாடாமையால், வேண்டியதைப் பெற இயலாது வருந்துகின்றனர். முயற்சி யின்மையால் முன்னேற்றமின்றிக் கடைப்படினும் அதனை உணராது, பழியை 'விதியின்' மேல் போட்டு வாளாவிருக்கின் றனர். எதிர்ப்புகள் வரும்போது அஞ்சிச் சோர்வடைகின்றனர். உள்ள உறுதியின்மையால் தாழ்கின்றனர்.

அன்பினுக்கு அடிப்படாது, நன்மையை நாடாது தீயவழியில் செல்கின்றனர். தீது நினைக்கின்றனர். தீமை செய்கின்றனர். தன்னைப் போல் பிறனையும் கருதி அன்புறாது பிறனை அழிக்கச் சதித்திட்டம் தீட்டுகின்றனர். தீது செய்தார்க்கும், அவர் நாண நன்மை செயலை மறக்கின்றனர்.

சதி செய்தார்க்குச் சதிசெயல் வேண்டும் என் மாமனே (325) என பிறர் செயலையே சதி என மொழிந்து திட்டங்கள் வகுக்கின் றனர். 'பாபத்தைப் பாபத்தால் வெல்லுவோம் என்பது அறியா தவர் கொள்கை' (தமிழருக்கு, ப. 142) என்பதை உணராதவர் இவர்கள்.

கண்ணிருந்தும் கண்ணோட்டம் இல்லாத புன்மையர் இவர் கள். நல்லறிவுரைகள் எத்துணை வழங்கினும் அவற்றிற்குச் செவி சாய்க்கார். உண்மைக்குப் பிரதிநிதிகளாக இருந்து வாய்மை பேச வேண்டிய சந்தர்ப்பத்தில் மௌனம் சாதிக்கின்ற ஊமையர். குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குழியில் விழுதல் போலத்

தாமும் அழிந்து பிறரையும் அழிவிப்பவர். 'பொறியற்ற விலங்குகள்' (38) எனக் கவிஞர் இவரைப் பொருத்தமுறக் காட்டுகின்றார்.

நெஞ்சு பொறுக்கு திலையே—இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்.. (30)

என அத்தகையவருக்காகப் புலம்புகின்றார் கவிஞர். சுய அறிவில்லாது, நல்லோர் சொற்பேச்சும் கேளாது, புத்தியற்றவராகத் தீயவழிசென்று தம் அழிவுக்கு நேராகப் பாதை கொள்கின்றனர்.

கண்ணிலாக் குழந்தைகள் போல—பிறர்
காட்டிய வழியிற் சென்று மாட்டிக் கொள்வார் (38)

புறப்பொறிகளும், அதன் புலனாற்றல்களும் பொதுநிலையில் கொண்டபோதிலும் உண்மையில் அவையில்லாதார் போல, அகத்தில்அவற்றைப் பெறாதாராக அமையும் பரிதாப நிலை கவிஞரால் சுட்டப்படுகின்றது.

ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய்
வாழ்கின்றோம்... (46)

வாழ்வோர் இருக்கும் நிலையை அவர், இயல்பைப் பல்வேறுவகையாக இவ்வாறெல்லாம் காட்டும் கவிஞர், அந்நிலை மாற வேண்டிய பாங்கினையும் காட்டுகின்றார். உணர்வின்றி, உணர் விழந்து இருக்கும் இவரைத் தட்டி எழுப்ப வேண்டும், குழியில் வீழ்ந்திருக்கும் இவரைக் கரையேற்ற வேண்டும்; தவாறன வழிச் செல்வோரை நேர்பாதைக்கு அழைத்து வரவேண்டும்; அறிவற்ற அவருக்கு அறிவுபுகட்ட வேண்டும். அகத்திலிருந்தும் புறத்திலிருந்தும் இவ் ஈடேற்றத்திற்கு ஆற்றல்-உந்துதல்-ஊக்கம் அளிக்கப்படலாம். வாழ்வை மேம்படுத்த இலக்கியம் வல்லது என்ற கொள்கை இங்கு உதவுகிறது.

உள்ளத்தில் உண்மையொளி யுண்டாயின்
வாக்கினிலே ஒளியுண்டாகும்
வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும்
கவிப் பெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழி பெற்றுப் பதவிகொள்வார் (47)

கவிஞரின் வாழ்வியல் நோக்கமாக அமைந்த 'இலக்கியம் வழி மாந்தரை உய்விக்கும் நிலை' இங்குப் பொருந்துகின்றது. தான்

பின்பற்றிய கொள்கையையே கவிஞர் இங்குப் பிறருக்கும் கூறுகின்றார். அடிப்படையான மொழிப்பற்று, இலக்கியப் பற்றையும், அதன் வழி நாட்டுபற்றையும் உருவாக்கி, கண்திறக்கச் செய்கின்றது. அப்போது அவர்களால் செயல்படமுடிகின்றது.

கண் திறந்திட வேண்டும்
காரியத்தில் உறுதி வேண்டும் (182)

வாழ்வோர் பற்றிக் கவிஞர் இவ்வாறு பலவகையாகத் தரும் பொது எண்ணங்கள் ஒருபாலாக, சில சிறப்பு எண்ணங்களும் தனி நபர் நிலையில் கருதத் தக்கன. பருவம், பால், தகுதி போன்ற பலவற்றின் காரணமாக வாழ்வோர் வேறுபடுகின்றனர். அவ் வேற்றுமைக்கேற்ப அவர் வாழ்வியலும், நெறியும், கடமையும் மாறுபடக் கூடும். பருவ நிலையில் குழந்தை, இளைஞர், முதியவர் எனப் பகுக்கலாம். பாலால் ஆடவர், பெண்டிர் உளர். தகுதியால், கவிஞன், ஆசிரியன், அரசன்...போன்ற பல நிலைகளும் உண்டு. இவ்விவர்க்கேற்ற எண்ணங்களையும் பாரதி அங்கங்குத் தருகின்றார்.

சமுதாயம் என நினைக்கும்போது, அதில் அதன் ஒவ்வொரு உறுப்பினனான மனிதனும் இன்றியமையாமை பெறுகின்றான். உடலில் ஒரு உறுப்புச் செயல்படாதபோதும் உடல் நிலை சீர் கேடடைதல் போல, சமுதாயத்தின் ஒவ்வொரு உறுப்பினனும் தன்னளவில் சில செயல்களை நிறைவேற்ற வேண்டியுள்ளது ஒரு துளி நஞ்சாயினும் அது குடப்பாலை நஞ்சூட்டுவதுபோல ஒருவனின் தீமை சமுதாயத்தை அச்சமூட்ட முடியும். ஆயிரங்கால் மண்டபத்தின் ஒரு தூண் பழுதுபடினும்-மண்டபம் விழாத போதும், அழகு முழுமைக் கேடடைகின்றது. அத்துடன், கோபுரம் போல உயர்வுடையவர் பழுதான வாழ்வினாராகும்போது மதியிற் கறையாக வாழ்வியலின் ஒளி குன்றுகின்றது. வாழ்வோருக்கு வழிகாட்டியாக விளங்க வேண்டியவர் கல்வியறிவுடைய சான்றோர். ஆனமையால், அவர் தம் வாழ்வு எத்தீமையுமில்லாத் தூய்மையுடையதாக அமைய வேண்டும். விதி கூறியும், விலக்குச் சுட்டியும் வாழ்வோரைக் காட்டிய கவிஞர் அச்சுறுத்தியும் உண்மை கூறுவர் போலும்.

படிச்சவன் சூதும் பாவமும் பண்ணினால்
போவான் போவான் ஐயோவென்று போவான் (216)

எனப் புதிய கோணங்கியின் குரலொலி வெளிப்படுகின்றது. வாழ்வுக்கு நல்லுரையும், வாழ்வோருக்கு நல்வழியும் கவிஞர் பல நிலையில் உணர்த்துகின்றார்.

## குழந்தை

சொல்லு மழலையிலே—கண்ணம்மா
துன்பங்கள் தீர்த்திடுவாய்
முல்லைச் சிரிப்பாலே எனது
மூர்க்கந் தவிர்த்திடுவாய் (292)

இன்றைய குழந்தை நாளைய சமுதாயத்தின் பொறுப்புள்ள, தமிழன், இந்தியன், உலகன். குழந்தைகள், சமுதாயப் பயிரின் புதிய நாற்றுகள். வளமுடைய விதைமுளைகள் நல்ல விளைவுடைய பயிராக உருவாக வல்லன. எனவே நாளைய சமுதாயம் வளமும் நிறைவும் உடையதாக அமைய இன்றைய குழந்தை அதற்கேற்பப் பயிற்றுவிக்கவும் வளர்க்கப்படவும் வேண்டும். குழந்தையின் வாழ்வியல் , அதன் பெற்றோரிடம், அதன் ஆசிரியரிடம், அதன் நண்பரிடம், அது வாழும் சமுதாயத்திடம் கால் கொள்ளுகின்றது. நிலம் நன்றாக அமையின்தான் நல் நாற்றும் நிறைபயன் அளிக்க இயலும். எனவே குழந்தைகள் வளரும் சமுதாயச் சூழல் நன்மையுடையதாக அமைதல் தேவை. இதை ஆக்கிக் கொடுக்கும் பொறுப்பு சமுதாயத்தின் ஒவ்வொரு நபரிடமும் அமைகின்றது.

குழந்தை இவ்வுலகத்தைக் காணும் நேரம் முதல் உடன் இருப்பவளும், அதன் கண்கண்ட தெய்வமாக இருப்பவளுமாகிய தாயிடம் குழந்தையின் வாழ்வியல் பொறுப்பு முதலில் அமைகின்றது. தொட்டில் பழக்கங்கள் தொடர்ந்து வருவதும், இளமையின் நெஞ்சப் பதிவுகள் காலம் காலமாக அழியாதிருப்பதும் கருதற்குரியன. தன் சிறுமகனை வீரனாக்க, சிவாஜி எனும் தலைவனாக உருவாக்க ஒரு தாயால் முடிந்தது. எனவே கவிஞர் பாரதியும் குழந்தை வாழ்வியலில் தாயின் பங்கு பற்றி நினைக்கின்றார்.

மகான்கள் பிறந்து வாழ்ந்த நாட்டிலே மண்ணுண்ணிப் பூச்சிகள் நடமாடுவதைக் கண்டு ஒவ்வொரு ஸ்திரீயும் மனம் புழுங்க வேண்டும். தத்தம் மக்களுக்கு அறிவு, உயர்குணம், சரீர திடமை, மனோதைரியம், ஆண்மை முதலியவற்றைக்

> கற்பித்துக் கொண்டேயிருக்க வேண்டும் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், வானவில் பிரசுரம், 1979, ப. 79).

குழந்தையின் வாழ்வுக்குத் தேவையான உணவை ஊட்டும் போதே தாயாரால் அறிவும், குணமும் ஊட்ட முடியும். அன்பும், பண்பும் பெறச் செய்ய முடியும். கதைகள், கவிதைகள் வாயிலாகக் கல்வி கற்பிக்க முடியும். உடல் திடம் மட்டுமன்றி உள்ளத் திண்மையும் குழந்தை பெறும்படி வழிகோல இயலும். குறிக் கோள் வாழ்வினரான பல பெரியோரின் வாழ்க்கைகளைக் கூறிக் குழந்தைக்கு வழிகாட்டி நெறிப்படுத்த முடியும். இதனால்தான், நாட்டில் பிறக்கும் ஒவ்வொரு ஆண்குழந்தையும் முழுவாழ் வுடையவனாக, முதலில் அவனைப் புரக்கும் அன்னை அறிவுடைய வளாக அமைதலைக் கவிஞர் விரும்பினார் போலும்.

> பாரத தேசத்தின் புண்ய புத்திரர்களாகிய மஹான்களின் சரித்திரத்தை அடிக்கடி பெண்களுக்கு எடுத்துக் கூறி அவர்கள் மனத்திலே தத்தம் பிள்ளைகளும் கணவர்களும் சகோதரர் களும் இப்போது வீழ்ந்து கிடக்கும் தாழ்நிலைமையிலிருந்து மேற்கூறப்பட்ட மஹா புருஷர்களைப் போலாக வேண்டு மென்ற பேராசை உண்டாகும்படி செய்து, தேசத்தின் பெருமை மாதர்களின் அறிவையும் ஆவல்களையும் பொறுத் திருக்கின்றதானபடியால், இந்த மூலமாகத் தேச நிலைமை யினை உயர்த்த வேண்டுமென்று அளவில்லாத ஆசை கொண்டிருக்கும் என்னிடம் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப 69).

பாரதி ஒரு குழந்தைக் கவிஞராக உருவாகாதபோதும், குழந்தையைப் பற்றி நினைந்து, குழந்தைக்காகச் சில பல செய்தவர். தந்தை என்ற நிலையில் தேவை ஏற்பட்டபோது தன் மகளுக்காகப் 'பாப்பாப்பாட்டு' பாடினாரெனினும் தெளிவான சிந்தனைகளின் முழுமை வெளிப்பாடாக அது அமைகின்றது. குழவிப் பருவத்தை ஏத்தும் பிள்ளைக்கவியாக அது அமையாது குழந்தையை நிறைவுடையதாக உருவாக்கும் அறிவுணவாக அமை கின்றது. தினவாழ்வின் தேவைகளை உணரும் பாங்கில் உயர் நோக்கங்களைக் கொள்ளும் வண்ணம், அடிப்படைப் பண்புகளைக் கடைப்பிடிக்குமாறு, அறிவுரை மாலையாகிக் காணப்படுகின்றது.

குழந்தையின் வாழ்வியல் தூய்மையானது. கள்ளம் கபட மற்றது. பிறருக்கும் இன்பம் தருவது. பசுமையானது. 'பச்சைக்

குழந்தையடி சந்திரமதி'(234) எனப் பிறரிலும் குழந்தைத் தன்மையைக் கண்டு சுவைக்க ஆதாரமானது. இறைமையுடன் இணைத்து வைத்து எண்ணச் செய்வது (கண்ணம்மா-என் குழந்தை 291-93). கவிஞரின் குழவிப்பருவம்-சிறுவனாக வளர்ந்த காலம் தாய்மையின் கவனிப்பின்றிக் கழிந்ததால் தேவையான உள்ள-உடல் ஊட்டமின்றி அமையாததால், அதனைச் சுற்றி அவர் எண்ணங்கள் செல்கின்றன. தன்வாழ்வியலைப் பற்றி எண்ணுமிடத்துக் குழந்தையின் வாழ்வுக்குரிய எண்ணம் சிலவும் வெளிப்படுகின்றன. தனிமைப் பட்ட வாழ்வு; விளையாட்டில்லாத வாழ்வு; நட்பு இனிமை இல்லாத வாழ்வு இவை குழந்தைக்கு விலக்கப்பட வேண்டியன.

ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும்
ஆறு குட்டையின் நீச்சினும் பேச்சினும்
ஈண்டு பன்மரத் தேறியி றங்கியும்
என்னொ டொத்த சிறியர் இருப்பரால்
வேண்டு தந்தை விதிப்பினுக் கஞ்சியான்
வீதி யாட்டங்க ளேதினுங் கூடிலேன்
தூண்டு நூற்கணத் தோடு தனியனாய்த்
தோழமை பிறிதின்றி வருந்தினேன் (247)

இயற்கையோடு இயைந்த வாழ்வு; ஒத்த பருவச் சிறுவருடன் இணைந்த கூட்டு வாழ்வு; வெளியிடத்து விளையாடித் திரியும் வாய்ப்பு; உடற்பயிற்சிக்கு இடமளித்தல்; கட்டாயக் கல்வித் திணிப்பு இன்மை; தனிமை யுணர்வு ஏற்படாச் சூழல்—என்பன வேண்டப்படுகின்றன.

குழந்தை—சிறுவன் பருவத்திற்கேற்ற விருப்பங்கள் நிறைவுறும் வண்ணம் அவ்வாழ்வு அமைதல் தேவை. அல்லது எளிய சிறிய விருப்பு உணர்வுகள் அமுக்கப்படுவதால் தேவையற்ற வெறுப்பும் சலிப்பும் வாழ்வில் ஏற்படுகின்றது. சிறு விருப்பங்களும் மறுக்கப்படுவதால் வக்கிர புத்தியுடையதாகக் குழந்தை மாறலாம். கண்ணனைத் தாயாகக் கவிஞன் ஏற்றி மொழியுமிடத்துக் குழந்தையின் கதை கேட்கும் விருப்பம் தாயால் நிறைவேற்றப்படலும், அது குழந்தையின் முழுமையாக்கத்தில் உதவியாதலும் வெளிப்படுகின்றது. பால் ஊட்டுவதுடன் தாய்ப் பண்பும் ஊட்டுகின்றாள்.

பல, மாயமுறுங் கதை சொல்லி மனங்களிப்பாள்
இன்பமெனச் சில கதைகள்—எனக்
கேற்றமென்றும் வெற்றி யென்றும் சில கதைகள்
துன்ப மெனச் சில கதைகள்—கெட்ட
தோல்வி யென்றும் வீழ்ச்சி யொன்றும் சிலகதைகள்
என் பருவம் என்றன் விருப்பம்—எனும்
இவற்றினுக் கிணங்கவென் னுளமறிந்தே
அன்பொடவள் சொல்லி வருவாள்—அதில்
அற்புதமுண் டாய்ப்பர வசமடைவேன் (276)

உள மறிந்து, உள நிறைவு தரும் வண்ணம் குழந்தையின் வாழ்வியல் அமையத் தாயின் பங்கும், பாங்கும் இதனால் புலப்படுகின்றது. குழவிப் பருவத்திலேயே நடுநிலை மனமுருவாகத் தக்கதாக இனிமையும் கசப்பும் இணைந்த வாழ்வியல் அதற்குக் காட்டப்படுகின்றது.

குழந்தை வாழ்வில் விளையாட்டு இன்றியமையாத இடம் பெறுகின்றது. உறுதியான உடல் உறுதியான உள்ளத்திற்கு இடனாக அமைகின்றது. மன மகிழ்ச்சியான சூழல் குழந்தைக்கு ஆற்றலையும் தருகின்றது.விளையாட்டின் சிறு முயற்சிகள் பின்பு வாழ்வின் செயல் முயற்சிகளுக்கு முன்னோடியாகின்றன. விளையாட்டு ஆற்றல் வினையாற்றலுக்கு வழிகோலுகின்றது. பொம்மைகள் வைத்து விளையாடும் குழந்தை நிலையும், ஒத்த வயதுச் சிறுவருடன் கூடிவிளையாடும் சிறுவர் பருவமும் கூட்டுணர்வு, ஒற்றுமை, பிறரைப் புரிந்து கொள்ளுதல், பிறருடன் பழகுதல், காரியங்கள் செயும் திறன், தலைமையேற்கும் ஆற்றல் போன்ற வாழ்வுக்குத் தேவையான பல நல்ல பழக்கங்களைக் குழந்தைக்கு அளிக்கின்றன. அறியாப் பருவம் ஆயினும், தம்மை யறியாதே இத்தகு நல்லியல்புகள் உடலிலும், உள்ளத்திலும் கலக்கின்றன.

ஞாலமுற் றிலும் நிறைந்தே—மிக
நயந்தரு பொம்மைகள் எனக்கெனவே
கோலமுஞ் சுவையுமுற—அவள்
கோடி பல கோடிகள் குவித்து வைத்தாள்
தின்றிடப் பண்டங்களும்—செவி
தெவிட்டறக் கேட்க நற் பாட்டுகளும்
ஒன்றுறப் பழகுதற்கே—அறி
வுடையமெய்த் தோழரும் அவள் கொடுத்தாள்(277)

கண்ணுக்கு அழகான இயற்கை; வாய்க்கும் வயிற்றுக்கும் சுவை யுடைய நல்ல தின்பண்டங்கள்; செவிக்கு மிக்க இன்பம் தருகின்ற பாடல்கள்; உடலுக்கு விளையாட்டு: உள்ளத்திற்கும் அறிவுக்கும் நட்பு. புலன்களுக்கும் உள்ளத்திற்கும் நிறைவுடை இன்பம்; நன்மையும் சிறப்புமுடைய இன்பம் என இது அமைகின்றது.

குழந்தை வாழ்வியல், தனக்கு மட்டும் இன்பமுடையது அல்ல; தன்னைப் பெற்றவர்க்கும் தன்னைச் சார்ந்தவர்க்கும் கூட இன்ப மயமானது; துன்பம் அழிப்பது. துன்பமும் சோர்வும் அழிக்கும் அன்பு போன்றது குழந்தை. அன்பே உருவானது. எனவே தான் கவிஞர் கண்ணன் பாட்டில், குழந்தையின் மழலை, துன்பம் தீர்ப்ப தையும், அதன் சிரிப்பு மூர்க்கம் அழிப்பதையும் தருகின்றார். பெற்றோரின் வாழ்வில் பெறுதற்கரிய செல்வமாக அது அமை கின்றது. தன் குழந்தையின் நன்மைக்காகத் தீயவற்றிலிருந்து பெற்றோர் நீங்குகின்றனர். தாமும் ஏற்றம் பெறுகின்றனர்.

சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே
என்னைக் கலி தீர்த்தே—உலகில்
ஏற்றம் புரிய வந்தாய்...
இன்பக் கதைக ளெல்லாம்—உன்னைப் போல்
ஏடுகள் சொல்வ துண்டோ
அன்பு தருவதிலே—உனை நேர்
ஆகுமோர் தெய்வ முண்டோ...
சீர்பெற்று வாழ்வதற்கே உன்னைப் போல்
செல்வம் பிறிது முண்டோ (29—293)

''வளர் பிறை'' குழந்தைக் கதை என்ற கவிஞரின் எழுத்து (கதைக்கொத்து, பாரதி பிரசுராலயம், 1949, பக். 137—140) குடும் பத்தில் குழந்தையின் இன்றியமையாமையைக் காட்டுகின்றது.

சிறுபருவத்திலே குழந்தையைச் சீரிய வழியில் உருவாக்க விரும்பியவர் பாரதி. அச்சம், அறியாமை போன்றவைகளால் அடிமைப்பட்டுக் கிடக்கும் பாரதம் கொள்ளவேண்டிய புத்துயி ருடைய உருவைக் குழந்தை வாழ்வியலில் இணைத்துக் காண் கிறார். இறை நம்பிக்கை, இயற்கை—உயிரினங்களிடம் அன்பு, நம்மை அண்டினவரை ஆதரித்தல், தினசரி வாழ்வின் ஒழுகுமுறை என இது விரிகின்றது. குழந்தைக்கு அறிவுரையாகி, குழந் தையை நோக்கிப் பாடப்பட்டு, குழந்தை வாழ்வியலுக்கு ஏற்ற

தாகிக் கவிக்கூற்று அமையினும் எம்மனிதர்க்கும் பின்பற்றக் குரியதாகி எண்ணங்கள் அமைகின்றன. சாதாரண மனிதன் வாழும் வாழ்வும் குழந்தை வாழ்வும் இணைகின்ற, ஒத்துச் செல் கின்ற புலமாக அது அமைகின்றது.

இதனால், கவிஞர் தன் காலத்தைய ஒவ்வொரு மனிதனிடமும் வேண்டிய—விரும்பிய பலவற்றைச் சிறப்பாகக் குழந்தைக்கும் கூறிவைக்கிறார். தமிழ்மொழிப்பற்று, தமிழ்நாட்டுப்பற்று, இந்திய தேசப்பற்று, சாதி, குல வேறுபாடு கருதாமை போன்றன இவ்வாறு இணைகின்றன. முதற்கோணல் முற்றும் கோணல் என்பதால், மனிதனின் தொடக்ககாலக் குழந்தை வாழ்வே நேரானதாக, நேர்மையுடையதாக, அறமுடையதாக வேண்டும் என்ற எண்ணத்தில் ஆத்திசூடியின் அற எண்ணங்கள் போலச் சில வற்றைப் பாப்பாப் பாட்டிலும் கூறுகின்றார்.

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்ல லாகாது பாப்பா... (202)

பாப்பாப்பாட்டை, வாழ்க்கைக் கல்வி எனக் கூற இயலும். இளமையிலேயே அநீதியை எதிர்த்து நிற்கும் ஆற்றல் வேண்டும்; தீமையை எங்கு கண்டாலும் எதிர்க்கும் உணர்வை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தைக் கவிஞர் அதனாலேயே இங்குத் தருகிறார். அஞ்சாமையுடன் செயலாற்றலாக இது அமைகின்றது.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா (203)

இளமையிலேயே, எதிர்ப்புகளுக்கும் துன்பங்களுக்கும் அஞ்சிப் பின் வாங்காத உள்ள உறுதி வேண்டும் என்பதையும் உணர்த்து கின்றார். சோர்வும், சோம்பலுமில்லாத வாழ்வு அமைய வேண்டும். ஓடி விளையாடிச் சுறுசுறுப்பாக இருக்கப் பழகிவிட்ட குழந்தை, பிற்கால வாழ்வில் சோம்பேறியாக முடியாது; உடலுறுதியும் உள்ள வலிமையுமுள்ள குழந்தை பின்பு சோர்வும் அடைய இயலாது. எனவே அவற்றைக் குழந்தைக்கும் வேண்டு கிறார். தன்னம்பிக்கையும், தன்னையாளும் இறை நம்பிக்கை யும் இதற்குத் துணைபோகின்றன.

துன்பம் நெருங்கி வந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது பாப்பா
அன்பு மிகுந்த தெய்வ முண்டு—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும் பாப்பா
சோம்பல் மிகக் கெடுதி பாப்பா—தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி யழுங் குழந்தை நொண்டி—நீ
திடங் கொண்டு போராடு பாப்பா (203)

உள்ளத்தின் ஊனம் உடலுறுதியையும் கெடுக்கின்றது. புற வாழ்வில் நிறைவுடையவனாக இருக்கக் குழந்தைப் பருவத்திலேயே உள்ளம் திடமானதாக இருக்க வேண்டும். உள்ளத்து உறுதியே வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வளமளிப்பது; ஒளி தருவது. இது இல்லாததாலேயே பலவகை அச்சங்களால் ஆட்பட்டு, 'நிலைகெட்ட மனிதன்' சமுதாயத்தில் உருவாகின்றான்.

அறிவுத்திறனும், பேச்சாற்றலும், செயல் வன்மையுமுடையதாகக் குழந்தையின் வாழ்வும் அமைய முடியும் என்பதைப் பாரதியின் 'குழந்தைக் கதை' காட்டுகின்றது (கதைக்கொத்து, பக். 140—154). சமுதாயத்தின் ஒவ்வொரு குழந்தையும் அவ்வாறு அமைதலை அவர் விரும்புகின்றார் எனலாம். ஞானசம்பந்தர், துருவன், பிரகலாதன் பற்றிக் கவிஞர் குறிப்பதும் குழந்தை வாழ்வியலின் உயர்வில் கருதத்தக்கது (247).

குழந்தைக்கல்வி பற்றிய விரிவான சிந்தனை கவிஞரிடம் அமைகின்றது. ஏட்டுக்கல்வி மட்டும் பெற்றுப் பயனற்ற நிலையை அவர் வெறுக்கின்றார். கல்வி சுவையாகவன்றிச் சுமையாக மாறிக் குழந்தையின் வாழ்க்கையை அழிப்பதைக் கடிகின்றார். தாய்மொழிக் கல்வி நாட்டுக்கேற்ற கல்வி என்பனவற்றின் தேவையை வலியுறுத்துகின்றார்.*

தம் காலத்தில் குழந்தை வாழ்வியலில் காணப்பட்ட சமுதாயக் கொடுமையான மணம் பற்றியும் பாரதி பலபடப் பேசுகின்றார். தன் வாழ்விலும் அவர் அனுபவித்த துன்பமாக அது வெளிப்பட்டுத் தற்சார்பியலும் கொள்கின்றது.

---

* தொடர்ந்து வரும் பக்கங்களில் 'கல்வி' எனும் பகுதி காண்க.

பால ருந்து மதலையர் தம்மையே
பாதகக் கொடும் பாதகப் பாதகர்
மூலத் தோடு குலங்கெடல் நாடிய
மூட மூட நிர்மூடப் புலையர்தாம்
கோல மாக மணத்திடைக் கூட்டுமிக்
கொலையெ னுஞ்செய லொன்றினை யுள்ளவும்
சால வின்னுமோ ராயிரம் ஆண்டிவர்
தாதராகி அழிகெனத் தோன்றுமே (253)

## இளைஞர்

இளையபார தத்தினாய் வாவாவா
எதிரிலா வலத்தினாய் வாவாவா
ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும்
உதயஞாயி றொப்பவே வாவாவா
களையிழந்த நாட்டிலே முன்போலே
களைசிறக்க வந்தனை வாவாவா
விளையுமாண்பு யாவையும் பார்த்தன்போல்
விழியினால் விளக்குவாய் வாவாவா (40)

இளைஞர்கள் ஆற்றலுடையவர்கள். இளங்கன்று பயமறியாது. வாழ்க்கையின் முதற்படியில் நிற்கும் குழந்தையும், முடிவில் நிற்கும் முதியோரும் சிற்றடி வைத்து இயங்கு முன் இவர் சீறிப் பாய்ந்து செயலாற்ற முடியும். உடலில் மட்டுமின்றி, உள்ளத்திலும் 'இளரத்தம்' உடையவர்கள். 'யௌவனம் காத்தல் செய்' 'மூப்பினுக்கு இடங்கொடேல்' (201) எனக் கவிஞர் கூறும்போது உடலை மட்டுமின்றி இவ்வுள்ளத்தையும் தான் கருதியிருக்க வேண்டும். இளமைத்துடிப்பு அறிவோடும் இணையும்போது செயல்திறன் சீயதாகின்றது. நான்கு இளைஞர்கள் சேர்ந்தால் நாடு போற்றும் நற்காரியம் செய்யலாம் என்பது உண்மை.

உணர்ச்சியும், முயற்சியும், ஆற்றலுமுடைய இளைஞர் சமுதாயத்திற்குத் தேவை என்பதைப் பாரதி 'அக்கினிக்குஞ்சு' வாயிலாகக் காட்டுகின்றார் எனலாம்.

அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு - தழல்
வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம் (224)

சிறு பொறி, ஆற்றல் காரணமாகப் பெருநெருப்பு ஆக்க வல்லது. சிறிய தீபம், ஒளியால் பேரிருள் நீக்க வல்லது. இளைஞன் உறுதி யான கொள்கைகள் உடையவனாகும்போது சமுதாயத்தையும் தன்மயமாக்க முடியும்; எழுச்சிபெறச் செய்ய இயலும். இன் னொரு நிலையிலும் இக் குறியீட்டை அணுகலாம். சீதையாம் நெருப்பு-கற்பின் கனலி அரக்கராம் பெருங்காட்டை அழிக்கும் வன்மை வாய்ந்ததைக் கம்பர் காட்டுவார். அதுபோல, சுதேசியின் தேசப்பற்று எனும் நெருப்புப் பொறி, பிறராட்சியை முற்றிலும் அழிந்து ஒழியச் செய்ய முடியும். அடிமைத் தளை களைச் சுட்டுப் பொசுக்க முடியும். நெஞ்சுக்குள் குடிகொண்ட வீரம் நாட்டையே உருமாற்றக் கூடும்.

பார்த்தனையும், கண்ணனையும் பன்முறை காட்டும் கவிஞர், அவரில் இளைஞருக்குக் குறிப்பும் குறியீடும் அமைத்தார் எனத் தோன்றுகின்றது. கடமையை ஆற்றும் வாழ்வியல், சோர்வில்லாத வாழ்நெறி, நன்மை வயப்பட்ட வாழ்முறை என இது விரிகின்றது.

வயது முதிர்ந்து விடினும் - எந்தை
வாலிபக் களையென்றும் மாறுவதில்லை
துயரில்லை மூப்பு மில்லை - என்றும்
சோர்வில்லை நோயொன்றும் தொடுவதில்லை
பயமில்லை பரிவொன்றில்லை - எவர்
பக்கமுநின் றெதிர்ப்பக்கம் வாட்டுவதில்லை
நயமிகத் தெரிந்தவன் காண் - தனி
நடுநின்று விதிச்செயல் கண்டுமகிழ்வான் (280)

கண்ணனைத் தந்தையாகக் காட்டும் இச்சூழலின் செயல் நிலைகள் ஒவ்வொரு இளைஞன் வாழ்விலும் பின்பற்றப்பட வேண்டியனவாம். அடிமைப்பட்ட இந்தியச் சூழலில் கவிஞர் வாழ்ந்ததால் வீர எழுச்சி பற்றிய உணர்வும், கடமை ஆற்றுதல் பற்றிய எண்ணமும் மிகுதியாகக் காணப்படுகின்றன. பல்விடத்தும் பரந்து அமைகின்றன. போர் புரிந்து புன்மை மாற்றிய பேராற்றலினரான இளைஞர் வாழ்ந்த பண்டை யுகங்கள் மீண்டும்

வரல் விருப்பினராகக் கவிஞர் அமைகின்றார். ஒவ்வொரு இளைஞனும் பார்த்தனைப் போன்ற வீரவாலிபனாக அமை தலையே வேண்டுகின்றார்.

நாணிலகு வில்லினொடு தூணி - நல்ல
நாதமிகு சங்கொலியும் பேணி
பூணிலகு திண்கதையும் கொண்டு - நாங்கள்
போர்செய்த காலமெல்லாம் பண்டு (213)

வீமன் திறலு மவற்கிளைய
விஜயன் திறலும் விளங்குகின்ற
சேம மணிப்பூந் தடநாட்டில்... (463)

வசனகவிதைப் பகுதிகளிலும் பாரதி இளைஞர் வாழ்வியல் பற்றிய எண்ணங்களைக் குறிப்பாகத் தருவதாகக் கொள்ள முடிகின்றது. பசுபதி, தேவதத்தன் என்ற இளைஞர்களை நாடகப் பாங்கில் காட்சிப்படுத்துவது இந்நிலையில் எண்ணத் தக்கது. இளைஞர்கள் இயங்கி, புரட்சி யுருவாகி, பழமைக் கேடுகள் மாறி, புதுமை யுருவாகும் என்ற வேட்கை புலப்படுகின்றது. சமுதாய வண்டியின் அச்சாணி போன்றவன் இளைஞன். பெரிய கப்பலை வேண்டிய இடம் திருப்பும் சிறிய சுக்கான் போன்ற ஆற்றலினன். உடல், உள்ள ஆற்றலுடன் அவனிடம் இறையருளும் பொருந்தும் போது எவ்வுலகையும் முன்நடத்தும் தலைமைத்தன்மை பெறுகின்றான். 'விடுதலை' எனும் 'நாடகம்' இறையருளால் இவ் இளைஞனின் இயக்க உருமாற்றத்தைத் தருகின்றது. தீயின் கூற்று இளைஞனின் தற்போதைய வாழ்வியலைப் படம்பிடித்துக் காட்டுகின்றது.

தீ : பரத கண்டத்தில் பாண்டிய நாட்டிலே
விரதந் தவறிய வேதியர் குலத்தில்
வசுபதி யென்றோர் இளைஞன் வாழ்கின்றான்
தோளிலே மெலிந்தான் துயரிலே அமிழ்ந்தான்
நாளும் வறுமை நாயொடு பொருவான்
செய்வினை யறியான் தெய்வமுந் துணியான்
ஐயவலையில் அகப்பட லாயினன்
இவனைக் காண்போம் இவன்புவி காப்பான் (457)

பாரதியின் காலத்தைய இளைஞர் வாழ்வியல் இவ்வாறாக அமைகின்றது பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வருகின்ற பண்

பட்ட-பண்பாட்டு வாழ்நெறி தவறி அமைகின்றது. உடல் வன்மை யற்றவராக ஆடவர் காணப்படுகின்றனர். துன்பமும் துயரமும் மிகுந்ததால் வருத்தமுற்றவராக அமைகின்றனர். பொருளாதாரச் செவ்வி இன்மையால் வறுமைப் பிணிப்படுகின்றனர். நெஞ்சில் துணிவின்மையால் செய்கைத் திறனற்றவராகின்றனர். தெய்வ நம்பிக்கை இன்மையால் சந்தேக வியாதிக் குட்படுகின்றனர். இவ்வாறு வீண்வாழ்க்கையினராக அமைகின்றனர். இவர்களுக்கு,

வீரமறவர் நாமன்றோ - இந்த
வீண் வாழ்க்கை வாழ்வதினி நன்றோ (214)

எனும் உணர்வெழுந்து உணர்ச்சி பொங்கினால்தான் நாட்டு வாழ்வு சீரடையும். வருகின்ற பாரதத்தைப் பலவாறு கவிஞர் வாழ்த்தும்போது, வீண் வாழ்க்கை உயர்வுடைய வாழ்க்கையாக மாறுவதற்குரிய அடிப்படைகள் புலப்படுகின்றன. பொய்மை அகற்றுதல்; மெய்மை வேண்டுதல்; நோய் நீக்கம்; கற்றது ஒழுகல்; விநயமுடைய நா, வெற்றிச் செயல்கள் எனப் பட்டியல் விரிகின்றது.

ஒளிபடைத்த கண்ணினாய் வாவாவா
உறுதி கொண்ட நெஞ்சினாய் வாவாவா
களிபடைத்த மொழியினாய் வாவாவா
கடுமை கொண்ட தோளினாய் வாவாவா
தெளிவு பெற்ற மதியினாய் வாவாவா
சிறுமை கண்டு பொங்குவாய் வாவாவா
எளிமை கண்டு இரங்குவாய் வாவாவா
ஏறுபோல் நடையினாய் வாவாவா (39)

பொதுவாக மானிட வாழ்வுக்கு வேண்டிய எல்லா நலங்களும் ஒவ்வொரு இளைஞனுக்கும் வேண்டப்படுகின்றன. அகத்தில் அன்பும் புறத்தில் வீரமும் விரும்பப்படுகின்றன. உள்ளத்தில் ஒளியும் சொல்லில் செம்மையும் தேவைப்படுகின்றன. ஒத்தவரிடம் இணக்கமும், கீழ்ப்பட்டவரிடம் இரக்கமும் இன்றியமையாத தாகின்றன. நல்லதைப் பின்பற்றும் மதியும் நாட்டுக்கு உழைக்கும் தவமும் அவசியமாகின்றன.

இக்கட்டான சூழலில் வாழ்கின்ற இந்திய இளைஞனுக்கு இந் நிறைவுகளை எல்லாம் கொடுக்க வல்லவன் இறைவன் ஒருவனே எனக் கவிஞர் எண்ணுகின்றார் எனலாம். வில்லை நிலத்திலிட்டு

நின்ற விசயனுக்கு வீர எழுச்சி வர உதவிய கண்ணனாம் இறை நிலையை இங்குக் கருதலாம். சக்தி தாளைப் போற்றிச் சுதந்திரத் திற்காக முயன்ற கவிஞரின் வாழ்வியலையும் இணைத்து நினைக் கலாம். தற்சார்பு எண்ணமாக, அனுபவ வெளியீடாக 'விடுதலை' யின் வசுபதியையும் இவண் காட்டலாம்.

காற்று : உயிர்வளங் கொடுத்தேன். உயிரால் வெல்க.
இந்திரன் : மதிவலி கொடுத்தேன்; வசுபதி வாழ்க.
சூரியன் : அறிவிலே ஒளியை அமைத்தேன்; வாழ்க.
தேவர் : மந்திரங் கூறுவோம். உண்மையே தெய்வம்
கவலையற் றிருத்தலே வீடு. களியே
அமிழ்தம். பயன்வரு செய்கையே அறமாம்.
அச்சமே நரகம்; அதனைச் சுட்டு
நல்லதை நம்பி நல்லதே செய்க.
மகனே வசுபதி மயக்கந் தெளிந்து
தவத் தொழில் செய்து தரணியைக் காப்பாய்
(458)

புதிய உயிரினனாக உருவாகிய இளைஞனில் அமையும் பலவிதப் பண்பு ஏற்றங்களை இப்பகுதிவழி அறியலாம். வாழ்வியலின் நோக்கமே உலகைக் காத்து ஈடேற்றுவதாக அமைகின்றது. தன்னலமற்ற தொழிலாகத் தவ வாழ்வினனாக அவன் காணப்பட வேண்டும். குழப்பங்களும் மயக்கங்களும் நீங்குதல் தேவை. செயல்கள் அறப்பயன் கொள்கின்றன. அச்ச நீக்கமும் நன்மை நாட்டமும் பொருந்துகின்றன. வாழ்வில் பொய்மை அழிந்து உண்மை ஆளுதல் வேண்டும். மனத்தைக் கொல்லும் கவலை ஒழிந்து தெளிவு பெறுதல் இன்றியமையாதது.

பொதுவாக இளைஞர் வாழ்வு, பிற பருவத்தினர் வாழ் வினின்று வேறுபட்டுச் செல்வது. கடமையுணர்வும், பொறுப் புணர்ச்சியுமுடைய மனித வாழ்வின் உயர்நிலையாக, உயிர் நிலை யாக இப்பகுதி அமைகின்றது. ஓய்வில்லாத உழைப்புடையதான இவ்வாழ்வை முதியோர் வாழ்வுடன் முரணிக்காட்டுகின்றார் பாரதி எல்லா நிறைவுமுடைய முதியவரின் ஓய்வு வாழ்விலிருந்து 'உழைத்தால் தான் உணவு' எனும் இளைஞனின் வாழ்நெறி மாறுகின்றது.

ஒரு பதினாறு வயது ஏழைப்பிள்ளை. தகப்பனில்லை. வீட்டிலே தாயாருக்கும், தங்கைக்கும் தனக்குமாக எங்கேனும்

போய் நாலு பணம் கொண்டு வந்தால் தான் அன்றன்று அடுப்பு மூட்டலாம். இவன் மேற்படி சுந்தர காண்ட வழி* யைப் போய்ப் பிடித்தால் நியாயமாகுமா( பாரதியார் கவிதைகள், (பதி) டி. வி. எஸ். மணி, சீனி விசுவநாதன், வானவில், 1980, ப. 123).

இளைத்தவராக அன்றி, இளைஞர் உழைப்பவராக, வாழ்வை உயர்த்துபவராக அமைதல் பாரதி அவர்கட்குக் காட்டிய நெறி எனலாம்.

## முதியவர்

மூத்தவர் வெறும் வேடத்தின் நிற்குங்கால்
மூடப் பிள்ளை அறமெவண் ஓர்வதே (254)

முதியவர், வயதில் மட்டுமன்றி அறிவிலும் முதிர்ச்சியுடையவராக இருந்தால்தான் பயனுடைய வழிகாட்டியாக அமைய முடியும். புறத்தோற்றத்தில் மட்டும் மூப்புப் போதாது. முதியவர் இளையவர்க் குணர்த்தும் 'முதுமொழிக்காஞ்சி' போன்று அறிவுரை யாற்றும் பாங்கினராதல் வேண்டும். நெறிப்படுத்தும் குருவாக அமைய வேண்டிய முதியவர், அவ்வாறன்றி வீணே மடியும் கிழவராக ஆகுதல் விலக்கப்பட்டு எள்ளப்படுகின்றது.

நரை, கூடிக் கிழப் பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே... (131)

வாழ்க்கை முதுமைப் பருவத்திலும் பொருளுடையதாகி அமைய வேண்டும். பலருக்குப் பயனுடையதாக அமையவேண்டும் நமன் வாய்ப்பட்டு நாமமும் அழியாது புகழுடையதாகக் காணப்பட வேண்டும். தாதாபாய் நவுரோஜியை எண்பதாண்டு நிறைவில் வாழ்த்தும் பாரதியின் கவிதை (76-77) இங்கு நினைக்கத்தக்கது. உடல், பொருள், ஆவியால் நாட்டிற்கே உழைக்கும் வாழ்வாக

* ''ஒரு செல்வர், கிழவனார். ஒரு வேளை ஆகாரம் செய்து கொண்டு லௌகீக விஷயங்களைத் தான் கவனியாமல் பிள்ளைகள் கையிலே கொடுத்துவிட்டு நியம நிஷ்டைகள், ஜபதபங்களுடன், சுந்தர காண்டத்தையும் கடோப நிஷத்தையும் பாராயணம் செய்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறாமலிருப்பதே மேலான வழியென்ற கொள்கை இந்த கிழவனார்க்குச் சரிப்பட்டு வரும்''

அமையும் இந்நிலை, கவிஞர் எல்லா முதியவர்க்கும் காட்டிய வாழ்வியலாகக் கருதத்தக்கது. சூழல் வீரத்தல் குஞ்சு எனவும் மூப்பு எனவும் இரு நிலை இல்லாது, எல்லோரும் அமைய முடிதல் பற்றிய குறிப்பும் எண்ணத் தக்கது. இளமையில் இயன்றபோது, வலிமையும் வாய்ப்பும் இருந்தபோது பின்பற்றப்பட்ட சீரிய கொள்கைகள் முதிய வாழ்விலும் தொடரப்பட வேண்டியன. அங்கம் தளர்வெய்திய சிங்கமும், தன் இயலாமை பற்றி நரி தரும் ஊனை உண்ணாத கொள்கைப் பிடிப்பாக இது அமைகின்றது.

முதுமை வாழ்க்கை இறைப்பற்றுடனும், இளைய குழந்தையரை உருவாக்கும் பணியை மேற்கொள்ளும் நோக்குடனும் அமைய வாய்ப்பு உளது. கவிஞரின் தாயையீன்ற பாட்டனார் பற்றிய குறிப்பு வழி இவ் எண்ணத்தைக் கொள்ளலாம்.

> தாய்தனை
> முன்னை யீன்றவன் செந்தமிழ்ச் செய்யுளால்
> மூன்று போதும் சிவனடி யேத்துவோன் (250)

கவிஞரின் வாழ்க்கை வரலாறு, தமிழ்க் கல்விக்கு இவ் உறவின் முதியோன் காரணமாக அமைந்ததைக் காட்டுகின்றது. எனவே சின்னஞ்சிறு குழந்தையை அறிவாளியாக உருவாக்கும் பணியில் முதியவரின் குறிப்பிடத்தக்க பங்கும் அமைகின்றது எனலாம்.

தடியூன்றிச் செல்லும் கிழவனாக அமையினும், ஒளி கூடுகின்ற முகமும், தெளிவு குடிகொண்ட விழிகளும், பலர் கண்டு கும்பிடற்குரிய உருவமும், தம்மை அண்டினோரை வழிப்படுத்தும் நெறி காட்டலும் (289) முதியோரிடம் காணப்பட முடியும்

'முதுமை நன்று' (420) எனும் வசன கவிதைத் தொடர் கவிஞர் இவ்வாழ்வினர்பால் கொண்ட மனநிலையைக் காட்டுகின்றது. நன்மையுடைய வாழ்வினராக முதியவர் அமைய முடியும் என்பதை வெளிப்படுத்துகின்றது. முதிர்ந்த கனி விதையைக் கருக்கொள்கின்றமைபோல முதியவர் பயனுடையவர். முதிர்ந்த மேகம் மழை பொழிவதுபோல இவர் அருளுடையவர்.

### பெண்

> காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
> காரியம் யாவினும் கைகொடுத்து
> மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
> மாட்சி பெறச் செய்து வாழ்வமடி (212)

தாயாகவும் மனைவியாகவும் அமைதல் பெண்ணின் வாழ்வு நோக்கமாக அமைகின்றன. எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும் வழங்கிவரும் நிலைத்த வாழ்வியல் இது. முழுமையின் இரு பகுதி களாக அமையும் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்வதில், வாழ்வு முழுமையடைகின்றது. வளர்ச்சியும் வளமும் பெற்றதா கின்றது. ஆணுக்குப் பெண்ணும், பெண்ணுக்கு ஆணும் வாழ்விய லுக்கு இன்றியமையாதவராக அமைகின்றனர்.

பெண்ணடிமை பரவலாகக் காணப்பட்ட காலத்தில் வாழ்ந்த பாரதியார் இவர்கள் வாழ்வைப் பற்றி மிகுதியாக நினைக்கின்றார் சீர்கேடடைந்த இவர்கள் வாழ்நிலை குறித்துப் பலர் பேசி இயக்கம் கொண்டதை வரவேற்று இவரும் எழுதுகின்றார். ஆடவனுக்கு இருக்கும் முதன்மை பெண்டுக்கும் அமைதலை வேண்டுகிறார். 'ஆண் நன்று பெண் இனிது' (420) என இணைக்கின்றார். 'இவ்வுலகம் ஒன்று. ஆண், பெண், மனிதர் தேவர்...இவை யனைத்தும் ஒன்றே' (421) என ஐக்கியப்படுத்துகின்றார்.

இயற்கையின் இணைவிலெங்கும் இவ்விருவரிணைவு நிலையை பொருத்துகின்றார். அதன் வழி ஒன்றற்கொன்று இன்றியமை யாமையை விளக்குகின்றார்.

> வானவெளி என்னும் பெண்ணை ஒளியென்னுந்தேவன்
> மணந்திருக்கின்றான்
> அவர்களுடைய கூட்டம் இனிது...
> ஞாயிறே, நீதான் ஒளித் தெய்வம்
> உன்னையே வெளிப்பெண் நன்கு காதல் செய்கிறாள்
> உங்கள் கூட்டம் மிக இனிது (426—27)

பஞ்ச பூதங்களில், ஒன்றையொன்று முரணுவதாகத் தோன்றி, ஆயின் இணைவு கொள்வன நீர், நெருப்பு என்பன. எதிர்ப் பண் பாகத் தோன்றினும் தம்முள் தொடர்புடையன தண்மையும் வெம்மையும். ஒன்று இன்றேல் மற்றது இல்லை. ஒன்றன் இருப்பே மற்றதன் இருப்புக்கும் காரணம். திரவ உருவான நீரும் திண்ணிய நிலமும் மாறுபட்டனவே. ஆயின் இரண்டன் இணைவே உயிரின - பயிரின வளர்ச்சிக்கு வழிகோல முடிகின்றது. வாழ்க்கைக்கு ஆணும் பெண்ணும் இன்றியமையாதது போன்றது இது.

வானத்திலிருந்து அமுத வயிரக்கோல்கள் விழுகின்றன.
பூமிப்பெண் விடாய் தீர்க்கிறாள்; குளிர்ச்சி பெறுகின்றாள்.
வெப்பத்தால் தண்மையும் தண்மையால் வெப்பமும்
விளைகின்றன.
அனைத்தும் ஒன்றாதலால்,
வெப்பம் தவம், தண்மை யோகம்,
வெப்பம் ஆண். தண்மை பெண்.
வெப்பம் வலியது. தண்மை இனிது.
ஆணிலும் பெண் சிறந்ததன்றோ?
நாம் வெம்மைத் தெய்வத்தைப் புகழ்கின்றோம்
அது வாழ்க (428)

கைபிடித்த காதலனுக்கு உதவியாக அமையும் பெண்மை வாழ்வளிக்கின்றது. அதற்கு மாறாக அமையும்போது வீழ்வே வருகின்றது. பாம்போடு உடனுறை வாழ்வாக அது ஆகிவிடு கின்றது. வசன கவிதையின் 'ஜகத் சித்திரம்' எனும் சிறு நாடகப் பகுதியாக அமையும் காட்சி இதன் குறியீடாகலாம். ஒரு புதரி லிருந்து வெளிப்பட்ட இரு ஆண்-பெண் பாம்புகள் ஒன்றை யொன்று வெறுத்து, பகைத்து, கடித்து, மடிவதாக அமையும் காட்சி மன இணைவில்லா ஆண் பெண் வாழ்வினை வெளிப் படுத்துகின்றது (454).

காலம் காலமாகத் தொடரும் ஆணுக்குப் பெண் ஒத்த இன்றி யமையா நிலை, பல சூழல்களால் பின்னடைகின்றது. அச்சூழலில் ஆணுக்குத் தேவையான பல பொருள்களுள் ஒன்றாகப் பெண் வாழ்வு அடங்கிவிடுகின்றது. இந்நிலை மாறினால் தான் செவ்விய உலக வாழ்வியல் அமைதலை மக்களில் ஒருசாரார் உணர்ந்தனர்; அதற்காக உழைத்தனர் மாதர் அறம் பிறழாது வாழவேண்டும்; பண்டைக் காலத்தின் மாண்புகள் அனைத்தும் பெறவேண்டும்; புதுமை யுகத்தின் தேவைகளுக்கேற்ப முன்னைக் காலங்களைவிட முழுமாட்சி பெறவேண்டும் எனப் புதுவாழ்வியல் அமைக்க முயன்றனர். 'மிளகாய்ப் பழச்சாமியாரில்' இதனைக் கவிஞரும் தருகின்றார் (கதைக்கொத்து, ப. 156).

இந்தியா அடிமைப்பட்டுக்கிடந்த காலத்தில் கவிஞர் பாரதி தோன்றி, அப் புற அடிமைத்தனத்திற்கு வீட்டகத்தில் காணப் பட்ட பெண்ணடிமைத்தனமே காரணம் என முழங்கினார். மனைவியை அடக்கியாள விரும்பிய நிலையில் அனைத்துப்

பெண்டிரும் தனித்தன்மை இழந்தவராகின்றனர். ஆடவர் ஆளுகைக்கு ஆட்பட்டு, உட்படுகின்றனர்.

பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்
பெண்குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ...
மனைவி யொருத்தியை யடிமைப் படுத்த வேண்டித்
தாய்க் குலத்தை முழுதடிமைப் படுத்த லாமோ... (268)

தனித்தன்மை—சுயேச்சை இழந்த பெண்களால் உருவாக்கப்பட்ட குழந்தைகளும், தம் உதிரத்தில் அப்பண்பையே கொண்டு பிறந்தனர்; வாழ்ந்தனர். சுயசிந்தனையும், தன் சித்தத்தின்படி செயற்படுதலும் நீங்கி அடுத்தவரை அண்டிப் பிழைத்து இடர்ப்பட்டனர் இதனால் நாடு முழுமையின் உணர்வுப் பேதலிப்புக்குப் பெண் வாழ்வு காரணமாகின்றது. நோயின் காரணத்தை-மூலத்தை அறிந்து, அதனை முற்றிலும் வேரறுத்தல் நோக்கில் பெண் வாழ்வு பற்றிய சிந்தனைகள் கவிஞரிடம் மிகுகின்றன.

தாயைப் போலே பிள்ளை என்று முன்னோர்
வாக்குள தன்றோ? பெண்மை அடிமை யுற்றால்
மக்களெலாம் அடிமையுறல் வியப்பொன் றாமோ?
வீட்டிலுள்ள பழக்கமே நாட்டி லுண்டாம்
வீட்டினிலே தனக்கடிமை பிறராம் என்பான்
நாட்டினிமல... ... ...
நாடோறும் முயன்றிடுவான் நலிந்து சாவான் (268)

வீட்டில் விடுதலையான சூழலில் வாழும் பெண்கள் எல்லா நன்மையும் பெற வாய்ப்புடையவராகின்றனர். அறிவுக்குத் தேவையான கல்வி கிடைக்கின்றது. உலக விஷயங்கள் பற்றிய அறிவுகளைப் பெறமுடிகின்றது. வாழ்வுக்கு இன்றியமையாத பல செய்திகளை உணரமுடிகிறது. அறிவு பெருகும்போது எண்ணங்கள் விரிவடைகின்றன. மனம் விளக்கமுறும்போது சிந்தனைத்தெளிவு கிடைக்கின்றது. இந்நிலையில் செவ்வையாகச் செயற்படவும், சமயோசிதமாகக் காரியங்களில் ஈடுபடவும், நற்குழந்தைகளைப் பெற்று வளர்த்தவும், நாயகனுக்கு உகந்த உதவி செய்யவும் முடிகின்றது சிறு துளியாக அமைந்தது பெருவளர்ச்சியாகின்றது. ஒவ்வொரு பெண்ணும், குடும்பமும் இவ்வாறு உயரும்போது சமுதாயத்தின் மொத்த வாழ்வியல் சிறக்கின்றது.

குடும்பம் நாகரீக மடையாவிட்டால், தேசம் நாகரீக மடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில், தேசத்தில் விடுதலை இராது (கட்டுரைகள்-சமூகம், ப. 44).

எனப் பிறவிடத்தும் பாரதி தன் கருத்தைக் கூறி வலியுறுத்துகின்றார். எல்லா உயிரினங்களிலும் ஆணும் பெண்ணும் ஒப்புமையுடையதாக அமைகின்றன; அத்துடன் மனித இனத்தில் ஆணுக்குள்ள அறிவும் குணங்களும் பெண்ணுக்கும் அமைகின்றன. அந்நிலையில் ஆணுக்கு வழங்கும் உரிமைகள், தகுதிகள் பெண்ணுக்குத் தரப்படாமை மடமையாகின்றது.

மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வு தன்னில் எந்த
வகையினும் நமக்குளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே (56)

ஆணும் பெண்ணும் உலகத்தின் இரு கண்களாக அமைகின்றனர் (20). கண்கள் இரண்டாயினும் காட்சி ஒன்றே; பால் இரண்டாயினும் பான்மை ஒன்றே. தன்னொத்த இனத்திடமே ஆண் வேற்றுமை கருதும்போது, அவ்வேற்றுமை பாராட்டும் இயல்பு பிறவற்றிடமும் பரவுகின்றது. தனக்கு நெருங்கிய வேற்றுமையை நீக்குவானாயின் விரிந்து பரந்த பிறவற்றிலும் அதனை நீக்க வழி ஏற்படும். பெண் ஆண் ஒப்புமையைக் கவிஞரின் கட்டுரை தருகின்றது.

> ஸ்திரீகளுக்கு ஜீவன் உண்டு; மனம் உண்டு; புத்தியுண்டு; ஐந்து புலன்கள் உண்டு; அவர்கள் செத்த யந்திரங்களல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர். சாதாரணமாக ஆண் மாதிரியாகவே தான். புற உறுப்புக்களில் மாறுதல்' ஆத்மா ஒரே மாதிரி...இரண்டும் பரிபூரணமான சமானம். பெண்ணே அணுவளவு உயர்வாகக் கூறுதலும் பொருந்தும் (தமிழருக்கு, பக். 107 - 108).

தனி வாழ்விலும், பொது வாழ்விலும் பெண் எவ்வாறெல்லாம் அமையவேண்டும் என்ற எண்ணங்கள் சில கவிஞரிடம் காணப்படுகின்றன. அவள் வாழ்க்கை சிறப்புற, அளிக்கப்படவேண்டிய வாய்ப்பு, சூழல் பற்றிய சிந்தனைகளும் கருதப்படுகின்றன. கவிதையிலும், கட்டுரைகளிலும் தொடர்புடைய எண்ணங்களைக் கவிஞர் தருகின்றார். கரும்புத் தோட்டங்களில் விலங்கிலும்

கீழாகப் பெண்கள் நடத்தப்படுவதைக் காட்டிக் கண்டிக்கிறார் (பக். 89-90).

பெண்ணின் வாழ்நிலை சிறக்க மிகவும் அடிப்படையானது, அடிமைநிலைமாறி விடுதலை பெறுதல். விடுதலையும் வாழ்வியலும் இணைந்தே செல்கின்றன.

பெண்ணுக்கு விடுதலையென் றிங்கோர் நீதி
பிறப்பித்தேன் அதற்குரிய பெற்றி கேளீர்
மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ மதிகெட்டீரே...
பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த உலகினிலே வாழ்க்கை இல்லை (267-68)

விடுதலை வாழ்வியல் எப்போதும் கடமைகளும் உரிமைகளும் நிறைந்ததே அன்றிக் கட்டற்றது அல்ல. இயற்கையாக உள்ள உரிமைகளைத் தாங்களே எடுத்துக்கொண்டு செயல்படுவதே பெண்ணின் விடுதலை வாழ்வு.

தாயாக இருக்கும் பெண் நற்புதல்வர்களை உருவாக்குவதைத் தன் வாழ்வு நோக்கமாகக் கொள்ளல்வேண்டும். 'ஸ்திரீயின் முக்கியக் கடமை தாம் தேசமக்களுக்குத் தாய்மார் என்பதை நன்றாக அறிந்து, தமது புத்திரர்களும், பெண்களும் ஒழுக்கம், அறிவு, கல்வி, செல்வம் என்பவற்றிலே சிறந்து விளங்குமாறு தாம் செய்தற்குரிய தகுதியடைவதன் கண்ணே அரிய ஆவல் கொண்டவர்களாகி அவ்விஷயத்தில் தம்மால் கூடியவரை முயற்சிபுரிய வேண்டும்' (சக்ரவர்த்தினி கட்டுரைகள், பக். 78-79) எனக் கவிஞர் இதனை விளக்குகின்றார்.

மனைவியின் உரிமை, தனது நாயகனுக்கு விரோதமாக நடந்து கொள்ளாமை; கணவனுடன் ஒற்றுமை கொண்டு வாழ்தல் என்பன. மனைவி, தன் கணவனுக்குத் துணைவியேயன்றி அடிமையன்று; படிப்பும், ஒழுக்கமும், நாகரிகமும் உடையவளாகவும் பிறர் பலர் மதிக்கத் தக்கவளாகவும் மனைவி அமைய வேண்டும் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், பக். 76).

பொதுநிலையில், பெண்ணின் வாழ்வியலை வகுத்தால், அது கல்வியில் தொடங்க வேண்டும். வேறு பிற வழிகளில் அறிவுரையால் தரக்கூடாத ஏற்றம் கல்வியறிவால் பெண்ணிடம் தானாகவே ஏற்பட முடியும் என்பது கவிஞரின் எண்ணம்,

பெண்களுக்கு ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்தப் பட(தமிழருக்கு, ப. 112)

பெண்களுக்குக் கல்வி மட்டிலும் அளித்து அவர்களை மிருகப் பிராயத்திலிருந்து மனுஷ்யப் பிராயத்திற்குக் கொணர்ந்து விடுவோமானால் பிறகு அவர்களின் நன்மையை அவர்களே தேடிக் கொள்வார்களென்பதில் சந்தேகமே கிடையாது (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப. 80).

மனிதனால் விலங்காகக் கருதப்பட்டுக் கீழ்த்தரமாக நடத்தப் படும் பெண் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் இவ் வழி ஒன்றனையே வாழ்வியலில் கடைப்பிடிக்கக் கூறுகின்றார் கவிஞர்.

அநாகரிக மனிதர்கள் அவர்களை இழிவாக நடத்தாமல் பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்கு இப்போது முக்கியமாக வேண்டியது.

அதற்கு மூன்று விதமான உபாயங்களிருக்கின்றன. முதலாவது உபாயம் கல்வி. இரண்டாவது உபாயம் கல்வி. மூன்றாவது உபாயமும் கல்வியே. அதாவது கல்வியைத் தவிர வேறெல்லா விதமான உபாயமும் சிறிதேனும் பயன்படா தென்பது கருத்து (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப 83).

கல்வி பெறுதலைப் போன்றே, பல நாடுகட்குப் பயணம் செய்து, அறிவின் மேன்மையை அங்குப் புலப்படுத்திக் கீர்த்தி பெறுதலை யும் கவிஞர் பெண்டிர்க்கு வேண்டுகின்றார். பிற நாடுகட்குச் சென்று புகழ்பெற்று வரும் பெண்மை, தன் நாட்டில் உயர்வும் மதிப்பும் பெறும் என்பது இவரது கொள்கையாக அமைகின்றது. தமிழ்நாட்டு மாதருக்கும் இதனையே கவிஞர் அறிவுரையாக்கு கின்றார்.

அறிவின் வலிமையே வலிமை. அறிவினால் உயர்ந்தோர்களை மற்றோர் இழிவாக நினைப்பதும் அடிமைகளாக நடத்து வதும் சாத்தியப்படமாட்டா. அறிவின் மேன்மையால் வெளித்தேசங்களிலே உயர்ந்த கீர்த்தி படைத்து மீள் வோரை அதன் பிறகு இந்தத் தேசத்தார் கட்டாயம் போற்று வார்கள்.

தமிழ் மாதர்களிலும் பலர் மேல் நாடுகளுக்குச் சென்று புகழ் பெற்று மீள்வாராயின், அதனின்றும் இங்கே நம்முடைய ஸ்திரீகளுக்குள்ள மதிப்பு மிகுதிப்படும் (தமிழருக்கு, ப. 117).

இளமையின் கல்வியும், அறிவு வெளிப்பாட்டுப் பயணமும் போன்ற பெண்மை வாழ்வின் பொது நிலைகள், ஒருபாலாகத் திருமணம் பற்றிய எண்ணங்களும் மிகுந்து காணப்படுகின்றன. குழந்தை மணக் கொடுமையையும், விருப்பமில் மணங்களால் பல சிதைந்த குடும்ப நிலைகளையும் தம்காலத்துக் கவிஞர் கண்டவராதலின் அச்செய்திகள் பல்குகின்றன எனலாம்.

பெண்களை ருதுவாகு முன்பு விவாகம் செய்து கொடுக்கக் கூடாது.

அவர்களுக்கு இஷ்டமில்லாத புருஷனை விவாகம் செய்து கொள்ளும்படி வற்புறுத்துதல் கூடாது.

விவாகம் செய்து கொண்ட பிறகு அவள் புருஷனை விட்டு நீங்க இடங்கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.

புருஷன் இறந்த பின்பு ஸ்திரீ மறுபடி விவாகம் செய்து கொள்வதைத் தடுக்கக் கூடாது (தமிழருக்கு, ப. 112).

என மணம் தொடர்பான வாழ்வில் கொள்ள வேண்டிய பல சீர் திருத்தங்களைக் கவிஞர் தருகின்றார்.

மணம் தவிர, சொத்து, தொழில், பதவி போன்றன பற்றியும், பெண்ணுக்குரிய பழக்க வழக்கக் கட்டுப்பாடுகளை விலக்குதல் பற்றியும் கூறுகின்றார். ஆண்குழந்தைக்கு உள்ளமை போன்று பெண்ணுக்கும் சொத்துரிமை வேண்டுகின்றார். திருமணம் இன்றித் தொழில் புரிந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள விரும்பும் பெண்ணுக்கு அவ்வுரிமை அளிக்கப்படலை ஏற்கின்றார். கணவனைத் தவிரப் பிற ஆடவரிடம் பேசுதல், பழகுதல் கூடாது எனும் பழக்கம் நீக்கப்படவேண்டுகின்றார். தகுதியிருப்பின் அரசாட்சியிலும், ராஜாங்க உரிமையிலும் அவர்கள் உத்தியோகமும் உரிமையும் பெறுவதைச் சட்டத்தால்தடுக்கக் கூடாதுத் என்கிறார் (தமிழருக்கு, ப.112; ) மலையாள மாதருக்குச் சொந்துரிமை இருப்பதைக் காட்டுவது, பின்பற்றப்பட வேண்டிய வாழ்வியலாகக் கொள்ளத்தக்கது (தமிழருக்கு, ப. 103). புதுமைப் பெண்ணைக் காட்டும் கவிதைப் பகுதியிலும் கவிஞர் இத்தகு எண்ணங்கள் சில தருகின்றார் (207-209).

பெண்ணின் வாழ்வியலில் போற்றப்பட வேண்டிய பண்புகள் பற்றிய எண்ணங்களும் பரவலாகக் காணப்படுகின்றன. பழ மரபைப் போற்றிக் கற்புக்கு முதன்மை கொடுக்கப்படுகின்றது (பதிவிரதை-தமிழருக்கு, ப.32)ஆயின், ஆணுக்கும் அதுவலியுறுத்தப் படுகின்றது. வேறுபாடாகும் (211). கற்புடன் முற்காலத்துக் கூறப் பட்டு வந்த அச்சமும், நாணமும் வேண்டப்படாதனவாக விலக்கப் படுகின்றன. அதற்குப் பதிலாக ஞானம், நல் அறம், வீரம், விடுதலை என்பன வேண்டியன ஆகின்றன.

நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம் (208)

சமுதாய வாழ்வில் முழு உறுப்பினராகப் பெண்கள் அமையும் போது, அவர்கள் தங்கள் எண்ணங்களை எடுத்துக்கூற நாணு வதில்லை. அறியாமையும் மடமையும் நீங்கிய பெண் அது பற்றிய நாணம் நீங்கி நிமிர்ந்து செல்ல முடியும். யாருக்கும் அச்சத்தால் தலைகுனியாது கருத்துகளை வெளிப்படுத்த முடியும். தீமை விலகிய நன்னெறியில் செல்லும்போது, பழியின்மை பற்றி அச்சம் நீக்கி அஞ்சா நெஞ்சினளாக இயல முடியும். பிற ஆண் களிடம் பேசுவதால் கற்புக் கெட்டுவிடும் என்ற தவறான அச்சமும் நாணமும் விலக்கப்படவேண்டும் (பாரதி நினைவுகள், யதுகிரி அம்மாள், அமுத நிலையம், சென்னை, 1954, பக். 63, 65).

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம் (209)

தாழ்வு மனப்பான்மை பற்றியெழும் நாணமும், தன்மதிப்பு இல்லாமையால் உருவாகும் அச்சமும் விலக்கப்பட வேண்டியன; மன உறுதியும் தைரியமும் போற்றப்பட வேண்டியன.

> தைரியம் வேண்டும். எதுவரினும் நம்மைப் பிறர் தாழ்வாகக் கருதவும் நடத்தவும் இடங்கொடுக்கக் கூடாது என்ற மன உறுதி வேண்டும் (தமிழருக்கு, ப. 120).

நிவேதிதா தேவி (235) போன்றவர்களைக் காட்டுவதன் மூல மாகப் பெண்கள் எவ்வளவு உயர்ந்து செல்ல முடியும் என்பதை உணர்த்துகின்றார் கவிஞர். உடைமைப் பொருளாகக் கருதப்பட்டுப்

பணயம் வைக்கப்பட்ட பாஞ்சாலி போன்ற பெண்மை விழித்து எழ வேண்டும்; தன்னையும் நாட்டையும் முன்னேற்றச் சபதம் செய்ய வேண்டும் என அச்சிறுகாவியம் வழிக் காட்டுகின்றார்.

ஆற்றலுடையனவற்றை, அறிவுக்கு இன்பம் தருவன வற்றைப் பெண்ணாகக் காட்டிப் பெண்மைக்கு ஏற்றம் அளிக்கின்றார். சக்தி வழிபாடு, கண்ணன்-தாய், பாரதமாதா, தமிழ்த்திரு நாட்டுத் தாய், கவிதைத்தலைவி என இது விரிகின்றது. பெண்மையின், தாய்மையின் பெருமையைப் போற்றி அதன் வழி விழிப்புணர்வு ஏற்பட இடம் கொடுக்கின்றார். அறிவுக்குக் களனும் காரணமு மாகிய மனத்தை 'மனம் என்னும் பெண்ணே' (194) எனப் பெண் ஆக்கி, அவளுக்கு அறிவை ஒத்த முதன்மை கொடுக்கின்றார்.

கதைகள் சிலவும் பெண்மை பற்றிய கவிஞரின் எண்ணங் களுக்கு இடம் தருகின்றன. 'துளஸீபாயி' (சக்ரவர்த்தினி (கட்டுரைகள், ப. 99) எனும் கதை கணவனுடன் உடன்கட்டை ஏறும் 'சதி'யின் கொடுமையைக் குறிப்பிடுகின்றது. விதவை மறு மணமும் சுட்டுகின்றது. தமிழ்நாட்டுப் பெண்கள் வாழ்வியலில் காணப்படாத ஒன்றாயினும் .பொதுநிலையில் சுட்டத்தக்கது. இந்நிலையில் இதே கட்டுரைத் தொகுதிதரும் 'பாரத குமாரிகள். 'பவுத்த மார்க்கத்திலே மாதர்களின் நிலை' எனும் பகுதிகளும் பெண்களின் வாழ்வியலின் பொதுமை பற்றிக் குறிக்கத்தக்கன. சந்திரிகையின் கதை விதவை மறுமணம் குறித்துப் பேசுகின்றது. 'ஆறில் ஒரு பங்கு' காதலித்தும் இணையத் தடையாக அமைந்த பொது வாழ்வியலைக் காட்டுகின்றது. 'எதிர் ஜாமீன் அல்லது மாப்பிள்ளை விலை' வரதட்சிணைக் கொடுமையை உணர்த்து கின்றது. 'ஸ்வர்ணகுமாரி', 'வீரத்தாய்மார்கள்' என்பன பெண்ணின் மனோதிடத்தைக் கூறுகின்றன.

மொத்தத்தில், பெண்மையின் பல்வகைப் பயன்பாட்டு வாழ் வியலை, உயர் பண்புடை வாழ்க்கையை முதன்மைப்படுத்தி மொழிவதில் பாரதியார் சிறக்கின்றார் எனல் போதரும்.

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் சேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார் நாங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம் (209)

எனப் புதுமைப்பெண் முழங்கியது இன்றைய வாழ்வில் உண்மை யாகிக் கொண்டு வருகின்றது. ஆணோடு பெண்ணும் இணைந்து உழைத்துச் சுதந்திரம் கொணர முடிந்தது (212).

பெண்மை, தாயாகவும் மனைவியாகவும் செயற்படுத்தியதை யும் கவிஞர் குறிக்கின்றார்.

நூற்றி ரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணி டைப்பெண் ணொருத்தி பணியிலே
காற்றி லேறியவ் விண்ணையுஞ் சாடுவோம்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே
அன்ன மூட்டிய தெய்வ மணிக் கையின்
ஆணை காட்டில் அனலை விழுங்குவோம் (210, 211)

செயற்கரிய செயல்களை ஆடவர் செய்யும் வண்ணம் 'கிரியா ஊக்கியாகப்' பெண்வாழ்வு அமைதல் வேண்டும்.

## கவிஞன்

நாட்டு மக்கள் பிணியும் வறுமையும்
நையப் பாடென் றொருதெய்வங் கூறுமே
கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக்
கொண்டு வையம் முழுதும் பயனுறப்
பாட்டி லேயறங் காட்டெனு மோர்தெய்வம்
பண்ணில் இன்பமுங் கற்பனை விந்தையும்
ஊட்டி எங்கும் உவகை பெருகிட
ஓங்கும் இன்கவி ஓதெனும் வேறொன்றே (116)

கலை கலைக்காக அன்றி, சமுதாயத்திற்காக எனக் கொள்ளப் படும் சூழலில் கலைஞன் சமுதாய மேன்மையில் இன்றியமையாப் பங்கு கொள்கிறான். அந்நிலையில் அவனுக்குப் பொறுப்பு மிகு கின்றது. கேடானது ஒன்றும் தன் கலையால் உருவாகாதபடி அவன் காக்கின்றான்; அத்துடன் ஆக்கம் பலவும் நிகழும் வண்ணம் தன் கலைப்படைப்பை உருவாக்குகின்றான்.

'நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்கு உழைத்தல்' (99) எனவும், 'என்றன் பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித் திடவேணும்' (112) என்றும் கருதி உழைத்த கவிஞர் பாரதியும்

மேற்படிக் கொள்கை வாழ்வினராக அமைகின்றார். கவிஞனின் வாழ்வியல் எவ்வாறு அமைதல்வேண்டும் எனும் கோட்பாட்டைத் தன் வாழ்க்கை மூலம் இதனால் விளக்குகின்றார். ஒரு புறம் இறைமையாலும், மறுபுறம் நாட்டுப்பற்றாலும் இழுப்புண்ட கவிஞர், இரண்டையும் அணைக்கின்றார்; ஒன்றில் ஒன்று மயங்கும் வண்ணம் கவிதை படைக்கின்றார். சக்தியும், பாரதமாதாவும் வேறுபாடற்ற ஒரு முழுமையாகின்றனர்.

கற்பனைக்கும் நடப்பியலுக்கும் இடையே ஊசலாடிக் கொண்டிருப்பது கவிஞன் வாழ்வு; கனவுக்கும் நனவுக்குமாகப் போய் வந்து கொண்டிருப்பது அவன் வாழ்க்கை. ஆனால் இது நிலையற்ற வெற்று வாழ்க்கையாக அன்றி நிலைபேறுடைய இயக்க வாழ்வியலாக அமைகின்றது. எழுந்து வீழும் கதிரவன் போன்றும், மேகமாக மேலே எழுந்து மழையாகக் கீழே பொழியும் நீர் போன்றும், அசைந்து கொண்டே இருக்கும் காற்றுப் போன்றும், பக்கத்திற்குப் பக்கம் போய்க்கொண்டு இருக்கும் கடிகாரத் தொங்கல் போன்றும் அமைவது இவ் இயக்கம். தோற்றத்தில் 'ஊசல்' வாழ்வியலாக அமைந்தாலும் உண்மையில் ஊக்க வாழ்வியலாக அமைவது.

பாரதியின் குயில்பாட்டு, இன்பத்தேட்டத்தை ஒருபக்கத்திலும் இயல்பு வாழ்வை மறுபக்கத்திலும் கொண்ட கவிஞன் வாழ்வைக் காட்டுகின்றது. 'சூழ்ந்திருக்கும் பண்டைச்சுவடி, எழுதுகோல், பத்திரிகைக் கூட்டம் பழம்பாய் வரிசையெல்லாம் ஒத்திருக்க நாம் வீட்டில் உள்ளோம்' (418) என்பது புலவரின் வாழ்வுச் சூழலின் உண்மைநிலையைக் குறிக்கின்றது. குயிலோடுள்ள உறவு குறிக் கோள் வாழ்வை உணர்த்துகின்றது எனலாம். ஊனுருக, உலக உயிர்கட்கு இன்பம் பெருக அமைந்த குயிலின் பாடல், உலகம் போற்றும் குறிக்கோள் கவிநிலை காட்டி, அதனுடன் இணையத் துடிக்கும் அதனை—அந்நிலையைப் பெறத் துடிக்கும் புலவனையும் காட்டி உயர்நோக்க வாழ்வைத் தருகின்றது எனலாம். மின்னற் சுவையும் நெருப்புக் குரலுமாக அமைந்த குயிலின் பாடல் போல புலவனின் பாடலும் ஆற்றலும் வன்மையும் உள்ள இயக்கக் கவிதையாக அமைதல் வேண்டப்படுகின்றது போலும். கவிஞனின் வாழ்வு என்பதே கவிதையடிப்படை யாதலின், கவிதையின் இந் நிலை அவன் வாழ்வியலையும் கணித்தறிய வல்லதாகின்றது. கவிவாழ்வு கவிதைவாழ்வாகின்றது.

கவிஞனின் இயல்பு வாழ்வின் ஏற்றமும் இறக்கமும் தற்சார்புப் புலப்பாடு கொள்வதைச் சுயசரிதை வழி அறியலாம். இன்னும் பிறபல தன்வய எண்ண வெளிப்பாட்டுக் கவிதைகளும் இதனை அளிக்கின்றன. ஞானரதமும், கற்பனை வாழ்வியலையும் அவரது இயல்பு வாழ்க்கையையும் காட்டுகின்றது. இவை நேரடியாகக் கவி பாரதியின் வாழ்வியல் அனுபவங்களையே கற்பனைச் சார்புடன் பெரும்பாலும் காட்டுகின்றபோதும் பொதுநிலையுடனும் கருதத் தக்கன. சின்னச் சங்கரன் கதை கவிஞனின் தன் வாழ்வியல் வரலாற்றுப் புதினம் என்பர்.

கவிஞனின் வாழ்க்கை இளமையிலேயே கவிதைக் காதலின் வயப்படுகின்றது. சமுதாயத்திலிருந்து தனிப்பட்டுக் கவிதையில் கலக்கின்றது வாழ்வு.

> வாராய் கவிதையாம் மணிப்பெயர் காதலி ..
> அந்தநாள் நீ யெனை அடிமையாக் கொளயாம்
> மானிடர் குழாத்தின் மறைவுறத் தனியிருந்து
> எண்ணியா இன்பத்து இருங்கடல் திளைத்தோம்
> கலந்து யாம் பொழிலிடைக் களித்தவந் நாட்களிற்
> ... ... ... நின்னொடு தமியனாய்
> நீயே உயிரெனத் தெய்வமும் நீ யென
> நின்னையே பேணி நெடுநாள் போக்கினேன் (229)

வாழ்வே கவிதையாக, கவிதையே வாழ்வாக இரண்டற இணைந்த நிலையாக இது அமைகின்றது. கவிதையை இயக்கக் கருவியாகக் கொள்ளாது கவிதையில் ஆட்பட்டு அடிமைப்பட்ட வாழ்நிலை யாகக் காணப்படுகின்றது. கவிதையைத் தொழிற்படுத்திப் பயனுறச் செய்வதற்கு முந்திய நிலை இதில் தெரிகின்றது. எல்லா வித வளமும் பாதுகாப்புகளும் இருந்த சூழலில் அலங்காரப் பொருளாக இருந்த கவிதை, கவிஞனை மிடிமை சூழ்ந்த நிலையில் பொருளுடையதாக, பயனுடையதாக உருவாகின்றது.

கவிதை, 'தெய்வ மருந்துடைப் பொற்குடமாக' அமையாது வாழ்வோடு இணைந்து வரவேண்டும் என்ற நிலை இங்கு ஏற்படு கின்றது. உலக பரமான வாழ்வைப் பொருளுடையதாகச் செய்வது கவிதை. உலகச்செய்திகட்கு உயிர்கொடுக்கிறது. பாடுபொருளைப் பயன் நிறை அனுபவமாக்குகின்றது. இந்நிலையில் பொறுப்புடைய மனைவியாகத் தகுதி கொள்கின்றது.

வாழ்க மனைவியாம் கவிதைத் தலைவி
தினமும் இவ்வுலகில் சிதறியே நிகழும்
பலபல பொருளிலாப் பாழ்படு செய்தியை
வாழ்க்கைப் பாலையில் வளர்பல முட்கள் போல்
பேதையுலகைப் பேதைமைப் படுத்தும்
வெறுங்கதைத் திரளை...மனைக்கண்
வாழ்வினை வகுப்பாய்! ... ... ...
''ஆங்கத் தனிப்பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயன் நிறை அனுபவ மாக்கி
உயிரிலாச் செய்திகட்கு உயிர்மிகக் கொடுத்து
ஒளியிலாச் செய்திகட்கு ஒளியருள் புரிந்து
...நிகழ்ச்சி யாவே யாயினும்
அனைத்தையும் ஆங்கே அழகுறச் செய்து
இலௌகிக வாழ்க்கையில் பொருளினை இணைக்கும்
பேதை மாசக்தியின் பெண்ணே வாழ்க. (229)

கவிதையாற்றல், சக்தியாக அமைகின்றது. அதனால் வல்லமையுடையது. இயங்கும் ஆற்றலாக (Kinetic energy) அமைவதால், கவிஞனையும் அவன் வாழ்வியலையும் இயக்கி, வெளிப்பட்டு, அதன் வழி வேறுபல இயக்கங்களையும் உருவாக்குகின்றது.

இந்நிலையே 'வெள்ளைப் பண் மகள் காதல்' (161), காளி காதலாக மாறும் வாழ்நிலையைக் காட்டுகின்றது. இதனால் காதல், பொருள் செய்தல், இறைமை ஆகிய முக்கூறுகளிலும் பரந்ததாகிக் கவிதை கவிஞன் வாழ்வியலில் இடம்பெறுகின்றது. கவிஞனை வெளிப்படுத்துவதான கவிதை எப்படியிருக்க வேண்டும் ன்பது பற்றிய எண்ணங்களும் இங்குச் சிந்திக்கத்தக்கன.

சமுதாயத்துடன் இணைந்து செல்வதாகக் கவிதை அமைய வேண்டும் என்பதை ரவீந்திரர் வழி நிறுவுகிறார் பாரதியார்.

> உலக வாழ்க்கையும் கவிதையும் சுதி சேர்ந்து நிற்க வேண்டும் என்பது ரவீந்திரர் கொள்கை (கட்டுரைகள்—தத்துவம், பக். 107-108).

கவிதையின் பண்புகளைப் பற்றிக் கம்பன் கருத்துகளை ஏற்கின்றார். அத்துடன், மொழிநடை காலத்துக்கேற்றதாகி அமைதலையும் வலியுறுத்துகின்றார்.

கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்தநடை மூன்றும் இருக்க வேண்டுமென்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாய மான கொள்கை.

...புலவர்கள் அந்த அந்தக் காலத்து ஜனங்களுக்குத் தெளி வாகத் தெரியக்கூடிய பதங்களையே வழங்க வேண்டும். அருமையான உள்ளக் காட்சிகளை எளிமைகொண்ட நடையிலே எழுதுவது நல்ல கவிதை (தமிழருக்கு, ப. 69).

கவிஞனின் கடமையும், தொழிற்படுந் திறனும் விதமும் புலப் படும்படி இவ்விளக்கங்கள் அமைகின்றன. நாட்டுக்குத் தேவை யான கவிதைகளையன்றி ஒவ்வொரு செல்வந்தனுக்கும் ஏற்ற காம இச்சையுடைக் கவிதைகளைப் படைக்கலாகாது எனும் உண்மை சின்னச்சங்கரன் கதையில் விளக்கப்படுகின்றது எனலாம். கவிதை எதற்கெல்லாம் பயன்பட வேண்டும் எனப் பாரதியார் அங்கங்குக் கூறிச் செல்வது கவிஞனின் வாழ்வியல் நோக்கமாகவும் அமைகின்றது. 'பாட்டினிலே காதலை நான் பாடவேண்டிப் பரம சிவன் பாதமலர் பணிகின்றேனே' (268) எனச் சுயசரிதையில் விண்ணப்பித்தல், குயிலின் பாடலாகக் காதலைச் சிறப்பித்தல், மூன்று காதலைப் பாடுதல் போன்ற பல முதனிலையில் நினைக்கத் தக்கன.

பாட்டுக் கலந்திடவே-அங்கேயொரு
பத்தினிப் பெண் வேணும்-எங்கள்
கூட்டுக் களியினிலே-கவிதைகள்
கொண்டு தர வேணும் (112)

எனக் காதலும் கவிதையும் வாழ்வியலாகத் தொடர்புறுகின்றன. இம்மை வாழ்வியலின் இன்பம் கூறலாக இது அமைகின்றது. மறுமையின் சாரமான இறைமையும் கவிதையும் இணைவது மற்றொரு நிலை.

செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண் (99)

பாட்டினில் வந்த களியே சக்தி (118)

சித்தம்; சக்தி தனக்கே உரிமை யாக்கு-அதில்
சாரும் நல்ல வார்த்தைகளும் பாட்டும் (123)

கலைத்தொழில் புரியும் பாங்கில், கவிஞனின் வாழ்வியலும் அதன் படைப்பிலும், பொதுமக்களின் விருப்பம், சுவை, தேவை களுக்கேற்பச் செல்லுதல் இயல்பு. இதனால் பல வகை இலக்கியத்

துறைகளையும் கவிஞன் அணுகிக் கையாளும் நிலை காணப்படலாம். காலம், இடம் எனும் எல்லைகள் கடந்த பொதுமையுடையதாக இலக்கியப் பாடுபொருள் அமைவதை இங்குக் கொள்ளலாம். சமீன்தாரை அண்டி வாழ்ந்த பன்றி வாழ்க்கையாக அன்றி (231) மக்களுக்கு ஏற்ற பொதுவாழ்வாக இது கருதத்தக்கது.

கதைகள் சொல்லிக் கவிதை யெழுதென்பார்
காவியம்பல நீண்டன கட்டென்பார்
விதவிதப்படு மக்களின் சித்திரம்
மேவு நாடகச் செய்யுளை மேவென்பார் (116)

ஆயின், பாரதி எனும் கவிஞர் வாழ்ந்த சூழல், அவருக்குப் பல பொறுப்புகளை அளிக்கின்றது. அக்கால-இட சூழலுக்கு ஏற்ற வாழ்வியல் கவிஞனுக்கு அமைதல் அந்நிலையில் தேவையாகின்றது. 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' (112) எனச் சுடர்மிக்க அறிவு பயன்படத்தக்க வாழ்வியலைக் கவிஞர் இறைவியிடம் வேண்டுகிறார். இதனால் நாட்டு மக்களின் வறுமை, பிணிநிலைகள் நீங்கி மேம்பாடு உறுதற்குப் பாவியற்றுகிறார்; பிரிந்து பிளவுபட்டுக் கிடக்கும் மனித இனத்தை இணைக்கக் கவி செய்கின்றார்; அற எண்ணங்களை அளிக்கின்றார்; பயன் வாழ்வைப் புலப்படுத்துகின்றார். அவர்,

நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டிலே தனி யின்பத்தை நாட்டவும்
பண்ணிலே களி கூட்டவும் வேண்டி (117)

பாடுவதை வாழ்க்கை நோக்கமாகக் கொள்கின்றார்.

வாழ்க்கையின் உயர்நிலையாகப் பெறக்கூடிய பல்வரங்களின் தொகுதியிலும் கவிஞர் கவிதைவாழ்வை வேண்டுகின்றார். உலகுக்கு இன்பம் தரும் பாட்டு; செவிக்கு இனிய பாட்டு; உள்ளத்தைப் பிணிக்கும்படியான பாட்டு.

சுவை, நண்ணும் பாட்டினொடு தாளம்—மிக
நன்றா வுளத்தழுந்தல் வேண்டும்—பல
பண்ணிற் கோடிவகை இன்பம்—நான்
பாடத் திறனடைதல் வேண்டும் (132)

சொல்லின் ஆற்றல் அளவிடற்கரியது; சொற்களால் ஆகும் கவிதையின் ஆற்றலும் அத்தகையதே. அதை உருவாக்கும் கவிஞன் நிலை படைப்போனை ஒத்தது. ஆக்கவும், மாற்றவும்,

அழிக்கவும், மீட்டும் எழுப்பவும் வல்லவனாக அவன் அமைகின் றான். 'மந்திரம் போல வேண்டுமடா சொல்லின்பம்' (118) என் பதால், படைப்பு ஆக்கத்திற்கு நேராகச் செல்லுதல் வேண்டப்படு கின்றது. கவிஞன் பல்வித உயர் ஆங்கங்களுக்கு நேராக மனிதரை வழி நடத்துபவனாகத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டியவனாகின்றான்.

இப்படி, வாழ்வோரின் இயல்பும்—பண்பும் அடிப்படையாகப் பல்வகையாக வாழ்வியல் அமைவதைக் குறிப்பது பாரதியிடம் காணமுடியும். அரசன், குரு, சீடன், நண்பன், சேவகன் எனப் பல தகுதி, உறவுநிலைகளில் அமையும் மனித மாறுபாடு இருப்பினும் உண்மை, உழைப்பு, உயர்வு என உன்னதமான வாழ்வியலாக இவர் வாழ்வு அமைகின்றது.

யார்க்கும் எளியனாய் யார்க்கும் வலியனாய்
யார்க்கும் அன்பனாய் யார்க்கும் இனியனாய்
வாழ்ந்திட விரும்பினேன் (95)

எனக் கவிஞன் விண்ணப்பிக்கும் இறைவேண்டுதல் வையகத்து மாந்தர்க்கெல்லாம் ஏற்புடையது. புகழ்வாழ்வு கொண்டு, வெற்று வாழ்வு நீக்கியவராக வாழ்வோர் இருக்கவேண்டும் என்பதும் இறைவனிடம் வேண்டப்படுவதாகும்.

மையறும் புகழ் வாழ்க்கை பெறற்கெனச்
செய்யும் செய்கையி னின்னருள் சேர்ப்பையால்...
கொற்றவா, நின் குவலய மீதினில்
வெற்று வாழ்க்கை விரும்பி அழிகலேம் (144)

தனிவாழ்விலும், பொதுவாழ்விலும் பயனுடைமை இதனால் வேண்டப்படுகின்றது. பாரதியின் 'பிரார்த்தனை' புறவாழ்வின் உயர்வுக்கு, மனவாழ்வின் மாட்சிமையை வேண்டுகிறது.

> கிழவனுடைய அறிவு முதிர்ச்சியும் நடுவயதிற்குள்ள மனத் திடமும் இளைஞருடைய உற்சாகமும் குழந்தையின் ஹிருதய மும், தேவர்களே எனக்கு எப்போதும் நிலைத்து இருக்கும்படி அருள் செய்க (வேடிக்கைக் கதைகள், ராமன் பதிப்பகம், சென்னை, 1977, ப. 17).

உலக வாழ்வினனான ஒவ்வொரு மனிதனுக்கும் உரிய தேவையாக இவ்வேண்டுதல் அமைகின்றது.

நல்ல காலம் வருகுது; நல்ல காலம் வருகுது;
சாதிகள் சேருது; சண்டைகள் தொலையுது;
தரித்திரம் போகுது; செல்வம் வருகுது;
படிப்பு வளருது; பாவம் தொலையுது; ...
தொழில் பெருகுது; தொழிலாளி வாழ்வான்...
சாத்திரம் வளருது, சாதி குறையுது;
நேத்திரம் திறக்குது, நியாயம் தெரியுது...
வீரம் வருகுது, மேன்மை கிடைக்குது;
தர்மம் பெருகுது, தர்மம் பெருகுது (216)

சமுதாயம் தனிமனிதர்களால் ஆனது; குடும்பங்களால் ஆனது; பல்வேறு வகைப்பட்ட மாந்தர் இணைந்து வாழும் 'ஒன்றிய'மாக அமைவது. ஒருவருக்கொருவர் பகைத்துக் கொள்ளாது, வேற்றுமை பாராட்டாது அமையவேண்டுவது. ஒருவருக்கொருவர் உதவுவதாகவும், அயலார் ஈடேற்றத்தில் விருப்பம் கொள்வதாகவும் அமைவதனைத் தேவையாகக் கொள்வது. நட்பு, உறவு என்பன காரணமாக வேறுபாடுகளைக் களைந்து நீக்கி நெருங்கி வருவது. சின்னஞ்சிறு சண்டைகளால் சின்னபின்னமாகாது, பின்னிப் பிணைந்து வாழ வேண்டியது.

பொருள் தேவை காரணமாக, பணமின்மை காரணமாக மனிதரிடையே தாழ்வு மனப்பான்மையும், பிணக்குகளும் உருவாகலாகாது. ஏழைமை நோய் நீங்கி, மாந்தர் எல்லாம் பொருளாதாரத் தாங்குதல் உடையவர்களாக அமையும்போது சமுதாய வாழ்வு செவ்வையாகச் செல்கின்றது. கல்வி பெறுவதற்கு உகந்த களம் உருவாகின்றது. பொருளாதாரத்தால் தொழிலும், தொழிலால் பொருள் செய்தலும் ஏற்படுகின்றன.

விஞ்ஞானமும் சமுதாய வாழ்வியலை மேம்பாடுறச் செய்ய முடியும். அறிவியல் கண்டுபிடிப்புகள் அழிவுக்கு நேராகச் செல்லாது வாழ்வியலின் இன்றியமையாமைகளை நிறைக்க வேண்டும். கல்விப் பெருக்கும், நற்குணச்சார்பும் இதற்கு உதவ முடியும். நியாய அநியாயங்களை உணர்ந்து மனிதன் செயற்படும்போது, ஆக்கங்கள் பெருகுகின்றன.

தீமைக்கு அஞ்சி விலகி ஒடுங்கும் நிலைக்கு மாறாகச் சமுதாயத்தின் அந்தத்தீதை ஒழிக்க முயல்பவரே சிறந்த பொறுப்

புடைய குடிமக்கள் ஆக முடியும். நன்மைக்காகப் போராடும் வீர உணர்ச்சி மேன்மைக்கு நேரான பாதை அமைக்கின்றது. அதர்மம் அழிந்து தர்மம் பெருக வழி ஏற்படுகின்றது.

புதிய கோணங்கியாக நின்று, எல்லாச் சிறப்புகளும் உள்ள நற்சமுதாயத்தின் வரவினைக் கவிஞர் கட்டியம் கூறுகின்றார். பழைய பயித்தியங்கள் ஒழிந்து, எண்ணத் தெளிவுள்ள சமுதாயம் உருவாகின்றது. சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்பு ஏற்பட்ட மக்களால் முன்னேற்றங்கள் தோன்றுகின்றன. அறிவுக் கண்களால் பின் வருவதை முன் காணுகின்றார் கவிஞர்.

ஞானரதம் சமுதாயவியல் சிந்தனைகளைத் தரும்படிக் கவிஞர் கொண்ட உத்திப் படைப்பாகக் கருதத் தக்கது. சமுதாயத்தின் உறுப்பினனான தானே எழுந்துநின்று அதன் குறைகளைச் சுட்டிக்காட்டும் நேரடி 'அணுகுதலாக அன்றி, பாத்திரக் கூற் றாக்கித் தருகின்றார். சமுதாயத்தின் அலவச் சித்திரங்கள் சில இதன்கண் அமைகின்றன.

> மானுடா உங்கள் உலகத்திலே ஏழைகளாய் இருப்போர் பெரும்பாலும் மானமற்ற அடிமைகள். அவர்கள் அற்ப சுகத்திற்காக எது வேண்டுமாயினும் செய்வார்கள். செல் வராய் இருப்போரில் பெரும்பாலோர் திருடர்கள். எளியோ ராய் இருப்போர் வெறுத்தற்குரிய நீசகுணமுடையார். வலி யோராய் இருப்போர் காலால் மிதித்து நசுக்குதலுக்குரிய தீக்குணமுடையோர். அவர்கள் எல்லாம் உண்டும், உறங்கி யும், நடித்தும் சாகிறார்கள் (பாரதியார் கதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977, ப. 45).

இத்தகைய சூழல் மாற ஒவ்வொரு மனிதனும் திருந்த வேண்டியது தேவை. வாழ்வியலுக்குத் தேவையான உண்மைகளை உணரல் வேண்டும். கடமை வாழ்வுக்கு முதன்மை அளித்துத் தன்னையும் பிறரையும் ஈடேற்ற வேண்டும். இறை நோக்க வாழ்வுடையவரானபடியினால் கவிஞர் கடவுள் நாட்டத்தையும் சமுதாயத்திற்கு இன்றியமையாததாக் கருதுகின்றார் எனலாம். ஏழை பணக்காரர் என்ற நிலை மாறும்போது, அதனால் வரும் தீமைகள் அழிகின்றன. அடுத்தவனைச் சகோதரன் என நினைந்து அன்பு பாராட்டுவதால் வலியோன் எளியோன் எனும் நிலைகள் மாறி அருள் வாழ்வு கைகூடுகின்றது. கடமை உணர்வுடன் செயல்

படுவதால் தேவையற்ற சிந்தை, செயல்கள் ஒழிகின்றன. இன்பம் நிலைக்கின்றது.

> கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
> பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்...
> உலகெலாங் காக்கும் ஒருவனைப் போற்றுதல்
> இந்நான் கேயிப் பூமியி லெவர்க்கும்
> கடமை யெனப்படும்; பயனதில் நான்காம்;
> அறம் பொருள் இன்பம் வீடெனு முறையே (94)

சமுதாயம் பற்றிய கவிஞனின் சிந்தனைகள், கல்வி, தொழில், குடும்பம், காதல், நாடு, விடுதலை போன்ற பல கோணத்தில் அணுகத் தக்கன.

## கல்வி*

> வயிற்றுக்குச் சோறிட வேண்டும்—இங்கு
> வாழும் மனிதருக் கெல்லாம்
> பயிற்றிப் பலகல்வி தந்து—இந்தப்
> பாரை உயர்த்திட வேண்டும் (207)

உடலுக்கு இன்றியமையாத அடிப்படைத் தேவையான உணவுக்கு அடுத்ததான இடம் கல்விக்கு அளிக்கப்படுகின்றது. உணவு உடலை வளர்த்த, கல்வி உள்ளத்தை வளர்ச்சியடையச் செய்கின்றது. உணவால் பிற உயிரினங்களோடு மனிதன் உடல் வாழ்வில் ஒத்து அமைகின்றான்; கல்வியால் எல்லா உயிரினங்களிலும் மேம்பாடுடையவனாகின்றான். உணவு தேடிக்கொள்ளுதல் என்ற ஒன்றையே வாழ்வியலாகக் கொண்ட காலம் ஒழிந்து, அறிவு விருத்தியையும், பலருக்கும் பயன்பாடு ஏற்படுவதையும் நோக்கமாகக் கொண்ட மனிதன் தோன்றியபோதே, கல்வியும் தோன்றியிருக்க வேண்டும். பட்டறிவால் தான் தெரிந்து கொண்டதைப் பிறருக்குக் கூறலாக இது முகிழ்த்திருக்கலாம். ஏட்டுக் கல்வியாக அன்றிப் பயிற்சி செய்தற்கு ஏற்றதாக இது அமைகின்றது. பின்பற்றிச் செயற்படுவதற்கு உரியதாகக் காணப்படுகின்றது. ஏற்று ஒழுகுதற்குரியனவே கற்கப்பட வேண்டும்.

---

* உலகத் தமிழாராய்ச்சி நிறுவன, வெள்ளிக்கிழமைக் கருத்தரங்கில் 11-6-'82 அன்று வழங்கப்பட்ட கட்டுரையை அடியொற்றியது.

உணவின்றி உயிர்வாழ முடியாது: அதேபோலக் கல்வி இன்றியும் வாழ்தல் அரிது எனும் எண்ணம் மக்களிடம் பரவுதல் வேண்டும். அன்றாட உணவுக்கும் வழியில்லாதவர்களிடம் இவ் எண்ணத்தைப் பரப்ப இயலாது. வயிற்றுக்கு உணவு வழங்கிய பின்பே செவிக்கு உணவான கல்வியை அளிக்க முடியும். பொருளாதாரச் சுபிட்சம் உள்ள சமுதாயத்தில் இது இயல்வ தாகும்.

காண்பது, கேட்பது அனைத்தையும் கற்பது கல்வி ஆகிவிட முடியாது. குறுகிய வாழ்நாளுள்ள மனிதன் சிறந்தவற்றைத் தேர்ந்து கற்று முடிப்பதே கடினம். அறிவுக்கு உணவாகும் கல்வி, உள்ளத்தைச் செம்மைப்படுத்தும் கல்வி, வாழ்வியலை நெறிப்படுத்தும் கல்வி, வாழ்வில் இன்றியமையாத உழைப்புக்குத் தேவையான தொழிற்கல்வி போன்றனவே வேண்டப்படுவன.

கல்வி மானுடத்தை ஈடேற்றும் என்பதால், அதனைப் பற்றிய சிந்தனைகளை எல்லா நாட்டினரும் தந்தனர். எல்லாக் காலத் தினரும் கருதினர். அறநூல் வல்லுநர் அதற்கெனத் தனியிடம் ஒதுக்குகின்றனர். தமிழில் வள்ளுவரும் நாலடியாரும் தந்த சிந்தனைகள் போற்றற்குரியன.

முன்னோர்களை நோக்க, பாரதியின் கல்வி பற்றிய சிந்தனை கள் வேறுபட்ட கோணத்தில் அமைந்தமை தெரிகின்றது. இளமை யில் அவர் கல்வி கற்பதில் பெற்ற துன்ப அனுபவமும், பின்பு அவரது ஒத்த காலத்தினர் நம் நாட்டுக்கல்விமுறை பற்றிய கண்டனங்கள்-சீர்திருத்த எண்ணங்கள் வெளியிட்டது பற்றிய அறிவும், கல்வி பற்றிப் பல கோணங்களில் சிந்திக்க அவருக்கு வாய்ப்பு அளித்தன எனலாம். சுயசரிதையின் சில பகுதிகள் வாயிலாக முன்னதும், சமூகம் பற்றிய கட்டுரைத் தொகுதியின் ஒரு பகுதி (தேசீயக் கல்வி—2) வாயிலாகப் பின்னதும் புலப்படு கின்றது. ஸ்ரீமான் ஜின ராஜ தாஸர், ஸ்ரீமதி ஆனி பெஸண்ட், திலகர், ரவீந்திரநாதர், மீர்ஜா ஸமி உல்லா பேக் போன்ற பலர் பேச்சும் முயற்சியும் இக் கட்டுரையில் சுட்டப்படுகின்றன.

அன்றியும், பாரதியார் கவிதைகள் சிலவும் இவர் கல்வி எண்ணங்களால் ஆட்கொள்ளப்பட்டதைக் காட்டுகின்றன. காலை எழுந்தவுடன் படிப்பு எனப் பாப்பாவுக்குக் கூறல்; கற்றது ஒழுகு, சரித்திரத் தேர்ச்சி கொள், நீதிநூல் பயில், உலோக நூல் கற்றுணர், நூலினைப் பகுத்துணர் என்ற ஆத்திசூடிப் பகுதிகள், ஆங்கிலத்தில்

ரவீந்திரநாதர் எழுதிய பாடலை 'நாட்டுக்கல்வி' என மொழி பெயர்த்து அளித்திருத்தல்—போன்றவற்றைக் குறிக்கலாம். அது மட்டுமன்றி, கண்ணன் பாட்டில் சீடன், சற்குரு என்ற பகுதிகளை யும் இங்கு நினைக்கலாம். குருகுலக் கல்வி முறையைக் கவிஞர் விரும்பினாரோ எனும் எண்ணம் தோன்றுகின்றது. ஆயின் தேசியக் கல்வி—1'* என்ற கவிஞனின் கல்வி எண்ணப் பிழிவுகளை அழகுற அமைக்கும் சமூகக் கட்டுரை, 'பள்ளிக்கூடப்' படிப் பினையே சுட்டுகின்றது.

ஆங்கிலக் கல்விப் பழிப்பு எனவும், தேசீயக்கல்வி வேண்டல் எனவும் கவிஞனின் எண்ணங்கள் இருவகைப்பட்டு அமைகின்றன.

பாரதி தனது சுயசரிதையில், நெல்லையூரில் சென்று தான் கற்ற கல்வியைப் பற்றி, மண்படு கல்வி எனவும், பேடிக்கல்வி எனவும் இழித்துரைக்கின்றார். மேல்நாட்டு முறையிலமைந்த இவ் ஆங்கிலக் கல்வியைப் படுகுழி எனவும், கொடும்பிலம் எனவும், வெங்குகை எனவும், பேரிருள் எனவும் பழிக்கின்றார்.

கவிஞர் ஆங்கில முறைக் கல்வியைப் பழிப்பதற்குக் காரணங் கள் அமையலாம். இளமையில் அதன் காரணமாக அவர் அனுப வித்த துன்பம் அடிப்படையானதும் நேரடியானதுமாக அமைய லாம். உடல் துன்புறும் அளவுக்குக் கல்வி வலிந்து சுமையாகப் புகட்டப்படலாகாது எனும் எண்ணமும் காரணமாகலாம்.

பொழுதெலா முங்கள் பாடத்தில் போக்கிநான்
 மெய் யயர்ந்து விழிகுழி வெய்திட
வீறிழந் தென துள்ளநொய் தாகிட
 ஐயம் விஞ்சிச் சுதந்திர நீங்கி யென்
அறிவு வாரித் துரும்பென் றலைந்ததால் (252)

என்ற பகுதி இதற்குச் சான்று பகரும். அன்றியும், பிற நாட்டினர் நம்மை அடிமைப்படுத்திய நிலையில், அவர்கட்கு வாய்ப்பாக அவர் கள் அளிக்கும் கல்வி வேண்டற்குரியதன்று எனும் எதிர்ப்புணர்வும் காரணமாகலாம். உணர் கலைத்திறன், ஏதிலார் தரு கல்வி' அற்பர் கல்வி போன்ற தொடர்கள் இதனை உணர்த்தும்.

* சமூகக் கட்டுரைகளைத் தரும் நூலின். 44-72 பக்கங்களில் இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரையிலிருந்து மேற் கோளாக எடுத்து இங்கு ஆளப்படும் பகுதிகள் அடைப்புக் குறியுள் தருவது இப் பக்க எண் ஆகும்.

அதோடு, நமக்கு என ஆற்றலுடைய மொழியும் பண்பாட்டு மரபும் இருக்கும்போது இத்தகு இறக்குமதிக் கல்வி தேவையில்லை எனக் கொண்டிருக்கலாம். தேசியக்கல்வி என்ற ஒன்றன்பால் மனம் ஈடுபட்டமை பற்றியுமாகலாம். விடுதலை என்பது நாட்டுக்கு அன்னிய ஆட்சியிலிருந்துமட்டுமன்றி ஒவ்வொருவருக்கும் அன்னியக் கல்வி ஆதிக்கத்திலிருந்தும் கிட்டுதல் என்ற பார்வை விரிவும் காரணமாகலாம்.

அல்லல் மிக்கதோர் மண்படு கல்வியை
　　ஆரியர்க் கிங் கருவருப் பாவதை
நரியுயிர்ச் சிறு சேவகர் தாதர்கள்
　　நாயெனத் திரி யொற்றர், உணவினைப்
பெரிதெனக்கொடு தம்முயிர் விற்றிடும்
　　பேடியர், பிறர்க் கிச்சகம் பேசுவோர்
கருதுமிவ்வகை மாக்கள் பயின்றிடும்
　　கலை...... (250-51)

எனப் பிற நாட்டினர் கல்வி நாட்டு அடிமைத்தனத்துக்கே வாய்ப் பாக அமைந்து, வெளியாட்சியினருக்கு உதவுவது புலப்படுத்தப்படு கின்றது.

ஏட்டுக்கல்வியாக மட்டும் அமைந்து பயனின்றி இக்கல்வி அமைந்ததும் நாட்டுக்கல்வியாக எவையெவை பற்றிய அறிவு அமைதல் வேண்டும் என்பதும் இச் சுயசரிதையில் பட்டியல் செய்யப்படுகின்றன. இதனால், எத்தகைய கல்வி தேவையில்லை யெனவும் எத்தகு செய்திகள் எல்லாம் கற்பிக்கப்பட வேண்டும் என்ற எண்ணமும் அமைவது தெரிகின்றது.

சுயசரிதையின் இப்பொதுக்கருத்து நிலைக்கு மாறாக, தேசியக் கல்வி பற்றிய இரு சமூகக் கட்டுரைகளிலும் பல சிறப்பு எண்ணங்கள் புலப்படுத்தப்படுகின்றன. தமிழகத்தில் இத்தகு கல்வி பற்றிச் சிந்தித்த முதல்வராக இவர் அமையலாம். கல்வி முறை பற்றியும், கல்விப்பொருள் பற்றியும் தெளிந்த எண்ணங்கள் இங்கு அமைகின்றன. கல்விமுறை பற்றிய எண்ணங்கள் பல நிலை யினவாக அமைகின்றன. அவற்றுள் முதன்மையானது கல்வி கற்றற்குரிய ஊடுமொழி (medium) ஆகும். பாரதியின் கொள்கைப் படி, கல்விக்கு அடிப்படையே தாய்மொழியில் கற்பித்தல் தான். ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருக்கலாகாது எனவும், இந்திய ஒருமைப்பாட்டுக்காக வடமொழி அமையினும், தமிழகத்தில் தமிழே வேண்டும் என்கிறார்.

> தமிழ் நாட்டில் தேசீயக் கல்வியென்பதாக ஒன்று தொடங்கி அதில் தமிழ் பாஷையைப் ப்ரதானமாக நாட்டாமல் பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும் தமிழ் ஒரு பாஷையாகவும் ஏற்படுத்தினால் அதுதேசீயம் என்ற பதத்தின் பொருளுக்கு முழு விரோதமாக முடியும்...நம் பாரத தேசத்தின் ஐக்கியத்தைப் பரிபூரணமாகச் செய்யுமாறு நாடு முழுதிலும் வடமொழிப் பயிற்சி மேன்மேலும் ஓங்குக. எனினும் தமிழ்நாட்டில் தமிழ்மொழி தலைமை பெற்றுத் தழைத்திடுக (பக். 48, 49)

ஆரம்பப் பள்ளிக்கூடத்தில் கற்பிக்கப்படும் எல்லாப் பொருட்டுறைகளும் 'தேச பாஷை'யிலேயே கற்பிக்கப்பட வேண்டும் என்பது இவர் கருத்து.

> தேச பாஷையே ப்ரதானம் என்பது தேசீயக்கல்வியின் ஆதாரக் கொள்கை. தேச பாஷையின் மூலமாகவே எல்லாப் பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும் ... தமிழ்நாட்டில் தேசீயக்கல்வி நடைபெற வேண்டுமாயின் அதற்கு அகரமுதல் னகரப் புள்ளி இறுதியாக எல்லா வ்யவஹாரங்களும் தமிழ் பாஷையில் நடத்த வேண்டும் (பக். 48, 51, 86).

அறிவியல் கல்வியில் முழுமையாகத் தமிழை மட்டும் பயன்படுத்தும் அளவிற்கு மொழிபெயர்ப்புக்கலை போன்றன வளராததனால் போலும் ,பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துவதை அனுமதிக்கிறார்.

> பௌதிக சாஸ்திரங்கள் கற்றுக்கொடுப்பதில் மிகவும் தெளிவான எளிய தமிழ்நடையில் பிள்ளைக்கு மிகவும் ஸுலபமாக விளங்கும்படி சொல்லிக் கொடுக்க வேண்டும். இயன்ற இடத்திலெல்லாம் பதார்த்தங்களுக்குத் தமிழ்ப் பெயர்களையே உபயோகப்படுத்த வேண்டும். தமிழ்ச் சொற்கள் அகப்படாவிட்டால் ஸமஸ்கிருத பதங்களை வழங்கலாம்...இந்த இரண்டு பாஷைகளிலும் பெயர்கள் அகப்படாத இடத்தில் இங்கிலீஷ் பதங்களை உபயோகப் படுத்தலாம் (ப 63).

அறிவு வளர்ச்சிக்கு மொழி தடையாகக் கூடாது எனும் எண்ணம் இங்குப் புலப்படுவதாகக் கொள்ளலாம். இயன்ற அளவு நம்மொழியை முழுமையாகப் பயன்கொண்ட பின்பு இந்திய மொழி, உலகமொழி எனச் செல்லலாக இது அமைகின்றது.

பாரதி குறிப்பிடும் கல்வி பெரும்பாலும் வகுப்பறைக் கல்வி யாகத் தோன்றினும், கற்பிக்கும் முறை பற்றிய எண்ணங்கள் சில அமைந்து முறையான கல்வி நிலையைப் புலப்படுத்துகின்றன. பௌதிக சாஸ்திரக் கல்வி, வகுப்பறைக் கல்வியாக அமையினும் அதன் விளக்கத்திற்காகச் செயல்முறை, சோதனைகள் நிகழ்த்திக் காட்டப்பட்டு அமைதலை வேண்டுகிறார்.

> உலகத்தில் காணப்படும் வஸ்துக்களெல்லாம் எழுபதே சொச்சம் மூலப்பொருள்களாலும் அவற்றின் பலவகைப்பட்ட சேர்க்கைகளாலும் அமைந்திருக்கின்றன **(திருஷ்டாந்தங் களும் சோதனைகளும் காட்டுக).**

> ரஸாயன சேர்க்கை, பிரிவு இவற்றின் இயல்புகள் **(பரீக்ஷைகளின் மூலமாக விளக்குக, ப. 64).**

ஒன்றனைப் பற்றிய செய்திகளைச் சொற்களால் விரித்து விளக்குவதினும் கண்முன் காட்டி உணர்த்துதல் என்பது மனத்தில் —ஆழப்பதியும் எனும் இயல்பும், மாணவ உளவியல் சார்பும் இங்குப் புலப்படுவதாகக் கொள்ளலாம். பூமிப்படங்கள், கோளங் களால் பூமி சாஸ்திரக் கல்வி கற்பித்தலும் இவண் எண்ணத் தக்கது (ப. 55).

வகுப்பறைக்குப் புறம்பேயும் மாணவர் கல்வியை வாழ்க்கைக் குத் தேவையான கல்வியைப் பெறவியலும் என்பதால், அத்தகு நிலையையும் தேசீயக் கல்வியில் பாரதி வேண்டுகிறார். உலகப் பொது அறிவுக்கும், நேரடியாகக் கண்டு கற்றற்கும், தம்முள் பழகத் தெரிந்துகொள்ளற்கும், பலவிதமான இயற்கையின் உண்மைகளை, அழகுகளை உணர்ந்து மகிழ்வதற்கும், யாத்திரை களும் (எக்ஸ்கர்ஷன்), வனபோஜனமும், (பிக்னிக் ?) மிகுதியாக உதவுகின்றன (ப. 67). கல்வி கற்கிறோம் என்ற கட்டாய உணர் வின்றியே அறிவு பெற இச்சூழல் காரணமாகின்றது.

கல்விப்பொருள் பற்றிய எண்ணம் பாரதியிடம் மிக விரிவாக அமைகின்றது. தம் தேவைக்கேற்ப அமைத்துக்கொண்ட மேனாட்டார் கல்வியை அவ்வாறே அமைத்துக் கொள்ளாது, நம் தேவைக்கு ஏற்பக் கல்விப்பொருள் அமைதல் வேண்டும் என்பது இவரது அடிப்படைக் கொள்கை. தேசீயக் கல்வியின் பாடத் திட்டங்களை இதற்கேற்ப விரிவாக வகுத்துத் தருகின்றார். (பக். 50-67).

ஆரம்பக் கல்விக்கு முதன்மையளித்து இவர் பேசுவதால் கல்வித் தொடக்கமாக, 'எழுத்து, படிப்பு, கணக்கு' (ரீடிங்,

ரைட்டிங், அரித்மெடிக் ?) என்பனவற்றைக் குறிப்பிட்டுப் பின் இவ்வாறு கறற தாய்மொழி வாயிலாக உணர்த்தப்பட வேண்டிய பொருள்களை அமைக்கின்றார்.

தாம் வாழும் நாட்டைப் பற்றிய அறிவு மிக இன்றியமை யாததும் அடிப்படையானது மாகையால், 'இலேசான சரித்திரப் பாடங்கள்' கற்பிக்கப்படுவதை முதலில் வேண்டுகின்றார். 'அதி பால்யப் பிராயத்தில் மனதில் பதிக்கப்படும் சித்திரங்களே எக்கால மும் நீடித்து நிற்கும் இயல்புடையன' (ப. 51) என்பதால் சரித் திரம் இளமையிலேயே கற்பதற்குரிய தாகின்றது.

> வேதகால சரித்திரம், புராணகால சரித்திரங்கள், பௌத்த காலத்துச் சரித்திரம், ராஜபுதானத்தின் சரித்திரம் இவை மிகவும் சிரத்தையுடன் கற்பிக்கப்பட வேண்டும். பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் போகின்ற -அந்த மாகாணத்தின் சரித்திரம் விசேஷமாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். (பக். 50-51). ஏறத்தாழ இதனை ஒத்த எண்ணம் சுயசரிதை யிலும் புலப்படுகின்றது.

பாரில் நல்லிசைப் பாண்டிய சோழர்கள்
பார ளித்துத் தர்மம் வளர்த்ததும்
பேரருட் சுடர் வாள் கொண் டசோகனார்
பிழைபடாது புவித்தலங் காத்ததும்
வீரர் வாழ்த்த மிலேச்சர்தந் தீய கோல்
வீழ்த்தி வென்ற சிவாஜியின் வெற்றியும்
(அன்ன யாவும் அறிந்திலர் பாரதத்
தாங்கிலம் பயில் பள்ளியுட் போகுநர்) (251)

தமிழக வரலாறு, இந்திய வரலாறு என நின்றுவிடாது, உலக வரலாறும் இயன்றால் கற்பிக்கப்பட வேண்டும் என மொழிகிறார் (ப. 52).

எந்தக் கல்வியும் நம் நாட்டைச் சார்ந்து அமையவேண்டும் என்ற இவரது பொது எண்ணம் 'பூமி சாஸ்திரம்' பற்றிய பாடத் திட்டத்திலும் வெளிப்படுகின்றது. ஆரம்ப பூகோளம் முதலியன கற்பிக்கப்படுவதுடன் பாரத பூமிசாஸ்திரம், சொந்த, 'ராஷ்ட்ரம்' அல்லது மாகாணத்தின் பூமி சாஸ்திரம் என்பனவும் திட்டத்தில் உட்படுகின்றன. அண்டங்கள், நாகரீக வளர்ச்சி, நிதிகள், விளை பொருட்கள், பிற சிறப்புச் செய்திகள், உலகின் பிற பாகங்களில்

வாழும் இந்தியர், இந்தியாவின் பிற மாகாணங்களிலுள்ள மக்கள்-அவர் மொழி-சாதி-மதம் போன்றன விரிவாக இப்பொருள் புலப்படுத்துகின்றனர் (பக். 53-54).

தற்கால ஆரம்பக் கல்விப் பாடத்திட்டத்தில் காணப்படாத, 'மதப் படிப்பு' பற்றிய சிந்தனை அடுத்ததாகப் பாரதியிடம் அமைகின்றது. மதப்பூசல் காரணமாக ஒற்றுமை குலைந்து நிற்கும் பாரதத்தைச் சீர்செய்ய, வேற்றுமைகளை மறந்து அன்னியனுக்கு எதிராக ஒன்றுபட்டு நிற்கச் செய்யும் முயற்சியின் வெளிப்பாடாக இது கருதத்தக்கது. அன்றியும், இறைமையை மையமாகக் கொண்ட பாரதியின் வாழ்வும், அச்சமின்மைக்கு அதுவே அடிப்படை என்ற எண்ணமும் இதனைப் பாடத்திட்டத்தில் இணைக்கக் காரணமாகலாம். 'ஹிந்து மதத்தின் மூல தர்ம'மான உயிர்களைத் துன்புறுத்தாமை வலியுறுத்தப்படுகின்றது. இராமாயண மாபாரதம் வழியாகவும், புராண வீரர்கள் வாழ்வு வழியாகவும்,

> ..ஜீவ காருண்ணியம் எல்லா தர்மங்களிலும் மேலானது என்பதை விளக்க வேண்டும். ஏழைகளுக்கு உதவி புரிதல், கீழ் ஜாதியாரை உயர்த்தி விடுதல் முதலியனவே ஜன ஸமூஹக் கடமைகளில் மேம்பட்டன என்பதைக் கற்பிக்க வேண்டும் (ப. 57)

எனச் சமயக் கல்வியும் வெறும் ஏட்டுக் கல்வியாக அன்றி வாழ்க்கைக்குப் பயன்பெறும் நிலையில் அமைதல் வேண்டப்படுகின்றது.

**பொருள் நூல்** கல்வி, மக்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரி, வணிகம், நாட்டின் விளைபொருள் இவற்றின் சார்புடன் அமைகின்றது. வரிகள் பொது நன்மைக்கு மிகுதியாகப் பயன்படும்போது அரசு நிலைத்தல், வணிகமுறை, கூட்டு வியாபாரம், கைத்தொழில் என்பன இதன் கல்விக் கூறுகளாகச் சுட்டப்படுகின்றன (ப. 60). கவிஞர் சுயசரிதையில்,

> வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்
> வாழு நாட்டிற் பொருள் கெடல் கேட்டிலார் (251)

என வாழ்வுக்குப் பயன்படாப் பொருளியல் கல்வியைச் சாடுவதும் இங்கு நினைக்கத் தக்கது. நாட்டின் பொருளாதாரத்தைச் சீர் செய்யும் நிலைக்குப் பொருளியல் கல்வி அமைந்து, அதுவும் ஏட்டுக் கல்வியாக அன்றி வாழ்க்கைக் கல்வியாக அமைதலை வேண்டுகின்றார் எனலாம்.

**ராஜ்ய சாஸ்திரம்,** இவர் வகுக்கும் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதியாக அமைகின்றது. மக்களின் நல்வாழ்வே ராஜாங்கத்தின் அடிப்படைக் கடமை; குடிகளின் 'பிரதிநிதித்துவம்' உலக நாடுகளின் பல்வகையான ஆட்சி வகைகள், கிராமம், கோயில் முதலியன பராமரிக்கப்படுவதன் ஆட்சித்தேவை போன்ற உண்மைகள் கற்பிக்கப்படும் பொருளாகின்றன. இங்குக் கவிஞர் பாடத் திட்டம் வகுப்பவராக மட்டுமின்றி அரசியலறம் மொழிபவராகவும், மக்கட்கு அறிவுரை கூறுபவராகவும் அமைவது தெரிகின்றது.

> ஜனங்களுக்குள்ளே ஸமாதானத்தைப் பாதுகாப்பதும், வெளிநாடுகளிலிருந்து படை எடுத்து வருவோரைத் தடுப்பதும் மாத்திரமே ராஜாங்கத்தின் காரியங்கள் என்று நினைத்து விடக்கூடாது. ஜனங்களுக்குள்ளே செல்வமும், உணவு, வாஸம் முதலிய ஸௌகர்யங்களும், கல்வியும் தெய்வ பக்தியும், ஆரோக்கியமும், நல்லொழுக்கமும், பொது சந்தோஷமும் மேன்மேலும் விருத்தியடைவதற்குரிய உபாயங்களை இடைவிடாமல் அனுஷ்டித்துக் கொண்டிருப்பதே ராஜாங்கத்தின் கடமையாவது (ப. 58).

இக் கலைக் கல்விப் பொருண்மைகளுடன், அறிவியல் கல்வியும் தேசிய பாடத்திட்டத்தில் உட்படுகின்றது. **ஸயன்ஸ், அல்லது பௌதிக சாஸ்திரம்** என இதனைப் பற்றிக் கூறவரும் பாரதி முதலில், அறிவியல் மாணவருக்கு அச்சத்தை உருவாக்கக் கூடாது எனவும் அதற்கேற்பக் கல்வி தரப்பட வேண்டும் எனவும் கூறுகின்றார்.

> கண்ணுக்குத் தெரியாத நுட்பமான பூச்சிகள் தண்ணீர் மூலமாகவும் காற்று மூலமாகவும், மண் மூலமாகவும் பரவி நோய்களைப் பரப்புகின்றன என்ற விஷயம் ஐரோப்பிய ஸயன்ஸ் மூலமாக கண்டுபிடிக்கப் பட்டிருப்பதில் ஒரு சிறிது உண்மை இருப்பது மெய்யேயாயினும்...நமது தேசீய ஆரம்ப பாடசாலையில் மேற்படி பூச்சிகளைப் பற்றின பயம் மாணாக்கருக்குச் சிறிதேனும் இல்லாமல் செய்துவிட வேண்டும்(ப. 61).

அறிவியலிலும் வணிக வாழ்வுக்கு ரசாயனம் இன்றியமையாததாகையால் அது மிகுதியாகக் கற்பிக்கப்பட வேண்டும் என நினைக்கிறார். நமது நாட்டில் பௌதிக சாஸ்திரம் வளராததாலும், இப் பொருண்மை நாடு, மொழி முதலிய பாகுபாடுகட்கு

அப்பாற்பட்டதாலும், 'ஐரோப்பிய ஸயன்ஸின் ஆரம்ப உண்மைகளை' (ப. 61). 'இங்கிலீஷ் புஸ்தகங்களைத் துணையாக வைத்துக்கொண்டு ..தேச பாஷையில் மொழிபெயர்த்து, கற்பித்தால் போதும்' (ப. 63) என நினைக்கின்றார் எனலாம்.

கல்விப் பொருள் என்ற நிலையில் பாரதி இத்துணை வகைகளையே கருதியபோதிலும், இலக்கியம், இலக்கணம், தத்துவம் (சமயத்தில் உட்படலாம்) போன்றனவும் அமையும் வாய்ப்பைச் சுயசரிதைப் பகுதி காட்டுகின்றது.

''அணிசெய் காவியம் ஆயிரங் கற்கினும்
ஆழ்ந் திருக்கும் கவியுளம் காண்கிலார்...
துணியு மாயிரஞ் சாத்திர நாமங்கள்
சொல்லுவாரெட்டுணைப்பயன் கண்டிலார்
கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்
காளி தாசன் கவிதை புனைந்ததும்...
நம்பருந் திற லோடொரு பாணினி
ஞால மீதில் இலக்கணங் கண்டதும்
இம்பர் வாழ்வின் இறுதிகண் டுண்மையின்
இயல்பு ணர்த்திய சங்கரன் ஏற்றமும்
சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்
தெய்வ வள்ளுவன் வாழ்மறை செய்ததும்
அன்ன யாவும் அறிந்திலர்... (251)

அன்றியும், ஆரம்பப் பாடசாலையில் மாணவர் இத்தகு கல்விகளை மட்டுமன்றி, உடலியலுக்கும், வாழ்வுக்கும் மிகவும் தேவையான கல்வியை, பயிற்சிகளை, செயல்முறைகளையும் தெரிந்து கொள்ளுதலின் இன்றியமையாமையையும் பாரதி எடுத்துக் கூறுகின்றார். 'ஆரம்பப் பாடசாலைகளில் படித்துத் தேறும் பிள்ளைகள் அந்த அளவிலேயே ஏதேனும் தொழில் அல்லது வியாபாரத் துறையில் புகுந்து தக்க ஸம்பாத்யம் செய்யத் தகுதியுடையோராய் விடுவர்' (ப. 65) என்ற அவரது முடிவு இவற்றின் வாயிலாக அமைகின்றது. கைத்தொழில், விவஸாயம், தோட்டப் பயிற்சி, வியாபாரம் என வாழ்வியல் தேவை நிறைவுறுத்தும் கல்வியும், சரீரப் பயிற்சி எனவும் இவற்றை வரிக்கின்றார். முன்னவை அவ்வத் துறையில் பட்டறிவுடையவர்களால் அளிக்கப்படுகின்றது.

...தொழிலாளிகள், வியாபாரிகள், விவசாயிகளிலே சற்றுப் படிப்புத் தெரிந்தவர்களும் தக்க லௌகிகப் பயிற்சி யுடையவர்களுமான அனுபவஸ்தர்களைக் கொண்டு ஆரம்பப் பயிற்சி ஏற்படுத்திக் கொடுத்தல் மிகவும் நன்மை தரக் கூடிய விஷயமாகும் (ப. 65).

உடற்பயிற்சி, தோட்டத்தொழில் - நீரிறைத்தல்-தன் துணி களைத் தோய்த்தல் முதலிய 'அவசியமான காரியங்களில்' ஏற் படுவதாலும், கிளித்தட்டு முதலியன விளையாடுவதாலும் கிடைக்கின்றது எனக் கூறியும், தேசிய, மேனாட்டு முறை களையும் பாரதி ஏற்க முன்வருகின்றார்.

காற்பந்து முதலிய ஐரோப்பிய விளையாட்டுகளும் பிள்ளைகளுடைய படிப்பில் பிரதான அம்சங்களாகக் கருதப் படவேண்டும். குஸ்தி, கசரத், கரேலா முதலிய தேசீயப் பயிற்சிகளும் இயன்றவரை அனுஷ்டிக்கப்படலாம். ஐரோப்பிய முறைப்படி பிள்ளைகளைக் கூட்டமாகக் கூட்டி கபாத்து (ட்ரில்) பழக்குவித்தல் இன்றியமையாத அம்ச மாகும் (ப. 66).

படிப்பை விட உடற்பயிற்சி விளையாட்டுகள் இன்றியமை யாதன எனவும் உடல் நலம் இருந்தாலே கல்வி கற்றுப் பயன்பட முடியும் எனவும் வலியுறுத்துகிறார்.

மேனாடுகளின் பலவிதமான வளர்ச்சிக்கு-பொருளாதார ஏற்றத்திற்குத் தொழிற்சாலை விரிவும் காரணமாக அமைந்தது எனும் பொது எண்ணத்தால் போலும் பாரதியும் தொழில்வளம் பெருகுவதை வேண்டுகிறார். இதனால் தொழிற்கல்வி வளர்ச்சி யையும் அவர் வேண்டினார் எனலாம்.

ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப்போம்
குடைகள் செய்வோம் உழு படைகள் செய்வோம்
கோணிகள் செய்வோம் இரும்பாணிகள் செய்வோம்
நடையும் பறப்புமுணர் வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்
...கலை வளர்ப்போம் கொல்லர் உலை வளர்ப்போம்
.. உலகத் தொழிலனைத்து முவந்து செய்வோம் (23)

அறிவியல் கல்வியின் உச்ச வளர்ச்சியையும் வாழ்வுடன் இணைந்து அது செல்லாவிடின் பயன்பெறாததையும் நினைப்பதும் கல்வி நிலையில் கருதத்தக்கது.

கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர் பின்
கார் கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலர் ...(251)

மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம்
வானை யளப் போம் கடல் மீனை யளப்போம்
சந்திர மண்டலத் தியல் கண்டு தெளிவோம் (23)

பாரதி ஆரம்பக்கல்வி பற்றியே மிகுதியாக விரிவாக உரைத்த போதும், மேற்கல்விக்கு வாய்ப்பும் வழியும் அளிக்கும் வண்ணம் இது அமைவதால் சிறந்த பாடத்திட்ட நிலையாகக் கருதத் தக்கது. வாழ்வுக்கு ஏற்ற கல்வி, தாய்மொழிக் கல்வி என்ற இன்றியமையா அடிப்படைகளில் இத்திட்டம் உருவாகின்றது.

இவ்வாறு பொது நிலையில் பார்க்கும்போது, பாரதி கண்ட கல்வி, வாழ்க்கைக்குத் தொடர்புடையதாக, வாழ்க்கைக்குத் துணைபுரிவதாக அமைதலும், படிக்கின்ற கல்விக்கும் பண்புக்கும் தொடர்பு வேண்டுதலும் ஆக இயல்கின்றது.

தாய்மொழிக் கல்வியைக் கவிஞர் பலபட உயர்த்திப் பேசுகின்றார். தன்னோடு தொடர்புடைய ஒன்றை முழுவதுமாகத் தெரிந்தபின் பிறமொழிக் கல்விக்குச் செல்ல வேண்டும் என நினைத்திருக்கலாம். குழந்தைக்குக் கல்வி சுமையாகப் பிற மொழி அமையும் எனவும் கருதியிருக்கலாம்.

சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே - அதைத்
தொழுது படித்திடடி பாப்பா (203)

வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போபோபோ (39)

எனக் கூறும்போது, நாட்டுப்பற்றுக்கு அடிப்படையான மொழிப் பற்றும் வேண்டப்பட்டுத் தாய்மொழிக் கல்வி வலியுறுத்தப் படுகின்றது எனலாம்.

கட்டாயத்திற்காக அன்றி விருப்போடு கல்வி பெறப்படல் தேவை. விருப்பமில் கல்வி உடலையும் உள்ளத்தையும் வருத்துவதுடன் வெறுப்பையும் வீண் சிந்தனைகளையும் உருவாக்குகின்றது. சோம்பலுடைய மனம் தீமை விளைவிக்க, கல்வியால்

ஆட்படுகின்ற மனம் சீரான வாழ்க்கை தருகின்றது. 'கல்வியிலே மதியினை நீ தொடுக்க வேண்டும்' (128) என நெஞ்சத்தைக் கவிஞர் வேண்டுதல் இங்கு நினைக்கத் தக்கது. 'ஓங்கு கல்வி' (159) 'மாறு கொண்டு கல்வி தேய வண்மை தீர்ந்த நாள்' (24) போன்ற கவிஞரின் தொடர்கள், மனிதனைக் கல்வி ஓங்கச் செய்வதையும், கல்வி யழியின் எல்லாச் செழிப்பும் அழியும் என்பதையும் காட்டு கின்றன.

பிறரிடமிருந்து கல்வியைப் பெறும்போது, நல்லதையே கொள்ள வேண்டும் என்ற கவிஞரின் எண்ணம் ரவீந்திரர் வழி வந்ததாகும்.

> பிறரிடம் சாஸ்திர ஞானம் வாங்கிக் கொள்ளுதல் வெளி யபிநயம் அன்று. பிறர் கல்வியை நாம் வாங்கலாம்; கோணல் களை வாங்கக் கூடாது (கட்டுரைகள்-தத்துவம், ப.107).

பரம்பரைத் தொழிலாளராக இருப்பவர், அத்தொழில் வயப் பட்டு, அதில் ஈடுபட்டுத் தம் வாழ்நாளைக் கழித்தலால் கல்வி பெற வாய்ப்பில்லாமை விலகக் கவி பாரதி விரும்புகிறார். செல்வம் தரும் கைத்தொழிலை விட்டுவிட்டுக் கல்விகற்றலில் ஈடுபட முயலாத இவர்களைக் கவிஞர் கல்வியின்பால் நெறிப் படுத்துகிறார். கல்வி கற்று இலக்கிய வாதிகளாகாது அக் கல்வி யைத் தம் தொழிலுக்குப் பயன் கொள்ள வேண்டும் என விரும்பு கிறார். எந்த வேறுபாடுமின்றி அனைத்து மக்களும் கல்வி பெற வேண்டும்.

> சென்ற ஓரிரண்டு நூற்றாண்டுக்குள்ளே ஐரோப்பாவில் எல்லா வகுப்பினருக்கும் கல்வி பயிற்றும் முறைமை தொடங்கி வந்திருக்கிறது. இந்த சர்வ ஜனக் கல்வியென்னும் கொள்கை ஐரோப்பாவிலிருந்து உலகத்தின் பிற பகுதிகளிலும் தாவி விட்டது. இக் கொள்கையை நமது நாட்டில் நிறை வேற்றிவிட வேண்டும்...
>
> காவியங்கள் எழுதுவதற்கு மாத்திரம் படிக்காமல் பலவகை வியாபாரங்களுக்கும் தொழில்களுக்கும் வேண்டிய படிப்புகள் படித்து, அவற்றை ஊக்கத்துடன் கையாளு வோருக்கு மேன்மேலும் செல்வம் பெருகும் (தமிழருக்கு, பக். 125, 126, 127).

பெண்கல்வி பற்றியும் கருதியவர் கவிஞர் பெண் விடுதலைக்கு அடிப்படை முயற்சியே கல்வி அளிக்கப்படுவதில் தொடங்கு

வேண்டும் எனக் கூறியவர் 'பணம், பொதுக் கல்வி, விடுதலை மூன்றும் இல்லா விட்டால் அந்த நாட்டில் மானமேது' (கட்டுரைகள் - சமூகம்,ப. 128) எனக் கல்விக்கு முதன்மை கொடுத்தவர். இன்று சமுதாயம் கல்வியில் சிறந்துள்ளது. பாரதி ஒரு தீர்க்கதரிசி எனவே அவர் தற்காலக் கல்வி நிலையை முன் கண்டிருக்கிறார்.

## தொழில்

*திறமை கொண்ட தீமை யற்ற*
*தொழில் புரிந்து யாவரும்*
*தேர்ந்த கல்வி ஞானம் எய்தி*
*வாழ்வம் இந்த நாட்டிலே* (56)

வாழ்வுக்குத் தொழில் இன்றியமையாதது. சமுதாய முன்னேற்றத்திற்குத் தொழில் இல்லாமல் முடியாது. உணவு உண்ணும் ஒவ்வொருவனும் தொழில் செய்ய வேண்டும். வேலையில்லாமல் சோம்பேறியாக இருந்து உண்ணுபவன் ஒருவகையில் திருடன். ஒருவன் தன் உணவுக்காக மட்டும் தொழில் புரிவான் என்பதில்லை. தம்மைத் தாம் காப்பாற்றிக் கொள்ள முடியாத குழந்தை, முதியவர், ஊனமுற்றோர் போன்று தன்னைச் சார்ந்தவர்க்காகவும் தொழில் புரிகின்றான். தம் உணவுத் தேவையை நிறைவேற்றுவதாக மட்டும் தொழில் அமைந்து விடக் கூடாது. சமுதாயத்தின் பல தேவைகளையும் நிறைவேற்றும் வண்ணம் அது அமைதல் வேண்டும். தொழில் வளர்ச்சி நாகரிக வளர்ச்சியுடன் இணைந்து செல்கின்றது; விஞ்ஞான வளர்ச்சியைச் சார்ந்து செல்கின்றது. மனிதனின் புதுப்புதுத் தேவைகள் இன்னும் புதிய புதிய தொழில்கள் உருவாகக் காரணமாகின்றன.

தொழில் மனிதனின் திறமையை வெளிப்படுத்துகின்றது. அறிவுத்திறம், கலைநுட்பம் போன்றனவும் உடல்திறனுடன் வெளிப்படவல்லன. எத்தொழிலாயினும் மனிதன் தன்திறமையை அதில் புலப்படுத்தும்போது அவன் உள்ளநிறைவு பெறுவதுடன், தொழிலும் செம்மையானதாக அமைகின்றது. திறமையின் வன்மையே பல புதிய அறிவியல் துறை வளர்ச்சித்தொழில்களைத் தோற்றுவித்துள்ளது.

தொழில், தனக்கும், பிறருக்கும், உலகுக்கும் தீமையற்றதாக அமைய வேண்டும். தன்னலங் கருதி மட்டுமன்றிப் பொதுநல

எண்ணத்துடனும் தொழில்புரிவதன் தேவையாக இது அமைகின்றது. ஆக்கத்திற்கு நேராகப் போகவேண்டுமே அன்றித் தொழில் அழிவுக்கு நேராகச் செல்லக் கூடாது.

உழவுத் தொழிலுக்கு முதன்மை அளித்த வள்ளுவர் வழிச் சிந்தனையாளராகப் பாரதியும் காணப்படுகின்றார். வேர்வை சிந்த நிலத்தில் உழைத்தும் நிலத்தில் உரிமையில்லாதவராகக் காணப்பட்டனர் தொழிலாளிகள். நிலச்சுவான்தார்களிடம் கூலிக்காக உழைக்கும் இத்தொழிலாளரே, உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய நாட்டுக்கு நடுவெலும்பாக அமைகின்றனர். எனவே இவர் வணக்கத்திற் குரியவராகின்றனர்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டு களித் திருப்போரை நிந்தனை செய்வோம்
விழலுக்கு நீர் பாய்ச்சி மாய மாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓய மாட்டோம் (57)

உழைப்பு ஓரிடம், பொருள் பெருக்கு மற்றோரிடம், உழைப்புக் கேற்ற ஊதியம் இன்மை என்பனவும் உழவுத்தொழில்புரிந்த அக்காலச் சமுதாயத்தினரிடம் இருந்ததாகத் தெரிகின்றது.

பொருளாதார ஏற்றமும் நிறைவுமின்றி வறுமையுற்ற நாடாக இந்தியா இருந்த காலத்தில் வாழ்ந்தவர் கவிஞர். ஏழ்மை நீங்கிப் பொருள் பெருகத் தொழில்கள் காரணமாகும் என உணர்ந்தவர். தொழிற்புரட்சியால் செல்வவளம் கொழித்த உலக நாடுகளின் நிலையைக் கண்டவர். பொருட் பெருமையைப் பற்றிச் சுயசரிதையில் மொழிகின்றார்.

பொருளி லார்க்கிலை யிவ்வுல கென்றநம்
புலவர் தம்மொழி பொய்ம்மொழி யன்றுகாண்
பொருளி லார்க்கின மில்லை துணையிலை
பொழுதெ லாமிடர் வெள்ளம்வந் தெற்றுமால்
பொருளி லார் பொருள் செய்தல் முதற்கடன்... (255)

இவ்வாறு பொருள்செய்தல் தேவையாயினும், செல்வத்திற்காக ஏங்கி உயிர்விடல் கூடாது எனவும் கவிஞர் இவ்விடத்துக் கூறுகின்றார். பொருட்பெருக்கு ஆசையால் பொறாமையுற்றுத் தீவழிச் சென்ற துரியோதனனைப் பாஞ்சாலி சபதம் காட்டுவதும் இங்கு இணைத்து நினைக்கத் தக்கது. 'நிதி செய்தாரைப் பணிகுவர் மானிடர்' (325) எனச் சமுதாயத்தில், உலகியலில்

பொருட்பெருமை கூறப்படினும் அது போர் எனும் பேரழிவுக்கு நேராகச் செல்லுதலைக் கவிஞர் விரும்பினாரிலர். 'தெய்வத்தை நம்பி உடனே செல்வம் சேர்க்க வேண்டும். இது என்னுடைய கொள்கை' (கட்டுரைகள், தத்துவம், ப. 87) எனப் பொருள் செயலுக்கும் நல்வழியைக் கூறுகின்றார்.

பொருள் அறம் செய்தற்கே வேண்டியது. சங்கத் தலைவனின் பொருட்பிரிவு இவண் கருதத்தக்கது. தொழில் மேற்சென்று பொருளீட்டும் தேவை ஏற்பட்ட போதும், அதன் நிலையாமை பற்றிய எண்ணமும் காணப்படுகின்றது. பண்டைக் கருத்தாயினும் இன்றும் தொடர்வதைப் பாரதியின் தந்தை வாழ்க்கை காட்டுகின்றது.

ஈங்கி தற்கிடை யெந்தை பெருந்துயர்
  எய்தி நின்றனன் தீய வறுமையான்
ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்
  ஊணர் செய்த சதியில் இழந்தனன்...
வேர்ப்ப வேர்ப்பப் பொருள் செய்வ தொன்றையே
  மேன்மை கொண்ட தொழிலெனக் கொண்டனன்
ஆர்ப்பு மிஞ்சப் பலபல வாணிகம்
  ஆற்றி மிக்க பொருள் செய்து வாழ்ந்தனன்
நீர்ப்ப டுஞ்சிறு புற்புத மாமது
  நீங்க வேயிளங் குன்றித் தளர்ந்தனன் (254, 55)

வியாபாரம் பொருள் செய்வதற்குரிய தொழிலாக அமைதல் இங்குக் குறிக்கப் பெறுகின்றது. 'தொழில் ஊக்க'த்தில் உயர்ந்த தான பாரத நாடு (21), பண்டமாற்று முறையில் தன் நாட்டினுள்ளும், பிற நாடுகட்கு இங்குள்ள விளைபொருட்களை, கனிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதன் வாயிலாகவும் தொழில்வளம் பெருக்க முடியும். தொழிலும் வியாபாரமும் இணைந்து பொருட் செயல் வகைக்கு உதவுகின்றன.

வெட்டுக் கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்
எட்டுத் திசைகளிலுந் சென்றிவை விற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டு வருவோம்
முத்துக் குளிப்பதொரு தென் கடலிலே
மொய்த்து வணிகர் பல நாட்டினர் வந்தே
நத்தி நமக்கினிய பொருள் கொணர்ந்து
நம்மருள் வேண்டுவது மேற்கரையிலே (22)

நாட்டின் கனிம வளங்களைப் பயன்படுத்தி, நிலமும் நீரும் தரும் பொருட்களைக் கண்டெடுத்து வணிகத் தொழில் வாயிலாக உலக நாடுகளுடன் வியாபாரம் புரிந்து பொருள் செய்வதாக இது அமைகின்றது. இத்துடன் அமைந்துவிடாது கைத்தொழில் போற்றிக் கைவினைப் பொருட்களை ஆக்கி, நாட்டின் பண்பாடும், நாகரிகமும் தனித்தன்மையும் புலப்பட ஆக்கி அவற்றை விலை கூறுதலாகவும் அமைகின்றது.

பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவிப்போம்
கட்டித் திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவை கொடுப்போம் (22)

இளைஞர்க்குக் கல்வியும் கல்வி பெற்றவர்க்குத் தொழிலும் இன்றியமையாதது என்பதால் இரண்டையும் இணைத்து மொழி கின்றார் கவிஞர். 'ஆலைகள் வைப்போம் கல்விச் சாலைகள் வைப் போம், (22) என்பதுடன் தொழிலாளிகள் கல்வி பெறுவதையும், கல்விப்பயிற்சி வழிப்பட்ட தொழில்வளர்ச்சியையும் வேண்டுகிறார் (தமிழருக்கு, ப 124—127)

இச்சூழலில், யார் தொழிலாளர் என்பது பற்றிய சிந்தனை யையும் கவிஞர் தருகின்றார் உடலால் மட்டுமன்றி அறிவால் உழைப்பவரும் தொழிலாளர்களே. முதலாளிக்கு ஆட்பட்டு வேலைகள் செய்பவர் அனைவரும் தொழிலாளியே. எழுத்துச் சம்பந்தமான வேலைகள் செய்கின்றவர், 'வெள்ளைச் சட்டைப்' பணி செய்கின்ற வரும் கூடத் தொழிலாளராகக் கணிக்கப்படுவது காலத்தால் பிற்பட்ட கொள்கையாகும் (தமிழருக்கு, ப. 129).

> சரீரத்தாலாகட்டும், புத்தியாலாகட்டும், முதலாளிக்கு உட்பட்டு வேலை செய்கிறவர்கள் எல்லாருமே தொழி லாளிகள்...
>
> குமாஸ்தாக்கள், உபாத்தியாயர்கள் முதலியவர்களும் தொழிலாளிகளே...எனவே என் போன்ற நூலாசிரியர்களும் தொழிலாளிகளே. முதலாளி கூட, ஆள் நியமித்தல், வேலையை மேற்பார்த்தல், வியாபார சம்பந்தமான கணக்கு களைக் கவனித்தல் முதலிய செய்கைகளால் தொழிலாளி ஆகிறான் (தமிழருக்கு, ப. 127).

முதலாளி, தொழிலாளி என்ற நிலைவரும்போது, அடிமைத் தொழில்நிலை உருவாகுதல் கூடாது எனக் கவிஞர் விரும்புகின்றார் எனலாம். தொழிலில் கீழ்மை, மேன்மை கருதப்படுவதால் வரும் வேறுபாடுகள் ஏற்படக்கூடாது எனவும் ஆசைப்படுகிறார் எனக் கூறலாம். மறவருக்கும், குறவருக்கும், புலையருக்கும், பறையருக்கும் கவிஞர் விடுதலை வேண்டுவது இங்கு எண்ணத் தக்கது. மானமுடைய எத்தொழிலும் தீதற்றது என்ற உணர்வு எழுகின்றது. மேன்மை அடையும்படி உதவும் எத்தொழிலும் சிறந்ததே; 'மேன்மை நிலைபெற வேண்டுமானால் கைத் தொழில்கள் பெருகும்படி செய்ய வேண்டும்' (தமிழருக்கு, ப. 75). என்பது கவிஞர் எண்ணம்.

தொழிலில் தாழ்வு-மேன்மை இல்லை எனும் எண்ணம் 'மிளகாய்ப்பழச் சாமியா'ரில் அமைகின்றது. புறத்தே போய் ஆடவன் செய்யும் தொழிலும், வீட்டினகத்திருந்து பெண் செய்யும் தொழிலும் வேறுபட்டனவாகத் தோன்றினும் அவ்வாறன்று எனும் எண்ணம் இதன்கண் வெளிப்படுகின்றது.

> தெருவிலே வண்டி தள்ளி நாலணாக்கொண்டு வருவது மேல் தொழில் என்றும், அந்த நாலணாவைக்கொண்டு நாலு வயிற்றை நிரப்பி வீடுகாப்பது தாழ்ந்த தொழிலென்றும் நினைக்கிறான். பெண்கள் உண்மையாக உழைத்து ஜீவிக்கிறார்கள். ஆண் மக்கள் பிழைப்புக்காகச் செய்யும் தொழில்களில் பெரும்பாலும் பொய் சூது களவு ஏமாற்று வெளி மயக்கு வீண்சத்தம் படாடோபம் துரோகம் கொலை யுத்தம்!
>
> இந்தத் தொழில்கள் உயர்வென்றும் சோற்றுக்குத் துணி தோய்த்துக் கோயில் செய்து கும்பிட்டு வீடு பெருக்கிக் குழந்தைகளைக் காப்பாற்றும் தொழில் தாழ்வென்றும் ஆண் மக்கள் நினைக்கிறார்கள் (கதைக்கொத்து, ப. 159).

தொழிற்சங்கங்கள், தொழிலாளருக்குத் தொழிலுக்கு உரிய ஊதியம் அளித்தல் என்பது பற்றியும் அங்கங்குப் பேசுகின்றார் பாரதியார். செல்வந்தர்கள் தம் செல்வத்தைக் குவித்து வைத்துக் கொண்டிராது, தொழில்கள் தோற்றுவித்து, அவை செய்பவர்க்கு உரிய கூலி கொடுத்து, நல்ல லாபம் உருவாக்க வேண்டும் என்கிறார் (தமிழருக்கு, ப. 75). தொழிற் சங்கங்களின் நோக்கம் சம்பள ஏற்றம், வேலை நேரக் குறைப்பு என மட்டும் செல்லலாகாது; தொழிலாளர்க்குக் கல்வியூட்டப் பகற் பள்ளித்

கூடங்களும் இராப் பள்ளிக்கூடங்களும் அமைக்கவும் முயற்சி யெடுக்க வேண்டும் (தமிழருக்கு, ப. 126).

கவியாக்கத்தையே தொழிலாகக் கொண்டபோதும் கவிஞர் வரம் கேட்கும்போது தொழில் வளர்ச்சியையும், அதற்குத் தேவையான செல்வத்தையும், அதில் ஈடுபடும் சூழலையும் கூட்டு முயற்சியையும், அதனால் வரும் ஈடேற்றத்தையும் வேண்டு கிறார்.

எண்ணுங் காரியங்க ளெல்லாம் - வெற்றி
 யேறப் புரிந்தருளல் வேண்டும் - தொழில்
பண்ணப் பெருநிதியம் வேண்டும் - அதிற்
 பல்லோர் துணை புரிதல் வேண்டும்...
கூடுந் திரவியத்தின் குவைகள் - திறல்
 கொள்ளுங் கோடிவகைத் தொழில்கள் - இவை
நாடும் படிக்குவினை செய்து - இந்த
 நாட்டோர் கீர்த்தியெங்கு மோங்கக் - கவி
 சாடுந் திறனெனக்குத் தருவாய் (132-33)

தொழிலில் எப்போதும் துரிதம் வேண்டும். காலாகாலத்தில் செய்யப்படும் வினைகளே வெற்றிக்கு அடிகோலுகின்றன. 'வேளையிலே நமது தொழில் முடித்துக் கொள்வோம்' (270) எனக் கவிஞன் மனஈடேற்றச் சூழலைக் குறிப்பது, எத்தொழி லுக்கும் பொருத்தமானது எனலாம்.

தொழில்புரிபவர் தன்னலப் பயன் கருதாது உழைத்தலின் தேவையைக் கவிஞர் கீதையின் வழிநின்று வலியுறுத்துகிறார்.

...உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையுந் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்க ... (288)

எனச் சீடனாக வந்த கண்ணன் கூறிய சொற்கள் கர்மயோகத்தை விளக்குகின்றன. மனிதன் எப்போதும் செயல்புரிபவனாக, தொழில் செய்பவனாக அமைய வேண்டும். திறமையான தொழில், நல்லசெயல் எனக் கடமை வழிப்பட்டுச் செல்லும் போது, முடிவும், பயனும் பற்றிக் கவலைப்படாது இயங்குதல் வேண்டும். தொழில் ஏற்ற இறக்கங்கள் வரும்போது மனத் துன்பமடையாது செயல்படுதல் தேவை.

> மனிதன் தொழில் செய்து தான் தீர வேண்டும்...நீ தொழில் செய்யுமிடத்தே ஏற்படும் கஷ்ட நஷ்டங்களுக்கு மனமுடைந்து ஓயாமல் துன்பப்பட்டுக் கொண்டே தொழில் செய்யும் உலகத்தாரைப்போலே தொழில் செய்யாதே... 'உனக்குத் தொழில் செய்யத்தான்அதிகாரமுண்டு.பயன்களில் உனக்கு எவ்வித அதிகாரமும் எப்போதுமில்லை' .. 'கர்மத்தின் பயனிலே பற்றுதலின்றித் தான்செய்ய வேண்டிய தொழிலை எவன் செய்கிறானோ அவனே துறவி; அவனே யோகி'. (பகவத்கீதை, பக். 4-5).

தொழில் உடலுக்குரியதாக அமையினும், உள்ள ஈடுபாடு இருந்தால் தான் அது சிறக்கும். உள்ளத்தின் தொழிலாகச் சிந்தனை அமைகின்றது. அறிவுபரமான தொழிலியக்கத்திற்கு அதுவே மூலமாகின்றது. உடல், உள்ளத் தொழில்கள் ஒருபாலாக உயிர்த் தொழிலையும் கவிஞர் நினைக்கின்றார் எனலாம். இறை வணக்கமும் தொழிலாகக் குறிக்கப்படும் பாங்கு இச்சிந்தனையை எழுப்புகின்றது.

மனிதன் இயங்காமலிருந்தாலும் எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பது உயிர்மூச்சு. எனவே உயிர் தொழில்புரிந்து கொண்டிருக்கின்றது; அவ்வுயிரே சக்தி தருவது; சக்தியாக அமைவது, உயிரின் ஆற்றல் இறைக்கலப்பால் மிகுகின்றது. உயிர் மூச்சுப் போன்றே எப்போதும் இறைமை நம்முள் இயங்கும் போது அதுவே இறையை வணங்கும் தொழிலாகி விடுகின்றது. 'கந்தன் வெற்றி வேலை வணங்குவது எமக்கு வேலை' (107) எனக் கவிஞர் கூறுவதில் இவ் எண்ணம் தொனிக்கின்றது. அன்றியும், 'செய்யுந் தொழிலுன் தொழிலே காண்' (92),

> .. உயிரெலாம்
> இன்புற் றிருக்க வேண்டி நின்னிருதாள்
> பணிவதே தொழிலெனக் கொண்டு
> கணபதி தேவா வாழ்வேன் களித்தே (94)

எனப் பிறவிடத்தும் இது வலியுறுத்தப்படுகின்றது. இறைவழிபாட்டுத் தொழிலும் தன்னலமின்றி உலக உயிரின் இன்ப நாட்டத்தில் நிகழ்கின்றது. இதனால் தொழிலாளர்களே கண்கண்ட தெய்வமாகின்றனர்—'தேட்டமின்றி விழியெதிர் காணும் தெய்வமாக விளங்குவிர் நீரே' (213) எனப் பல்லாயிரம் தொழில்புரியும் தொழிலாளிகளைக் குறிக்கின்றார்.

.. கண்ணனால்
பெற்றுவரு நன்மையெலாம் பேசி முடியாது
கண்ணை இமையிரண்டும் காப்பது போல் என் குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான் (282)

சமுதாயம் பல குடும்பங்களாலானது. சமுதாயப் பெருங் கடலுள் ஒவ்வொரு குடும்பமும் நீர்த்துளி போன்றது. ஒன்றன் இயல்பு மற்றதில் புலப்படும் வண்ணம் அமைவது. தனிமனிதன் வாழ்வு சமுதாய வாழ்வை ஈடேற்றுவதுபோல, குடும்ப வாழ்வு சமுதாய ஆக்கத்தில் செல்வாக்குக் கொள்கின்றது.

குடும்பம் தாய், தந்தை, குழந்தைகளாலாவது. தனிக் குடும்ப மாக அன்றிக் கூட்டுக்குடும்பங்களாக அமையும்போது உறவு நிலை பரந்து பலரை உட்கொள்ளுகின்றது. அதுவே ஒரு சிறு உலகமாகத் தோற்றம்தருகின்றது. குடும்ப வாழ்க்கை பற்றிய எண்ணம் பாரதியில் மிகுதியாக வெளிப்படாதபோதும் கண்ணன் பாட்டில் பல் உறவு நிலையில் கண்ணனைக் கவிஞர் மொழியும் போது சில கருத்துகள் புலப்படுகின்றன. உறவுகள் மட்டுமன்றி உதவியாக அமையும் சேவகரும் குடும்பத்தில் இன்றியமையா இடம்பெறுவதைக் காட்டுகின்றார்.

குடும்பத்தில் அமைதி நிலவுவது இன்றியமையாதது. எண்ண முரண்பாடுகள் காரணமாகப் பிரிவினைகள் ஏற்படுவது தவிர்க்கப் பட வேண்டும். அதுவும் ஆழமுள்ள நற்கருத்துகள் காரணமாக வன்றி மிகச் சாதாரண—தேவையற்ற விஷயங்கள் பற்றிப் பிரச்சி னையும் பிளவும் வருதல் கூடாது. குடும்பத்தில் இணைந்திருக்க வேண்டிய, ஒன்றி உழைக்க வேண்டிய தந்தையும் தனயனுமே இவ்வாறு மனமாறுபாடு கொள்வது பொறுக்கவியலாதது வெறுத்தற்குரியது.

நெஞ்சு பொறுக்குதிலையே - இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்
கொஞ்சமோ பிரிவினைகள் - ஒரு
கோடி என்றால் அது பெரிதாமோ
ஐந்துதலைப் பாம்பென்பான் - அப்பன்
ஆறுதலை யென்று மகன் சொல்லிவிட்டால்
நெஞ்சு பிரிந்திடுவார் - பின்பு
நெடுநாள் இருவரும் பகைத்திருப்பார்

சின்னச் சின்ன விஷயங்களில் சிறுகீறல்களாக வரும் கருத்து வேறு பாடு, பின்பு மிகுந்து குடும்பங்கள் சின்னாபின்னமாகச் சிதற ஏது வாகின்றது. குடும்பத்தில் இன்பமும் மகிழ்ச்சியும், அமைதியும் நிலவாவிட்டால் அதன் அங்கத்தினர் புறவாழ்விலும் அதைப் பிறருக்கு அளிக்க முடியாதவராகின்றனர்.

ஒரு குடும்பத்தில், தாய் தந்தையரின் பொறுப்பு மிகுதி. அவர்கள் அன்பில் சிறந்தவர்களாக இருக்கும்போது தான் குடும்பத்தில் ஒழுங்கு நிலவும். அச்சூழலில்தான் அவர்களால் ஒழுக்கமுடைக் குழந்தைகளைப் பெற்றுப் பேணி வளர்த்த முடியும். அதனால் வருங்காலம் சிறந்த, முழுமையுடைய குடிமக்களாக அவர்களைக் கொள்ளும். வீட்டு நன்மைக்காக இணைந்த கணவன் மனைவியரின் இப்பொறுப்பைப் பாரதியார் 'குடும்ப நலம்' என்பதில் கூறுகின்றார்.

> கிரக க்ஷேமாபிவிருத்தியின் பொருட்டு ஒன்று சேர்ந்திருக்கும் கணவனும் மனைவியும் தம்மால் கூடியவரை ஒருவருக்கொருவர் ஹிதம் தேடுதல் அவர்களின் கடமையாகும். இன்சொல், வெடுவெடுப்பில்லாமை, சிறிய துன்பங்களால் மனக் குழப்பமடைந்து விடாதிருக்கும் திறமை, மற்ற உயிர்களுக்கு இயன்றவரை கஷ்டமேற்படுத்தாம விருக்கவேண்டுமென்ற ஆசை—யென்பவை இருக்குமானால் எத்தனையோ ஹிதம் உண்டாகக் கூடும்...தாய் தந்தையர்கள் தமது குழந்தைகளுக்குச் சிறுபிராய முதலே அவ்வித நற்குணங்கள் ஏற்படுமாறு பழக்கவேண்டும் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப. 88).

குடும்பத்தில் ஒருவன் பெறும் அனுபவம், பட்டறிவு அவன் புற வாழ்விலும் பிரதிபலிக்கின்றது. குடும்பத்தில் உண்மை அன்பு பாராட்டுபவன், வெளியிலும் அன்பு புலப்படுத்துகிறான். தன் குடும்பத்தினர்க்காக உழைக்காதவன் பிற எவருக்காகவும் உழைக்கத் தயாராக மாட்டான். வலியற்றதன் குழந்தைக்கும் சகோதரனுக்கும் உதவாதவன் ஊராருக்கு உதவுவது அருமை. குடும்பம் இந்நிலையில் எவ்வளவு இன்றியமையாதது என்பது சிந்தித்தற்கு உரியது.

> தேசமென்பது குடிகளின் தொகுதி
> தேசக் கல்விக்குக் குடும்பக் கல்வியே வேர்

வீட்டுப் பழக்கந்தான் நாட்டிலும்தோன்றும். வீட்டில் யோக்யன் நாட்டிலும் யோக்யன்; வீட்டில் பொறுமையுடையவன் நாட்டிலும் பொறுமையுடையவன்.

> குடும்பம் நாகரீகமடையாவிட்டால் தேசம் நாகரீகமடையாது. குடும்பத்தில் விடுதலை இராவிடில் தேசத்தில் விடுதலை இராது (கட்டுரைகள், சமூகம், ப. 44)

எனத் தேசியக் கல்விபற்றிக்கூறும் சூழலில் கவிஞர் தருவது இங்கும் சிந்தித்தற்குரியது. வீட்டில் மனைவியின் பொருளைத் திருடுபவன் வெளியில் கோவிற் பொருளைக் கையாடக் கூசமாட்டான் எனவும் தான்பெற்ற குழந்தைகட்கிடையே வேற்றுமை பாராட்டுபவன் ஊரில் நியாயாதிபதியாகச் செயல்பட முடியாது எனவும் கவிஞர் தொடர்ந்து விளக்குகின்றார்.

வீட்டு வாழ்க்கையில் சகோதர சிநேகம் இன்றியமையாதது. உலக உயிர்களனைத்தினிடமும் அன்பு கொள்ள இது முதற்படியாக அமைகின்றது. உடன் வயிற்றோர் தம்முள் அன்பு கொண்டு ஒருவரை ஒருவர் தாங்கி அமையும்போது குடும்பப் பிணைப்பு வலிமையுடையதாக இருக்கும். இணைந்து வலிமையுடையவராகும் போது பகைமையை எதிர்த்து வெல்லும் பேராற்றல் கிடைக்கின்றது.

உடன் பிறந்தவர்களைப் போலே—இவ்
வுலகினில் மனிதரெல் லாரும்
திடங்கொண் டவர் மெலிந்தோரை.. இங்குத்
தின்று பிழைத்திட லாமோ...
மெலிவு கண்டாலும் குழந்தை-தன்னை
வீழ்த்தி மிதித்திட லாமோ
தம்பி சற்றே மெலிவானால்-அண்ணன்
தானடிமை கொள்ள லாமோ (206,207)

அன்றியும், பிறவிடத்தும், 'சொந்தச் சகோதரர்கள் துன்பத்திற் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடீ...செம்மை மறந்தாரடீ' (69) எனக் கூறுகின்றார்.

பெற்றோரான தாய்தந்தையர் காரணமாக உடன் வயிற்றோராய் அமையும் குழந்தைகள் போன்று, படைத்தோனான இறைவன் பற்றி மக்கள் சகோதரராக அமைகின்றனர். இறைப் பெற்றோராகச் சக்தியை, கண்ணனைக் கவிஞர் காட்டுவது உலகமனைத்தும் ஒரு குடும்பம் என்ற உணர்வினை ஏற்படுத்துவதாக உள்ளது.

பூமிக் கெனைய னுப்பினாள்-அந்தப்
புத மண்டலத்திலென் தம்பிக ளுண்டு (278)
பாடு தண்டைக் குழந்தை தனக்கிதம்
பண்ணும் அப்பன் இவனென் றறிந்திடும் (134)

என இறைமையே தாயும் தந்தையும் ஆகின்றது.

பாஞ்சாலி சபதம், ஐவரைப் பிரிவினையில்லாதவராகக் காட்டினும், தாயாதிகளாகி மாறுபாடு கொண்ட உறவினரைக் காட்டுகின்றது. 'சூதும் பொய்யும் உருவெனக் கொண்ட துட்ட மாமன்' (323) காரணமாக ஏற்பட்ட பிரிவினையை, பிளவுகளைத் தருகின்றது. குடும்பச் சண்டைகள் பெரும்போருக்கும் அழிவுக்கும் காரணமாவதைக் காட்டுகின்றது.

குடும்பத்துக்கு இடனாக அமையும் வீடு பாதுகாப்பும் விடுதலையும் உடையதாக அமையவேண்டும். குழந்தைகளும் பெண்களும் அரணாகக் கருதும் வீட்டை ஆண்களும் அவ்வாறே கொள்ளவேண்டும். 'அச்சங்கள் இல்லாமல் விடுதலைப்பட்டு வாழத்தகுந்த இடத்துக்கு வீடு என்ற பெயர் கொடுத்தனர்' (கட்டுரைகள், சமூகம், பக்.44,45) என்பது கவிஞர் கருத்து. இப்பண்புகள் நிறையாதபோது வீடு வெறுப்புத் தருகின்றது. 'வீடுறாவணம் யாப்பதை வீடென்பார்' (253) என்ற கவிஞரின் சுயசரிதை எண்ணம் இங்குக் கருதத்தக்கது. விடுதலை இல்லா வீட்டுநிலையைக் குடும்பத்தினரை ஒருவர் அடிமைப்படுத்தும் சூழலாகத் தருகின்றார் பாரதியார்.

> வீடு துயரிடம் ஆவதற்குக் காரணம் விடுதலையும் அன்பும் இல்லாமையே. வீட்டில் அண்ணன் தம்பிகளையும் தாய் தந்தையரையும் அக்கா தங்கைகளையும் பெண்டு பிள்ளைகளையும் அடிமைப்படுத்தி ஆளச் சதி செய்யும் ஜனங்களின் கூட்டங்களே தேசங்களையும் அடக்கி அடிமையாக்கி ஆளச் சதி செய்கின்றன (கட்டுரைகள், சமூகம், ப. 45).

கல்வியும், தொழிலும் மன விரிவையும் மன நிறைவையும் தந்து குடும்பத்தைச் செவ்வியுடையதாகச் செய்கின்றன. இதனால் குடும்பங்கள் கலைக்கோயில்களாக அமைகின்றன (158). இல்லறம் சிறக்க, அறம் செய்தலும் இன்றியமையாததாகின்றது. அறம் ஒன்றே மெய் இன்பம் தரவல்லது (256) என்ற கூற்று இதற்கு அரண் செய்கின்றது.

—8—

குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும், அதன் நன்மையைக் கருதும் பொறுப்புடையவராக இருக்கவேண்டும். குடும்பத்தினர் அதைச் செய்யாதபோது, உதவிக்கு வரும் சேவகன் அவற்றை ஏற்று நடத்தவேண்டியுள்ளது; அல்லது. பொறுப்புள்ள ஒரு ஊழியன் குடும்ப அங்கத்தினன் ஆகின்றான் எனலாம். குடும்பத்திற் காகச் செய்யவேண்டிய எந்த வேலையையும் தகுதிக் குறையாய் நினைக்காது தேவைகளை யனைத்தும் நிறைவு செய்யும் நிலை யாக இது அமைகின்றது.

கண்ணை இமையிரண்டும் காப்பதுபோல், என் குடும்பம்
வண்ணமுறக் காக்கின்றான். வாய்முணுத்தல் கண்டறியேன்.
வீதி பெருக்குகிறான்; வீடு சுத்த மாக்குகிறான்;
தாதியர்செய் குற்றமெலாம் தட்டி யடக்குகிறான்;
மக்களுக்கு வாத்தி, வளர்ப்புத்தாய், வைத்தியனாய்
ஒக்க நயங் காட்டுகிறான்; ஒன்றுங் குறைவின்றிப்
பண்டமெலாம் சேர்த்து வைத்துப் பால்வாங்கி மோர்வாங்கிப்
பெண்டுகளைத் தாய்போற் பிரியமுற ஆதரித்து (282)

ஒரு வீடு, வீடாக அமைவதற்குரிய அனைத்தும் இறைமைத் தொடர்பில் அமைகின்றது எனும் எண்ணத்தையும் இங்குக் கொள்ளலாம். இறைவன் தலைவனாக, பொறுப்பேற்று நடத்தப் பெறும் குடும்பத்தின் செவ்வி முழுமையாக இது அமைகின்றது எனலாம்.

## காதல்

செவ்விது செவ்விது பெண்மை—ஆ
செவ்விது செவ்விது செவ்விது காதல்
காதலி னாலுயிர் தோன்றும்—இங்கு
காதலி னாலுயிர் வீரத்தி லேறும்
காதலி னாலறி வெய்தும். இங்கு
காதல் கவிதைப் பயிரை வளர்க்கும் (220)

உயிரினங்கள் அனைத்திற்கும் காதல் உயிராக அமைகின்றது. செயற்படுவதற்கு அதுவே ஊக்க சக்தியாகவும் அமைகின்றது. காதலே, அன்பு, பற்று, பக்தி எனப்பல வடிவம் கொண்டு பரக்கின் றது. ஆண் பெண்ணிடையே அமையும் காதல்; குடும்பத்தினரிடம் அமையும் அன்பு; அயலாரிடம் ஏற்படும் அருள், நாடு, மொழி

என்பனவற்றிடம் தோன்றும் பற்று; இறைவன் மாட்டுக் கொள்ளும் பக்தி என. மனத்தில் ஏற்படும் அன்புணர்வே கருத்துப் பரிமாற்றத்துக்குக் காரணமாக அமைகின்றது. பகைமை பாராட்டாது சமூகம் முழுவதும் இணைந்து வாழ வாயிலாகின்றது.

காதல், துன்பமில்லா நிலையை உருவாக்குகின்றது. சொற்ப வாழ்நாளும் இன்பமாகக் கழிய ஏதுவாகின்றது. இக்காதல் உடல்த் தொடர்பானதன்று; அறிவுத் தொடர்பானது. ஏனெனில் உடல் வயப்பட்ட காதல் அழிகின்றது, மாறுகின்றது, இழிவுடையது. அறிவு வழிப்பட்டது நிலைபேறுடையது, மாறாதது, சிறந்தது. பாரதியின் 'காதல்' கட்டுரை இவ்வெண்ணத்தைத் தாங்கி நிற்கிறது.

> ''காதல்'' என்ற சொல்லை நாம் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் பொதுவாயிருப்பதாகிய ''காமம்'' என்ற அர்த்தத்திலே வழங்கவில்லை. அறிவு சம்பந்தப்படாத வெறும் உடலாசை ''காதல்'' அல்லது ''பிரேமை'' என்று சொல்வதற்குத் தகுதியுடைய தில்லை.
>
> அறிவினாலும், அபீஷ்டங்களினாலும் நெஞ்சொற்றுமை ஏற்பட்டு, அன்றிற் பறவைகள் உடற்பிணைப்புற்றிருப்பது போல் எப்போதும் அறிவுப் பிணைப்புண்டாகி வாழும் வாழ்க்கையே பிரேமை வாழ்க்கை யாகும் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப. 85).

உடற் காதலினும் மிக மேலானதான உள்ளக்காதல் அல்லது அறிவுக்காதல் என்பதை விடவும் உயர்ந்ததாக உயிர்க்காதல் காட்டப்படுகின்றது. உயிர்க்காதல் என்பது கவிஞரின் எண்ணப்படி கற்புடைமை. சிந்தையாலும் பிறரைத் தொடாத சீர்மை; எத்தனை துன்பங்கள் வரினும் பிறழாத சீரியநிலை; யமன் கொண்டுபோன உயிரையும் மீட்கும் வன்மை. உயிர்க்காதல் எவ்வாறு ஏற்படுகிறது எனக் கூறுவது கடினமெனினும் அது உயர் காதலாக அமைகின்றது.

> உடற் பிரேமையைக் காட்டிலும் அறிவுப் பிரேமை விசேஷமான தென்றும், அறிவுப் பிரேமையைக் காட்டிலும் ''உயிர்க்காதல்'' அல்லது ''ஆத்ம பிரேமை'' சிறந்த தென்றும் இனிது விளங்கும். இந்த ஆத்ம ப்ரேமையைத் தான் கற்புடைமை என்று சொல்கிறார்கள். இந்த உயிர்க்

காதல் எவ்வாறு ஏற்படுகிற தென்பதை ஊஹித்துச் சொல்வது கஷ்டமாக இருக்கிறது. ஒருவேளை உடல், அறிவு என்பவை இதற்கு ஒரு விதமான பாதையாக இருக்கலாம். ஆனால் உடலொருமிப்பு, அறிவொருமிப்பு என்பவற்றால் ஆத்மக்காதல் முற்றிலும் ஏற்பட்டுவிடாதென்பதைப் பற்றிச் சந்தேகமே கிடையாது (சக்ரவர்த்தினி கட்டுரைகள், பக். 86, 87).

பாரதியின் குயில் பாட்டு, காதலையே கருவாகக் கொண்டு இயல்கின்றது. ஏக்கங்களை அமைதிப்படுத்துவதாகவும், விருப்பங்களை நிறைவேற்றுவதாகவும், உயர்ந்த அனுபவம் அளிப்பதாகவும் இக்கவிஞன்—குயில் காதல் அமைகின்றது. காதல் இல்லேல் சாதல் என்ற நிலையில் இது உயிர்க்காதலாகி இணைகின்றது. காதல் அருளாக அமைவது பிறருக்காகத் தன்னையே கொடுக்குமளவுக்குத் தியாகவுணர்வுடையது. நெஞ்சத்து இருள் நீக்கும் நல்லொளியாக அமைவது. துன்ப எல்லையிலிருந்து மனிதனை மேனோக்கிக் கொணரும் இன்ப வல்லமையுடையது. நலிவுகளில்லாத நாதமாக, சேதமற்றதாக இனிமை தருவது. தடையற்ற தாளமாகிச், சுருதி லயத்துடன் செல்லும் இசையாக அமைவது. பழுதற்ற பண்ணாகிப் புலன்களுக்கு நல்லின்பம் அளிப்பது. புரையற்ற புகழாகிக் காணப்படுவது. உடைவில்லாத உறுதியாக இயல்வது. வாடலற்ற கூடலாக அமைவது. நல்ல அமைப்புடைய குழல்போன்று இனியது காதல் வாழ்வாக அமைவது.

காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன் (398)

என்பதில் இவ்எண்ணம் புலப்படுகின்றது. காதல் தன்னை இழப்பது.

மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ
இனிதிக் குயிற்பேட்டை என்றும் பிரியாமல்
காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ
நாதக் கனலில் நம்முயிரைப் போக்கோமோ (396)

'காதல் வழி தான் கரடுமுரடா மென்பார்' (400) எனும் குயிலின் கூற்று வாழ்வியல் உண்மையாகவும் அமைகின்றது.

காதல் வாழ்வைக் கவிஞர் கண்ணன் பாட்டிலும் அமைத்துத் தருகின்றார். காந்தனாகவும், காதலனாகவும், காதலியாகவும்

கண்ணனைக் கண்டு கொண்டு பாடுதல் அகத்தின் களவு தழுவிய நிலையில் பொருத்திக் காணத்தக்கது. சிருங்கார ரசம், இரவுக் குறி, குறியிடம் செல்லல், பாங்கி தூது, பிரிவாற்றாமை என்பன காதலனாகக் கண்ணனைக் காட்டும்போது பாடல் கூறாகின்றன. காட்சி, குறியிடம் தவறுதல், நாணிக் கண்புதைத்தல் போன்ற அகநெறிகள் காதலியாகப் பாடுவதில் இணைகின்றன. காதல் வாழ்வின் ஆசைகள், தவிப்புகள், இன்பங்கள், இடையூறுகள் என்பன அமைகின்றன. ஏட்டில் காதலை விரும்பி வாழ்வில் அதை விரும்பாத நிலையை,

> இங்கு புவிமிசைக் காவியங்க ளெல்லாம்
> இலக்கியமெல் லாங்காதற் புகழ்ச்சி யன்றோ
> நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
> நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
> ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
> ஊரிலே காதலென்றால் உறுமுகின்றார்
> பாடைகட்டி அதைக் கொல்ல வழிசெய்கின்றார் (769)

எனச் சுயசரிதையில் காட்டிய கவிஞர், காதல் நிறைவேறும் நிலையைக் கண்ணன் பாட்டில் காட்ட விரும்புகிறார் எனலாம். களவு முன்னும் கற்பு பின்னுமாக அமைவது புலப்படுகின்றது.

> சாத்திரம் பேசுகிறாய் - கண்ணம்மா
> சாத்திர மேதுக்கடீ
> ஆத்திரங் கொண்டவர்க்கே—கண்ணம்மா
> சாத்திர முண்டோடீ
> மூத்தவர் சம்மதியில்—வதுவை
> முறைகள் பின்பு செய்வோம்
> காத்திருப் பேனோடீ—இதுபார்
> கன்னத்து முத்த மொன்று (302)

பெண்மையின் முன்னேற்றத்தையும் பெண்கள் வாழ்க்கையின் சீர்நிறைவையும் விரும்பிய கவிஞர், அவ்வெண்ணத்தைப் பரப்ப வாயிலாகப் பெண்ணால் வரும் காதலையும் பாடிப் பரவுகின்றார் எனலாம். மனித வாழ்வின் இன்பத்திற்குக் காரணமாக, ஆதார மாக அமையும் பெண்மை அனுபவிப்பதற்கு மட்டுமானது அன்று; ஏத்தலுக்கும் போற்றுதலுக்கும் உரியது; ஆதரவு அளிப்பதற்கும் ஆராதனை செய்வதற்கும் ஏற்றது என்ற மனப்பாங்கை ஏற் படுத்த முயல்கின்றார். காதல் இன்பம் தரும் பெண்மை எல்லா

வகை இன்பங்களுக்கும் ஏற்றங்களுக்கும் வழிவகுப்பதைப் புலப் படுத்துகின்றார். உடலும், உள்ளமும், உயிரும் உயர் காதலால் இன்பத்தோய்வு பெறும்போது எல்லா நன்மைகளும் கிடைக்கும் வண்ணம் மானுடனால் செயற்பட முடிகின்றது. இவ்வாழ்வின் நிறைவுகளுடன் 'சாவாமை'யும் பெறக் காதல் களனாகின்றது.

காதலினால் மானுடர்க்குக் கலவி யுண்டாம்
　　கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானுடர்க்குக் கவிதை யுண்டாம்
　　கான முண்டாம் சிற்பமுதற் கலைகளுண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத் தீரே
　　அஃதன்றோ இவ்வுலகத் தலைமை யின்பம்
காதலினால் சாகாம லிருத்தல் கூடும்
　　கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்
(268 - 69)

இறைவனின் காதல் சக்தியாகி இயற்கையை உருவாக்கிச் செயற் படுத்தியதுபோல, மனிதனின் காதல் ஆற்றலாகிக் கலைகளை ஆக்குகின்றது. மனிதனின் பண்பாட்டு, நாகரிக வளர்ச்சி கலை களில் புலப்படுகின்றது என்றால், அதனை ஆக்கும் தலைமை இன்பம் போற்றப்படல் ஏற்புடையதே. தீமையை அழிக்கும் அன்பு போலத் துயர்களைக் களைகின்றது காதல். மனத்தை அரிக்கும் கவலைகளை மாற்றுகின்றது; மறக்கச் செய்கின்றது; ஆற்று கின்றது. 'காதல் மூத்தல் கெடுக்கும் அமிழ்தம்' (208) ஆகிய பெண்மை பற்றி அவள் காதலும் சாவாமை அளிக்கிறது.

மனிதனை மரணத்துக்கு நேராகக் கொண்டு செல்லும் கால தூதனாகிய கவலையை அழிக்க வல்லது மகிழ்ச்சி - காதல். கவலைக்கு மருந்தாகக் காதல் அமைகின்றது. காதல், உடலளவி லன்றி மனம் உயிர் என மேற்செல்லும்போது அதற்கு இவ் ஆற்றல் கூடுகின்றது. பாரதி 'ஜகத் சித்திரம்' என்பதன் நாகண வாய்ப் புள் உரையாடலில், காதலில் உயர்ந்த குருவியினம் கவலையை வேரழிக்க முயல்வதைக் காட்டுவது இவண் கருதத் தக்கது.

காலனுக்குத் தூதனாகிய மனக்குறை யென்னும் பேய் எங்கள் குலத்தையும் அழித்துவிடத்தான் செய்கிறது. அதற்கு நிவாரணம் தேட வேண்டும். கவலையைக் கொல்வோம், வாருங்கள். அதிருப்தியைக் கொத்துவோம், கொல்லுவோம்,.

துயரத்தை அழிப்போம் கவலையைப் பழிப்போம், மகிழ்வோம், மகிழ்வோம், மகிழ்வோம் (453 - 454).

'காதல் இங்கே உண்டாயிற் கவலையில்லை' (268) என்பதால் தான் அதனைப் பொருளாக்கிப் பாடல்கள் இயற்றுவதைக் கவிஞர் வேண்டுகின்றார். காதல் செய்யும் சக்தியையே மனைவியாக்கிக் கடவுள் நிலை பெற அவளை வழியாக்குகின்றார் (269). காதல் வாழ்க்கையை மக்கள் ஏற்று நடப்பின், உலகின் பேரழிவுகளுக்குக் காரணமான போர்களும்இல்லாதுபோகும் (299).

உணர்ச்சி வசப்பட்டு இக்காதல் போற்றுதல்கள் அமையாது, அறிவு வயப்பட்டே அமைகின்றன. பராசக்தி குடியிருக்கும் கோயிலாகக் காதல், காதல் வாழ்வு காணப்படுவதால் அது அறிவுச் சுடரேற்றி வணங்கவல்ல தாகின்றது.

ஞான மென்ற விளக்கினை யேற்றிக்
கால முற்றுந் தொழுதிடல் வேண்டும்
காத லென்பதொர் கோயிலின் கண்ணே (221)

இவ்வாறு பல்வகையான போற்றுதலுக்கு ஏற்புடையதாகக் காதல் அமைந்தது பற்றிக் கவிஞர் தன் வாழ்வின் இன்பமும் நிறைவும் தந்ததனைத்தையும் காதலாக - காதலியாகக் கண்டு கூறுகின்றார். கவிதைக்காதலி (229), இளவயதில் அவரை ஆட்கொண்ட கலை - கவிதை - கல்வி ஈடுபாட்டைக் காட்டுகின்றது. சரசுவதி காதலிலும் (160) இதன் வெளிப்பாட்டைக் காணலாம். இரண்டாவதான லக்ஷ்மி காதல் (161) பொருள் தேட்டமாக அமைவதைக் கவிஞரின் பிற பாடல்களும் காட்டுகின்றன.*

நினைத்தாலே களிப்புத் தருவதும், கண்டாலே மகிழ்வு அளிப்பதுமான காதல், இறைக்காதல் ஆவதை மூன்றாவதான காளி காதல் காட்டுகின்றது. கண்ணம்மாவைக் காதலியாகக் கொண்டு கவிஞர் சிற்றின்பப் பேரின்ப இணைவு செய்யுமிடத்தும் இது புலப்படுகின்றது.

காற்று வெளியிடைக் கண்ணம்மா - நின்றன்
காதலை யெண்ணிக் களிக்கின்றேன்... - இந்த
வையத்தில் யானுள்ள மட்டிலும் - எனை
வேற்று நினைவின்றித் தேற்றியே - இங்கோர்

---

* திருக்காதல், திருவேட்கை, திருமகள் துதி, திருமகளைச் சரண்புகுதல் (பக் 151 - 155).

விண்ணவனாகப் புரியுமே...
நீயென தின்னுயிர் கண்ணம்மா - எந்த
நேரமும் நின்றனைப் போற்றுவேன் - துயர்
போயின போயின துன்பங்கள் - நினைப்
பொன் னெனக் கொண்ட பொழுதிலே (148)

இன்பம் தந்து, ஏற்றம் புரிந்து, துன்பம் நீக்கும் காதல் பற்றிய பிறிதொரு சிந்தனையும் கவிஞரிடம் அமைகின்றது. காதல் வாழ்வு கற்புடைமையாக இருக்க வேண்டும் என்பதால், சுயசரிதையில் கவிஞர் 'விடுதலைக்காதல்' எனும் கொள்கையைக் கடிகின்றார். இது வாழ்வுக்கு அன்று வீழ்வுக்கும், அழிவுக்கும் வழி வகுப்பதாகையால் வாழ்வியல் கொள்கையன்று என விலக்கப்படுகின்றது (270). ஒருவரிடம் மட்டும் தோன்றி வளரும் காதல், வாழ்வு தருவதுடன், 'நூற்றிரண்டு மலைகளைச் சாடவும்' 'காற்றி லேறி அவ் விண்ணையும் சாடவும், கூட ஆற்றல் தந்து ஏற்றம் புரிகின்றது (210). எனவே கண்ணைக் காப்பதுபோலக் காதல் இன்பத்தைக் காக்கவேண்டும் (210) எனக் கவிஞர் மனிதரை வாழ்வியலில் நெறிப்படுத்துகின்றார்.

### நாடு

நீலமுடி தரித்த பல மலைசேர் நாடு
நீரமுதம் எனப் பாய்ந்து நிரம்பும் நாடு
கோலமுறு பயன் மரங்கள் செறிந்து வாழுங்
குளிர் காவுஞ் சோலைகளுங் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையும் நறு நெய்யும் தேனு முண்டு
பண்ணவர் போல் மக்களெலாம் பயிலும் நாடு (342)

நாடு, அனைவராலும் நாடப்படுவதற்கு உரிய நன்மைகள் நிறைந்ததாக இருக்க வேண்டும். நாட்டிலுள்ளோர் எதையும் நாடிப் புறத்தே செல்லாத அளவுக்கு எல்லா நிறைவுகளும் உடையதாக அமைய வேண்டும். அதில் வாழ்வோரை அதன்மீது பற்றுக் கொள்ளச் செய்யும் படி சீர்மை பெற்றதாகக் காணப்பட வேண்டும். நாட்டினர் தம் வாழ்நெறியில் சிறந்ததையே நாட வேண்டும், அதன் மக்கள் தம்முள் மாண்பையே நாடுதல் கூடும்,

கம்பன் கண்ட குறிக்கோள் நாடுபோலப் பாரதியும் பாஞ்சாலி சபதத்தில் எல்லா நிறைவுகளுமுடைய நாட்டைக் காட்டுகின்றார். நாடு சிறந்ததாக இருப்பதற்கு மிகவும் தேவையான அடிப்படை வளம். இயற்கை வளங்கள் அனைத்தும் பொருந்திய நாட்டில் வாழ்வோர் நல்ல உடல் வளம் பெற முடியும். உடல் வலிமை, உள்ள வலிமைக்குக் களனாகின்றது. உள்ளம் சிறக்கும் போது, மும்முனை வாழ்வியலும் சிறப்பாக அமைவது இயல்பே.

பசி நோயில்லாததால் புறநிலையில் நன்மை நிறைந்த இப் பாரத நாட்டின் வண்ணச் சித்திரம் அகச் செம்மையும் கொள்வது காரணமாக இன்னும் உன்னதம் பெறுகின்றது.

பேரறமும் பெருந் தொழிலும் பிறங்கு நாடு
 பெண்க ளெல்லாம் அரம்பையர் போல் ஒளிரும் நாடு
வீரமொடு மெய்ஞ்ஞானம் தவங்கள் கல்வி
 வேள்வி எனும் இவையெல்லாம் விளங்கு நாடு
சோரமுதற் புன்மையெதுந் தோன்றா நாடு
 தொல்லுலகின் முடி மணி போல் தோன்று நாடு
பாரதர் நந்நாட்டிலே ... ... (343)

அறம் பெருகியது; தொழில் வன்மையால் பொருள் பெற்றது; பெண்மையால் பேரழகு நிறைந்தது; வீரச் செவ்வி யுடையது; உண்மையான அறிவு நிறைவு காரணமாக இகத்திலேயே பரத்தைக் கொண்டது; தன்னலமற்ற வாழ்வியலால் தவச்சார்பு பெற்றது; வாழ்வையே பெருவேள்வியாகக் கொண்டதால் தூய்மை செறிந்தது; கல்வி கேள்வி நிலைகளின் உயர்வால் கலை வளம் பெற்றது; களவு, வஞ்சனை முதலிய தீமைகளும் கீழ்மைகளும் இல்லாத காரணத்தினால் ஒளியுடைய சமுதாயத்திற்கு இடனாக விளங்குவது-என நாட்டின் நன்மை ஓவியம் அமைகின்றது.

சிறப்பும் சீர்மையும் உடையதாக அமைந்த இந்நாடு, சீரழிந்து அடிமைப்பட்டு, குறைச் சமுதாயத்தை உடையதாக அமைந்த காலத்தில் தோன்றியவர் கவி பாரதி. தன்னல நோக்கம் கொண்டு, தங்களைப் புரக்கும் நாட்டினைப் பற்றிய சிந்தனைகளின்றி அமைந்த மக்களைத் தட்டியெழுப்பிப் பண்டைநிலை கூறி, அதற்கு ஏற்ற மேன்மை கொள்ளும் படிக் கவி பாடியவர்.

நாடு பற்றிய இருவேறு கருத்துகள் இவரிடம் அமைகின்றன. பாரதநாடு. தமிழ்நாடு என இதனை இரட்டைத் தேசியம் எனச்

சுட்டுவது உண்டு. ஒவ்வொரு தமிழனும் உணரும்படிப் பாடியதால், அவனுக்கு மிக நெருங்கிய தமிழகத்தைக் காட்டி, பின் அதனிலிருந்து விரிந்து இந்திய தேசத்தைக் கூறிச் செல்கின்றார். ஒவ்வொரு தமிழ் மகனும், முதலில் தமிழன், பின்பு இந்தியன், அதன் பின்பு உலகன் என அமைய வேண்டும் என்ற விருப்ப வெளிப்பாடாக இது கருதத் தக்கது.

தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா (203)

செந்தமிழ் நாடெனும் போதினிலே-இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே-எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே (43)

எனத் 'தமிழ்நாடு' காட்டப்படுகின்றது. நாட்டுப்பற்று, உருவாக, தமிழ்நாட்டுப்பற்று முதற்படியாகின்றது; அதனையும் தோற்றுவிக்கும் வாயிலாக மொழிப்பற்று அமைகின்றது நாடு மொழி என்று வேற்றுமையற்ற பிணைப்பு உருவாகும் வழியாகிக் காணப்படுகின்றது.

தமிழ்நாடு, வாழ்வுக்கு இனியது; காவிரி முதலிய ஆறுகளால் வளம் பெற்றது; வேதமும் வீரமும் சிறந்தது; கல்வியும், இலக்கியமும் பெருகி வளர்ந்தது; பல நாட்டிலும் தன்கொடி பறத்திய ஆட்சிப் பெருக்குடையது. குறிக்கோள் நாடாக இது உயர முதலில் அனைவரும் கல்விபெற வேண்டும்.

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பல பல பள்ளி
தேடு கல்வியி லாததொ ரூரைத்
தீயி னுக் கிரை யாக மடுத்தல்
கேடு தீர்க்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (158)

கலைமகள் அருள்பெற்றுக் கல்வி நிறைவுபெறும்போது நாடு அகச்செழிப்புப் பெறுகின்றது. இளங்கோவும், வள்ளுவனும், கம்பனும் வந்த வாழ்நெறி, மீண்டும் முட்புதர் நீங்கிப் புதுப் பாதையாகித் தென்படுகின்றது. இவ்வழியின் முன்னேற்றம்

தொழில் காரணமாக ஏற்பட வல்லது. உலகம் படைக்கும் பிரம்மா போன்று நாடு படைப்பவராகத் தொழிலாளர் அமைகின்றனர். அவர்களின் உழைப்பால் வரும் தொழில் பெருக்குச் செல்வவளம் சேர்க்கின்றது. உள்ளத்திற்கு இன்பம்தரும் நுண்கலைகளும், புலனுக்கும் இன்பம் தரும் அழகுக்கலைகளும் இதில் உட்படுகின்றன. சிறுசிறு கைத்தொழில்களும் பேரளவில் நிகழும் ஆலைத் தொழிலும் இதில் இடம்பெறுகின்றன. ஒரு நபரின் முயற்சியில் உருவாகும் கைவினையும், பலரின் கூட்டுமுயற்சியில் புலப்படும் பெருந்தொழிலும் இதில் காணப்படுகின்றன. பண்டங்கள் ஆக்குதலும், பண்டமாற்றும் வியாபாரமும் செய்தலும் இதில் இணைகின்றன.

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுத்திடு வீரே...
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடுவீரே...
நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப்பீரே
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே (213)

கல்வியும் தொழிலும் சிறந்த நாடு, சிறந்த சமுதாயத்தைக் கொண்டதாக அமைய அரசியல் சூழலும் உதவுகின்றது.

நாட்டுத்தலைமை ஏற்று ஆட்சிப் பொறுப்பை ஏந்தி நடத்துபவரின் சிறப்பும் செவ்வியும் நாட்டுக்கு மேன்மை அளிக்கவல்லது. ஆட்சியை ஒரு பெரும் பொறுப்பாக-கடமையாகக் கொண்டு கவனத்துடன் செல்லாது, உரிமையாக-உடமையாகக் கருதிச் செயற்படும்போது நாடு இழிவடைகின்றது. இதனைப் பாஞ்சாலி சபதத்தின் சூதாட்டம் வழிக் குறிப்பாக உணர்த்துகின்றார் பாரதி. நாட்டைத் தன் பொருளாகக் கருதிப் பணயமாக வைத்துச் சூதாடி இழந்த தருமனின் செயல் கடியப்படுகின்றது. கோயில் பூசை செய்பவன் சிலையையும், வாயில் காப்போன் வீட்டையும் கொடுத்துக் கெடுப்பது போன்ற நிலை இது.

ஆயிரங்களான-நீதி யவை உணர்ந்த தருமன்
தேயம் வைத்திழந்தான்-சிச்சி சிறியர் செய்கை செய்தான்
நாட்டு மாந்த ரெல்லாம்-தம்போல் நரர்க ளென்று கருதார்
ஆட்டு மந்தை யாமென்-றுலகை அரச ரெண்ணி விட்டார் (367)

நாடு, ஆள்வோருக்கன்று; மக்களுக்கே உரியது. அதை ஆக்கும் காக்கும் உரிமை அவர்களுக்கு உண்டே ஒழிய அழிக்கும் உரிமை இல்லை. 'நாமிருக்கும் நாடு நமது' (57) என்ற எண்ணத்துடன் மக்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும்போது கிருதயுகம் எழுகின்றது.

குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மை யுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்தது பார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப் போது
அடிமை யில்லை அறிக என்றார்;
இடிபட்ட சுவர் போலே கலி விழுந்தான்
கிருத யுகம் எழுக மாதோ (89)

உருஷியப் புரட்சியில் கண்ட இவ் அரசியல் மேம்பாட்டை நம் நாட்டிலும் காண விழைந்தவர் பாரதி. பிரிவினைகள் நீங்கிக் காகக் கூட்டம்போன்று சுதேசிகள் ஒருமித்து அரசு செயலை விரும்புகின்றார். 'சிலநாளாக் காக்கையுள்ளே நேர்ந்த புதுமைகளை' (219) உரைத்தல் இந்நிலையில் சிந்திக்கத்தக்கது. 'மன்னர் அறம் புரிந்தால் வையமெலாம் மாண்பு பெறும்' (219) என அரசியல் அறம் நாட்டுச் சிறப்புக்கு வேண்டப்படுகின்றது.

ஒற்றுமையால் மேம்பட்டு இந்திய நாடு விடுதலைபெற வேண்டும் என்ற நோக்கில் பாரதத்தைக் குறித்துப் பலபடப் பாராட்டிப் பேசுகின்றார் பாரதியார்.

வடக்கில் இமயமலை பாப்பா—தெற்கில்
வாழும் குமரி முனை பாப்பா
கிடக்கும் பெரிய கடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா (203)

எனத் தேசத்தின் பரந்த நிலப்பரப்பை, பிளவுபடாது நாலெல்லைகளையும் உணர்த்திக் காட்டுகின்றார். தமிழ் நாட்டுக்குக் கூறிய எல்லா ஏற்றங்களையும் இந்திய நாட்டுக்கும் கூறி மாண்புப் பொருத்தம் அளிக்கின்றார்.

செல்வம் நிறைந்த ஹிந்துஸ் தானம்—அதைத்
தினமும் புகழ்ந்திடடி பாப்பா...
வேத முடைய திந்தநாடு—நல்ல

வீரர் பிறந்த திந்த நாடு
சேத மில்லாத ஹிந்துஸ் தானம்—இதைத்
தெய்வமென்று கும்பிடடி பாப்பா (203)

எந்தையும், தாயும், முன்னோர்களும் வாழ்ந்த இந்த நாடு (19) எனக்கு உரியது என்ற உணர்வும் நாட்டுப்பற்றும் ஏற்படும் சூழல் மக்கள் வாழ்வில் விடுதலைப் புரட்சி ஏற்படுத்தும் வழியாகக் கவிஞரால் கொள்ளப்படுகின்றது. பண்பிலும். பண்பாட்டிலும், பழமையிலும் சிறந்து, பாரின் நாடுகள் எல்லாவற்றிலும் நல்லதாக உலக நாடுகளின் மணிமுடியாக அமைகின்றது.

நாட்டைப் பாடும்போதும், நாட்டுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடும்போதும், கவிஞர் நாட்டு மக்களையே தட்டியெழுப்புகின்றார். ஒவ்வொரு தனிமனிதனும், குடும்பமும் நாட்டுக்காக உழைக்கும் சூழல் ஏற்பட்டால் சமுதாயம் முன்னேற முடியும் என்பதால் வாழ்வில் நாடு முதன்மை பெறுகின்றது. ஒவ்வொருவரும் தம் கடமையைச் சீராக நிறைவேற்றும்போது நாடுசீரடைகின்றது. வீண் செயல்களில் ஈடுபடாமல், அடுத்தவன் வேலையில் தலையிட்டு அவனையும் கெடுக்காமல், அவனவன் தன் செயலில் உண்மையுடையவனாக இருத்தல் தேவை.

ஒற்றைக் குடும்பந் தனிலே—பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை
மற்றைக் கருமங்கள் செய்தே—மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை
ஏவல்கள் செய்பவர் மக்கள்—இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ
மேவி அனைவரும் ஒன்றாய்—நல்ல
வீடு நடத்துதல் கண்டோம் (204)

எனக் குடும்பத்தின் பொறுப்பும் வலியுறுத்தப்படுகின்றது.

நாட்டுக்கு நல்லது செய்த சிறந்தவர் பலரைப் பாரதி பாடுவதும் இங்கு நினைக்கத்தக்கது. வாழ்வோருக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும், வழிகாட்டியாகவும் அமைகின்றனர் இவர்கள். வீர எழுச்சி கொண்டு நன்மை நாடத் தூண்டுகோலாக அமைகின்றனர். நடிப்புச் சுதேசிகளாக அன்றி உண்மைத் தொண்டர்களாகி வாழ மக்களுக்கு ஊக்கம் தருபவராகக் காணப்படுகின்றனர். விடுதலைக்கு நேராக நெறியமைத்துச் சமுதாயத்தைச் சீராக்கியவராக அமைகின்றனர்.

## விடுதலை

விடுதலை என்றால் என்ன அர்த்தம்?...பிறருக்குக் காயம் படாமலும், பிறரை அடிக்காமலும், வையாமலும், கொல்லாமலும், அவர்களுடைய உழைப்பின் பயனைத் திருடாமலும், மற்றப்படி ஏறக்குறைய நான் எது பிரியமானாலும் செய்யலாம் என்ற நிலையில் இருந்தால் மாத்திரமே என்னை விடுதலையுள்ள மனிதனாகக் கணக்கிடத்தகும். 'பிறருக்குத் தீங்கில்லாமல் அவனவன் தன் இஷ்டமானதெல்லாம் செய்யலாம் என்பதே விடுதலை' என்று ஹெர்பர்ட் ஸ்பென்ஸர் சொல்லுகிறார் (தமிழருக்கு, ப. 110).

சமுதாய வாழ்வின் மிகப்பல தேவைகளுள் விடுதலையும் ஒன்று. விடுதலை அகத்தும் புறத்தும், அதாவது வாழ்வு முழுமையும் அமையவேண்டியது. விடுதலை என்பது கட்டுப்பாடற்ற நிலையன்று. நன்மைகளின் எல்லைகளைக் காப்பாகக் கொண்டது. இது தன்னலமாக வன்றிப் பொதுநலம்-உலக நன்மை என அமைவது. கவிஞர் 'விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக்குருவியைப் போலே' (181) என விடுதலைக்குச் சிட்டுக்குருவியைக் குறியீடாக்குவது பிறருக்குத் தீமை விளைவிக்காத எளிய வாழ்வியலையும் குறிப்பாகத் தருகின்றது.

மனிதனின் வாழ்வியலில் விடுதலை பற்றி எண்ணும்போது, அது மிகுந்த பரப்புக் கொள்கின்றது. உடல் விடுதலை, உள்ள விடுதலை, உயிர் விடுதலை எனக் கருதுவது ஒருவிதம். தனிமனித விடுதலை, சமுதாய விடுதலை என எண்ணுவது ஒருநிலை. அரசியல் விடுதலை அல்லது நாட்டு விடுதலை என நோக்குவது இன்னொரு வகை. பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம்...என இன்னும் பல உண்டு. எனவே பிறர் தடை விதிக்காது, நாமே நம் விருப்பத்திற்கேற்பச் சிந்தித்து, பேசி, செயற்படுதல் என எல்லா நிலையிலும் சுதந்திரம் பொருந்த வேண்டியுள்ளது.

தத்துவ நிலையில் காணின் விடுதலை என்பதும் வீடு என்பதும் தொடர்புடையன. 'வீடு என்ற சொல்லுக்கு விடுதலை என்பது பொருள்' (கட்டுரைகள், சமூகம், ப. 44) எனப் பிறிதொரு சூழலில் கவிஞர் கூறுவதை இங்கு நினைக்கலாம். துன்பம், துயரம், தீமை...போன்ற பல வேண்டாதனவற்றிலிருந்தும் விலகி, விடுபட்டு நிற்பதாக இது அமைகின்றது. இந்நிலையில், மறுமையின் வீடுபேறுபோன்ற இன்றியமையாதது இன்றைய விடுதலை. இது

நாட்டில் மட்டும் இருந்தால் போதாது; எல்லா வீட்டிலும் அமைய வேண்டும் என்பது பற்றியே இல்லம் 'வீடு' எனப் பெயர் பெற்றது எனல்போதரும். விடப்படுவது வீடு எனாது தீதிலிருந்து விடுபடுவது வீடாயிற்று.

விடுதலைக்குக் குறியீடாக அமைகின்ற சிட்டுக்குருவி 'விடு, விடு' எனக் கூறுவதைக் கவிஞர் விளக்குவது இங்குப் பொருத்திப் பார்க்க வல்லது.

> இந்தக் குருவி என்ன சொல்கிறது? ''விடு'', ''விடு'', ''விடு'' என்று கத்துகிறது. இஃது நான் விரும்பிய இன்பத்திற்கு வழி இன்னதென்று தெய்வம் குருவித் தமிழிலே எனக்குக் கற்றுக் கொடுப் பது போலிருக்கிறது.
>
> விடு, விடு, விடு—தொழிலை விடாதே. உணவை விடாதே. பேட்டை விடாதே. கூட்டை விடாதே. குஞ்சை விடாதே. உள்ளக்கட்டை அவிழ்த்து விடு. வீண்யோசனையை விடு. துன்பத்தை விடு (தமிழருக்கு, ப. 145).

துறவோ, இந்த உலக வாழ்விலிருந்து நீங்குதலோ அன்று விடுதலை; மனம் விண்ணில் பறக்கும் கட்டற்ற நிலையில் இருக்க இவ்வுலகின் இயல்பு வாழ்வில் பொருந்தியிருப்பதே விடுதலை என்பது இதனால் போதரும்.

இந்தியா வெள்ளையர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த தால் கவிஞர் நாட்டுவிடுதலைக்கே முதன்மை இடம் அளிக் கின்றார். ஆயின் அதே வேளை நாட்டுமக்கள் மூடத்தனத்திற்கும், கல்லாமைக்கும், அறிவின்மைக்கும், அச்சத்திற்கும் அடிபணிந்து ஆட்பட்டுக் கிடந்தால் அதனை ஒழிக்கும் முயற்சியிலும் இணையாக ஈடுபடுகின்றார். உள்ளத்தின் விடுதலை வழி, அரசியல் விடுதலை பெறும் நெறியாக இதனைக் கைக்கொள்ளுகின்றார் எனலாம். தாங்களே தங்களுக்கு மாட்டிக்கொண்ட விலங்குகளை முதலில் சிலரேனும் ஒடித்து எறிந்தால்தான் பின்பு தம்மொத்த பிறரை விடுவிக்க முடியும்; அதன் பின்பு அனைவரும் ஒத்து நின்று நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தர இயலும். ஆடவர் பெண்டிரை அடிமை கொள்ளலாகாது; முதலாளி தொழிலாளியை அடிமை கொள்ளலாகாது; செல்வந்தன் ஏழையை அடிமை கொள்ளலாகாது; ஆள்வோன் மக்களை அடிமைபடுத்தக் கூடாது; அதிகார முடையவன் அது இல்லாதோரை அடிமை செய்யக்கூடாது;

வலியவன் எளியவனை அடிப்படுத்தக்கூடாது—என எண்ணங்கள் பரந்து விரிந்து அமைகின்றன.

நாடும், சமுதாயமும் முன்னேற ஒவ்வொரு மனிதனும் முழுமையான விடுதலை வாழ்வு வாழல் தேவை.

தானே தளைப்பட்டு - மிகச் சஞ்சலப்படும் மனிதா
நானோர் வார்த்தை சொல்வேன் - நீ மெய்ஞ்
    ஞானத்தைக் கைக்கொள்ளடா
விடுதலையைப் பெறடா - நீ விண்ணவர் நிலைபெறடா
கெடுதலை ஒன்றுமில்லை - உன் கீழ்மைகள் உதறிடடா... (461)

எனக் குருவியின் கூற்றில் கவிஞர் விடுதலைக்கு வழி கூறுகின்றார். உண்மையான கல்வி, எல்லாக் கீழ்மைகளையும் களைதல் என்பன அவனாலேயே நிகழ்ந்து, அவனுக்கே விடுதலை அளிக்கின்றன.

கவிஞரின் தேசபக்திப் பாடல்கள் நாட்டுச் சுதந்திரத்தை, அரசியல் சுதந்திரத்தைச் சுற்றி எழுந்துள்ளன. தாய்நாட்டுச் சுதந்திரமே வாழ்வு ஆகின்றது (61).

புல்லடிமைத் தொழில் பேணிப் - பண்டு
    போயின நாட்களுக் கினிமனம் நாணித்
தொல்லை இகழ்ச்சிகள் தீர - இந்தத்
    தொண்டு நிலைமையைத் தூவென்று தள்ளி
வந்தே மாதரம் என்போம் - எங்கள்
    மாநிலத் தாயை வணங்குதும் என்போம் (18, 19)

தம் வாழ்நாளில் காண விரும்பியும் காண இயலாத இவ் அரசியல் விடுதலையை, பிறராட்சித் தளை சிதைந்ததைக் கண்டதாகப் பாடுகிறார். வருவதை முன்கண்ட தீர்க்கதரிசியாக அமைகின்றார்.

ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று (56)

பிறர் நாட்டுக் கொடி பறந்த கம்பத்தில், விடுதலையுற்ற இந்தியத் தாயின் மணிக்கொடியை ஏற்றிப் பட்டொளி வீசிப் பறக்கச் செய்கின்றார் (35). பழையன கழிந்து, புதுயுகம் வருவதால் போகின்ற பாரதத்தை அனுப்பி, வருகின்ற பாரதத்தை இருகை நீட்டி ஏற்கின்றார் (38-39).

நாட்டின் எல்லா வகை முன்னேற்றங்களுக்கும் சிறப்புக்கும் அடிப்படையாக அமைவது அரசியல் விடுதலை. அதைப் புரட்சிப் பொறி கிளப்பி, சாத்துவிகப் போர்முறையில் வெல்லும் பாங்கு புலப்படுகின்றது. 'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' (54) என்ற ஏக்கம் காந்தி மகான் காரணமாக நிறைவுறுகின்றது.

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார், விடுதலையார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு கல்வி ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும் படிக்கொரு சூழ்ச்சி செய்தாய் (70)

நாட்டு விடுதலையும், ஆட்சிச் சுதந்திரமும் மக்களின் முழு விடுதலையில் தான் நிறைவு கொள்கின்றது. அதற்கு மக்கட் சமுதாயத்தில் சமத்துவம் தேவை. கீழ்ஜாதி மேல்ஜாதி என்ற நிலைகள் நீங்குகின்றன. பறையர், தீயர், புலையர், பரவர், குறவர். மறவர் என நீக்கப்பட்ட மக்கள் அனைவரும் எவ்வித வேறுபாடு மற்றவர் என இணைக்கப்படுகின்றனர் (56).பிறப்பால், குலத்தால், தொழிலால் வேறுபாடில்லாது பாரதத்தாயின் ஒருவயிற்று மக்கள் என்ற நிலை பெறுகின்றனர். தாழ்விலிருந்து, இழிவிலிருந்து பெற்ற விடுதலையாக இது அமைகின்றது.

ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்பது
இந்தி யாவில் இல்லையே (56)

கல்வி, செல்வம், தகுதி, பதவி, சுக சௌகரியங்கள்...என்ற எதுவும் எவர்க்கும் மறுக்கப்படாத நிலை இது. இந்தியரனை வருக்கும் ஒத்த உரிமைகள் வழங்கப்பட்ட நிலையாக இது அமை கின்றது. எல்லாரும் இவ்வாறு ஒத்தனவராகக் கருதப்பட்ட இந்நிலையுள் முழுமையாக மகளிர் கொள்ளப்படாத சூழலில் கவிஞர் வாழ்ந்ததால் அவர் பெண்ணுக்கும் விடுதலை வேண்டி நிற்கின்றார் (182). 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமான மாக வாழ்வம் இந்த நாட்டிலே' (56) என இதனை அழுத்தத் துடன் அளிக்கின்றார்.

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு - நாம்
எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு (57)

என்ற களியாட்டத்துடன், இதனால்தான் பெண்களும் இணைந்து கும்மியடித்து வாழ்வின் விடுதலை இன்பத்தைப் புலப்படுத்த முடிந்தது (211-12). கல்வி, மணத்தில் தன்னுரிமைகள், தொழில் உரிமை, குடும்பச் சொத்துரிமை எனப் பலவாக இவை அமை கின்றன.* தகுதி நோக்கிக் கொடுப்பதன்று விடுதலை; தேவையும் தன்மையும் நோக்கிக் கொடுப்பதாகும். 'தகுதி உண்டான பின்பு தான் விரும்பலாமென்று விதி போட்டால் எந்த ஜாதிக்கும் விடுதலை உண்டாயிராது' என்பார் பாரதியார் (கட்டுரைகள், தத்துவம், ப. 148).

மனிதர் வாழ்வின் இப் புறநிலை விடுதலைகள் ஒருபாலாக அவர் மனங்களைக் கீழ்ப்படுத்தும், அடிமைப்படுத்தும் தீய குணங் களிலிருந்தும் விடுதலை வேண்டுதல் இன்றியமையாததாகின்றது. எளிதில் தகர்க்க முடிந்த புறத்தளைகள் போலன்றி, மனிதனுக்கு விரைவில் இறுதியைத் தேடுவனவாக இவ் அக விலங்குகள் அமை கின்றன. தவிர்க்கப்பட வேண்டிய பண்புகளில் முதலாவதாக அச்சம் அமைகின்றது.

> பிச்சைவாழ் வுகந்து பிறருடை யாட்சியில்
> அச்சமுற் றிருப்போன் ஆரிய னல்லன் (59)

என அச்சம் அனைத்து அடிமைத்தனத்திற்கும் காரணமாகி விலக் கப்பட வேண்டியதாக அமைகின்றது. அச்சமற்ற வீரர்களாலான சமுதாயம் மேம்பட முடியும்; எதற்கும் அஞ்சுதல் கூடாது; அச்சம் உயிரைக் குடிக்கும் பேயாகின்றது. அதை வெல்லுதல் முதல்நிலை யாகும்.

> உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்
> அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே (180)

கவலைகளிலிருந்து பெறவேண்டிய விடுதலை இதற்கு அடுத்த தாகக் கருதத்தக்கது. தன் விசாரத்தினால் மனிதன் நொந்து ஓபாய் இருப்பானாயின் அவனால் செயற்பட முடியாது. மனத் திற்கு விலங்காகி அதனைச் சிறைப்படுத்துவது இக் கவலையே. மனமே உட்பகையாகி விடுமளவிற்கு இக் கவலை வாழ்வை அரிக் கின்றது. புற்றுநோயாகி மனத்தை மடிவிக்கின்றது.

> கவலை துறந்திங்கு வாழ்வது வீடென்று
> காட்டும் மறைக ளெலாம்... (186)

* இந்நூலின், முன் பக்கங்களில் அமையும் 'பெண்' எனும் பகுதியைக் காண்க.

துன்பத்திலிருந்து பெற வேண்டிய விடுதலையை இதன் அடுத்த படியாகக் கொள்ளலாம். பிறருக்கு உதவுதல், இன்பமாக இருத்தல் என்பன இவ் விடுதலை தருவதைக் கவிஞர் தருகின்றார். மனித சமுதாயத்திலிருந்து ஓடித் துறவு வாழ்வு பூண்டு கிடைப்ப தல்ல இவ் விடுதலை; மனிதரோடு மனிதனாக வாழ்ந்து, நற் செயல் புரிவதாலேயே கிடைக்கின்றது.

> வீட்டிலிருந்து பந்துக்களுக்கும் உலகத்தாருக்கும் உப காரம் செய்து கொண்டு, மனுஷ்ய இன்பங்களை யெல்லாம் தானும் பூஜித்துக் கொண்டு, கடவுளை நிரந்தரமாக உபாஸனை செய்து அதனால் மனிதத் துன்பங்களினின்றும் விடுபட்டு ஜீவன் முக்தராய் வாழ்தல் மேலான வழி... (பகவத்கீதை, முன்னுரை, ப. 29).

இன்னும் நாம் விடுபட்டு வரவேண்டிய பன்மைகள் பல உள. இறைவனை வழிபட்டு இப் புன்மைக ளனைத்தையும் போக்க வேண்டியது நமது கடமை. இறைப்போற்றுதல் வாயிலாகக் கிடைக்கும் மன வன்மை, இத்தளைகளைத் தகர்த் தெறிய நமக்கு உதவும் ஆற்றலாகின்றது.

> இன்று தேவர்களை அழைக்கிறோம்...அறிவின்மை, அசுத்தம், சிறுமை, நோய், வறுமை, கொடுமை, பிரிவு, அநீதி, பொய் என்ற ராட்சசக் கூட்டங்களை அழித்து மனித ஜாதிக்கு விடுதலை தரும் பொருட்டாக. கல்வி, அறிவு, தூய்மை, பெருமை, இன்பம், செல்வம், நேர்மை, ஒற்றுமை, நீதி, உண்மை என்ற ஒளிகளெல்லாம் வெற்றியடையும் பொருட்டாக (தமிழருக்கு, பக். 42, 43)

விடுதலை என்பது, சிறிது காலம் கழிந்து முயல்வோம் எனப் பின்தள்ளி வைக்கப்பட வேண்டியதல்ல. முழு மூச்சுடன் ஈடுபட்டு உடனடி முயலப்பட வேண்டியது. வன்மையுடன் இணைந்து செயல்பட வேண்டியது. இன்னொருவரால் தரப்படுவதன்று. நாமே எடுத்துக்கொள்வது. பெண்களின் சுதந்திரம் பற்றிப் பேசும்போது கவிஞர் மொழிவது இங்கும் நினைக்கத்தக்கது.

> மாதர்களுக்காயினும் வேறு யாருக்காயினும் சுதந் திரங்கள் வேறொருவர் கொடுக்க முடியுமென்ற நம்பிக்கையே எனக்குக் கிடையாது.
>
> அவரவர்கள் தத்தம் உரிமைகளைத் தாமே முயற்சி புரிந்து அடைந்து கொள்ள வேண்டுமே யல்லாமல் மற்றொரு வர் கொடுத்ததொன்றும் நிலைத்திருக்க மாட்டாது (சக்ர வர்த்தினி கட்டுரைகள், ப. 78).

கூண்டுக்கிளி போன்ற பாலும் பழமும் உண்ணும் வாழ்வாக அன்றி உழைத்து உண்டாலும் விடுதலையுடைய வாழ்வே சமுதாயத்தில் போற்றத் தகுந்தது; நாட்டாரால் நாடற்குரியது; இவ் விடுதலை பெற்ற சூழல் அகத்தும் புறத்தும் அமையும்போதே வாழ்வியல் நிறைநன்மையுடைய தாகின்றது.

சுதந்திரம் இல்லாத வாழ்க்கை, வாழ்க்கையாகவே கருதற் குரியதன்று; அடிமை வாழ்வும் இறப்பும் சமம்.எத்துணை நலமும், நன்மையும், சிறப்பும் பெற்றவராக இருப்பினும், அவர் விடுதலை யில்லாதவராயின் அப்பெறலரும் பேறுகளெல்லாம் விருதா வாகின்றன; வெற்று வாழ்க்கையே அவர் வாழ்வு; பிணவாழ்வு பிணிப்புண்ட வாழ்வு.

சுதந்திர தேவி...
நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத் துயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார் (54)

விடுதலை எல்லாச் செல்வத்திலும் சிறந்த உயர்ந்த செல்வமாக அமைகின்றது. எல்லாத் துறையிலும் விடுதலை பெற்ற மனிதன். இவ்வுலகத்தில். விண்ணுலகைக் கண்டவனாகின்றான். மனித வாழ்வின் உயிர்மூச்சாக விடுதலை கொள்ளுதற்குரியது.

## உலகியம்

பாருக்குள்ளே சமத்தன்மை - தொடர்
பற்றுஞ் சகோதரத் தன்மை
யாருக்கும் தீமைசெய் யாது - புவி
யெங்கும் விடுதலை செய்யும் (207)

உலக வாழ்வில் இன்றியமையாதனவாகச் சமத்துவமும், சகோதரத்துவமும் அமைகின்றன. இவற்றின் முழுமையே, இவற்றைத் தொடர்வதான விடுதலையைத் தரமுடிகின்றது. ஒவ்வொரு மனிதனும் பிறனைத் தன் சகோதரனாகக் கருதும்போது

சமத்துவம் இயல்பாகிறது; அடிமைப்படுத்தும் எண்ணம் அங்கு வராமையால் விடுதலையும் வாய்ப்பாகின்றது. அமெரிக்கப் புரட்சியின் வெளிப்பாடான இம் மூன்று உண்மைகளும்* அத் தகைய ஒரு முழுமையை விரும்பிய பாரதியிடமும் செல்வாக்குப் பெறுகின்றது எனலாம். ஒரு நாட்டுக்கு மட்டும் உரியதாக வன்றி உலகனைத்திற்கும் உரியதாக இவை அமைகின்றன. உல கனைத்தும் ஒரு குடும்பமாக ஆவதற்கு இது வாயிலாகக் காணப் படுகின்றது. அயலாரிடம் தம்மைப்போல் அன்பு கொள்ளுதல் எனும் உலகமதம் இங்கு வெளிப்படுகின்றது.

**சமத்துவம்** பற்றிய எண்ணம் பாரதியிடம் மிகுதியாகக் காணப்படுகின்றது. இறைவன் படைப்பில் ஒரே நிலையான மக்களெல்லாம் பல்வேறு விதமான வேறுபாடுகள் காரணமாகத் தனிப்பட்டு விலகிநிற்கின்றனர். இந்நிலை மாறி அனைவரும் ஒத்தவர், நிகரானவர் என்ற எண்ணம் எழுதல் வேண்டும். ஜாதி மதங்கள் வேற்றுமைக்குக் காரணமாக அமைகின்றன. அவ் வேற்றுமை கருதப்படற்குரியதல்ல. எந்தக் குலத்தில் பிறந்தாலும் 'இந்தியன்' எனப்படும் ஒரே நிலையே அனைவருக்கும் உரியது.

ஜாதி மதங்களைப் பாரோம் - உயர்
ஜன்மம் இத்தேசத்தில் எய்தின ராயின்
வேதிய ராயினும் ஒன்றே. அன்றி
வேறு குலத்தவ ராயினும் ஒன்றே (18)

பிறப்பாலும், தகுதியாலும், மதிப்பாலும் கூட வேறுபாடுகள் ஏற்படா வண்ணம் இச் சமத்துவக் கருத்து வழங்கப்படல் வேண்டும். நான் வேறு, நீ வேறு என்ற எண்ணம் மாறி, நாம் அனைவரும் ஒன்று என்ற நிலை உயர வேண்டும். ஒருவருக்கு உரிய உரிமை பிறிதொருவருக்கு மறுக்கப்படுவதில்லை; ஒருவருக்கு அளிக்கப்படும் வாய்ப்பு மற்றொருவருக்கு விலக்கப் படுதலில்லை.

எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் (41)

நாடு, மொழி, பழக்கவழக்கங்கள் போன்ற எதுவும் வேற்றுமைச் சுவர்களை எழுப்புதல் கூடாது. 'எல்லோரும் சமமென்பது உறுதி

---

* Equality, Liberty, Fraternity.

யாச்சு' எனவும், 'எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே' எனவும் (57) மகிழ்வதற்குரிய சூழல் இங்குத்தான் உருவாகின்றது.

பகுப்புக்கும், வகுப்புக்கும். வேறுபாட்டுக்கும் காரணமாக அமையும் மற்றொன்று செல்வம், பொருளுடையவன் மேம்பாடுடையவனாகவும், அது இல்லாதவன் கீழ்ப்பட்டவனாகவும் கருதப்படுகின்றனர். 'நிதி செய்தாரைப் பணிகுவர் மானிடர்' (325) எனச் செல்வந்தன் 'அதிபதி'யாகவும் 'ஈசுவர'னாகவும் கருதப்பட்டுப் பெருமைப்படுத்தப் படுகின்றான். செல்வம் காரணமாக ஏற்பட்ட ஆள்வன்மை பற்றி அது இல்லாதோரை அடக்குகின்றான். இந்நிலை சமத்துவத்திற்கு இடைஞ்சலாக இருக்கிறது' இச்சூழல் மாறுதல்வேண்டும்.

ஏழையென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை ஜாதியில்...
மனிதர் யாரும் ஒருநிகர்
சமான மாக வாழ்வமே (56)

செல்வம் எல்லோரிடத்திலும் சமமாக அமையும்போது இப்புதுமை நிகழ வாய்ப்புண்டு; பொதுமையாக உடமைகளைக் கருதுவது இதற்கு அடிப்படை. தேவைக்கேற்பச் செல்வம் தேடப்படுதல், அல்லது தேவைக்குரிய செல்வம் வழங்கப்படுதல்; மிகைப் பொருள் சேர்த்து வைக்காமை-என இதனை விரிக்கலாம். உம்பர் வாழ்வினை எள்ளிடும் வாழ்வினோர் (249) என்ற செல்வ வாழ்வன்றி ஒத்தவாழ்வாக, சம உடமை-பொதுஉடமை வாழ்வாக இது அமைகின்றது.

முப்பது கோடி ஜனங்களின் சங்கம்
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக் கொரு புதுமை (40)

மக்கள் தம்முள் ஒப்புமையுடைமை பற்றியே அத்தகு சமுதாயம், உலகத்தில் ஒப்பற்றதாக விளங்க முடிகின்றது!

கவிஞர் விரும்பிய பிறிதொரு சமத்துவம் ஆண் பெண் குறித்தது. உலகின் பல நாடுகளும் பெற்றுவிட்ட இதனை இந்தியாவும் பெற விழைகின்றார். பெண்ணுக்கு மறுக்கப்பட்ட பல அடிப்படை உரிமைகள் பற்றி அவர்கள் ஆணுக்குக் கீழ்ப்பட்ட நிலைமாற விரும்புகின்றார், இரண்டு கண்ணுள் ஒன்றைக் கெடுப்பது

போன்றும், இரட்டைமாட்டு வண்டியில் ஒன்று ஊனமுற்றதாக அமைந்தது போன்றும் இந்நிலை காணப்படுகின்றது. இதுமாறி ஒப்புமை ஏற்படல் வேண்டும்.

தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வம் இந்த நாட்டிலே (56)

உலகத்தில் பலவகையான சமயங்கள் ஏற்பட்டுப் பரந்துள்ள மையால் சமயம் காரணமான நிகரின்மைகளும் பல உள. இப் பிளவுகள் நீங்கி எச்சமயத்தாராயினும் ஒன்று எனும் கொள்கை எழுதல் வேண்டும். எம்மதமும் சம்மதம் எனும் எண்ணம் ஏற்பட வேண்டும். சர்வ சமய சமரசம் தோன்றவேண்டும். 'ஆத்திரங் கொண்டே இவன் சைவன், இவன் அரிபக்தன் என்று பெருஞ் சண்டையிடும்' (37) சூழல் மாறுதல்வேண்டும்.

'எம்மதமும் சம்மதம்' என்றார் ராமலிங்க சுவாமி.

உலகத்திலுள்ள மதபேதங்களையெல்லாம் வேருடன் களைந்து சர்வ சமய சமரசக் கொள்கையை நிலைநாட்ட வேண்டுமானால் அதற்குத் தமிழ்நாடே சரியான களம். உலக முழுவதும் மத விரோதங்களில்லாமல் ஒரே தெய்வத்தைத் தொழுது உஜ்ஜீவிக்கும்படி செய்யவல்ல மகான்கள் இப்போது தமிழ்நாட்டில் தோன்றியிருக்கிறார்கள் (தமிழருக்கு, பக். 108-109).

என்பதில் பாரதியின் சமய சமத்துவச் சிந்தனை வெளிப்படுகின்றது. ஆத்திசூடியின் தொடக்கமும் இதனைப் புலப்படுத்துகின்றது.

இவ்வாறு எல்லாத் துறைகளிலும் சமத்துவம் முரசு முழங்கி வேண்டப்படுகின்றது(207). புறநிலையிலுள்ளனவே வேறுபாடுகள்; அவை கடியப்பட்டு விலக்கப்பட அகநிலை உதவுகின்றது. நிறம் வேறுபாடுடைய பூனைக்குட்டிகளின் உடலில் ஒரேதாயின் உதிரம் இயங்குவது போன்ற உண்மை உணர்த்துதல் அமையவேண்டும்.

வண்ணங்கள் வேற்றுமைப் பட்டால்—அதில்
மானுடர் வேற்றுமை யில்லை

எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்
நிகரென்று கொட்டு முரசே-இந்த
நீணிலம் வாழ்பவ ரெல்லாம் (206)

**சகோதரத்துவம்** பற்றிய எண்ணமும் உலகியலில் மேம்பட்டு நிற்கின்றது சமத்துவம் போன்றே இதுவும் உலக வாழ்வுக்கு இன்றியமையாதது. 'லௌகிக விஷயங்களைப் போலவே மத விஷயங்களிலும் ஒப்பு, உடன் பிறப்பு, விடுதலை மூன்றும் பாராட்ட வேண்டும்' (தமிழுருக்கு, ப. 32) எனப் பிறிதொரு சூழலில் கவிஞர் கூறுவது இங்கு இணைத்துக் கருதத்தக்கது. குடும்பத்தளவில் முதலில் இவ் அன்புப்பிணைப்பு ஏற்பட்டால் பின்பு நாடு, உலகம் எனச் செல்லமுடியும்; சண்டைகள் சச்சரவுகள் இன்றி, பிற உயிரின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதி நீக்க. இயலும். கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டால்கூட, தாம் உடன் பிறந்தோர் என்ற பேரெண்ணம் நீங்கலாகாது. அது அடிப்படை இழையாகி அனைவரையும் ஒன்றுபடக் கட்டிக் காக்கவேண்டும்.

ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர்-தம்முள்
சண்டை செய்தாலும் சகோதரர் அன்றோ (18)

உடன் பிறந்தார்களைப் போலே-இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம் பெரிதுண்டு வையத்தில்-இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர் (206)

எனச் சகோதர உணர்ச்சி ஏற்படக் கவிஞர் முயல்கின்றார். கட்டாயத்தின் பேரிலும், புரட்சியின் காரணமாகவும் வருவதன்று இது. முழுமையாகப் புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் உருவாவது. ஒவ்வொரு தனிமனிதனும் முழு மனத்துடன் முயல்வானாயின் இது அதிவிரைவில் கைப்படும். 'மண்ணில் தெரியுது வானம் அது நம் வசப்படலாகாதோ' (182) என்ற நிலை இது.

**ஒற்றுமையும்** உலக வாழ்வியலில் வேண்டப்படும் பிறிதொரு இன்றியமையாக் கூறாகும். சமுதாயமாகக் கூடிவாழும் மனிதர் அனைவருக்கும் இது தேவை யானது. ஒற்றுமை, உறுதியும் வலிமையும் அளிக்க வல்லது. தனித்து நின்று எதிர்த்து வெல்லமுடியாத பகைகளை ஒற்றுமைப்பட்டு நின்றால் தகர்க்கமுடியும். வாழ்வியலும் ஒற்றுமையும் ஒன்றிலொன்று பின்னிப்பிணையும் நிலை இது.

ஒன்று பட்டால் உண்டு வாழ்வே-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்-இந்த
ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும் (18)

எல்லா அறிவுடைமைகளுக்கும் மேலான அறிவாக இவ்வொற்றுமை பற்றிய ஞானம் கருதப்படுகின்றது. இவ் அடிப்படையை உணர்ந்தால் வருவது எல்லாம் மேன்மைகளே.

ஒற்றுமையால் மேன்மை யுண்டாம்
ஒன்றை யொன்று துன்பிழைத்தல்
குற்ற மென்று கண்டால்
குறைவுண்டோ வாழ்வினுக்கே (219)

என்ற 'காலைப்பொழு தின் அன்னத்தின் கூற்றிலும் இவ் உண்மை புலப்படுத்தப்படுகின்றது.

இவ்வொற்றுமை உலகத்தின் மக்களிடையே மட்டுமன்றி பூவில் வாழ்கின்ற எல்லா உயிரினங்களிடத்திலும் அமைதல் வேண்டும் என விரும்பியவர் பாரதி. இவ்வாறு இணங்கி வாழ்வதால், வாழ்க்கை இன்பம் நிறைந்ததாகின்றது; துன்பங்கள் நீங்குகின்றன; 'பாட்டுத் திறத்தால் வையத்தைப் பாலி'க்கும் கவிஞரின் வரம்வேண்டுதலாக இது அமைகின்றது.

பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்
மண்மீ துள்ள மக்கள் பறவைகள்
விலங்குகள் பூச்சிகள் புற்பூண்டு மரங்கள்
யாவுமென் வினையால் இடும்பை தீர்ந்தே
இன்பமுற் றன்புடன் இணங்கி வாழ்ந்திடவே
செய்தல் வேண்டும் தேவ தேவா (100)

தேசத்தின் விடுதலைமீது நாட்டம் கொண்ட கவிஞர் இவ்வொற்றுமையைத் தம் கால மக்களிடம் வேண்டிப் பிரச்சாரம் செய்கின்றார். அன்னியராட்சிக்கு எதிராக முனைந்து எழப் பிளவுபட்டு, பிரிவினை கொண்டு, விலகிக்கிடப்போர் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்பது எண்ணம். வாழ்வாயினும் அன்றி வீழ்வாயினும் அது நம் கூட்டுமுயற்சியில் தான் கால்கொள்கின்றது; நாமே நம் எதிர்காலத்தை அழைத்துக்கொள்ள இதனால் முடிகின்றது. இளைய பாரதத்தை வரவேற்கும்போது, உய்வுக்கு வழியாக ஒற்றுமை உணர்த்தப்படுகின்றது.

ஒற்று மைக்கு ளுய்யவே நாடெல்லாம்
ஒரு பெருஞ் செயல் செய்வாய் வாவாவா (40)

ஒற்றுமைப்பட்டு நிற்கும்போது அச்சம் நீங்குகின்றது. தனிமை உணர்வு அகல்வதனால், தைரியம் தோன்றுகின்றது. வீரமும் வலிமையும் பெருகும்போது, எதுவரினும் அஞ்சாது ஏற்கும் துணிவு பிறக்கின்றது. வெற்றி நாடி முன்னேறும்போது ஏற்படும் தோல்வியும் தடைக்கல்லாகாது தூள்பட்டுப் போகின்றது; புதிய பாதை அமைத்து முயற்சியுடன் தொடர முடி கின்றது. உயிரை அளித்தேனும் குறிக்கோளைப் பற்றிக் கொள்ளும் உறுதி உருவாகின்றது.

ஒன்றாய் நின்றினி வென்றா யினுமுயிர்
சென்றா யினும் வலி குன்றா தோதுவம்

வந்தே - மாதரம் - ஜய
வந்தே மாதரம் (19)

என விடுதலை இயக்கத்தினர் எதிரொலித்த முழக்கம் இவ் உண்மைகளைப் புலப்படுத்துகின்றது.

எப்பதம் வாய்த்திடு மேனும் நம்மில்
யாவர்க்கும் அந்த நிலைபொது வாகும்
முப்பது கோடியும் வாழ்வோம் - வீழில்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம் (18)

என்ற முடிவும், முத்தாய்ப்பும் இம்மூத்த—முதிர்ந்த உணர்வு பற்றியே தோன்றுகின்றது. ஒன்றாகுதல், ஒருங்கிணைந்து செயல் படுதல் என இது அமைகின்றது; குறிக்கோள்கள், நோக்கங்கள், உணர்வுகள் முதலியன ஒன்றுபடுவதால் ஒருங்கிணைந்து தொழில் புரிதல் இயலுகின்றது.

இவ் ஒன்றாகுதல், ஒரு முழுமையை நோக்கிச் செல்லும் போது, ஒரு முழுமையை உருவாக்கும்போது, ஒருமைப்பாடு தோன்றுகின்றது. பிரிந்து கிடந்த இந்திய தேசங்கள் ஒற்றுமைப் பட்டால் மட்டும் போதாது, அவை ஒரு முழுமையாக ஒருமைப் படவும் வேண்டும்; தேசியத் தேவை இவ் ஒருமைப்பாட்டை உரு வாக்க வல்லது எனக் கருதியவர் கவிஞர். நாட்டுக்கு அனைவரும் உண்மையாக இருக்கும் இப்பாங்கு, மனித உடல் போன்றது. வெவ்வேறான அவயவங்கள்; அவற்றிற்கு வேறுவேறான தொழில்கள், நோக்கங்கள், பயன்கள், ஆயின் அனைத்தும்

இணைந்து இயங்குவது, தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டே இருப்பது ஒரே குறிக்கோளுக்காக; அந்த மனிதனின் வாழ்வுக்காக. மக்கள் அனைவரும் நாட்டு விடுதலைக்காக இணைந்து செயல் படும்போது, தங்கள் தனித்தன்மையை இழக்காதும் அமைவது இந்நிலை. பல்வேறு விதமாக, பல்வேறு வழியில் உழைக்கின்றனர். பாரதியையே எடுத்துக்கொண்டால் நாட்டுவாழ்வின் முன்னேற் றத்திற்குப் படைப்பிலக்கியமும், பத்திரிகைத் தொழிலும் வாயி லாக முயற்சி வெளிப்படுகின்றது. கப்பலோட்டியும், சத்தியாக் கிரகம் செய்தும், வெளிநாட்டுப் பொருட்களை பகிஷ்கரித்தும் ...எல்லாம் உதவியவர் இன்னும் பலர். ஒருநோக்கத்தின் பொருட்டு இணைந்த நிலையில் ஒருமைப்பாடு ஒற்றுமைக்கு ஒரு படி மேற் செல்கின்றது.

முப்பது கோடி முகமுடையாள் - உயிர்
    மொய்ம்புற வொன்றுடையாள் - இவள்
செப்பு மொழி பதினெட்டுடையாள் எனிற்
    சிந்தனை ஒன்றுடை யாள்...
அறுபது கோடி தடக்கைக ளாலும்
    அறங்கள் நடத்துவள் தாய்-தனைச்
செறுவது நாடி வருபவரைத் துகள்
    செய்து கிடத்துவள் தாய் (27)

தாயின் மணிக்கொடியைச் சேர்ந்து காப்பதில் ஈடுபட்ட பலநாட்டு வீர மறவரைக் காட்டி இந்திய ஒருமைப்பாட்டைக் கவிஞர் புலப் படுத்துகின்றார் (35-36). அதேபோன்று நாட்டின் வட தெற்குப் பகுதிகள் தம்முள் பண்டமாற்றாலும், பரிசுகள் அளிப்பதாலும் ஒன்றொற்கொன்று இன்றியமையாத உறுப்பு நிலையும் காட்டு கின்றார். இந்தியர் என்ற முழுமைபெற்று வேறுபாடுகள் ஒழிந்த சூழலாக இது அமைகின்றது.

சிந்து நதியின் மிசை நிலவினிலே
    சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
    தோணிகளோட்டி விளையாடி வருவோம்
கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
    காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்
சிங்க மராட்டியர்தம் கவிதை கொண்டு
    சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம் (22)

வெவ்வேறு கடமைகள் உள்ளதாயும், தந்தையும், குழந்தைகளும் ஒருமைப்பட்டு ஒரு குடும்பமாக இருப்பதுபோல, உலகின் பல் வேறு வினைத் தொழிலாளர்களும் இருக்க வேண்டும். தொழில் அடிப்படையில் ஏற்பட்ட பிரிவு ஜாதியாகி வேறுபட்டபோதும், பிறப்பால் ஜாதிப்பகுப்பு வேண்டாமே ஒழிய அத்தொழில்செய் பவர் வேண்டும். பல தொழில் செய்யினும் வேற்றுமைப்படுத்திக் கருதற்குரியவரல்லர் அவர்கள். ஒருமைப்பட்டு, உலகில் மாடனும் வாழ உதவுதற்குரியர்.

நாலு வகுப்பும் இங்கொன்றே - இந்த
நான்கினில் ஒன்று குறைந்தால்
வேலை தவறிச் சிதைந்தே - செத்து
வீழ்ந்திடும் மானிடச் சாதி (204)

எனக் கவிஞர் சாதி ஒருமைப்பாட்டையும் தருகின்றார்.

மொழி, இனம், நிலம், சாதி எனும் இம் மேற்கூறியவற்றில் வேறுபாடு மறந்த ஒருமைப்பாடு கருதப்படுவதுபோல சமயத் திலும் கருதப்படல் இன்றியமையாதது. எல்லோரும் பல வகை யாக வழிபடும் மூல முதற்பொருள் ஒன்றே என்ற கொள்கை வலி யுறுத்துதலில் இது அடங்குகின்றது. பல தேசங்களாக அன்றி இந்தியா என்பதால் மக்கள் ஒருமைப்படுவதுபோல, பல கடவுளர் என்றநிலை, ஒரே கடவுள் என ஆகும்போது சமய ஒருமைப்பாடு உருவாகின்றது.

தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே - நின்று
கும்பிடும் யேசு மதத்தார்
யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று (205)

**உலகவாழ்க்கையின்** ஈடேற்றத்திற்கு, இத்தகைய பல நல்லு ணர்வுகள் அடிப்படையாக, வேண்டப்படுவனவாக அமைகின்றன. பொதுவாகக் கவிஞரிடம் உலகவாழ்வின் பல நிலைகள் பற்றிய பல எண்ணங்கள் பரவலாகக் காணப்படுகின்றன. 'உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேர' (209) வேண்டும் என்பதைப் பெண்ணுக்குக் கூறிய கவிஞர் தானும் அதுபற்றிப் பலபடச் சிந்திக்கின்றார். 'மாநிலம் பயனுற வாழ்வதற்கு' (112) ஏற்ற வாழ்வியலைச் சிவ

சக்தியிடம் வேண்டியவர், உலக வாழ்வின் முரணான சில நிலைகளையும் காட்டுகின்றார்.

உலக வாழ்க்கையின் நோக்கமும் பயனுமாக இன்பம் அமைகின்றது. மனிதனுக்கு மட்டுமன்றி எல்லா உயிருக்கும் இக் கருத்து ஏற்புடையது.

> பூமண் டலத்தில் அன்பும் பொறையும்
> விளங்குக; துன்பமும் மிடிமையும் நோவும்
> சாவும் நீங்கிச் சார்ந்தபல் லுயிரெலாம்
> இன்புற்று வாழ்க (101)

கட்டுரையிலும் கவிஞர் உலக வாழ்வின் இன்ப நாட்டத்தைக் காட்டுகிறார். எல்லா வகையான தொழில்களும், தீமைகளும் கூட இதன் பொருட்டே செய்யப்படுகின்றன.

> உலக வாழ்க்கையில் விரும்பப்படும் மிகச் சிறந்த பயன் எப்போதும் நீங்காத, எப்போதும் மாறாத, எப்போதும் குறையாத இன்ப மெய்தி வாழ்தல்.
>
> இவ்வகையான இன்பத்தை எய்தும் பொருட்டாகவே மானிடர் கல்வி கற்பதும், பொருள் சேர்ப்பதும், தவங்கள் செய்தலும், அரசாள்வதும், களவு செய்தலும், கொலை செய்வதும், பேசுதலும், சிரித்தலும், ஆடுதலும், பாடுதலும், அழுதலும், உழுதலும்—எல்லாத் தொழிலும் செய்கிறார்கள் (தமிழருக்கு, ப. 76).

இத்தகு இன்பச் சூழலுக்கும் பயனுக்கும் காரணமாக அமையும் வாழ்வு நிலைபேறற்றது. உலகம் நிலைத்தது; ஆயின் உலகவாழ்வு அத்தகையதன்று. துன்பப் பெருங்கடலில் போகின்ற தோணியாகிய வாழ்க்கை, எத்தனையோ புயற்காற்றுகளையும், பாறைகளையும் சுழிகளையும் கடக்க வேண்டும். கடலின் நடு நடுவே இன்பத்தீவுகள் சிலபோது அளவுக்குக் கிடைக்கின்றன. இன்பத் தேடுதல் ஒருபாலும் துன்ப அனுபவம் ஒருபக்கமுமாக அமையும் உலக வாழ்வு இங்குக் குறிக்கப்படுகின்றது.

> உலக வாழ்க்கையோ மிகவும் நம்பத் தகாததாக இருக்கின்றது. எந்த நிமிஷத்திலே மரணம் சம்பவிக்குமோ அல்லது எந்த நிமிஷத்திலே நீக்கமுடியாத நோய் வந்துசேருமோ நம்மால் நிச்சயித்துக்கூற இடமில்லை. இருக்குமட்டிலும்

> உலகத்திற் பெரும்பாலார் துன்பக்கடலில் மிதந்து கொண்டே செல்லுகிறார்கள் (சக்ரவர்த்தினி கட்டுரைகள், ப. 84).

உலகம் அறிவு மயமானது; எனவே இத்துன்பங்களை அறிவின் உறுதி பற்றி வெல்லலாம் என்பது கவிஞர் எண்ணம். 'சித்த மயமிவ் வுலகம், உறுதி நம் சித்தத்தில் ஓங்கிவிட்டால், துன்பம் அத்தனையும் வெல்லலாம்' (26) என மொழிகின்றார்.

பல் இயல்புகளுடைய இவ்வுலக வாழ்வியல் பற்றிய எண்ணங்கள் கவிஞனின் மனப்போக்கைக் காட்டுவதுடன் கற்போனின் மன விரிவுக்கும் காரணமாக அமைகின்றது. சிறு எல்லைகட்குள் தன்னை உட்படுத்திக்கொண்டு புறத்திருப்பவருடன் பகைமை பாராட்டாது மனிதன் அமையச் சூழல் உருவாக்கப்படுகின்றது. மொழியாலும், மொழியினர் வாழும் எல்லையாலும் தமிழன் எனத் தன்னைச் சுருக்கிக் கொள்ளாது, மன விசாலத்துடன் பிறரையும் ஒப்பாகக் கருதி ஏற்றுக் கொள்ளவும், இந்தியன் என்ற உணர்வை வளர்த்துத் கொள்ளவும் வாய்ப்புத் தருகின்றது. சமத்துவம், சகோதரத்துவம், விடுதலை மூன்றும் பொருந்தும்போது, உலகன் எனும் இன்னும் பரந்த எண்ணமும் ஏற்படுகின்றது. அந்நிலையில்,

> ஒப்பிலாத உயர்வொடு கல்வியும்
> எப்பில் வீரமும் இப்புவி யாட்சியும்
> தப்பிலாத தருமமும் கொண்டு... (144)

வாழ முடிகின்றது. உள்ளும் புறமும் இன்பத்தால் நிறைந்த வாழ்வு பெறுதல் இவ் 'உலகோ'னாகும் நிலையில் இயல்கின்றது.

> உலகத்தாருடன் கூடி எல்லா வகைகளிலும் மற்ற உலகத்தாரைப் போலவே தொழில் செய்து கொண்டு உலக விவகாரங்களை நடத்திய வண்ணமாகவே சஞ்சலத்துக்கு இடங்கொடாதபடி தன் மனத்தைக் கட்டக்கூடிய திறமையே பயன் தரக்கூடியது.
>
> நீதி, சமாதானம், சமத்துவம், அன்பு இவற்றாலேயே இவ்வுலகத்தில் தீராத தைரியமும் அதனால் தீராத இன்பமும் எய்தலாம் (தமிழருக்கு, ப. 78).

உலகச் சிந்தனைகள், உலக நிகழ்வுகள் நம் செயற்பாட்டிற்கு ஊக்கம் அளிக்கின்றன. உலகின் பல நாடுகளின் உயர்ந்த வாழ்

வியலை அறியும்போது நம் வாழ்வையும் செப்பம் கொள்ள முடி கின்றது. 'எல்லோரும் ஓர்நிறை' என்பது உலகப் பொதுமை யாகும் நிலை இதனால் உருவாக முடியும்.

### உடல் உள்ளம் உயிர்

விசையுறு பந்தினைப் போல்—உள்ளம்
வேண்டிய படி செலும் உடல் கேட்டேன்
நசையறு மனங் கேட்டேன்—நித்தம்
நவமெனச் சுடர்தரும் உயிர் கேட்டேன்
தசையினைத் தீ சுடினும்—சிவ
சக்தியைப் பாடும்நல் அகங் கேட்டேன்
அசைவறு மதி கேட்டேன் – இவை
அருள்வதில் உனக்கெதுந் தடையுளதோ (113)

(உலகோனாக அமையும் ஒவ்வொரு தனிமனிதனின் வாழ்வி னுக்கும் வேண்டியனவாக உடல், உள்ளம், உயிர் அமைகின்றன. தனி மானுடவியம் எனக் கூறத்தகும் இவை, எல்லா மனிதனுக்கும் பொது உரிமையும், தேவையுமாக அமைவன. இவை வெவ்வேறு பட்ட மூவகை வாழ்வை அமைக்காது, ஒரே வாழ்வின் மும்முனை யாகக் காணப்படுவன. மூன்றும் இணைந்து, ஒன்றிச் செயற் படுதலே முன்னேற்றம் தரும் என்ற பாங்கில் ஒன்றிலொன்று செல்வாக்குக் காட்டுகின்றன.)

உள்ளத்தின் விருப்பங்களுக்கு ஏற்பச் செயல்படும் உடல் வேண்டும். அன்றேல் உள்ளத்தின் திட்டங்களும், சிந்தனைகளும் செயலாகி உருவாகாது பயனற்றுப் போய்விடுகின்றன. விருப்பங் கள் எல்லோருக்கும் பயன்பட வேண்டுமாயின் அதில் தன்னல விருப்பு இருக்கக் கூடாது. எனவே மனம் நசையற்றதாக இருக்க வேண்டும். உள்ளமும் உடலும் இயங்க அடிப்படையான உயிர் மூச்சுத் தேவை. இது எண்ணெய் தீர்ந்த விளக்காக ஒளி குன்றி யிருத்தல் கூடாது. இப்போது பொருத்திய புத்தம்புதுச் சுடராக ஒளிவீசும் உயிர் உடலுள் இயங்க வேண்டும். உடல், புறச்சூழலுக்கு ஆட்பட்டு, தீமையிலிருந்து பாதுகாக்கும் எதிர்ப்புச் சக்தியில்லாததாக ஆகிவிடக் கூடாது. தீமைகளால் தாக்குதற்கரிய உடலில் நிறையும் உள்ளம் இறைவழிப்படுகின்றது. அதன் அறிவு அசைவற்றதாக, உறுதியுடையதாக இருக்கின்றது. சலனமில்லாத சஞ்சலமில்லாத அறிவுத்திடம் நல்வாழ்வை அமைக்கின்றது.

உயிர் ஒன்று செய்ய, மனம் ஒன்று நாட, கையொன்றில் ஈடு பட—எனப் பிளவுபட்ட வாழ்நிலை முன்னேற்றம் தர இயலாது. பாதையும் வகுத்து அதில் நடக்கத் தடையும் விதிப்பதுபோல் பயனற்றதாக மாறிவிடுகின்றது. ஒன்றுக்கு ஒன்று முரண்படும் போது, அல்லது ஒன்றன் வழியில் பிற தொடர்ந்து செல்லாத போது வாழ்வு பாழ்பட்டுப் போகின்றது. கவிஞரின் மஹாசக்திக்கு விண்ணப்பம்,

மோகத்தைக் கொன்று விடு—அல்லா லென்றன்
  மூச்சை நிறுத்திவிடு
தேகத்தைச் சாய்த்துவிடு—அல்லா லதில்
  சிந்தனை மாய்த்துவிடு
யோகத் திருத்திவிடு—அல்லா லென்றன்
  ஊனைச் சிதைத்து விடு...
பந்தத்தை நீக்கிவிடு—அல்லா லுயிர்ப்
  பாரத்தைப் போக்கி விடு
சிந்தை தெளிவாக்கு—அல்லா லிதைச்
  செத்த உடலாக்கு... (113)

உயிர் நாட்டுக்காக உழைக்கப் பயன்பட வேண்டும்; அன்றேல் அவ் உயிர் உடலைவிட்டு நீங்கிவிடலாம்;. அதன் பயன் பிறிது இல்லை. நாட்டு விடுதலை மோகம் நெஞ்சில் இருந்தால் மட்டும் போதாது; அது உடல் வழிச் செயல்படாவிடின், தேகம் இருந்து பயனில்லை. உலகைச் சீராக்கும் எண்ணங்கள் சிந்தையில் கருக்கொண்டால் அது கர்ம யோகமாக வெளிப்பட வேண்டும்; இன்றேல் எப்பயனும் இல்லை. நாட்டு மக்களோடு கொண்ட ஒற்றுமை உறவு நிலை இன்றேல், உயிர் மண்ணுக்கு வெறும் பாரமேயன்றி வேறில்லை. உயிர் நிறைந்த உடலில் சிந்தனைத்தெளிவு இருந்தாலே செயற் படமுடியும். இல்லையேல் தெளிவற்ற சிந்தனைக்கு இடமான உடலே வேண்டாம். ஒன்றிலொன்று இணைந்து, பின்னிப் பிணைந்து, பிரித்தற்கரிதான உடல் உள்ள உயிர் வாழ்வியல் இதில் புலப்படுகின்றது.

இம் மும்முனை வாழ்வியல் குறித்துக் கவிஞரின் 'சக்தி' வசன கவிதை மிகுதியாகப் பேசுகின்றது. இறைவழிபாடும் இவ்வாழ் வும் ஒன்றுள் ஒன்று கலந்து அமைந்ததைக் கவிதையின் முடிவு காட்டுகின்றது.

உள்ளம் தெளிந்திருக்க; உயிர் வேகமும் சூடும் உடைய தாக; உடல் அமைதியும் வலிமையும் பெற்றிருக்க.

மஹாசக்தியின் அருள் பெறுதலே வாழ்தல்; நாம் வாழ் கின்றோம்.

நம்மை வாழ்வுறச் செய்த மஹாசக்தியை மீண்டும் வாழ்த்து கின்றோம் (436).

இவ் வாழ்க்கை கட்டற்றதல்ல. கட்டுப்பாடுடையது. கட்டுதற்கு இயல்வது. இப்பிணைப்பு உடலுக்கு மட்டும்தான் செய்ய இயலும் என்பதில்லை. உள்ளத்தையும், உயிரையும் கூட ஆட்படுத்த வல்லது. மூன்றிலும் சக்தியின் பிணைப்பு உட்பட வல்லது. மண்ணில் வேலி போடுவதுபோல வானில் வேலிபோட இயலுமா என்பது கேள்வி; மண்ணிலும் வானமே நிறைந்திருப்ப தால் வேலியிட இயலும் என்பது பதில். அதேபோல பருப்பொரு ளான உடலைக் கட்டுவது எத்துணை இயற்கையோ அவ்வாறே அருவமான உயிர் உள்ளங்களும் கட்டற்கு இயல்வனவே.

*மண்ணைக் கட்டினால் அதிலுள்ள வானத்தைக் கட்டிய தாகாதா?*

*உடலைக் கட்டு, உயிரைக் கட்டலாம்*
*உயிரைக் கட்டு, உள்ளத்தைக் கட்டலாம்*
*உள்ளத்தைக் கட்டு, சக்தியைக் கட்டலாம்*
*அநந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை*

(433-34)

கட்டுப்படுத்துவதற்குக் கடினமாகத் தோற்றம் தருவது மனம். கிளைக்குக் கிளை தாவும் குரங்குபோன்றும், காற்றடிக்கப் பறக்கும் பஞ்சு போன்றும் அலையும் மனம் கட்டப்படல் எளிது எனத் தோன்றவில்லை. ஒருவேளை, சிந்தனை ஒருமையாலும், பிற பயிற்சிகளாலும் அதனைக் கட்டுப்படுத்த முயலல் கூடும். ஆயின் உயிரைக் கட்டுவது என்பது நினைத்தற்கும் அரிதாகத் தோன்று கின்றது. விருப்பம் போன்று அதனை உடலில் கொள்ளவும், நீக் கவும் கூடுவதில்லை. ஆயின் கவிஞரின் எண்ணப்படி, அனைத்தும் சக்தி வயப்பட்டதால் கட்டுதல் கூடும்; எளிதும் ஆகும். உடலைக் கட்டுவது எத்துணை எளிதோ அத்துணை பிறவற்றையும் செய்தல் எளிது. சக்தியின் குடியிருப்புக்கு அவை ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதே நோக்கம்.

ஜடத்தைக் கட்டலாம் சக்தியைக் கட்டலாமா?
உடலைக் கட்டலாம், உயிரைக் கட்டலாமா?
உயிரைக் கட்டு. உள்ளத்தைக் கட்டலாம்
என்னிடத்தே சக்தி எனதுயிரிலும் உள்ளத்திலும்
நிற்கின்றாள் (433)

மும்முனை வாழ்விலும் சக்தி புதுமை செய்கின்றது. ஆக்கம் புரிகின்றது. அதன் செயற்பாட்டுக்கு இடனாக மூன்றும் காக்கப் படும்போது இவ் இயல்பு உண்மையாகின்றது. வெளிப்போக வழி யில்லாமல் கட்டிக் கிடக்கும் குளத்து நீர் கெட்டுப் போகின்றது; உயிர்ச்சத்து இழந்து அசுத்தமாகி விடுகின்றது. வாழ்க்கை அது போல் பழமையாகி விடக்கூடாது; பயனற்றுப் போய்விடக்கூடாது; ஆற்றில் தொடர்ந்து புது நீர் வருவதுபோன்று புதுமைப் பட்டுக் கொண்டே வாழ்வு அமைதல் வேண்டும். சக்தி குடியிருத்தற் கேற்ற புதுப்பிக்கப்பட்ட கோயில்களாக மக்கள் வாழ்வு அமைய வேண்டும். சக்தியின் கோயில் கொள்ளுதலால், உடலும் உள்ள மும் உயிரும் புது நிறைவு கொள்கின்றன.

இப்போது அவள் என்னுள்ளே நிறைந்திருக்கின்றாள்.
இப்போது எனதுயிரிலே வேகமும் நிறைவும் பொருந்தியிருக் கின்றன.
இப்போது எனதுடலிலே சுகமும் வலிமையும் அமைந்திருக் கின்றன.
இப்போது என் னுள்ளத்திலே தெளிவு நிலவிடுகின்றது.
இது எனக்குப் போதும். (433)

இந் நிறைவுச் சூழலில் கர்மயோகம் இயல்பாகின்றது. மனிதனால் செயல்பட முடிகின்றது. நற்செய்கைகளைச் செய்ய முடிகின்றது. முடிவில்லாத செயல்கள்; பயன் தருகின்ற செயல்கள்; இன்பம் அளிக்கின்ற செயல்கள். மனித சமுதாயத் திற்குத் தேவையான செய்கைகள். மக்கள் கூட்டத்தை இணைக் கும் தொழில்கள். வாழ்வின் செயல்கள்; வாழ்விக்கும் செயல்கள். சக்தியே இவை யனைத்திற்கும் அடிப்படை. ஆற்றலும், வலிமை யும் செய்கைகள் வாயிலாக வெளிப்படுகின்றன; சீர்செய்கின்றன; வழிநடத்துகின்றன.

நமக்குச் செய்கை இயல்பாகுக
ரஸமுள்ள செய்கை இன்பமுடைய செய்கை,
வலிய செய்கை, சலிப்பில்லாத செய்கை,
விளையும் செய்கை, பரவும் செய்கை,

கூடிவரும் செய்கை, இறுதியற்ற செய்கை...
கவிதை, காவல், ஊட்டுதல், வளர்த்தல்,
மாசெடுத்தல் நலந்தருதல், ஒளி பெய்தல்—
இச் செயல்கள் நமக்கு மஹா சக்தி அருள் புரிக (432)

உடலுக்குத் தேவையான அனைத்தையும் உழைப்பால் ஈட்டித் தருவது உடலேயாயினும், அதற்கும் இறையருள் வேண்டப்படுகின்றது. கவிஞரின் இறைச்சார்பு வாழ்வு இத்தகு வேண்டுதலில் பற்றுக் கொள்கின்றது. உள்ளமும், உயிரும் இறை வயப்பட்டு வாழ்வியலின் நிறைவுக்காக விண்ணப்பிக்கின்றன. உடல் வாழ்வின் அடிப்படையான நெடுவாழ்வு, அதற்குச் சிறப்புச் சேர்க்கும் அழகு, இவற்றிற்கு உதவியாக அமையக் கூடிய செல்வம் இவையனைத்தாலும் பெறக்கூடிய பெரும் புகழ் எனப் பல அமைகின்றன. மணக்குள விநாயகரைக் கவிஞர் இம் முப்பால் வாழ்வின் முழுமைக்குப் பாடுகின்றார்.

உனக்கே என் ஆவியும் உள்ளமும் தந்தேன்;
மனக் கேதம் யாவினையும் மாற்றி - (எனக்கே நீ)
நீண்டபுகழ் வாணாள் நிறைசெல்வம் பேரழகு
வேண்டுமட்டும் ஈவாய் விரைந்து (101)

இறைமையின் ஒளி உடல், உள, உயிர்களாகிய மூன்றையும் விளக்க வல்லது; தெளிவிக்க வல்லது வாழ்வுக்கு நிறைவும் முத்தியும் தரும் இயல்பினது. வாழ்க்கை கடந்து வரும் முக்காலங்களையும் நன்மையுறச் செய்வது சித்தாந்தச்சாமி கோயிலின் தீப ஒளியைப் பாடும்போது கவிஞர் இத்தகு எண்ணங்களைத் தருகின்றார். உடல் வாழ்வுக்குத் தேவையான குறைகளற்ற நிலை; உளவாழ்வுக்கு இன்றியமையாத அழுக்கற்ற, கள்ளங்களற்ற மனம்; உயிர் வாழ்வில் இணைகின்ற அனைத்துயிரும் ஒன்று-நன்று எனும் உணர்தல் என்பன இதன்கண் அமைகின்றன.

உள்ளத் தழுக்கும் உடலிற் குறைகளும்
ஓட்ட வருஞ் சுடராம் - பெண்ணே
கள்ளத் தனங்கள் அனைத்தும் வெளிப்படக்
காட்ட வருஞ் சுடராம் - பெண்ணே
தோன்று முயிர்கள் அனைத்தும்நன் றென்பது
தோற்ற முறுஞ் சுடராம் (189-90)

உடல் வாழ்வு பற்றிய சில தனிப்பட்ட சிந்தனைகளும் பாரதியிடம் காணப்படுகின்றன. சித்தர் நெறியில் வந்தவர் கவிஞரானமையால் உடலின் நற்பாதுகாப்புப் பற்றிச் சில கூறுகின்றார். உடம்பு அழியின் உயிரும் அழியும் என்பதால், உடல் காப்பாற்றப் பட வேண்டும் என்ற மூலர் கருத்தின் தொடர்ச்சியாக இதனைக் கொள்ளலாம். 'யோக சித்தியால் உடம்பை முதுமை, நோவு சாவுகளுக்கு இரையாகாமல் நெடுங்காலம் காப்பாற்றலாம் என ஔவைக்குறள் வழி பாரதி விளக்குகின்றார்.

> ''மாசற்ற கொள்கை மனத் தமைந்தக்கால்
> ஈசனைக் காட்டு முடம்பு''

> அதாவது இருதயத்தில் சுத்தமான, பயமற்ற, கபடமற்ற, குற்றமற்ற, பகைமையற்ற எண்ணங்களை நிறுத்திக் கொண்டால் உடம்பில் தெய்வத் தன்மை, அதாவது சாகாத்தன்மை (அமரத் தன்மை) விளங்கும் (தமிழருக்கு, ப. 104).

உடம்பு செவ்வையாக இருக்க மனத்தின் அழுக்கின்மை இங்கு வேண்டப்படுகின்றது. எண்ணங்கள் தூய்மையாக இருக்க வேண்டும் என்பது அடிப்படை. நல்ல எண்ணங்கள் நன்மை தருகின்றன; மகிழ்ச்சி அளிக்கின்றன; மனத்திற்கு ஏற்றமும் மாண்பும் அளிக்கின்றன. இதனால் உடல் லேசாகின்றது. முகம் களை பெறுகின்றது. மொத்தத்தில் ஒளியும் அழகும் கிடைக்கின்றது. தீய எண்ணங்கள் இன்மையால் வாழ்வும் இனிக்கின்றது. சலிப்பும் சோர்வும் நீங்குகின்றன.

உடம்பின் நல்வாழ்வுக்குச் சோம்பல் விலக்கப்படவேண்டியது; உழைப்பு இன்றியமையாது செய்யப்பட வேண்டியது. 'சோம்பியிருக்கின்ற மனிதனின் மனம் சாத்தானின் தொழிற்கூடம் ஆகின்றது'. அங்குத்தீய எண்ணங்கள் உருவாகின்றன. அது நிச்சயமாகத் தீமைக்கு வழிவகுக்கும். தன் வாழ்வும் பிறர் வாழ்வும் பாழ்பட்டுப்போகும். எனவே நல்ல உடல்வாழ்வு வேண்டியவன் சோம்பியிருக்கக் கூடாது என்பர் பாரதி. தோரோ, கார்லைல் போன்ற அறிஞரின் மொழி வழி இதனைக் கூறுகின்றார்.

> உடம்பைச் சோம்பலுக்கும் சொகுசுக்கும் இரையாக்கி வைத்திருப்பவனை ஞானியாகக் கொள்ளலாகாது. ஆத்மாவுக்கு உடம்பே முதலாவது சீடன்...ஆத்ம ஞானி சோம்பேறியாக இருக்கமாட்டானென்ற இவருடைய (தோரோ)

> கொள்கை பகவத் கீதையின் கருத்துக்கு இணங்கியதேயாகும். தொழிலின்றியிருப்பவனுக்குவிடுதலையில்லை; ஞானமில்லை; பக்தியில்லை; அவனுக்குச் சோறுகிடையாது. தண்டச் சோறு தின்று தொழில் செய்யாதிருப்பவன் கொழுத்து நோய் கொண்டு சாவான் (தமிழருக்கு, பக். 121, 122).

சோம்பலுக்கு இடம்கொடாமல் இருக்கவேண்டுமாயின் உழைப்பது அவசியம். மனிதன் தொழில் செய்யும்போது, மனமும் அதில் ஈடுபடுவதால் உள்ளமும் சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்படைகின்றது. தீய எண்ணங்கள் நெருங்காது ஓடுகின்றன. சோம்பியிருப்பவனுக்கு, விருப்பங்கள் நிறைவேறாததால் மனம் வன்மம்கொண்டு பொறாமை முதலிய நோய்கட்கு இடமாகின்றது. உழைப்பவனுக்கோ, முயற்சியால் ஆசைகள் முழுமைபெறுவதால் மனம் இன்பப் பூரிப்படைந்து உடல்வாழ்வையும் சிறப்பிக்கிறது. கார்லைலின் கருத்தையும் விளக்கத்திற்காகக் கவிஞர் பெயர்த்துத் தருகின்றார்.

> சந்தேகம், விசனம், மனச்சோர்வு, கோபம்,ஏக்கம்-இந்தப் பிசாசுகளெல்லாம் மனிதனை அடிக்கும் பொருட்டுப் பதுங்கி நிற்கின்றன. அவன் சோம்பலுக்கு இடங்கொடுக்கும்போது இவையெல்லாம் அவனை வந்து தாக்குகின்றன. தீவிரமாக உடம்பை உழைப்பதே... தன்னைக் காத்துக் கொள்ளுவதற்கு நிச்சயமான வழி. தொழிலைக் கைக்கொண்டால் பிறகு எந்தப் பிசாசும் பக்கத்தில் நெருங்காது.
>
> பூஜை, கல்வி, போதனை முதலியனவும் சரீர உழைப்புப் போலவே கவலையை நீக்கி உடம்பைப் பேணும் (தமிழருக்கு, பக். 122, 123).

உடல் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்க இடமளிக்கும் கவிஞரின் பிறிதொரு கட்டுரை 'லோகோபகாரம்'. உலகத்திற்கு நன்மை செய்தல். மக்களுக்கு உதவி செய்தல்... ஒருவருக்குச் செய்த நன்றி நமக்கே செய்ததாகும். தேவைப்படுபவனுக்குக் கொடுத்தல் தெய்வத்திற்கு அளிப்பதாகும். உலகத்திற்கு இனியன செய்பவன் வாழ்வில் இனிமை பொங்குகிறது. அச்சமும் பகையும் இல்லாத போதுதான் ஒருவன் இவ் லோகோபகாரத்தில் ஈடுபடமுடியும். எல்லா உயிரினத்திடமும் அன்பு கொள்ளுதல் இதற்கு ஏற்ப வாழ்வுப் பாதையாகின்றது.

நோய் தீர்த்தல், உணவு கொடுத்தல், அறிவு கொளுத்துதல் முதலிய செய்கைகளைக் கவிஞர் லோகோபகாரம் என்கின்றார். முதலில் குடும்பத்தையும், பிறகு நாட்டையும், அதன் பின் மனித ஜாதி முழுவதையும் காப்பவனாக இவன் அமைதல் வேண்டும். இம்மை, மறுமைப் பயன் தரும் இவ்வாழ்வு எல்லோராலும் இப்பொழுதே செய்யப்பட வேண்டியது.

> லோகோபகாரம்... இப்போது இந்த நிமிஷத்திலே தொடங்க வேண்டும்... ஆண், பெண், அலி, வலியவன், எளியவன், கிழவன், குழந்தை, குருடன், நொண்டி எல்லோரும் தொடங்க வேண்டும் (தமிழருக்கு, ப. 81).

தொழில் செய்யவும், லோகோபகாரம் செய்யவும் வேண்டுமானால் முதலில் வாழ்வைச் செப்பம் செய்து கொள்ளவேண்டும். உடல் வாழ்வில் நிறைவுடையவனே மற்ற குறையுடையவனைச் சீர் செய்ய முடியும். 'சேறுபட்ட நாற்றமும் தூறும் சேர் சிறிய வீடு கட்டி வாழ்பவன் (39) சுகாதாரத்தை எடுத்துக் கூற முடியாது 'எண்ணிலா நோயுடையார் இவர் எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்' (38) என இருப்பவர் பிறருக்காக எச்செயலும் செய்ய இயலாது. இளையபாரதம் நோயற்ற உடல் வாழ்வினதாக இருத்தலை இதுபற்றியே கவிஞர் வேண்டுகிறார் போலும்.

நொய்மை யற்ற சிந்தையாய் வாவாவா
　　நோய்க ளற்ற உடலினாய் வாவாவா
தெய்வ சாபம் நீங்கவே நங்கள் சீர்த்
　　தேச மீது தோன்றுவாய் வாவாவா (39)

உள்ள வாழ்க்கை பலஅகஉடமைகளால் சீரியதாக ஆகின்றது. அன்புடைமை போன்று வள்ளுவர் மொழிவனவற்றை நினைக்கலாம். வேண்டப்படும் இவ் உடமைகள் போன்று விலக்கப் படவேண்டிய ஆமைகளும் உள வாழ்வில் உள. பொறாமை போன்றன இத்தகையன. தேவையானவை இருப்பதும் தீமையானவை விலகுவதும் உள்ள வாழ்வை உயர்த்துகின்றன எனல் போதரும்.

'மனமே நீ எனை வாழ்வித் திடுவாய்' (95) என்பதன்படி நல்வாழ்வமைய மனம் காரணமாகின்றது. நல்ல சிந்தனைகள் இல்லாதபோது அதுவே பகையாக மாறிவிடுகின்றது. உடலை, உயிரை அழிக்கும் உட்பகையாக அமைகின்றது. அதனை நல் எண்ணப் பயிற்சி காரணமாக வாழ்விற்குப் பயன்படும் வண்ணம் மாற்ற வேண்டும். மறுமை வாழ்வுக்குத் தடையாக மனிதனிடம் அமைவதாக இம் மனத்தைப் பாரதி காட்டுகின்றார்.

மோக்ஷத்தை அடைய விரும்புவோனுக்கு முக்கியமான சத்ரு—ஒரே சத்துரு—அவனுடைய சொந்த மனமேயாம்... தன்மனமே தனக்குப் பகை யென்பது பேதமை யன்றோ... மனம் இயற்கையாலும் தீய ஸகவாஸத்தாலும் ஆத்மாவுக்குத் துன்ப மிழைத்தல் ப்ரத்யக்ஷம், நல்ல கூட்டத்தாலும் நல்ல பயிற்சியாலும் அதனை உபகார வஸ்துவாகச் செய்தல் ஸாத்ய மென்பது யோகிகளின் ஸர்வ ஸாதாரண அனுபவம் (பகவத் கீதை, ப. 22).

மனம் ஆடுவது; அசைவது; ஒவ்வொரு நேரமும் ஒவ்வொரு சிந்தை கொண்டு வேறுபடுவது. இவற்றிற்கிடையே ஊசலாடுவது. எதையும் உறுதியாகப் பற்றிக் கொள்ளாதது. நன்மையைக் கை நழுவ விடுவது. தீமையை விடாமல் தொடுவது. பழமை வெறுத்துப் புதியன நாடுவது. இழிந்த பொருள்களில் விருப்பம் கொள்வது அஞ்சுவது. ஆயின் உடலிடம் அன்புகொண்டு உயிரைக் காப்பது. புலனறிவுகளைப் பெற உதவி, இன்பம் நாடி, வாழ்வுக்கு இன்பம் தருவது. மென்மையான மனம் பெண்ணைப் போன்றது. அதை அறிவு வழிப்படுத்தி, இறைநெறிப் படுத்தும்போது வாழ்வு செவ்வி பெற முடியும்.

மனமெனும் பெண்ணே வாழி நீ கேளாய்
நின்னொடு வாழும் நெறியுநன் கறிந்திடேன்;
இத்தனை நாட்போல் இனியுநின் னின்பமே
விரும்புவன்; நின்னை மேம்படுத்திடவே
முயற்சிகள் புரிவேன்: முத்தியுந் தேடுவேன்
உன் விழிப்படாமல் என் விழிப் பட்ட
சிவமெனும் பொருளைத் தினமும் போற்றி
உன்றனக் கின்பம் ஓங்கிடச் செய்வேன் (194-95)

மனம் இறைவழிப்படும்போது வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள் ஏராளம். நன்மைகளும் சிறப்புகளும் பல. கண்ணன் பாட்டில் இதனை உணர முடிகின்றது. சேவகனாக வந்த கண்ணன் வீட்டகத்தே புகுந்தநாள் முதலாக ஏற்பட்ட நன்மைகள், இறைவன் நெஞ்சகத்தே வரும்போது ஏற்படும் சிறப்புகளைச் சுட்டுகின்றன. இறைவன் குடியிருக்கும் அகம் கோயிலாகின்றது. அதன் காரணமாக வாழ்வு, அகநிலையிலும் புறநிலையிலும் எல்லா உயர்வுகளையும் மேன்மைகளையும் அடைகின்றது.

கண்ணன் எனதகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவு மவன் பொறுப்பாய்ச்
செல்வம், இளமாண்பு, சீர், சிறப்பு, நற்கீர்த்தி,
கல்வி, அறிவு, கவிதை, சிவ யோகம்,
தெளிவே வடிவான சிவஞானம், என்றும்
ஒளிசேர் நலமனைத்தும் ஓங்கி வருகின்றன காண் (282)

எல்லா நன்மைகளுக்கும் அடிப்படையாக அமையும் இம்மனம், எல்லாச் செயல்களுக்கும், செய்கைத் திறனுக்கும் கூடக் காரணமாக அமைகின்றது. அன்பும் அறிவும் இணைந்ததாக மனத்தின் வாழ்வுச்செயல் அமையும்போது நன்மை பயிராகி விளைகின்றது.

அன்பு நீர் பாய்ச்சி, அறிவென்னும் ஏருழுது
சாத்திரக் களைபோக்கி, வேதப் பயிர்செய்து,
இன்பப் பயனறிந்து தின்பதற்கு மஹாசத்தியின்துணை
வேண்டுகிறோம். (432)

உடல் வாழ்க்கையைக் காட்டும்போது, குறியீடாகப் பன்றியையும், புள்ளையும் காட்டிய கவிஞர் மனத்தையும் அவற்றைச் சுட்டிப் புலப்படுத்துகின்றார். விடுதலை வாழ்வு வானில் பறக்கும் புள்ளாலும், கீழ்மையான அண்டிப்பிழைக்கும் இழிநிலை, சேற்றில் விரும்பிப் புரளும் பன்றியாலும் காட்டப்படுகின்றது. மனமும் பன்றி போலக் கீழ்மை விரும்பாது புள்போன்று உயர்ந்த எண்ணப் புலத்தில் செல்லுதல் வேண்டும். மனம் எங்கும் சென்று வர வல்லது. இடம், காலம் என்ற எல்லைகள் அதனைத் தடை செய்வதில்லை. 'ஞானரதம்' போன்று அது கற்பனைச் சிறகுகளில் எவ்வுலகும் சென்று திரும்ப இயல்வது.

உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்...
பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில்
படுத்துப் புரளாதே
வென்றியை நாடியிவ் வானத்தில் ஓட
விரும்பி விரைந்திடுமே;
முன்றிலில் ஓடுமோர் வண்டியைப் போலன்று
மூன்றுலகுஞ் சூழ்ந்தே
நன்று திரியும் விமானத்தைப் போலொரு
நல்ல மனம் படைத்தோம் (221)

தென்றல் மீது குதிரையேறி வரவல்லது இம்மனம்; குளிர்ச் சந்திரனில் சென்று தேனுண்ணவும் வல்ல ஆற்றலினது (222)* மதியில் தேனுண்ணுதல் எனக் கவிஞர் தரும் இவ் வெளியீட்டுத் தொடர் அறிவுடைமையை, அறிவு பெறுதலைக் குறித்ததாக நினைக்கலாம்.

மனத்தின் மாண்புகளில் அறிவுடைமை மிகவும் இன்றியமை யாததாக அமைகின்றது. மனிதனை பிற உயிரின வாழ்க்கை யிலிருந்து மாற்றிக் காட்டுவது இம் மனமும் அதன் அறிவு நிறைவு களுமே. மனத்தின் விளக்காக, உள்ளொளியாக அமைவது இவ் அறிவு. இவ்வொளிப் பெருக்கு மொத்த வாழ்விலும் சிறப்புச் சேர்க்கின்றது. கதிரவன் உலகை வாழ்விப்பதுபோல உள்ளத்து அறிவு மனிதனை, மனுக்குலத்தை வாழ வைக்கின்றது. அறம், பொருள், இன்பம், வீடு எல்லாம் இதனால் கைகூடுகின்றது. செல்வமும், புகழும், வீரமும் புலப்படக் காரணம் இஞ் 'ஞான பானு'வே.

> திருவளர் வாழ்க்கை கீர்த்தி தீரம் நல்லறிவு வீரம்
> மருவு பல் கலையின் சோதி வல்லமை யென்ப வெல்லாம்
> வருவது ஞானத்தாலே வையக முழுதும் எங்கள்
> பெருமை தான் நிலவி நிற்கப் பிறந்தது ஞானபாநு (169)

இத்தகு பல் சிறப்புக்கும் காரணமான அறிவுச்சுடர் மனித மனத்தில் உதிக்காதபோது அங்கு அஞ்ஞான இருள் நிறைந்து வாழ்க்கை குறையுடையதாகின்றது. அஞ்ஞானம் அல்லது அறிவின்மை என்பது பெருந்தீங்கு. அது அழிக்கப்படல் வேண்டும். வளமுடைய வாழ்வுக்கு இது களையப்படவேண்டிய களையாகி அமைகின்றது.

> அந்த அஞ்ஞானம் ஒரு தீங்கு தானே? அதைத் தொலைக் கத்தானே வேண்டும்? மனதைக் கட்டுதல் மனத்தை வெல்லு தல் என்பதெல்லாம் அஞ்ஞானத்தைத் தொலைத்தல் என்ற பொருளன்றி வேறு பொருள் இலதாம் (பகவத் கீதை, ப. 23)

எனப் பாரதி மனச் செவ்விக்கு வழிகாட்டுகின்றார். மனத்துக்கு மனிதன் அடிமைப்படாது, அதனை அறிவுக்கு ஆட்படுத்த வேண்டும். அறிவு எனும் வெற்றிவேலால் மனத்தைவென்று அடக்க வேண்டும். அந்நிலையில் அது பயன்படு பொருளாகின்றது. காட்டை அழிக்கும் பெருநெருப்பே, அடக்கப்பட்டு ஒளிச்சுடராகும் போது நலம் விளைவிப்பதுபோன்றது இது. கட்டற்ற மனம்

வாழ்க்கையை அலைக்கழித்துத் தடுமாறச் செய்து புதைச்சேற்றில் தள்ளவல்லது; நல்மனமோ அறிவுப்பாதை அமைத்து வாழ்க்கையை நேரான வழியில் நேர்மையான நெறியில் செலுத்தவல்லது.

> 'அஞ்ஞானத்தை வென்றால் தீராத இன்ப நிலையெய்தி வாழலாம்' என்று சாஸ்திரம், யுக்தி, அநுபவம்-மூன்று பிரமாணங்களாலும் விளங்குகிறது. எனினும் அந்த அஞ்ஞானப் பிசாசையும் அதன் குட்டிகளாகிய காமம், குரோதம், மோகம், லோபம், மதம், மாத்சர்யம் என்ற ஆறு யம தூதர்களையும் வெல்ல மனிதனுடைய சித்தம் இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது (தமிழருக்கு, ப. 77).

இவ்வெல்லுதற்கரிய வெற்றியை மானிடர்க்குப் பெற்றுத்தர வல்லது அந்த ஞானபானுவே. அறிவின்மையே எல்லாத் தீமைகளுக்கும் வேராக அமைகின்றது என்பதைப் பாரதியின் மேற்கண்ட உரை வெளிப்படுத்துகின்றது. மனத்தைப் பிணிக்கும் அவல உணர்வுகள் அறிவு வரும்போது சூரியன்முன் பனிபோல அழிகின்றன. நெஞ்சை அரிக்கும் கவலைகள் ஞானச்சுடரின் முன்னால் சிறு மேகங்களாகச் சிதறி ஆற்றலறுகின்றன.

கவலைகள் சிறுமை நோவு கைதவம் வறுமைத் துன்பம்
அவலமா மனைத்தைக் காட்டில் அவலமாம் புலைமை யச்சம்
இவையெலாம் அறிவிலாமை என்பதோர் இருளிற்பேயாம்
நவமுறு ஞானபாநு நண்ணுக தொலைக பேய்கள் (169)

அறிவுபெற்ற மனம் துயரம் கொள்வதில்லை. துயரம் இல்லாதவிடத்து இன்பம் நிறைகிறது. வாழ்வில் எதுவரினும் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என நினைக்கும் நிலை இங்கு உருவாகின்றது. இதனால் எவ்விதச் சலனமும் இன்றி வாழ்வில் முன்னேற முடிகின்றது. மனம் சோம்பலும் சோர்வுமின்றி இயங்கிக் கொண்டிருக்கிறது. தான் பெற்ற இன்பத்தைப் பிறர்க்கும் வாரி வழங்குகிறது; ஓர் இன்ப உலகை உருவாக்குகிறது. மனத்தின் இக்கவலைப்படாத, துயரப்படாத நிலையே சாவாமை எனும் அமரத்தன்மை என்பதைக் கவிஞர் கண்ணனின் கொள்கை எனத் தருகின்றார் (பகவத்கீதை, ப. 17).

அஞ்சாமையும் கவலையின்மையும் முக்திக்கு வழியாகக் கவிஞர் தருவதும் இங்கு நினைக்கத்தக்கது. இறையருளின் பின்பலம் இம் மன வன்மையை அளிக்க வல்லது. 'யார்க்கும் அஞ்சோம்

எதற்கும் அஞ்சோம்' எனவும் 'ஆன்மாவான கணபதியின் அருளுண்டு அச்சம் இல்லையே' எனவும் (98) கூறுமிடத்து உள்ளத்தில் மட்டுமன்றி உயிரச்சமும் இன்மை புலப்படுகின்றது. இது போன்றே உள, உயிர்க் கவலைகள் இல்லாத இறைமையின் பக்க பலமும் அமைகின்றது.

மடமை நெஞ்சே
கவலைப் படுதலே கருநரகம்மா
கவலையற் றிருத்தலே முக்தி
சிவனொரு மகனிதை நினக்கருள் செய்கவே (102)

அறிவுடைய மனம், அஞ்ஞானம் தீர்ந்த மனம் ஓய்ந்திருப்பதில்லை. அதுவும் தொழிற்படுகின்றது. உடலின் தொழிகள் பல மனத்தில்தான் கருக்கொண்டு முதலில் நிகழ்கின்றன. மனத்தின் எண்ணங்களே அப்பால் செயலுருப் பெறுகின்றன.

> அறிவுத் தெளிவைத் தவறவிடாதே. பின் ஓயாமல் தொழில் செய்து கொண்டிரு...உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று. மனத்தால் செய்யப்படும் தொழிலும் தொழிலேயாம். ஜபம்.. படிப்பு...மனனம் .. சாஸ்திரங்களெல்லாம், கவிதைகளெல்லாம், நாடகங்களெல்லாம், சட்டங்களெல்லாம், வேதங்களெல்லாம், புராணங்களெல்லாம், கதைகளெல்லாம், காவியங்களெல்லாம் தொழில்கள் அல்லவா? இவையெல்லாம் உடம்பாற் செய்வதன்றி மனத்தாற் செய்யப்படுவன அன்றோ (பகவத் கீதை, ப. 5).

என மனம் வாழ்வின் மைய இடத்தைப் பெறுவது புலப்படுகின்றது.

உயிர் வாழ்க்கை, உடல் வாழ்வோடு மட்டும் கலந்ததாக அன்றி, உயிர் மூச்சாகக் கொண்ட உயர் கொள்கையில் இலயித்ததாக அமைதல்வேண்டும். உள்ளத்தின் நன்மைகள் எல்லாம் உயிரிடையும் கலக்க வல்லது; அதனால் உயிர் வாழ்வையும் சிறப்பாக்க வல்லது. மும்முனை வாழ்வின் முழுமையும் உச்சமுமாக இவ்வுயிர் வாழ்வு கருதற்குரியது.

நல்லெண்ணங்கள் உள்ளத்தோய்வு பெறுவதுடன் உயிர்த் தோய்வும் கொள்ளவேண்டும். வாழ்நாளின் ஒவ்வொரு காலத் துளியும் உயிர் மூச்சும் இக் கலப்புடன் அமைதல்வேண்டும். நன்மைகள் நெஞ்சிலும் உயிரிலும் இரண்டறக் கலத்தல்போலவே தீமை

களும் இரண்டைவிட்டும் முற்றிலும் நீங்குதல் தேவை. அப்பொழுது தான் இவற்றின் அடிப்படையில் உருவாகும் உடல் வாழ்வு தீமை நீங்கி நன்மை நிறைந்ததாக இருக்க இயலும்.

ஆவியி னுள்ளும் அறிவி னிடையும்
அன்பை வளர்த்திடுவோம்-விண்ணின்
ஆசை வளர்த்திடுவோம்-களி
ஆவல் வளர்த்திடுவோம்—
நெஞ்சிற் கவலைகள் நோவுகள் யாவையும்
நீக்கிக் கொடுப்பவனை-உயிர்
நீளத் தருபவனை...பெருந்திரள்
ஆகிப்பணிந்திடுவோம் (172,73)

என்ற தீ வளர்த்தி வழிபடும் பாடலை இங்குக் கருதலாம். உள்ளமும் உயிரும் இணைந்து செல்லும் இவ்வாழ்வியல்போலவே, உடலும் உயிரும் தொடர்ந்து போகுதலைப் பாடற்பகுதிகள் காட்டுகின்றன. இறைமை வாழ்வுக்கு அடுத்ததாகத் தேசப்பற்று வாழ்வை மிகுதியாகக் கருதிய கவிஞர் நாட்டையே நல்லுயிர் ஆக்குகின்றார். நாட்டு மக்கள் உடலாக, அதிற்குடியிருக்கும் நல்லுயிர் தேசமாக, அரசியல் விடுதலைக்கான முயற்சி தேசிய வாழ்வாகச் சேர்ந்து செல்கின்றன. ஜாதீய கீதம் 'உடலகத்திருக்கும் உயிருமன் நீயே' (42) என இதனைத் தருகின்றது.

அறிவுநீ, தருமம்நீ, உள்ளம்நீ, அதனிடை
மருமம்நீ, உடற்கண் வாழ்ந்திடும் உயிர்நீ
தோளிடை வன்புநீ, நெஞ்சகத்து அன்புநீ
ஆலயந் தோறும் அணிபெற விளங்கும்
தெய்வச் சிலையெலாம் தேவி இங்குனதே (43)

என்பதில் நாடும் இறைமையும் உயிராகிக் கலந்த உன்னத வாழ்வு காட்சிப்படுத்தப்படுகின்றது.

உயிர் வாழ்வு பற்றிய பாரதியின் எண்ணங்களை மொத்தமாக எடுத்து நோக்கினால் அதில் இறைமை பற்றிய கருத்துகளே விஞ்சி நிற்கின்றன. தன்வயப்பட்ட கொள்கையாக இது அமையினும் வாழ்வின் வெற்றிக்குக் களனும் வழியுமாகவும் காட்டப்படுவதால் அனைவரையும் உட்கொண்டதாகவும் கருதத்தக்கது. உயிரை அசைக்கும் சக்தியும், உலகை இயக்கும் சக்தியும் ஒன்றன் கூறுகளாகின்றன.

சொரியும் நீரெனப் பல்லுயிர் போற்றுவை
சூழும் வெள்ள மெனவுயிர் மாற்றுவை...
வாயுவாகி வெளியை அளந்தனை
வாழ் வெதற்கும் உயிர்நிலை ஆயினை...
புலத்தை யிட்டிங் குயிர்கள் செய்தாய் அன்னே
போற்றி போற்றி நினதருள் போற்றியே (135)

எனக் கவிஞர் மஹாசக்தியை வாழ்த்தும்போது சக்தியும் உயிரும், இறைமையும்-உயிர் வாழ்வும் பிரிவின்றிச் செல்வதனைக் காட்டு கின்றார். உயிரில் நீங்காது குடிகொள்ளும் இறைமை மனிதனின் முழுவாழ்வையும் சீர்ப்படுத்த வல்லது; விடுதலை தரவல்லது; உயிருக்குத் தீமை நீக்கும் ஆற்றலினது; உள்ளத்திற்கு அறிவூட்டத் தகுந்தது; உடலைக் காக்க வல்லது; எல்லா உன்னதங்களும் அளிக்கின்றது.

நன்மைகளே என்னுடைய இச்சைகள். இவற்றை நான் எப்போதும் நிறைவேற்றும்படியாக க்ஷணந்தோறும் எனக்குப் பிராண சக்தி வளர்ந்து கொண்டு வருக. உயிர் வேண்டு கிறேன். தலையிலே இடிவிழுந்த போதிலும் சேதப்படாத வயிர உயிர். உடலை எளிதாகவும், உறுதி உடையதாகவும், நேர்மையுடையதாகவும் செய்து காக்கின்ற உயிர்.

அறிவு வேண்டுகிறேன்; எந்தப் பொருளை நோக்குமிடத் தும், அதன் உண்மைகளை உடனே தெளிந்து கொள்ளும் நல்லறிவு. எங்கும், எப்போதும் அச்சமில்லாத வலிய அறிவு.

பிறவுயிருக்குத் தீங்கு தேடமாட்டேன். என்னுடைய உயிருக்கு எங்கும் தீங்கு வரமாட்டாது.

பராசக்தி, நின்னருளால் நான் விடுதலை பெற்று இவ் வுலகத்தில் வாழ்வேன் (தமிழருக்கு, ப. 146).

இறைமையை, சக்தியைக் கவிஞர் வேண்டும் இவ்விண்ணப்பங் கள், தன்னைப் போல் பிறனையும் நேசி என்ற உயிர்க் கொள் கையை அடிப்படையாகக் கொள்கின்றது. உயிர், ஆன்மா-அது பிரிந்து வந்த பேருயிராகிய இறைமையில் அன்பு கொள்ளுவது போல, அதே இறைமையின் பிற கூறுகளாகிய மற்ற உயிர்களிலும் அன்பு கொள்ள வேண்டியது இன்றியமையாததாகின்றது. நானும் பிறனும் வேறல்ல. எல்லா உயிரும், உயிரினமும் ஒன்றே எனும் உயிரிணைவுக் கொள்கை இதன் அடிப்படை. அத்வைதம்

பற்றியது இந்த ஆன்மீக ஞானம். 'எல்லா உயிர்களிலும் நானே யிருக்கிறேன் என்றுரைத்தான் கண்ண பெருமான்' (41) எனக் கவிஞர் எடுத்து மொழிகின்றார். 'எல்லாம் நான்' என்ற உயிருணர்வு எழும்போது பகைமை நீங்குகின்றது; வெறுப்பு அழிகின்றது; பொறாமை பேசுகின்றது; வெஃகுதல் இல்லாதாகின்றது. அன்பு பெருகுகின்றது; அருள் பொழிகின்றது; இன்பம் பரக்கின்றது. 'பிரமமே யானெனப் பேசினர் பெரியோர்' (464) எனும் எண்ணப் பரப்பைப் பாரதியின் பாடல் புலப்படுத்துகின்றது.

வானில் பறக்கின்ற புள்ளெல்லாம் நான்
மண்ணில் திரியும் விலங்கெலாம் நான்
கானிழல் வளரும் மரமெலாம் நான்
காற்றும் புனலும் கடலுமே நான்
விண்ணில் தெரிகின்ற மீனெலாம் நான்
வெட்ட வெளியின் விரிவெலாம் நான்
மண்ணில் கிடக்கும் புழுவெலாம் நான்
வாரியி லுள்ள உயிரெலாம் நான் (188—89)

உயிர் அன்பும், இறையன்பும் ஒன்றிலொன்று இணைந்து செல்வதை, 'நன்றே மெய்ப் பொருளாகும்; உயிர்க ளெலாம் அதன் வடிவாம் ஒருங்காலை' (236) என்பதும் உணர்த்துகின்றது.

இறைமையை நடுமையமாகக் கொண்டு அமைந்த வாழ்வின் சிறப்பு மணிமுடியாகக் கருதவல்லது. கவிஞரின் வாழ்வுக் கொள்கையின் ஒருங்கிணைந்த முழுமையும், கருவாகவும் ஒரே நேரம் அமைய வல்லது இது ஒன்றேயாகும். இறைவனை வாழ்வின் நடுவாகக் கொள்பவர் பிழைகள் செய்ய முடியாது. பிழையற்ற வாழ்வு புகழ் தருவது; பயனுடையது; பெருமையும் இன்பமும் சேர்ப்பது.

'தெய்வம் மறவார் செயுங்கடன் பிழையார்
ஏதுதான் செயினும் ஏதுதான் வருந்தினும்
இறுதியில் பெருமையும் இன்பமும் பெறுவார்'
என்பதென் னுளத்து வேரகழ்ந் திருத்தலால்...
இப்பெருங் கொள்கை இதயமேற் கொண்டு
கலங்கிடா திருந்த எனை... (49)

இறைமையின் பெருமையை, வாழ்வில் அதன் இன்றியமை யாமையை இங்குக் கவிஞர் வழி உணரலாம்

**நிறைவு**

மானுட ஜென்மம் பெறுவதற் கரிதெனும்
வாய்மை உணர்ந்தாரேல்—அவர்
ஊனுடல் தீயினும் உண்மை நிலை தவற
உடன்படு மாறுளதோ (52)

மனிதராகப் பிறப்பது அரிது. கிடைத்தற்கரிய உயிர் வாழ் வைப் பெற்ற மனிதன் அதனை உயிர்வாழ்வாக நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். பல உயிரினங்களை விடவும் அவனுக்கு மிகுந்த ஆற்றல் இயற்கை வழங்கி உள்ளது. அதனை நல்வழியில் செலுத்தி ஆக்கங்கள் பல புரிதல் தேவை.

மனிதன் ஆறறிவுடையவன். ஓரறிவு முதல் ஐயறிவு வரை பெற்ற பிற சிறு உயிர் விலங்குகளிலும் மேன்மையுடையவன். ஆயின் அவ்வுயிரின வாழ்வுகளில் பொறாமை இல்லை; பெருமை இல்லை; வெஃகுதல் இல்லை. மனிதனிடமோ எல்லாத் தீய பண்புகளும் இருக்கின்றன. அவற்றைக் களைதல் வேண்டும். வாழ்வைச் செவ்வைப்படுத்த வேண்டும். சோம்பலின்றி உழைக்க வேண்டும். எப்போதும் உழைத்துக் கொண்டே இருப்பவனுக்குத் தீயவைகளை எண்ண நேரம் கிடைப்பதில்லை; அடுத்தவன் வாழ் வில் குறுக்கிடப் பொழுது இல்லை. உழைத்துழைத்து அவன் முன்னேறுகிறான்; கடமைகளைப் புரிந்து கொண்டு மேலே மேலே சென்றுகொண்டே இருக்கிறான். மேலே செல்பவனுக்கு 'வானம்' அணியது; சிறப்பு அண்மையில் இருக்கிறது.

> தெய்வமே எனக்கு இரண்டு சிறகுகள் கொடுக்க மாட் டாயா? பாழ்பட்ட மனிதர் கூட்டத்தையும், அதன் கட்டுக் களையும், நோய்களையும், துன்பங்களையும், பொய்களையும் உதறி எறிந்துவிட்டு, நான் இச்சைப்படி வானத்திலே பறந்து செல்ல மாட்டேனா...இந்த நிலை எனக்கு அருள்புரியலா காதா? குருவிக்குப் பேசத் தெரியும்; பொய் சொல்லத் தெரி யாது. குருவியில் ஆண்-பெண் உண்டு; தீராத கொடுமைகள் இல்லை. குருவிக்கு வீடுண்டு; தீர்வை கிடையாது. குருவிக்கு உணவுண்டு; உழைப்புண்டு. நாயகன் இல்லை; சேவகமில்லை.

குருவிக்கில்லாத பெருமைகள் எனக்கும் சில அருள் செய்திருக்கிறாய் என்பது மெய் தான். ஆராய்ச்சி, பக்தி, சங்கீதம், கவிதை முதலிய இன்பங்கள் மனிதனுக்குக் கைகூடும்;

குருவிக்கு இயல்பில்லை. ஆனாலும், இந்த இரண்டு வித இயல்பும் கலந்து பெற்றால் நான் பரிபூரண இன்பத்தை அடைய மாட்டேனா? (தமிழருக்கு, பக். 144-145).

கவிஞரின் இவ்வாழ்வியல் வேண்டுகோள் நமக்கும் பொருந்தும்.

# பயன்பட்ட நூல்கள்

## முதல் நூல்கள்


1. கட்டுரைகள், 4. சமூகம், பாரதி பிரசுராலயம், சென்னை, 1950.
2. கட்டுரைகள், 1. தத்துவம், ,, , ,, 1935.
3. கதைக்கொத்து, ,, , ,, 1949.
4. தமிழருக்கு, (பதி) சீனி. விசுவநாதன், ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை, 1978.
5. பகவத் கீதை, பாரதி பதிப்பகம், சென்னை, (2-ஆம்), 1966.
6. பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1976.
7. மகாகவி பாரதியின் சக்ரவர்த்தினி கட்டுரைகள், வானவில் பிரசுரம், சென்னை, 1979.
8. வேடிக்கைக் கனவுகள், ராமன் பதிப்பகம், சென்னை, (2-ஆம்), 1977.


## துணை நூல்கள்


1. இரு மகாகவிகள், க. கைலாசபதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 1972.
2. கலைக்கதிர், பாரதி நூற்றாண்டுச் சிறப்பிதழ், டிசம்பர், 1981.
3. கவியரசர் பாரதி, ப. அருணாசலம் (பாண்டியன் அச்சகம், சிதம்பரம்), 1966.
4. சில சிந்தனைகள்-மகாகவி பாரதியார், (பதி) சீனி. விசுவநாதன், ஸ்ரீ புவனேஸ்வரி பதிப்பகம், சென்னை, 1979.
5. பல கோணங்களில் பாரதி- (தொகு) மா. பா. குருசாமி, குரு. தேமொழி, திருச்செந்தூர், 1978.
6. பாரதி இருவர்-வி.பி. நடராசன், கிறிஸ்தவ இலக்கியச் சங்கம், சென்னை (மறு), 1962.
7. பாரதி-ஒரு வாழ்நெறி-தி. சா. ராஜு, அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1976.
8. பாரதி தமிழ் வசனத் திரட்டு - (தொகு) பெ. தூரன், நேஷனல் புக் டிரஸ்ட், புதுடெல்லி, 1978.

9. பாரதிதரிசனம்-1—(தொகு); இளசை மணியன், என்.சி.பி எச்., சென்னை, 1977.

10. பாரதி நினைவுகள்-யதுகிரி அம்மாள், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1954.

11. பாரதி நூல்கள்-(கட்டுரைகள்) - ஸ்ரீ. சி. சுப்பிரமணிய பாரதியார், பாரதி பிரசுராலயம், சென்னை, 1943.

12. பாரதி பாநிலை- கா. மீனாட்சிசுந்தரம் - (மொழி) மு. மாணிக்கம், இளங்கோ வெளியீடு, 1972.

13. பாரதி புதையல் (1)-(தொகு) ரா. அ. பத்மநாபன், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, (2-ஆம்), 1978.

14. பாரதி புதையல் (3)-(தொகு) ரா. அ. பத்மநாபன், அமுத நிலையம் லிமிடெட், சென்னை, 1975.

15. பாரதியார் கதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1977.

16. பாரதியார் கவிதைகள் - (பதி) டி. வி. எஸ். மணி, சீனி. விசுவநாதன், வானவில் பிரசுரம், சென்னை, 1980.

17. பாரதியார் சரித்திரம்-செல்லம்மா பாரதி, பாரி நிலையம், சென்னை, (மறு), 1979.

18. பாரதியின் போர்க்குரல், ம. பொ. சிவஞானம், பூங்கொடி பதிப்பகம், சென்னை, 1979.

19. மகாகவி பாரதி நூற்பெயர்க் கோவை - (தொகு) சீனி. விசுவநாதன், டி. வி. எஸ். மணி, வானவில் பிரசுரம், சென்னை, 1981.

20. C. Subramania Bharati, S, Vijaya Bharati, Publication Division, Ministry of Information and Broad casting, Government of India, 1972.

21. Poems of Subramania Bharati, Prema Nandakumar, Sahitya akademi, New Delhi, 1977.

22. Subramania Bharati: Personality and Poetry, S.Vijaya Bharati, Manoharlal Publisherspvt. Ltd., New Delhi, 1975,

# நிறுவன வெளியீடுகள்

| | | ரூ | பை |
|---|---|---|---|
| 1. | தமிழர் ஆடைகள் | 16 | 00 |
| 2. | தமிழர் கண்ட மனம் | 9 | 00 |
| 3. | தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 16 | 00 |
| 4. | தமிழக நாட்டுப் பு 'க் கலைகள் | 10 | 00 |
| 5. | தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 14 | 00 |
| 6. | தமிழா உணவு | 12 | 00 |
| 7. | தமிழர் தோற்கருவிகன் | 10 | 00 |
| 8. | கூவ நூல் | 7 | 00 |
| 9. | மனை நூல் | 15 | 00 |
| 10. | பிரபந்தத்திரட்டு | 16 | 00 |
| 11. | தந்திவனப் புராணம் | 15 | 00 |
| 12. | திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத்தமிழ் | 7 | 50 |
| 13. | சின்னமகிபன் குளுவநாடகம் | 5 | 00 |
| 14. | பணவிடு தூது | 6 | 00 |
| 15. | தொல்காப்பியம்—சிறப்புப்பாயிரம் | 10 | 00 |
| 16. | தொல்காப்பியம்—நூன்மரபு | 9 | 00 |
| 17. | தொல்காப்பியம்—மொழிமரபு | 9 | 00 |
| 18. | தொல்காப்பியம் – பிறப்பியல் | 8 | 00 |
| 19. | தொல்காப்பியம்—புணரியல் | 10 | 00 |
| 20. | தொல்காப்பியம்—மரபியல் | 10 | 00 |
| 21. | தொல்காப்பியம்—தொகை மரபு | 8 | 00 |
| 22. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 3 | 8 | 00 |
| 23. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 4 | 10 | 00 |
| 24. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 5 | 12 | 00 |
| 25. | தமிழ் இலக்கியக் கொள்கை தொகுதி 6 | 16 | 00 |
| 26. | தமிழ் இலக்கியக் கொள்கை—தொகுதி 7 | 15 | 00 |
| 27. | தமிழில் விடுகதைகள் | 12 | 00 |
| 28. | அடியார்க்கு நல்லார் உரைத்திறன் | 12 | 00 |
| 29. | உலகத்தமிழ் எழுத்தாளர் யார்? எவர்? | 6 | 00 |
| 30. | The Tamil Writers Directory | 10 | 00 |
| 31. | Tamil Research Through Journals | 7 | 50 |
| 32. | Dr. Mu. Va | 20 | 00 |
| 33. | Dissertations on Tamilology | 10 | 00 |
| 34. | Tiru Murugan | 5 | 00 |
| 35. | Epigraphical Evidences for Tamil Studies | 10 | 00 |
| 36. | A Study of Perunkathai | 12 | 00 |
| 37. | Tamil Drama | 20 | 00 |
| 38. | Language & Grammar (Heritage of the Tamils) | 22 | 00 |
| 39. | Cultural Heritage of the Tamils | 20 | 00 |
| 40. | Literary Heritage of the Tamils | 50 | 00 |
| 41. | Papers on Tamil Studies | 15 | 00 |
| 42. | எண்பதில் தமிழ் | 45 | 00 |
| 43. | கருவூரார் பல திரட்டு | 12 | 00 |
| 44. | சுவடியியல் பயிற்சிக் கையேடு | 6 | 00 |

இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
டி·டி·டி·ஐ·, தரமணி, சென்னை-600 113

Wrapper printed at PONMANI ART PRINTERS, MADRAS-5.